உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சைவசமய ஸ்தாபனாசாரியராகிய

திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரது

நன்மாணாக்கராகிய

சம்பந்தசரணாலயர்

அருளிய

தத்துவவிளக்க மூலமும்

ஸ்ரீகாசிவாசி

செந்திநாதையரவர்கள்

இயற்றிய உரையும்

காரைக்குடி

ம-ள-ள-ஸ்ரீ ஆவி. பழ. சிதம்பரச்செட்டியார்

அவர்களால்

மதுரை

சூரியோதய அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டன.

பிங்கள௵ மாசிமீ

1918

[COPY-RIGHT REGISTERED]

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

உபோற்காதம்

திருப்பாண்டிநாட்டிலே கூன்பாண்டியராஜன் தான் பூருவ சென்மத்தில் ஈட்டிய தீவினையினாலே கபடிகளாகிய சமணர்களுடைய துர்ப்போதனையை மெய்யெனத் துணிந்து, சத்தியசமயமாகிய சைவசமயத்தை விடுத்து, அசத்திய சமயமாகிய ஆருகத மதப்பிரவேசஞ் செய்துவிட்டான். "மன்னனெப்படி மன்னுயிரப்படி" என்றவாறு குடிகளும் சமணசமயத்தராயினார். அப்பாண்டியனுடைய மனைவியும் சோழராஜாவின் புதல்வியுமாகிய மங்கையர்க்கரசியாரும், அவ்வரசன் முதன் மந்திரியாராகிய குலச்சிறைநாயனருமாகிய இருவருமே நாமெல்லாஞ் செய்துகொண்ட புண்ணியத்தினாற் சைவர்களாயே இருந்தார்கள். இங்ஙனம் ஒழுகுநாளிலே திருஞானசம்பந்தமூர்த்திநாயனாருடைய அளவிலா மகிமைகளையும் அவர் செய்த அற்புதங்களையும், அவர் வேதாரணியத்தில் எழுந்தருளி யிருத்தலையும் அவ்விருவரும் கேள்வியுற்றுப் பரிசனங்களை அவர்பால் ஏவினார்கள்.

அப்பரிசனங்கள் வேதாரணியத்தைச் சேர்ந்து திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருமடத்தை அடைந்து, அவரது ஆஞ்ஞையினால் அவர்கள் மடத்தினுள்ளே புகுந்து, அவரைத் தரிசனஞ் செய்து அஞ்சலியஸ்தராய் நின்று, "பாண்டிநாட்டாரெல்லாம் சமணருடைய துர்ப்போதனையினாலே சமணசமயத்தவராயினார்; அது கண்டு, அரசியாரும் மந்திரியாரும் மிகக் கவலைகொண்டவர்களாகி, இந்தச் சமாசாரத்தைத் தேவரீருக்கு விஞ்ஞாபனம் செய்யுமாறு அடியேங்களை அனுப்பினார்கள்" என்று விண்ணப்பஞ்செய்தார்கள்.

அது கேட்ட திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் அடியார் கூட்டங்கள் பக்கத்திலே சூழ, முத்துப்பல்லக்கின்மீதிவர்ந்து வே

காரணபுரத்தைக் கடந்து, பாண்டிநாட்டை அடைந்து, திருவாலவாயுடைய சோமசுந்தரப்பெருமானை வழிபட்டு, சமணர்கள் தீர்க்கமாட்டாது போய கூன்பாண்டியனுடைய வெப்புநோயை "மந்திரமாவது நீறு" என்னும் தமிழ்வேதம் ஓதி அந்நோயை நீக்கியும், அவ்வரசு சபையிலே அமைக்கப்பட்ட மிகச் சுவாலிக்கும் அக்கினியிலே இடப்பட்ட ஆருகதசமய நூல்களெல்லாம் தீய்ந்து சாம்பராய்ப்போக, நாயனார் "போகமார்த்தபூண்முலையாள்" என்னும் திருநள்ளாற்றுப் பதிக ஏட்டை அந்நெருப்பிலிட்டு அழியாது பச்சையாயிருக்கச்செய்து, அதனைப்பின் தமது திருக்கரத்தினால் எடுத்தும், வையையாற்றிலே இட்ட சமண நூலேடுகளெல்லாம் அவர்களை நட்டாற்றில் விட்டு ஆற்றிலே அள்ளுண்டுபோய்விட, நாயனார் தாம் அப்போதே திருவாய்மலர்ந்தருளிய வாழ்கவந்தணர் வானவரானினம் என்னும் திருப்பாசுரத் திருமறையை ஏட்டில் வரைந்து ஆற்றில் இட்டு அது நதியில் எதிர்ந்து ஜலத்தைக் கிழித்துக்கொண்டு செல்லச்செய்தும், இங்ஙனம் யானைமலை முதலிய எட்டு மலைகளிலும் வசித்த சமணர் எண்ணாயிரவரையும் அரசன் முதலாயினோர் முன்னே செயித்து, அந்த சமணர்கள் தங்கள் சபதப்பிரகாரம் கழுவேறிவிட, அதனால் அந்த சமணசமயத்தை அழித்து, மங்கையர்க்கரசியார்க்கும் குலச்சிறைமந்திரியார்க்கும் பேரன்பும் பேரானந்தமும் பிறக்குமாறு பாண்டியனும் மற்றைப்பாண்டிநாட்டாரும் விபூதிதரிக்கச் செய்து, இங்ஙனம் வைதிகசைவம் தலையெடுக்குமாறு சைவஸ்தாபனஞ் செய்துவிட்டு, பாண்டிநாட்டைக் கடந்து, பற்பல ஸ்தலங்களை வணங்கிக்கொண்டு, திருத்தெளிச்சேரியை அடைந்து சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு செல்லுங்கால், பௌத்தர்களுடைய ஸ்தானமாகிய போதிமங்கை சமீபிக்க, அடியார்களெல்லாம் கடலொலி நிகர்ப்பச் சங்குமுதலிய பலவகைப்பட்ட வாத்தியங்களை முழக்கி ஆரவாரிக்க, முத்துச் சின்னங்கள் "பரசமயகோளரி வந்தார்" என்று பணிமாறியபோது, அங்கிருந்த புத்தநந்தி மிகக் கோபமுற்றுத் தன்னை வாதிலே வென்றபின்னன்றோ வெற்றிச்சின்னம் ஊதல்வேண்டுமென்று தடுக்க, திருஞானசம்பந்தமூர்த்திநாயனாருடைய மாதுலரும் தேவாரலேககருமாகிய சம்பந்தசரணாலயர்

புத்தர்சமண்கழுக்கையர் பொய்கொளாச்
சித்தத்தவர்கடெளிந்துதேறின
வித்தகநீறணிவார்வினைப்பகைக்
கத்திரமாவனவஞ்செழுத்துமே

என்னும் அஸ்திரவாக்கை ஓதி "இப்புத்தனுடைய சிரம் உருண்டு விழும்படி இடி இடித்து விழக்கடவது" என்று சபித்தவுடனே, இடியிடித்துப் புத்தநந்தியுடைய சரீரத்தையும் தலையையும் வேறுபடக் கூறுபடுத்திவிட, அதுகண்ட பௌத்தர்கூட்டத்தினர் அஞ்சிக் குலைந்தோடி மீண்டும் ஒருங்கு கூடி, "இச்செய்கை வஞ்சனையோ இன்றேல் அவர்கள் சைவசமயத்துண்மையோ" என்று மருண்டு, "மந்திரவாதமின்றித் தர்க்கம் பேசுமாறு வாருங்கள்" என்றுவிளித்துச் சாரிபுத்தனைத் தலைவனாகக்கொண்டவராகி நணுகியபோது, நாயனார் திருவுளமிகமகிழ்ந்து முத்துச்சிவிகையினின்றிறங்கி, ஓர் சந்திரமண்டபத்தின்மேலேறித் திரையிட்டு வீற்றிருப்ப, புத்தநந்தியுடைய சிரசை அஸ்திரவாக்கினாற் கூறுபடுத்திய அச்சம்பந்தசரணாலயர் அச்சாரிபுத்தன் முதலாயினோரது பௌத்தசமயத்தைத் நிராகரணஞ் செய்து அவனை வென்று நாயனாருடைய திருவடிகளை நமஸ்கரிக்க, நாயனார் அப்பௌத்தர்களுக்குச் சைவசமயமே சற்சமயம் என்று சந்தேகவிபரீதமற உணர்த்தி அவர்களைச் சைவர்களாக்கினார்.

இங்ஙனம் புத்தர்களை வாதிலே வென்றபின், சம்பந்தசரணாலயர் சீகாழிக்குப்போய் ஸ்ரீஞானசம்பந்தப்பெருமானோடு வீற்றிருக்குங்காலத்திலே, செந்தமிழ்நாட்டு அடியவர்கள் வேதசிவாகமங்களின் தத்துவப்பொருள் வடமொழிவல்லுநர்க்கன்றி மற்றையோர்க்கு எளிதிற்புலப்படமாட்டாதாகையால் எங்களுக்கிரங்கித் தத்துவங்களை விளக்கித் தமிழில் ஓர் நூலைத் தந்தருளல்வேண்டுமெனப் பிரார்த்திக்க, வேதசிவாகமங்களினின்று பதிபசுபாசத் துண்மைகளைத் திரட்டித் தத்துவவிளக்கம் என்னும் பெயரினால் இந்நூலைத் தமிழிலே கலித்துறைப்பாவினாலியற்றி அவர்களுக்கு அநுக்கிரகம்

புரிந்து ஸ்ரீஞானசம்பந்தப்பெருமானோடு ஆச்சாபுரம் எனப் பெயரிய திருநல்லூர்ப்பெருமணத்திற் றோற்றிய சோதியிற்கலந்தருளினார்.

இவர் கலந்து நெடுங்காலஞ் சென்றபின், வடமொழி தென்மொழியில் வல்ல போஜராஜர் இத்தத்துவவிளக்கத்தை ஆதாரமாகக்கொண்டு ஆரியாவிருத்தசுலோகத்தினால் தத்துவப்பிரகாசம் என்னும் வடமொழிநூலை இயற்றினார். அது இப்போது அஷ்டப்பிரகரணங்களுள் ஒன்றாகக் கணிக்கப்படுகின்றது.

இத்தத்துவவிளக்கநூலிற் காணப்படும் செய்யுட்கள் சிற்சில மறைஞானசம்பந்ததேசிகராலும் நிரம்பவழகியராலும் தனித்தனி இயற்றப்பட்ட சிவஞானசித்தியாருரைகளிலும், மதுரைச் சிவப்பிரகாசர்செய்த சிவப்பிரகாசவுரையிலும் உதாகரணங்களாக வரையப்பட்டுள்ளன.

சம்பந்தசரணாலயப்பெருமான் அருளிய தத்துவவிளக்கச் செய்யுளுக்கு மூலமாய்நின்ற வேதாகமபுராணப் பிரமாணங்களையும், அவற்றுக்கு இன்றியமையாது வேண்டற்பாலனவற்றையும், அச்செய்யுட்களுக்கு நேரே பொருளாய்நின்ற போஜராஜரது தத்துவப்பிரகாசசுலோகங்களையும் வேண்டுமிடமோர்ந்து உதகரித்திருக்கின்றோம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் * காலம் ஏறக்குறைய நாலாயிரம் வருஷத்தது என்றும், சங்கராசாரியர்காலத்துக்கு முற்பட்டவர் போஜராஜர் என்றும், இவர்க்கு முற்பட்டவர் ஸ்ரீஞானசம்பந்தப்பெருமான் என்றும் அறியப்படலான், ஸ்ரீஞானசம்பந்தப்பெருமானது மாதுலராகிய சம்பந்தசரணாலயர் அருளிய தத்துவவி

---

* யாழ்ப்பாணம் ஆ. முத்துத்தம்பிப்பண்டிதர் என்பார் தமது அபிதானகோசத்தில் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் காலம் ஐந்து பிரபல நியாயங்கொண்டு நாலாயிரம் வருஷத்துக்கு முன்னுள்ளதென்றும், சிலாசாசனங்கொண்டு செய்யப்பட்ட கால நிச்சயம் அங்கீகரிக்கற்பாலதொன்றன்றென்றும் வரைந்துள்ளார். ஆண்டுக் காண்க.

ளக்கம் நாலாயிரம் வருஷத்தது என்றும், அதனால் இத்தத்துவ விளக்கம் ஓர் மிகப் பிராசீனமாகிய சைவசித்தாந்தநூல் என்றும் யாவரும் அறியற்பாலர்.

தேவாரத்திருப்பதிகத்தை நிகர்ப்பத் திருச்செய்யுட்களோடும் சீகாழிப்பிரானையும் திருக்கழுமலமாகிய திருப்படைவீட்டையுமு டையது இத்தத்துவவிளக்கம் என்னும் நூலாம்.

ஸ்ரீசைவசித்தாந்தச்செல்வராகிய காரைக்குடி ஸ்ரீமாந் ராம. சேர். சோக்கலிங்கச்செட்டியாரவர்கள் இந்நூலை அச்சிடுமாறு பொருளுதவி புரிந்து பிரகடனஞ் செய்த உதவி மறக்கற்பாலதொன்றன்று.

இங்ஙனம்,
ஸ்ரீ காசிவாசி-செந்திநாதையர்.

உ

சிவமயம்

சிறப்புப்பாயிரம்

"எம்பந்த" என்னுஞ் செய்யுளிற் சம்பந்தசரணாலயர் எனவே ஆக்கியோன் பெயரும், தத்துவவிளக்கம் எனவே நூற்பெயரும், "சீரார் கயிலைத் திருவாய்மலர்ந்த சிவாகமங் கற்றோராய்வது வடசொற் பயின்றோர்க் கெளிதம்மொழியைச் சாராதவருந் தத்துவ ஞானந் தலைப்படுதற் கோரார் தமிழ்ச்செய்யுளால்" என்னுந் திருச்செய்யுளினால் வழியும் காரணமும், தமிழ் வழங்கு நிலமே இந்நூல் வழங்கு நிலமாதலின் எல்லையும், சரியையாதி மூன்று பாதங்களை ஆராயு நூல்களின் மேற்பட்டது தத்துவவிளக்கமாதலின் அந்நூல்கள் கேட்டபின் இந்நூல் கேட்கத்தக்கது என்னும் யாப்பும், "எய்தும் பொருள்" என்ற செய்யுளினாற் பதி பசு பாசம் என்னும் திரிபதார்த்தங்களின் விளக்கமே உண்மையின் நுதலிய பொருளும், இருவினையொப்பு மலபரிபாக முற்றவரே இந்நூல் கேட்டற்கு அதிகாரிகளாதலின் கேட்போரும், "பவமேவியநெறி" என்னுஞ் செய்யுளிற் "சிவமேவுவர்" என்றமையாற் பயனும், திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் காலத்ததாதலிற் காலமும், திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருநாவுக்கரசுநாயனார் திருநீலகண்டயாழ்ப்பாணநாயனார்முதலிய அறிஞர் அவைக்கண்ணே ஏறினமையாற் களனுமாகிய பதினொன்றும் இந்நூலுக்குச் சிறப்புப்பாயிரமாகக் கொள்ளக்கிடந்தன.

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்

சம்பந்தசரணாலயர் துதி.

எம்பந்த பாசமறக் காழிவந்த யென்றுணைவ
　　னெழுதுமறை யெழுதும் பேறு
நம்பன்ற னருளதனுற் பெற்றஞான நன்முனி
　　தத்துவவிளக்க நவின்ற நாவன்
வம்பின்கட் பிதற்றிவரு புத்தநந்தி மௌலியினி
　　லிடிவிழவண் டமிழ்நூல் பாடுஞ்
* சம்பந்த சரணா லயன்றன்பாதஞ் சந்ததமு
　　நைந்துருகிச் சிந்தை செய்வாம்.

(இதன் பொருள்) எம்பந்த பாசம் அறக் காழிவந்த என் றுணைவன் எழுதுமறை எழுதும் பேறு = எமது பந்தமாகிய மும்மல பாசங்கள் வலிகுன்றுமாறு சீகாழிப்பதியின்கண்ணே திருவவதாரஞ் செய்த எனது பிராணநாயகராகிய ஸ்ரீஞானசம்பந்தமூர்த்திநாயனாரருளிய தமிழ் வேதத்தைத் தமது திருக்கரத்தினால் லேக

---

*ததாஸ்ய ஶிரஸோ நாம்நா ஸம்பந்தஶரணாலய:|
ததாநஸேவக: ப்ராஹ கோபாத்தஸ்யோத்தமாங்கே||

"அப்போது திருஞானசம்பந்தமூர்த்திநாயனாருடைய நண்பரானாரும், அவரது தேவாரப்பதிகங்களை எழுதுபவருமாகிய சம்பந்தசரணாலயர் கோபத்தினால் (புத்தநந்தியுடைய) தலையின்கண்ணே (இடிவிழுமாறு புத்தர் சமண் கழுக்கையர் என்னும் (அஸ்திர வாக்கைக்) கூறினர்" என்று சிவபக்தவிலாசம் கூறுகின்றது.

னஞ் செய்யும் பேற்றை ; நம்பன்றன் அருளதனால் பெற்ற ஞான நன்முனி = சிவபெருமான் திருவருளாற் பெற்றுக்கொண்ட நல்ல சிவஞானமுனிவரும் ; தத்துவ விளக்கம் நவின்ற நாவன் = தத்துவவிளக்கம் என்னும் திவ்விய சைவசித்தாந்தநூலைத் திருவாய் மலர்ந்தருளிய நாவினருமாயுள்ள ; வம்பின்கட் பிதற்றிவரு புத்தநந்தி மௌலியினில் இடிவிழ வண் தமிழ் நூல் பரிடும் = வம்பு கொண்டு பித்துரை பகர்ந்து வந்த புத்தநந்தி தன் தலைமீது இடி வீழ்ந்திறக்குமாறு (ஸ்ரீ ஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருவாய்மலர்ந்தருளிய புத்தர் சமண் கழுக்கையர் என்னும்) அழகிய தமிழாகிய அஸ்திரவாக்கைப் பிரயோகித்தருளிய ; சம்பந்த சரணாலயன்றன் பாதம் சந்ததமும் நைந்துருகிச் சிந்தை செய்வாம் = சம்பந்தசரணாலயப்பெருமானுடைய திருவடிகளை எஞ்ஞான்றும் நெக்கு நெக்குருகித் தியானஞ்செய்வாம் எ-று.

(விசேஷவுரை) மந்ததர, மந்த, தீவிர, தீவிரதரம் என்னும் நால்வகைச் சத்திநிபாதங்களைத் தத்தம் கன்மபரிபாக முறையானேயுடைய ஆன்மாக்களாகிய எங்கள் ஆணவம் மாயை கன்மம் என்னும் முப்பாசங்களும் அற்று நாமுய்ந்துபோம்வண்ணம் அருட்பாவாகிய தமிழ் வேதத் தேவாரத்தைத் திருவாய்மலர்ந்தருளுமாறு ஸ்ரீகாழிப்பதியின்கண்ணே எழுந்தருளிய எனது ஆன்மநாயகர் பரமாசாரியராகிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனாராதலின் அவர் "சம்பந்த பாசமறக் காழிவந்த வென்றுணைவன்" என்று கூறப்பட்டார்.

இருக்காதி ஆரியவேதம் எழுதாமறை எனப்படுவதாக, அவ்வேதத்தின் சாரமாகிய தமிழ்வேதம் எழுதப்பட்டதொன்றாதலின் எழுதுமறை எனப்பட்டது.

இடையிலே ஒவ்வோர்கால் அற்றுப்போகக்கூடியனவாய் உயிர்களை நரகலோகமுதலியவற்றுக்குக் கொண்டுபோமாறு யமன் முதலாயினோர் கைக்கணுள்ளனவாய பாசங்கள்போலாகாது, அனாதியாப் பிறவிதோறும் செம்பிற் களிம்புபோல் ஆன்மாக்களை

டுமையர்தநீநற் சிவத்தை அறிந்து பேரின்பமெய்தாவண்ணம் தடுத்து மறைத்துநின்று, அநாதிநித்தியமாதலால்; முத்திதசையில் ஆன்மாக்களுக்கு இன்பத்தை விளைவித்தற்குக் காரணம் அவ்வாணவபாசமாதலின், "எம்பந்தபாசமற" என்றுரைக்கப்பட்டது.

"அற" என்பது, "பரிதிமுன்னிருளென்மலம்பரையிடை மாயும்" என்றவாறு, ஆணவபாசம் சூரியப்பிரகாசத்தின் முன் இருள்போலத் தூரிய பக்ஷரீசினத்திற்றன் சத்திகெட்டு நிற்பதென்னும் பொருட்டாம்.

தன்மை முன்னிலை படர்க்கையிலுள்ளோரை யெல்லாம் அடக்குதற்கே "எம்" என்னும் விசேஷணம் புணர்த்தி "எம்பந்தபாசம்" எனக் கூறப்பட்டது.

யாவதக்ஷரஸங்க்யாநம் ஶிவஜ்ஞாநஸ்ய புஸ்தகே।
தாவத்கல்ப ஸஹஸ்ராணி தாதா ஶிவபுரே வஸேத்॥
பூர்வாபரகுலாந்யஸ்ய தஶ ஸம்ஸாரஸாகராத்
ஸமேத்ய ஸ்தாப்ய ஸ்வயம் ப்ராப்நோதி ஶிவஸாரம் ஸுகம்॥

"சிவஞானபுஸ்தகத்தைக் கொடுப்பவன் அச்சிவஞானபுஸ்தகத்தில் எவ்வளவு எழுத்துக்களுண்டோ அத்தனை ஆயிரம் கற்பம் மகாசிவபுரத்தின்கண்ணே வசிப்பான்; தனக்கு முன்னும் பின்னுமுள்ள பத்தும்பத்துமாகிய இருபது குலத்தினரையும் மகா சிவலோகத்திருத்தித் தானும் அதனை அடைகின்றான்" என்று சிவதருமோத்தராகமம் கூறுகின்றவாறு, சிவஞானத் தமிழ்வேதத்தை எழுதவல்லவர் பற்பலர்பதினாறுயிரம் திருக்கூட்டத்துள்ளே உளராயவிடத்தும், அதிதீவிர சத்திநிபாதமுற்று நின்ற ஸ்ரீஞானசம்பந்தப் பெருமானது நன்மாணவராகிய சம்பந்தசரணாலயரே சிவபெருமான் திருவருளால் அச்சிவஞானத் தமிழ்வேதத்தை எழுதும்பெரும் பேறு பெற்றாராதலின் "எழுதுமறையெழுதும் பேறு நம்பன்றனருளாலுற்பெற்றோன் நன்முனி" என்று கூறப்பட்டார்.

குறையுணர்வாகிய பாசஞான பசுஞானங்களுக்கு மேற்பட்ட சிவஞானச்செல்வராய்,

ஜ௦ க்ரியாஸேஷு யயா சித்தம் நித்யம் ப்ரவர்த்ததே|
ததா ஶைவம் க்ரியாதீதே தஸ்ய நிராக்ருதே பதே||

"பாசப்பற்றுடையாருடைய சித்தமானது எக்காலமும் இந்திரிய விஷயங்களிற் செல்வதேயாக, முத்தர்களுடைய சித்தம் இந்திரிய விஷயங்கட்கு எட்டாத நிராகிருத பரமாகாய சிவனார் திருவடியிலே செல்லும்" என்று நிச்சுவாசகாரிகையும்,

பராநந்தமயம் ஶைவம் பஶ்யந்நாநந்தவாந் பவேத்|

"சிவனாரது பரமானந்த ரூபத்தைக் கண்டு ஆனந்தமாய் விளங்குகின்றான்" என்று தேவிகாலோத்தரமும் கூறுமாறு, இந்திரியாதீதபதத்துப் பரமாகாய பரமானந்த மகோததியிலே கருத்தோங்கி நிற்பவராதலின் சம்பந்தசரணாலயர் "ஞானமுனி" யென்றுரைக்கப்பட்டார்.

காடுகேடோறும் சஞ்சரித்துச் சடைகள் கட்டிக் காய், கனி, சருகு, வாயுபக்ஷணஞ் செய்கின்ற முனிவர்களுக்கும் கிட்டுதற்கரிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரது திருக்கல்யாணத்திற் கிளர்ந்த சிவசோதியை எளிதிலே தலைப்பட்டுக் கலந்தவர் சம்பந்தசரணாலய முனிவராதலின், அவர் "நன்முனி" எனப்பட்டார்.

புத்தநந்தி தன்னையும் ஓர் பெரிய மதவாதி என்று நினைந்து திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரது முத்துச்சிவிகைக்கு முன்னே "பரசமயகோளரி வந்தார்" என்று ஊதிய முத்துச்சின்னத்தை ஊதவொட்டாது நீதிக்கு மாறாகத் தீவினைவலியால் தடுக்கப்போந்தவனாதலின் "வம்பின்கட்பிதற்றிவருபுத்தநந்தி" என்று கூறப்பட்டது.

பத்தினி பத்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தங் கலங்கச் சிதைவுகள் செய்தவ
ரத்தமு மாவியு மாண்டோன்றின் மெய்ந்திடுந்
சத்திய மீது சதாநந்தி யாணையே

என்று திருமூலநாயனாரருளியவாறு, பாவ கன்மங்கள் பல்வகைப்பட்டனவேயாக, அப்பாவங்களின் பயன் எய்தற்கு மூன்று வருஷம் ஒரு வருஷமுதலியவாகச் செல்வனவேயாக, புத்தநந்தி சின்னத்தை ஊதவொட்டாது தடுத்தமை அதிபாதகமாகிய சிவத்துரோகமாதலினாலும், அதற்குச் சிரச்சேதமே பிராயச்சித்தமென்று வேதசிவாகமங்கள் கூறுகின்றமையாலும், பரமாசாரிய சுவாமிகளாகிய ஸ்ரீஞானசம்பந்தப்பெருமானது கடாக்ஷவீக்ஷணம் பெற்று நின்மலதுரியத்தின்கண்ணே நின்ற சம்பந்தசரணாலய முனிவர்

வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை

என்னும் உத்தரவேதத் திருக்குறட்கிலக்காக நின்ற அப்புத்தநந்தியின் தடையை அறுக்குமாறு பிரயோகித்த "புத்தர் சமண்கழுக்கையர்" என்னும் வாக்கஸ்திரத்தினால் அப்புத்தநந்தியின் தலையிலே வர்ஷாகாலத்தில் எய்தும் இடிபோலாகாத மற்றோர் வெள்ளிடியே காலம் தாழ்க்காது வீழ்ந்து அவன் தலையையும் உடலையும் வேறாக அறுத்துவிட்டது.

ஸ்ரீஞானசம்பந்தசரணாலயமுனிவரது திருவடிகளை நாம் எஞ்ஞான்றும் சிந்தித்து நைந்து உருகுங்கால், அச்சம்பந்தசரணாலய முனிவராகிய சங்கம ஆன்மலிங்கத்திலே தயிரில் நெய்போல எஞ்ஞான்றும் விளங்கி, அன்பின் நிலையே நிலையாய்ப் பரமானந்தப் பெருஞ்செல்வமே சுயந்திருமேனியாயுள்ள சிவபரம்பொருள் "தாபரசங்கமங்களென்றிரண்டுருவினின்று மாபரன் பூசைகொள்வன்" என்று காணப்படலான், அவ்வுருகிய அன்பின்வழியே புகுந்து பேரின்ப போகத்தைப் பாலித்திடுமாதலின், "சம்பந்தசரணாலயன்றன் பாதஞ் சந்ததமு நைந்துருகிச் சிந்தை" செய்தல் முறையாம் என்று பெறப்பட்டது.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

தத்துவவிளக்கம்

மூலமும் உரையும்

———:o:———

பிரமபுரீசர் வணக்கம்*

சித்தத் துவந்தெமக் கின்பம் படச்சென்னி மேலிருந்து
மெய்த்தத் துவங்கட்கு மேலா வனவிய லார்பசுநூற்
கொத்தத் துவந்து குறுகா தனகொச்சை மன்னவன்று
ளித்தத் துவவிளக் கம்புகர் வான்பணிந் தேத்துதுமே.

(இ-ள்) எமக்கு இன்பம் படச் சித்தத்து உவந்து சென்னிமேலிருந்து = எமக்குச் சிவானந்தபோகம் விளையுமாறு (எமது அறிவின்கண்ணே சிவசொரூபத்தை விளக்கத்) திருவுள்ளத்திலே விரும்பி எமது சென்னியின்கண்ணே (சூட்டுதலான்) அமர்ந்து; மெய்த் தத்துவங்கட்கு மேலாவன = சிவதத்துவங்கட்கு மேலாயினவாய்; இயலார் பசுநூற் கொத்து அத்து வந்து குறுகாதன = இயல்புபொருந்திய பசுசாஸ்திரத்தொகுதிகள் அதனிடத்தினையுந்து எவ்வியல்பின என்று கூறிப்போந்து அடையப்பெறுதனவாயுள்ளன; கொச்சை மன்னவன் தாள் இத்தத்துவவிளக்கம் புகர்வான் பணிந்து ஏத்துதும் = கொச்சை எனப் பெயரிய திருப்பதிக்கிறைவராகிய பிரமபுரீசரது திருவடிகளை இத்தத்துவவிளக்கம் (இடையூறின்றிப்) பாடி முடியுமாறு சிந்தித்துத் துதித்து வணங்குவாம் என்றவாறு.

(வி-ரை) "நான்பெற்றவின்பம்பெறுகவிவ்வையகம்" என ஸ்ரீ மூலநாயனார் திருவாய்மலர்ந்தருளியவாறு, பெரியோர் தாம் அடையும் இன்பத்தை உலகினரும் பெறல்வேண்டும் என்னும் காருண்ணிய திருவுள்ளமுடையராதலின், தன்மை முதலிய மூவிடத்தும் உள்ளாரையும் உளப்படுத்துமாறு "எனக்கு இன்பம்பட" என்று கூறாது "எமக்கு இன்பம்பட" என்று அருளிச்செய்தார்.

[illegible]

---

* வணக்கம், பொருளியல்புரைத்தல், வாழ்த்து என்னும் மூவகை மங்கலவாழ்த்தினுள்ளே இது வணக்கமாம்.

''அவர் (சிவபிரான்) ஆனந்தமுடையர்; அவர் ஆனந்தத்தை விளைவிக்கின்றார்; ஆன்மா பிரமானந்தத்தை அடைந்து ஆனந்தமாகின்றது'' என்று தைத்திரீயோபநிடதமும்,

ஏவைஷ ப்ரஹ்மாநந்தம் ப்ராப்யாநந்தீ பவதி நாந்யதா

''பரப்பிரமசிவம் ஆனந்தமுடையது; அந்தப் பிரமானந்தத்தை (ஆன்மா) அடைந்து ஆனந்தமாயிருக்கின்றான்; மற்றோர்பிரகாரத்தாலன்று'' என்று ஆனந்தாமிர்தமும் கூறுகின்றன.

டுநதி (டுநதி) என்னும் தாதுவினின்று பிறந்த ஆனந்தம் என்னும் மொழியும் இன்பம் என்னும் மொழியும் ஒருபொருட்சொற்களாய் வழங்கப்படுகின்றன. ஆன்மாவின் வேறாய் மூலப்பிரகிருதிக்கண்ணதாகிய சாத்துவிககுணம் ஆன்மாவின்மாட்டுமேற்பட்டு விளங்குதல் உலகவின்பமேயாக, ஆன்மாவுக்கு வேறாய்ச் சிவத்தின்கண்ணே உளவாகியமுற்றுணர்வு முதலிய எண் குணங்களையும் அடக்கிநின்ற சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவமென்பன அவ்வான்மாவின்மாட்டுமேம்பட்டுவிளங்கும் விளக்கமே சிவானந்த பேரின்பமாம்.

சிவானந்தமானது ஞானாசாரியர் உபதேசித்தமாத்திரையானே 'சிவசாஸ்திரசிரவணாதி வேண்டாது அதிதீவிரபக்குவமுடையார்க்கு விரைந்து உடனே விளையும். ஏனையோர்க்கு அது சிவசாஸ்திரசிரவணாதிகளாற் சோபானமுறையானே விளைவதொன்றுமாதலின், இன்பம் விரைந்துவிளைய எனப் பொருட்படக் கூறுது ''இன்பம்பட'' என லேசானே கூறப்பட்டது. ''காணுந்தலையுமறியார்கலதிகள், காலந்தச்சத்தியருளென்பர்காரணம், பாலொன்றுஞானமே பண்பார்தலையுயிர்'' என்று திருமூலநாயனாரும்,

> உச்சியாய் மென்றலையா யோடாகி யூனாயாய்
> நச்சியா வெண்டலையா யிர்மயிர்ப்பேன்—மோச்சிரா
> வாளைவைத்த கண்ணி மணவாளன் மன்றினிடத்
> தாளைவைத்த வென்றன் றலை.

அத்துவி தலாய்க் கதியா யகம்புறமாய்
வித்துநாதமாய்ச் சிறந்து மேல்கீழாக—நுந்தா
நுலைமீது வெண்ணெய்போன் றுள்ளுருக்கு மென்றன்
றலைமீது வைத்த சிவன்றாள்

என்று பெரியோர் கூறுமாற்றானும்,

ज्ञानाख्या दक्षिणे पादे वामे तु क्रियाख्यया ।

'சிவனாரது வலத்திருவடி ஞானசத்தி எனவும், இடத்திருவடி கிரியாசத்தி எனவும்" வாயுசங்கிதை கூறுமாற்றானும், திருவடியினாலும் தலையினாலும் முறையே குறிக்கப்பட்டவை அருட்சத்தியும் ஆன்மாவுமேயாம்.

शिष्यञ्च सम्मुखं कृत्वा स्वस्य पादद्वयं ततः ।
शिवशक्तिस्वरूपेण . . . . शिरःप्रभृति विन्यसेत् ॥

"தக்ஷிணாபிமுகமாக வீற்றிருக்கும், ஆசாரியர் சீடனை எதிர்முகமாக்கித் தமது பாதமிரண்டையும் சிவசத்திரூபமாகக்கொண்டு அச்சீடனுடைய சிரமுதலியவற்றிலே அத்திருவடியை நியசிக்க" என்று இரௌரவாகமமும்,

अधिष्ठानञ्च शिरोमध्ये पादं कारुण्यदेशिकः ।
तत्त्वस्थं ज्ञानसंस्थानं शिष्यस्य बोधयेत् ।
प्रथमं चरणं देव द्वितीयं चक्षुषोर्न्यसेत् ।
तृतीयं चरणं शिष्यस्य कण्ठे ... न्यसेत् ।
पञ्चमं ... षष्ठं ... न्यसेत् ।
सप्तमं शिवतत्त्वं ... शिवतत्त्वे न्यसेत् ।
नवमं शिवयोगस्य दशमं शिवगोचरे ।
... ॥

"(ஆசாரியராலே) சீடனுடைய சென்னிமத்தியிலே அவரது பாதம் வைக்கப்பட்டது; அக்காருண்ணியதேசிகரானவர் முதலாவதாகிய தத்துவரூபமும், இரண்டாவதாகிய தத்துவதரிசனமும், மூன்றாவதாகிய தத்துவசுத்தியும், நான்காவதாகிய ஆன்மரூபமும், ஐந்தாவதாகிய ஆன்மதரிசனமும், ஆறாவதாகிய ஆன்மசுத்தியும், ஏழாவதாகிய சிவரூபமும், எட்டாவதாகிய சிவதரிசனமும், ஒன்பதாவதாகிய சிவயோகமும், பத்தாவதாகிய சிவபோகமுமாகிய இந்தத் தசகாரியஞானவியல்பைச் சீடனுக்குப் போதிப்பாராக; பாசமும் பசுவும் தனித்தனி மும்மூன்றாகவும், பதி நான்காகவும் (இங்ஙனம்) பிரிபட்டுள்ளன; (இந்தத் தசகாரிய ஞானமார்க்கம் இங்ஙனம் விதிக்கப்பட்டுள்ளது)" என்று காமிகாகமமும்,

ஶாவதாதீக்ஷயா ஶிஷ்யம் ஸம்ஶோத்ய யதாவிதி ।
ஶிவஜ்ஞாநபோதஶாஸ்த்ரம் தஸ்மை தத்யாத் விசக்ஷண: ॥

"(ஆசாரியர்) பாவனாதீக்ஷையினாலே சீடனை விதிப்பிரகாரம் தூயனாக்கிக்கொண்டு, (அந்தத்தசகாரியங்கள் அடங்கியதாய்) பதிபசுபாசசிந்தனைக்குரியதாயுள்ள சிவஞானபோதசாஸ்திரத்தைச் சீடனுக்குக் கொடுக்க" என்று இரௌரவாகமமும் கூறுமாற்றாற் சிவானந்தபோகரசம் சீடனுக்கு எய்துமாறு போந்த ஞானதீக்ஷா முறை சுருக்கிச் சூசிப்பிக்கப்பட்டது.

சூரிய காந்தமுஞ் சூழ்பஞ்சும் போலவே
சூரிய காந்தஞ்சூழ் பஞ்சைச் சுடமாட்டா
சூரியன் சந்நிதி யிற்சுடு மாறுபோ
லாரியன் றோற்றமு னற்றம லங்களே

என்று திருமந்திரம் கூறுமாறு, கிரணத்தோடு தோன்றும் ஞாயிற்றின் சந்நிதிமாத்திரையானே சூரியகாந்தக்கல்லின்கண் நெருப்புத் தோன்றுமாறுபோல, முத்திபஞ்சாக்ஷர சிராவியத்தோடு தோன்றும் ஆசிரியன் சந்நிதிமாத்திரையானே

அணோரணீயாந் |

"அணுவுக்கணுவாய்" என்று கடோபநிடதமும் "அணுவோரண்டமாஞ் சிறுமைகொண்டு" என்றும், "நுகர்கின்ற தொண்டர்தமக் கணுவாகி நெய்யானை" என்றும் அருட்பாக்களும் கூறுமாறு மாணுக்கனது பிண்டமாகிய சரீரத்துள்ள ஆன்மாவாகிய தலையின் கண்ணே அருண்ஞானமிர்தம் மிகுமாறு வைக்கப்பட்ட அருட்டிருவடிகளானவை

மஹதோ மஹீயாந் |

"மகத்துக்கு மகத்தாய்" என்று கடோபநிடதமும் "அண்டமோரணுவாம்பெருமைகொண்டு" என்றும், "நிகரிலாமேருவரையணுவாக நீண்டானை" என்றும் அருட்பாக்களும் கூறுமாறு, ஆன்ம தத்துவ வித்தியாதத்துவம் என்னும் பிருதிவியாதி மாயாந்தமாயுள்ள முப்பத்தோர் தத்துவங்கட்கு மேலாய் நின்ற மெய்த்தத்துவங்களாகிய சிவதத்துவம் ஐந்துக்கும் அப்பால் விளங்குவனவாம் என்றுணர்த்தவே "சென்னிமேலிருந்து மெய்த்தத்துவங்கட்கு மேலாவன" என்றருளிச்செய்யப்பட்டது.

ஶிவதத்வாநி பஞ்ச நித்யம் ஸத்யஸ்ய ஸாதநம் |

"சத்தியத்தின் சாதனமாகிய சிவதத்துவம் ஐந்தும் நித்தியம்" என்று ஞானசித்தியாகமமும், "வித்தையோடீசர்சாதாக்கியஞ்சத்தி சிவங்களைந்துஞ், சுத்ததத்துவஞ்சிவன்றன் சுதந்தரவடிவமாகு நித்தமென்றுரைப்பர்" என்று சிவஞானசித்தியாரும் கூறுதலானும் சிவதத்துவங்கள் "மெய்த்தத்துவங்கள்" எனப்பட்டன.

யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மநஸா ஸஹ |
ஆநந்தம் ப்ரஹ்மணோ வித்வாந் ந பிபேதி குதஶ்சந ||

"மனசினாற் குறிக்கப்படும் பசுஞானமும், வாக்கினாற் குறிக்கப்படும் பாசஞானமுமாகிய இரண்டும் செல்லமாட்டாது எங்கிருந்து

மீண்டுவிடுகின்றனவோ, அப்படிப்பட்டபரப்பிரமசிவானந்தத்தைப் (பதிஞானத்தினுல்) அறிகின்றவன் யாண்டும் பயப்படுவானல்லன்'' என்று தைத்திரீயோபநிடதமும்,

𑌪𑌾𑌶𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌨𑍍𑌨 𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌸𑍍𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌪𑌶𑍁𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌤𑍍𑌤𑌥𑍈𑌵 𑌚 ।
𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌯𑌤𑍋 𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌃 𑌪𑌤𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌸𑌿𑌧𑍍𑌯𑌤𑍇 ॥

"பாசஞானத்தினும் அங்ஙனமே பசுஞானத்தினும் முத்தி எய்தாது; எங்கும் வியாபகமாகிய முத்தி பதிஞானத்தினுல் எய்துகின்றது'' என்று சுவாயம்புவாகமமும் கூறுமாற்றுனும், லோகாயதன், மாத்தியமிகன், யோகசாரன், சௌத்திராந்திகன், வைபாடிகன், ஆருகதன் என்னும் புறப்புறச்சமயத்தாருடையவும், தார்க்கிகன், மீமாஞ்சகன், ஏகான்மவாதி, சாங்கியன், யோகி, பாஞ்சராத்திரி என்னும் புறச்சமயத்தாருடையவும் பசுநூற்கொருதிகள் இவ்வியல்பின என்று இசைந்து இசைத்து அடைதற்கியலாதனிலையினவாம் அத்திருவடிகள் என்று உணர்த்தவே இயலார் பசுநூற்கொகாத் தத்தீவர்துகுறுகாதன'' என்றுரைக்கப்பட்டது.

ஒருத்திக்குக் குழந்தையிடத்துளதாம் அருவாகிய அன்பினைப் பிறர் அறியுமாறு வெளிப்படுத்தும் அவ்வன்பினுருவாகிய முலைப்பால் அக்குழந்தையைக் காணுமுன் இலதாய்ப் பின் உளதாமாறு போல, நீரின்கண் நிழல்போல உயிர்களிடத்துப் புலப்படாதுநின்ற பிரமபுரீசராகியபரம்பொருள் ஸ்ரீஞானசம்பந்தமூர்த்திநாயனரென்னும் ஆசாரியவடிவங்கொண்டெழுந்தருளிவந்து சம்பந்தசரணுலயமுனிவரென்னும் இந்நூலாசிரியரது சிரசின்மீது திருவடிசூட்டுதலாகிய சாம்பவிதீக்ஷை எனப்படும் விஞ்ஞானதீக்ஷைபுரிந்தருளினுராதலின், "தாடலைபோற்கூடியவைதானிகழாவேற்றின்பக் கூடலைநீயேகமெனக்கொள்'' என்னும் திருவாக்குக்கியைய, பிரமபுரீசப்பெருமானுடைய ஞானசத்தி கிரியாசத்தி என்னும் இரண்டு திருவடிகளைச் சம்பந்தசரணுலயமுனிவர் தம்முடைய ஞானசத்தி கிரியாசத்

திகட்கு வியாபகமாகக் கொண்டு தாடலைபோல் அடங்கித் திருவருள்வசத்தராய் நின்றார் என்று உணர்த்துதற்கே "கொச்சைமன்னவன்றாள்பணிந்தேத்துதுமே" என்று கூறப்பட்டது.

பெத்தகாலத்தில் மலவிருளாற்றடையுற்று மாயாகலாதிவிளக்கினால் ஏகதேசத்தின்விளங்கிச் சோபாதிகமாய்க் கிஞ்சிஞ்ஞத்துவ கிஞ்சித்கர்த்திருத்துவங்களாம் ஆன்மாவின் ஞானக்கிரியைகள் அழுக்குப்போயவழிப் படகதசௌகல்லியம் படமுழுதும் விளங்குமாறுபோல அநுக்கிரணத்தினால் மலநிவர்த்தியானபின்

நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி ।

"மலநீங்கினவனாய் அறிஞன் (பரப்பிரமசிவத்தோடு) சாமியத்தை அடைகின்றான்" என்று முண்டகோபநிடதமும்,

முக்த: ஶிவஸமோ பவேத் ।

"முத்தன் சிவசாமியம் அடைகின்றான்" என்று வாயுசங்கிதையும்,

யதா ச ஶிவஸ்ய ஸர்வஜ்ஞத்வாதயோ குணா: ।
இத்யேவம் முக்தஸ்ய ஸர்வஜ்ஞத்வாதிஸாம்யபக்ஷோ நிரூபித: ।

"சிவபெருமானைப்போல முத்தராயினோரும் சர்வஞ்ஞாதி குணங்களையுடையராகின்றார்; இங்ஙனம் (சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவங்களின் பகுதியவாய சர்வஞ்ஞாதி எண்) குணங்கள் ஆன்மாவில் (மாணிக்கத்தின் ஒளி ஸ்படிகத்தில் முழுவதும் பதியுமாறுபோலச்) சங்கிரமிக்கும் என்னும் சாமியபக்ஷம் நிரூபிக்கப்பட்டது" என்று சித்தாந்தவிவேகமும் கூறுமாறு, ஆன்மவியாபகம் முழுதும் நிருபாதிகமாய்ச் சர்வதோமுகமாய் சர்வதாபிவியக்தமாய் விளங்கும் என்க. எண்குணங்களாகப் பகுக்கப்படும் பேரறிவு பெருந்தொழில் ஆன்மாவில் விளங்குதல்பற்றியே, "நட்டதே சிற்றறிவிற் பேரறிவு" என்றும், "உன்றன்குலமிரண்டென்குலமிரண்டுங் குறுகிடாவண்ணமின்பமாய்" என்றும் பெரியோரும் மொழிந்தார்.

தொன்மொழி இலக்கணநூலார் * அகரம் (நஞ்) அன்மைப்பொருளினும், இன்மைப்பொருளினும், மறுதலைப்பொருளினும் வருவதாகப் பிரமாணம் காட்டி உதாகரணமுங் காட்டினர். இவர் சொல்லிய முப்பொருளும் "சிவஞானபோதவசனாலங்காரதீப"த்து உ-ஞ் சூத்திரத்து கரு-ம் பிரிவிற் காணப்படும் ஆறு பொருள்களுள் அடங்கி நின்றன.

"ஒரு பொன் பல பணியானது போல" என்னும் அபேதப்பொருள் ஏகான்மவாதிகளாலும், "இருளும் ஒளியும் போல" என்னும் பேதப்பொருள் மத்துவர்களாலும், "சொல்லும் பொருளும் போல" என்னும் பேதாபேதப்பொருள் வைஷ்ணவர்களாலும் கொள்ளப்படுவனவேயாக, சைவசித்தாந்தமானது இம்மும்மதத்தினர் கொள்ளும் முப்பொருள்களையும் மறுத்து மிகு சூக்குமமாய் அம்மூன்று பொருள்களும் "உடலுயிர், கண் அருக்கன், அறிவு ஒளிபோல்" எனத் தன்னுள்ளே அடங்கிநிற்க உண்மையதிதனை உணர்த்துமாம் என்க.

நஞிவயுக்தமந்யஸத்ருசாதிகரணே ததாஹ்யர்த்தகதி: |

என்று பரிபாஷேந்துசேகரகாரர் கூறி, அகாரத்தின் (நஞின்) சாதிருசிய அன்மைப்பொருளை †"அநசுவம்"என்னும்உதாரணங்கொண்டு விளக்கினர். அத்துவிதசப்தத்தின் முதற்கணுள்ள அகாரத்தின் சாதிருசிய (சாமிய) அன்மைப்பொருள் ஒன்றே அப்பிராமணன் என்னும் உதாரணங்கொண்டு பதஞ்சலிமுனிவராலும் மகாபாஷ்யத்து உ-ம் அத்தியாயத்து, உ-ம் பாதத்து, உ-ம் ஆந்நிகத்து, கூ-ஞ் சூத்திரத்தில் எடுத்து விரித்து விளக்கப்பட்டது. ஆகலின், ஏகான்மவாதிகள் அத்துவிதம் என்னும் எண்ணுப்பெயர்மேல் வைத்து அகாரத்துக்குக் கூறும் பொருள் ஒவ்வாதென்பதும் சைவசித்தாந்திகள் (முண்டகோபநிடதத்து ரு. க. ரு-ம் மந்திரத்திற் கூறப்

* இலக்கணக்கொத்து, சூத்திரம், க00.

† இதன்பொருளைச் "சிவஞானபோதவசனாலங்காரதீப"த்து உ-ஞ் சூத்திரத்து கரு-ம் பிரிவிற் காண்க.

பட்டவாறு) சாமியப்பொருள் கொள்வதே பொருத்தமாமென்ப தும் பெரியோர் அனைவர்க்கும் ஒப்பமுடிந்தபக்ஷமாம் என்க.

அத்துவிதமாவது பேதப்பொருள் இரண்டும் தம்முள் அபேத மாதற்குரிய சம்பந்தவிசேஷமாம். அது "அறிவொளிபோற்பிரிவ ருமத்துவிதம்" என்று உமாபதிசிவாசாரியசுவாமிகள் கூறினமை யான் அறியப்படும். "ஒவ்வோர் விடயத்தைக் காணுமிடத்து ஆன் மசிற்சத்தி இந்திரிய ஞானத்தோடு விரவியல்லதுகாட்சிப்படாதிரு தும், மானதம், தன்வேதனை, யோகம், அநுமானம், உரைமுதலி காட்சியிற் செல்லுங்காலத்து அதனைப் பிரிந்து வேறுயும் அதுவ வாயும் நிற்கும் ஆன்மசிற்சத்தி அவ்விந்திரியஞானத்தோடு விரவிக் காட்சிப்படுங்காலத்து, அது அறிந்ததென்றும் இது அறிந்ததென் றும் பிரிக்கப்படாதிருந்ததுபோல" என்பதே "அறிவொளிபோற் பிரிவருமத்துவிதம்" என்பதின் பொருளாம்.

மன்றவேதமத்துவிதமென்றுரைத்திடுமரபா
லொன்றலாற்பொருளிலையெனினுணர்த்துதுந்தெளிதீ
யென்றும்வேறன்மையுணர்த்துமிக்கிளவியேயிதனு
னின்றவாநுயிர்பலவுந்தானுய்நிற்குநிமலன்.

சொன்னதத்துவமசியெனுஞ்சுருதியின்மொழியு
மன்னுகாரணப்பதியுநானெனவரும்பசுவு
மென்னவேபொருளிருமைகண்டியைந்துவேறன்மை
தன்னைநாட்டியதல்லதுதனியென்றதின்றே

என்று அத்துவிதம் தத்துவமசி என்பவற்றின் பொருளை விளக்கினார் பெரியோர்.

யமுனாநதியில் ஓடம்செலுத்திக்கொண்டிருந்த மற்சகந்தியைத் திருக்கைலாசத்தினின்றும் பொதியமலைக்குப் போகவேண்டி அவ் விடம்வந்த பராசரமுனிவர் நோக்கி "ஓடம் விடுவையோ" என்று வினவ, அவள் "ஆயிரம்பேர் ஏறினாலன்றி ஓடம் சமப்பட்டுக் கரையேறாது" என்று கூற, முனிவர் அவ்வாயிரம்பேர் வலியுண்டாய் த்து தண்டங்கொண்டு ஓடத்தைச் சமப்படுத்திக் கரையேறிய பின்

னர், மற்சகந்தியின்மீது மோகமுற்று அவள் துர்க்கந்த நீக்கி யோசனைகந்தியுடையளாக்கி அவளோடு கலந்து வியாசரைப் பெற்று, பின் அம்முனிவர் ஐயோ மயக்கத்தினால் இது நேர்ந்துபோய்விட்டதே என்று வருந்தி, இந்தப் பாவம் பூலோககைலாசமாகிய உமாபதிபுரம் எனப்படும் சீகாழிக்குப்போய்ச் சிவலிங்காராதனஞ்செய்தாற்றான் தீரும் என்றோர்ந்து, ஆங்குச் சென்று சிவலிங்காராதனஞ் செய்ய, சிவபெருமான் அவருக்குச் சாந்நித்தியராய் அவரது அஞ்ஞானமோகத்தை நீக்கி உனக்குவேண்டிய வரம் கேள் என்று ஆஞ்ஞாபிக்க, முனிவர் சுவாமீ! அடியேற்கு ஒழிக்கப்பட்டது அஞ்ஞானமாகிய கொச்சையாமாதலின் "அந்தக் கொச்சை என்னும் பெயர் இத்தலத்துக்காமாறு அருளுக" என்று பிரார்த்திக்க, அதற்குச் சிவபிரானிசைந்து வரம்கொடுத்தருளினர். இவ்வுண்மை

நச்சரவுகச்செனவசைச்சுமதியுச்சியின்மிலைச்சொருகையான்
மெய்ச்சிரமணைச்சுலகினிச்சமிடுபிச்சையமர்பிச்சனிடமாம்
மச்சமதநச்சிமதமச்சிறுமியைச்செய்தவவச்சவிரதக்
கொச்சைமுரவச்சர்பணியச்சுரர்கணச்சிமிடைகொச்சைநகரே

என்னும் திராவிடசுருதியினாற் சூசிககப்படுகின்றது.

சிவனடியார் பெருமை.

(உ) மேடுங் குழியும் விழுந்தேன் விழுங்க வெழுந்துவிண்ணைக்
கூடும் பொழிற்கோச்சை வேந்தன் குரைகழற் கன்பர்குன்றுங்
காடுங் கடுஞ்சுரமுங் கடலேழுங் கடந்தரிதிற்
றேடும் பொருளினுஞ் சேர்ந்தவற் றாரினுஞ் சீரியரே.

(இ-ள்) மேடுங் குழியும் விழும் தேன் விழுங்க எழுந்து விண்ணைக் கூடும் பொழில் கொச்சை வேந்தன் குரைகழற்கு அன்பர் = (மேடுகளினும் குழிகளினும் வீழ்ந்த பூந்தேன் மேடுபள்ளந்தோன்றாவண்ணம் அவற்றைச் சமப்படுத்தி மூடிவிடுமாறு உயர்ந்து ஆகாயத்தை அளாவும் சோலையையுடைய கொச்சைபுரத்திறைவராகிய சிவபிரானது சிலம்பொலிக்கும் திருவடிகளுக்கு அன்பு செய்

யும் அடியார்கள்; குன்றுங் காடும் கடுஞ்சுரமும் எழு கடலுங் கடந்து அரிதில் தேடும் பொருளினும் சேர்ந்த உற்றாரினுஞ் சீரியர்—மலைகளையும், காடு சார்ந்த முல்லைநிலங்களையும், கொடிய பாலைவனங்களையும், (நெய்தனிலப்பாற்பட்ட) எழு கடல்களையும் கடந்துபோய் வருத்தத்தினோடு சம்பாதித்த திரவியத்தினும் மிக்க உரிமையோடு எய்திய நட்பினர் உறவினர்களினும் உத்தமரேயாம் எ-று.

(வி-ரை) "சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடன்" என்னும் பழமொழிப்பிரகாரம் "ஏகனாகி இறைபணி நிற்கும்" அன்புடையாரை மாத்திரமன்றி "அடையாதார்க்கு நீடருள்புரியுநித்தன்" என்று பெரியோர் கூறியவாறு சாராதார்க்கும் கர்மாநுசாரமாகப் போக மூட்டி அநுக்கிரகஞ் செய்பவர் பிரமபுரீசராம் என்பது குறிப்பினாற் றொனிக்கவே, "மேடுங் குழியும் விழுந்தேன் விழுங்க" என்று கூறப்பட்டது.

தமது அருட்டிருவடிகளுக்கு உருகுதலினாற் பஞ்சபுலன்களுமொன்றி விரிந்த சிந்தையோடு அன்புமடைதிறந்து நின்ற மெய்யடியார்களுக்குப் பிரமபுரீசர் அளவறுக்கொணாப் பொறுப்பரிய பேரின்பத்தேனை வழங்க, அதனைப் பெற்ற அம்மெய்யடியார் தம்மைச் சரணென்றடைந்தவர்களைப் பிறவிக்குழியினின்று மெடுத்து, விபரீதவுணர்வையோட்டி, ஏகதேசவுணர்வைத் தூர்த்து, வியாபகவறிவைக் கொடுத்து, சிவானந்தபோக நிறைவிலே விடுத்து, "அடியேனடுவுளிருவீருமிருப்பதானாலடியார்நடுவுளிருக்குமருளைப்புரியாய்" என்றவாறு அவர்களுக்குத் தாங்கள் ஓர் வேலிபோலாகி அவர்களை அப்பெருநிலைச் சிவபோகச் செல்வநிலைநிறைவிலே நிறுவிப் பிறழ்வொட்டாது பரமுத்தியிற் றலைப்படுமாறு செய்தலினால், சிலகாலம் உயிர்க்கு ஓர் ஒதுக்கிடமாய் வாய்ந்த இந்த நாற்றச் சடலத்தை வளர்த்தற்குச் சாதனமாய் வேண்டப்பட்ட சடப்பொருள்களாய், குன்றுகளையும், காடுகளையும், கடுஞ் சுரங்களையும், சப்தசமுத்திரங்களையும் கடந்து வருத்தத்தோடு தேடப்பட்டனவாயுள்ள திரவியங்களினும், அவற்றின் வாயிலாகப் பெறப்பட்ட தாவரமாகிய விளைநிலமுதலியவைகளினும், உரிமையுடையேம் நண்புடையேம் என்று தம் நயத்தின்பொருட்டே வந்தணைந்து சிவபோகநிலையை

அலைத்து, வியாபக அறிவைத் தடுத்து, ஏகதேசவுணர்வில் விடுத்து, விபரீதவுணர்விற் போக்கி, பிறவிக்குழியிலே பொறிக்கும் பேசை நட்பினர் உறவினர்களாகிய சங்கமப் பொருள்களினும், மிகமிக உயர்ந்தோராம் என்பதுணர்த்தற்கே "குரைகழற்கன்பர் தேடும் பொருளினுஞ் சேர்ந்தவுற்றாரினுஞ் சீரியர்" என்றுரைக்கப்பட்டது. இம்மெய்யடியார்கள் சிவமெனக்கொண்டு வழிபடற்பாலர் என்பது.

'முக்த்யை ப்ராப்ய ஸதஸ்தேஷாம் பஜேத்வேஷம் ஶிவாலயம் |

"முக்தியின்பொருட்டுச் சிவன்முக்தர்களாகிய அடியார்களையடைந்து அவர்களுடைய திருவேடத்தையும் திருக்கோயிலையும் (சிவமெனக் கண்டு) வழிபடுக" என்னும் சிவஞான போத சூத்திரத்தினால் உணரப்படும்.

ஸ்தாவரம் ஜங்கமஞ்சேதி லிங்கம் த்விவிதமுச்யதே |
ஸ்தாவரம் ஸ்தாபிதம் லிங்கம் தீக்ஷிதம் ஜங்கமம் விது: |
ஜங்கமஸ்யாவமாநேந ஸ்தாவரம் நிஷ்பலம் பவேத் |

"ஸ்தாவரலிங்கம் ஜங்கமலிங்கம் என லிங்கம் இருவகைப்படும்; ஸ்தாவரலிங்கமாவது (சிவாசாரியராற் சிவாகமப்பிரகாரம்) ஆலயங்களிலே ஸ்தாபிக்கப்பட்ட லிங்கம் என்றும், ஜங்கமலிங்கமாவது அச்சிவாசாரியரால் தீக்ஷிக்கப்பட்ட (அடியார்) லிங்கம் என்றும் அறிக; ஜங்கமலிங்கம் எனப்படும் அடியாரை அவமதித்தலினால் (ஆலயத்துள் எழுந்தருளியிருக்கும்) ஸ்தாவரலிங்க வழிபாடு நிஷ்பலமாகும்" என்று சிவதருமோத்தரம் கூறுகின்றது. ஆகவே, சிவலிங்கவழிபாட்டினும் அடியார் வழிபாடு சிறந்ததாமாதலின் "கொச்சைவேந்தன் குரைகழற்கன்பர் சீரியரே" என்று கூறப்பட்டது.

ஶிவ஭க்தா மஹாத்மாநஸ் ஸந்தி தேவேஷு கேசந |
தேவேப்யோ யாதுதாநேப்யோ யக்ஷகந்தர்வபோகிப்ய: |
ருஷீஶ்வரேப்ய: ஶ்ரேஷ்டேப்யோ ப்ராஹ்மணேப்யோ ந்ருபேஷ்வபி |
உபர்யுபரி ஜ்யேஷ்டேப்ய: ஶ்ரேஷ்டாஸ் ஸர்வேப்ய ஏவ தே ||

வர்ணாச்ரமவ்யவஸ்தாச நைஷாம் ஸந்தி த்விஜோத்தமாः।
கேவலம் சிவபக்தாஸ்தே ஸர்வே மாஹேச்வராः ஸ்ம்ருதாः।
அதிவர்ணாச்ரமாः ப்ரோக்தாஸ் ஸர்வவேதேஷு ஸம்மதாः।

"தேவருள்ளும், அசுரருள்ளும், அரக்கருள்ளும், யக்ஷருள்ளும் கந்தருவருள்ளும், நாகருள்ளும், முனிவருள்ளும், மானிடருள்ளே பிராமணருள்ளும், க்ஷத்திரியருள்ளும், வைசியருள்ளும், சூத்திரருள்ளும் சங்கரஜாதியாருள்ளும் மகாத்துமாக்களாகிய சிற்சில சிவனடியார்கள் இருக்கின்றார்கள்; இவர்கட்கெல்லாம் வர்ணாச்சிரமங்களின் கட்டுப்பாடில்லை; அந்தச்சிவபக்தர்களாகிய இவரெல்லாம் மாகேசுவரர்களாகக் கொள்ளப்படுகின்றார்கள்; அவரெல்லாம் அதிவர்ணாச்சிரமிகளென்று சமஸ்த வேதாகமங்களினும் ஒப்புக்கொள்ளப்படுகின்றார்" என்று அடியார் பெருமையை ஸ்காந்தபுராண உபதேசகாண்டம் கூறுகின்றது.

இந்நூல் முதநூல்
வழித்தென்பது

(௩) சீரார் கயிலைத் திருவாய் மலர்ந்த சிவாகமங்கற்
றாராய் வதுவட சொற்பயின் றார்க்கெளி தம்மொழியைச்
சாரா தவரருந் தத்துவ ஞானந் தலைப்படுதற்
கேரார் தமிழ்ச்செய் யுளான்மைய றீர வெழுதுவனே.

(இ-ள்) சீரார் கயிலைத் திருவாய்மலர்ந்த சிவாகமம் கற்று ஆராய்வது வடசொற்பயின்றார்க்கு எளிது = திருக்கைலாசத்தின்கண்ணே (சிவபெருமான் சாதாக்கிய தத்துவத்திற் சதாசிவ மூர்த்தியா யெழுந்தருளியிருந்து) திருவாய்மலர்ந்தருளிய காமிகாதி மூலாகமம் இருபத்தெட்டையும் உபாகமங்களையும் கற்றாராய்வது ஆரியபாஷையில் வல்லுநர்க்கு அரியதன்று; அம்மொழியைச் சாராதவர் அரும் தத்துவஞானம் தலைப்படுதற்கு ஏர் ஆர் தமிழ்ச் செய்யுளால் மையல் தீர எழுதுவன் = அவ்வாரியமொழியைப் பயிலாதவர் பெறுதற்கரிய பதிபசுபாச தத்துவஞானத்தைத் தலைப்

பட்டு உய்யும்பொருட்டு இனிமைவாய்ந்த தமிழ்ப்பாவினாலே தத்துவவிளக்கம் என்னும் இந்நூலை (இருவினையொப்பு மலபரிபாகமுற்ற ஆன்மாக்களின்) மயக்கந்தீர வரைவேனாயினேன் எ-று.

ஜம்புத்தீவு எனப்படும் பரதகண்டத்து உத்தரதிசைக்கண்ணதாகிய இமாசலச்சாரலில் ஓர் கைலாசமும், ஆன்மதத்துவத்தின் உபரிபாகத்துள்ள பிரகிருதிக்கு மேலே ஸ்ரீகண்டநாயனார் எழுந்தருளியிருக்கும் ஓர் கைலாசமும், சுத்தவித்தை ஈசுரதத்துவத்திலேயுள்ள மகேசுவரரெழுந்தருளியிருக்கும் ஓர் கைலாசமும், சாதாக்கியதத்துவத்திற் சதாசிவநாயனார் எழுந்தருளியிருக்கும் ஓர் கைலாசமும், சத்திசிவதத்துவங்களில் ஆதி எனப்படும் உமையம்மையாரோடு கூடிய சிவபிரான் எழுந்தருளியிருக்கும் ஓர் கைலாசமுமாக ஐந்து கைலாசங்கள் உள்ளனவாகக் காளகஸ்திப்புராணம் கூறுகின்றது, மேலும், சிவபிரான் தம்மை வழிபட்டுய்யும்பொருட்டுத்தியானபூஜாதிகளுக்கு அங்கங்கே எளிவந்து அடியார்களுக்கு அநுக்கிரகிக்குமாறு சாந்நித்தியமாயிருக்கும் தானங்களும் கைலாசம் எனப்படும்.

இச்செய்யுளிற் கைலாசம் எனப்பட்டது சாதாக்கியதத்துவத்துச் சதாசிவநாயனார் வேதசிவாகமங்களை உபதேசித்தற்கிடமாயிருந்த ஸ்தானமேயாம். இதுபற்றியே சீரார் என்னும் விசேஷணம் புணர்த்திச் "சீரார் கைலை" எனப்பட்டது.

ஈசாந: ஸர்வவித்யாநாமீச்வர: ஸர்வபூதாநாம் ப்ரஹ்மாதிபதிர் ப்ரஹ்மணோதிபதிர் ப்ரஹ்மா சிவோ மே அஸ்து ஸதாசிவோம் ||

என்னும் தைத்திரீய ஆரணியக (௧0 . ௨௧ . ௬0) மந்திரத்திலே, சதாசிவோம் (ஸதாசிவோம்) என்றது சிவசாதாக்கியத்தையும், சிவோமே அஸ்து (சிவோ மே அஸ்து) என்றது அமூர்த்திசாதாக்கியத்தையும், பிரம்மாதிபதிர்பிரம்மணோதிபதிர் பிரம்மா (ப்ரஹ்மாதிபதிர் ப்ரஹ்மணோதிபதிர் ப்ரஹ்மா) என்றது மூர்த்திசாதாக்கியத்தையும், ஈச்வரஸ்சர்வபூதாநாம் (ஈச்வர: ஸர்வபூதாநாம்) என்றது கர்த்திருசாதாக்கியத்தையும், ஈசாநஸ்சர்வவித்தியாநாம் (ஈசாந: ஸர்வவித்யாநாம்) என்றது கன்மசாதாக்கியத்தையும் உணர்த்துவனவாம் என்பது

ஶிவஸாதாக்யம் ஶிவம் ஜ்ஞேயம் அமூர்த்தீஶ உச்யதே |
அமூர்த்தி: ப்ரஹ்மஜாதி [illegible] மூர்த்தி ஸம்ஹார உச்யதே |
கர்த்ரா ஸாதாக்யம் [illegible] கர்மஸாதாக்யம் [illegible]

என்னும் வாதுளசூத்தாக்கிய சுலோகத்தினால் அறியப்படுகின்றது.

சதாசிவப்பிரமத்தினுடைய கன்மசாதாக்கியம் தற்புருஷமுக மாகவும், கர்த்திருசாதாக்கியம் அகோரமுகமாகவும், மூர்த்திசா தாக்கியம் சத்தியோசாதமுகமாகவும், அமூர்த்திசாதாக்கியம் வாமதே வமுகமாக [illegible] சாதாக்கியம் ஈசானமுகமாகவுங் கொள்ளப்படு கின்றன.

[illegible]
[illegible] |
[illegible] |
[illegible] |
[illegible] |
[illegible] |
[illegible] ||

"சதாசிவப்பிரமத்தினுடைய தற்புருஷமுகத்தினின்று இருபத்தொ ரு சாகையுடைய இருக்குவேதமும், அகோரமுகத்தினின்று நூறு சாகையுடைய யசுர்வேதமும், வாமதேவமுகத்தினின்று [illegible] சாகையுடைய சாமவேதமும், சத்தியோசாத முகத்தினின்று ஒன் பது சாகையுடைய அதர்வவேதமும், ஊர்த்துவ ஈசானமுகத்தி னின்று திவ்விய சிவஞானகாமிகாதி ஆகமங்களும் தோன்றிய" என்று அகஸ்தியசங்கிதை கூறுகின்றது.

[illegible] |
[illegible] |
[illegible] ||

"சத்தியோசாதர், வாமதேவர், அகோரர், தற்புருஷர், ஈசானர் என்னும் ஐந்து மூர்த்திகளுக்கும் தனித்தனி ஐம்முகங்கள் உண்டு; அவற்றால் லௌகிகாதிகள் கூறப்பட்டன; இதுபற்றி ஐம்முகங்களுக்கும் இருபத்தைந்து சுரோதசுபேதங்கள் கூறப்படுகின்றன" என்றி காமிகாகமமும்,

> 𑌸𑌦𑍍𑌯𑍋𑌜𑌾𑌤𑌮𑍁𑌖𑌾𑌜𑍍𑌜𑌾𑌤𑌾𑌃 𑌪𑌞𑍍𑌚𑌾𑌦𑍍𑌯𑌾𑌃 𑌕𑌾𑌮𑌿𑌕𑌾𑌦𑌯𑌃।
> 𑌵𑌾𑌮𑌦𑍇𑌵𑌮𑍁𑌖𑌾𑌜𑍍𑌜𑌾𑌤𑌾 𑌦𑍀𑌪𑍍𑌤𑌾𑌦𑍍𑌯𑌾𑌃 𑌪𑌞𑍍𑌚 𑌸𑌂𑌮𑌿𑌤𑌾𑌃।
> 𑌅𑌘𑍋𑌰𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌾𑌦𑍁𑌦𑍍𑌭𑍂𑌤𑌾𑌃 𑌪𑌞𑍍𑌚𑌾𑌪𑌿 𑌵𑌿𑌜𑌯𑌾𑌦𑌯𑌃।
> 𑌪𑍁𑌂𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌾𑌦𑍍𑌵𑌿𑌨𑍋𑌦𑍍𑌗𑌤𑌾𑌃 𑌪𑌞𑍍𑌚𑍈𑌵 𑌰𑍌𑌰𑌵𑌾𑌦𑌯𑌃
> 𑌈𑌶𑌾𑌨𑌵𑌦𑌨𑌾𑌜𑍍𑌜𑌾𑌤𑌾𑌃 𑌪𑍍𑌰𑍋𑌦𑍍𑌗𑍀𑌤𑌾𑌦𑍍𑌯𑌷𑍍𑌟 𑌸𑌂𑌮𑌿𑌤𑌾𑌃 ॥

"சத்தியோசாதமுகத்தினின்று காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அஜிதம் என்னும் ஐந்து ஆகமங்களும், வாமதேவமுகத்தினின்று தீப்தம், சூக்குமம், சகச்சிரம், அம்சுமான், சுப்பிரபேதம் என்னும் ஐந்து ஆகமங்களும், அகோரமுகத்தினின்று விஜயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், ஆக்கினேயம், வீரம் என்னும் ஐந்து ஆகமங்களும், தற்புருஷமுகத்தினின்று இரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகவிம்பம் என்னும் ஐந்து ஆகமங்களும், ஈசானமுகத்தினின்று புரோற்கீதம், லளிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேசுவரம், கிரணம், வாதுளம் என்னும் எட்டு ஆகமங்களுமாக இருபத்தெட்டும் தோன்றின" என்று காரணாகமமும் கூறுகின்றன.

காமிக முதலிய ஐந்தும் கவுசிகவிருடியின்பொருட்டுத் தோன்றின. அவற்றிற் கூறியபிரகாரம் அவருக்குத் தீக்ஷை செய்யப்பட்டது. அவற்றிற்கு அதிதேவதை சிவமூர்த்தி. பூமியின்கண் அவ்விருஷிகோத்திரம் சிவகோசரம் * எனப்படும். தீப்தமுதலிய ஐந்தும் காசியபவிருடியின்பொருட்டுத் தோன்றின. அவற்றிற் கூறிய

* கோசரம் எனினும் கோத்திரம் எனினும் ஒக்கும்.

பிரகாரம் அவருக்குத் தீக்ஷை செய்யப்பட்டது. அவற்றிற்கு அதிதேவதை ஈசுரன். அவ்விருடிகோத்திரம் சிகாகோசரம் எனப்படும். விஜயமுதலிய ஐந்தும் பாரத்துவாஜவிருஷியின்பொருட்டுத் தோன்றின. அவற்றிற் கூறியபிரகாரம் அவருக்குத் தீக்ஷை செய்யப்பட்டது. அவற்றிற்கு அதிதேவதை ஈசானன். அவ்விருஷிகோத்திரம் சோதிகோசரம் எனப்படும். இரௌரவ முதலிய ஐந்தும் கவுதமவிருஷியின்பொருட்டுத் தோன்றின. அவற்றிற் கூறியபிரகாரம் அவருக்குத் தீக்ஷை செய்யப்பட்டது. அவற்றிற்கு அதிதேவதை பிரமமூர்த்தி. அவ்விருஷிகோத்திரம் சாவித்திரிகோசரம் எனப்படும். புரோற்கீதமுதலிய எட்டும் அகஸ்தியவிருஷியின்பொருட்டுத் தோன்றின. அவற்றிற் கூறியபிரகாரம் அவருக்குத் தீக்ஷை செய்யப்பட்டது. அவற்றிற்கு அதிதேவதை நடேசமூர்த்தி. அவ்விருஷிகோத்திரம் வியோமகோசரம் எனப்படும்.

மேலே காமிகமுதலிய ஆகமங்கள் இருபத்தெட்டும் சதாசிவநாயனாரது ஈசானமுகத்தினின்று தோற்றியவாகக் கூறி, ஈண்டு சத்தியோசாத முதலிய முகங்களினின்று காமிகமுதலிய ஐந்தும் பிறவும் தோற்றியவாகக் கூறினமை மலைவாம் பிறவெனின், ஆகாது; ஈசானமுதலிய ஒவ்வோர் முகங்களுக்கும் ஐவைந்து சுரோதஸ்பேதங்கள் உள்ளன என்று கூறப்பட்டமையானும், அங்ஙனம் ஈசானமுகசம்பந்தமாகிய ஐந்து சுரோதசுகளினின்று காமிகமுதல் வாதுளம் இறுதியாகிய இருபத்தெட்டு ஆகமங்களும் தோன்றின என்று பெறப்பட்டமையானுமாம்.

> ததூர்த்வ வக்த்ர ஸம்பூதம் தந்த்ரம் ஸித்தாந்த ஸம்ஜ்ஞிதம் ।
> வேதாந்தஸாரஸர்வஸ்வ மதுலம் ஸர்வஸித்திதம் ॥

"(இருநூற்றேழு) உபாகமங்களோடு பத்து(ம் பதினெட்டுமாகிய இருபத்தெட்டு மூல) ஆகமங்களும் ஷடங்கங்களோடு நான்கு வேதமும் ஊர்த்துவமுகத்திற் றோன்றிய" என்று அசிதாகமும் கூறுகின்றது.

காமிகமுதலிய ஆகமங்கள் இருபத்தெட்டுமே ஊர்த்துவமுக ஈசானசம்பந்தமாகிய ஐம்முகங்களினின்று தோற்றிய என்றும் இருக்குமுதலிய நான்குவேதங்களும் தற்புருஷமுதலிய நான்கு முகங்களினின்று தோற்றிய என்றும் கூறிவிட்டு, ஈண்டு இருக்கு முதலியநான்கும் ஊர்த்துவமுகத்தினின்றுபிறந்தன என்றமை மலைவாம் பிற எனின், ஆகாது; முகம் ஒன்றுக்குத் தனித்தனி ஐந்து முகங்கள் உளவாம் என்று நிரூபிக்கப்பட்டமையானும், ஈசான ஊர்த்துவமுகசம்பந்தமாகிய சத்தியோசாத முதலியவற்றினின்று காமிகாதி ஆகமங்கள் தோன்றவே, தற்புருஷம் அகோரம் வாமம் சத்தியோசாதம் என்னும்மற்றைய நான்குமுகங்கட்கும் முகம்ஒன்றுக்குத் தனித்தனிஐந்து சுரோதசுகளுண்மையின், தற்புருஷத்துக்குரிய ஊர்த்துவசுரோதசினின்று இருக்குவேதமும், அகோரமுகத்துக்குள்ள ஊர்த்துவசுரோதசினின்றுயசுர்வேதமும், வாமத்துக்குள்ள ஊர்த்துவசுரோதசினின்று சாமவேதமும், சத்தியோசாதத்துக்குள்ள ஊர்த்துவமுகத்தினின்று அதர்வவேதமும் பிறந்தன என்று பெறப்படுகின்றமையானுமாம்.

ஈசாநஸ்ஸர்வவித்யாநாம்--தைத்திரீய ஆரணியகம், ௧௦. ௨௧. ௩௯-
என்றற்றொடக்கத்ததாகவும்,

தத்புருஷாய வித்மஹே ஷை ஷை ௧௦. ௨௦. ௩௮-
என்றற்றொடக்கத்ததாகவும்,

அகோரேப்யோ ஷை ஷை ௧௦. ௧௯. ௩௭-
என்றற்றொடக்கத்ததாகவும்,

வாமதேவாய நம: ஷை ஷை ௧௦. ௧௮. ௩௯-
என்றற்றொடக்கத்ததாகவும்,

ஸத்யோஜாதம் ப்ரபத்யாமி ஷை ஷை ௧௦. ௧௭. ௩௫-

என்றற்றொடக்கத்ததாகவும் ஈசானம், தற்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம்என்னும் பஞ்சப்பிரஹ்மமந்திரங்களைத் தைத்திரீய ஆரணியகசுருதி எடுத்துக் கூறிற்று.

தற்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம் என்னும் நான்கு முகங்களால் நான்கு வேதங்களையும் தோற்றுவித்தார் என்றும்

𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌾𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌨𑌿𑌰𑍂𑌪𑌿𑌤𑌞𑍍𑌚 𑌪𑌰𑌮𑌂 𑌷𑌟𑍍𑌤𑍍𑌰𑌿𑌂𑌶𑌤𑍍𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌕𑌂 𑌤
𑌸𑍍𑌮𑌾𑌦𑍁𑌤𑍍𑌤𑌰𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑌕𑍍𑌷𑌰𑌮𑌯𑌂 𑌧𑍍𑌯𑍇𑌯𑌂 𑌸𑌦𑌾 𑌯𑍋𑌗𑌿𑌭𑌿𑌃। 𑌓𑌙𑍍𑌕𑌾𑌰𑌾𑌦𑌿
𑌕𑌾𑌮𑌿𑌕𑌾𑌦𑌿𑌜𑌨𑌕𑌂 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌾𑌦𑌿𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌂 𑌪𑌰𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌪𑌞𑍍𑌚𑌮𑌮𑍀𑌶𑍍𑌵
𑌰𑌸𑍍𑌯 𑌵𑌦𑌨𑌂 𑌖𑌂 𑌵𑍍𑌯𑌾𑌪𑌿 𑌤𑍇𑌜𑍋𑌮𑌯𑌮𑍍॥

"வியக்தாவியக்தமாய் நிரூபிக்கப்பட்டதும், மேலாயதும், (நில முதல் நாதமீறாகிய) முப்பத்தாறு தத்துவசொரூபமாயதும், ஆக லின் (தற்புருஷமுதலிய நான்கு முகங்களுக்கும்) சிரேஷ்டமாயதும், அழியா இயல்பினதாயதும், யோகிகளாலே எக்காலமும் தியானிக்கற்பாலதும், ஓங்காரத்தை முதலாகக்கொண்ட காமிகாதி ஆகமங்களைப் பிறப்பிப்பதும், சூக்குமத்தினும் அதிசூக்குமமாய் மேலாயதும் (சாந்தியதீத) பரமாகாயத்தை வியாபித்த ஒளியினை யுடையதுமாகிய (தாண்டவேசுவர மஹாசதாசிவப்பெருமானது) ஐந்தாவதாகிய (ஈசான) முகத்தை நமஸ்கரிக்கின்றேன்'' என்றும் சிரௌதசூத்திரம், கிருஹ்யசூத்திரம் என்பவற்றை அருளிய போதா யனமஹர்ஷி கூறினர்.

𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌾𑌦𑍇𑌵 [illegible]
[illegible]
𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌦𑍇𑌵 𑌉𑌪𑌾𑌦𑌿𑌦𑍇𑌶 𑌚 [illegible]
[illegible]॥

"சிவபிரான் அபிவியக்த சர்வஞ்ஞத்துவாதி குணமுள்ள சுத் தர்களாய்ச் சிவசொரூபர்களாயுள்ள சாதாக்கிய தத்துவபதவிராசிக ளாகிய பிரணவர் முதலிய பதின்மரையும் முதற்கண்ணே சங்கற்ப மாத்திரையினால் உள்ளத்துவ சிருஷ்டியாற் படைத்து, அனந்தாதி அஷ்டவித்தியேஸ்வரர்களுக்கு ஆகமஞானோபதேசமானபின் அந்த நாதரூப சிவஞானத்தைக் காமிகமுதலிய பத்தாகப் பிரித்து அவர் களுக்கு (பிரணவாதியர்க்கு) நேராகத்தாமே உபதேசித்தார்; ஆக லின், காமிக முதலிய பத்தும் சிவபேதம் எனப்படும்; பின்னும்

ஈசுவரதத்துவத்திலிருக்கும் அநாதிருத்திரர் முதலியபதினெண்மர்களையும் அறிஞர்களாக்கி, அச்சதாசிவநாயனாரால் அவர்களுக்கு உபதேசிக்கப்பட்ட விஜயாதி பதினெட்டு ஆகமங்களும் அபரமாகிய உருத்திரபேதம் எனப்படும்" என்று சித்தாந்தசாராவளி கூறுகின்றது.

இருபத்தெட்டு ஆகமங்களின் பெயரும் சுலோகத்தொகையும் வருமாறு:—

	பெயர்	தொகை
1.	காமிகம்	பரார்த்தம் 100,000,000,000,000,000
2.	யோகஜம்	இலக்ஷம் 100,000
3.	சிந்தியம்	இலக்ஷம் 100,000
4.	காரணம்	கோடி 10,000,000
5.	அஜிதம்	* இலக்ஷம் 100,000
6.	தீப்தம்	இலக்ஷம் 100,000
7.	சூட்சுமம்	பதுமம் 1,000,000,000,000,000
8.	சகசிரம்	சங்கம 100,000,000,000,000
9.	அஞ்சுமான்	† ஐந்திலக்ஷம் 500,000
10.	சுப்பிரபேதம்	மூன்றுகோடி 30,000,000
11.	விஜயம்	மூன்றுகோடி 30,000,000

* பத்துலக்ஷம் என்றும் கூறுப. † நியுதம் என்றும் கூறுப.

12.	விச்சுவாசம்	கோடி 10,000,000
13.	சுவாயம்புவம்	§ ஒன்றரைக்கோடி 15,000,000
14.	ஆக்கினேயம் அல்லது அனலம்	* முப்பதினாயிரம் 30,000
15.	வீரம்	† லக்ஷம் 100,000
16.	ரௌரவம்	‡ பத்துக்கோடி 100,000,000
17.	மகுடம்	இலக்ஷம் 100,000
18.	விமலம்	மூன்றிலக்ஷம் 300,000
19.	சந்திரஞானம்	மூன்றுகோடி 30,000,000
20.	முகவிம்பம்	இலக்ஷம் 100,000
21.	புரோற்கீதம்	மூன்றிலக்ஷம் 300,000
22.	இலளிதம்	* எட்டிலக்ஷம் 800,000
23.	சித்தம்	† ஐம்பதிலக்ஷம் 5,000,000
24.	சந்தானம்	‡ ஆறுலக்ஷம் 600,000
25.	சர்வோக்தம்	இரண்டிலக்ஷம் 200,000

§ மூன்றரைக்கோடி என்றும் கூறுப. * மூன்று லக்ஷம் என்றும் கூறுப † நியுதம் என்றும் கூறுப † எட்டு அர்ப்புதம் என்றும் கூறுப * எண்ணாயிரம் என்றும் கூறுப † ஒன்றரைக்கோடி என்றும் கூறுப ‡ ஆறாயிரம் என்றும் கூறுப.

26.	பாரமேசுவரம்	பன்னிரண்டிலக்ஷம் 1,200,000
27.	கிரணம்	ஐந்துகோடி 50,000,000
28.	வாதுளம்	இலக்ஷம் 100,000

காமிகமுதலிய இருபத்தெட்டும் சிவபேதம் உருத்திரபேதம் என இருவகைப்படும். இவ்வாகமம் இருபத்தெட்டையும் கேட்டவர் பிரணவர்முதல் அறுபத்திருவராவர். சிவபேதம் பத்தையும் கேட்டவர் ஒருவரிடத்து ஒருவராக ஒவ்வொருஆகமத்துக்கும் மூன்று பேராய் அணுசதாசிவருட்டிலவராகிய பிரணவர்முதல் முப்பதின்மராவர். உருத்திரபேதம் பதினெட்டையும் கேட்டவர் ஒவ்வோர் ஆகமத்துக்கு இவ்விரண்டுபேராய் அநாதிருத்திரர்முதல் முப்பத்தறுவராவர்.

சிவபேதம் பத்தும் கேட்டவர்

		பெயர்
1.	காமிகம்	பிரணவர் திரிகலர் அரர்
2.	யோகஜம்	சுதாக்கியர் பஸ்மர் விபு
3.	சிந்தியம்	சுதீப்தர் கோபதி அம்பிகை
4.	காரணம்	காரணர் சர்வருத்திரர் பிரசேசர்
5.	அஜிதம்	சுசிவர் சிவர் அச்சுதர்

6.	தீப்தம்	ஈசர் திரிமூர்த்தி உதாசனர்
7.	சூக்குமம்	சூக்குமர் வைச்சிரவணர் பிரபஞ்சனர்
8.	சகசிரம்	காலர் வீமர் தருமர்
9.	அஞ்சுமான்	அம்பு உக்கிரர் ஆதித்தியர்
10.	சுப்பிரபேதம்	தேசேசர் விக்கினேசர் சசி

உருத்திரபேதம் பதினெட்டும்
கேட்டவர்

1.	விஜயம்	அநாதிருத்திரர் பரமேசர்
2.	நிச்சுவாசம்	தசார்ணர் பார்ப்பதி
3.	சுவாயம்புவம்	நிதனேசர் பத்மபூ
4.	ஆக்கினேயம்	வியோமர் உதாசனர்
5.	வீரம்	தேசர் பிரஜாபதி
6.	ரௌரவம்	பிரமேசர் நந்திகேசர்
7.	மகுடம்	சிவர் மகாதேவர்
8.	விமலம்	சர்வாத்துமர் வீரபத்திரர்

9.	சந்திரஞானம்	அனந்தர் பிருகஸ்பதி
10.	முகவிம்பம்	பிரசாந்தர் ததீசி
11.	புரோற்கீதம்	சூலி கவசர்
12.	இலளிதம்	ஆலயேசர் இலளிதர்
13.	சித்தம்	விந்து சண்டேசர்
14.	சந்தானம்	சிவநிஷ்டர் அசம்பாதர்
15.	சருவோத்தம்	சோமதேவர் நிருசிங்கர்
16.	பாரமேசுவரம்	சிறீதேவி உசனர்
17.	கிரணம்	தேவவிபு சம்வர்த்தர்
18.	வாதுளம்	சிவர் மகாகாளர்

மூலாகமங்களுக்குரிய உபாகமங்கள்

	உபாகமம்	
1. காமிகம்	1. * வக்த்ராரம் 2. பைரவோத்தரம் 3. நார்சிம்ஹம் (மிருகேந்திரம்)	௩

* உத்திரம் என்றும் கூறுப.

		4. வீணுசிகோத்தரம்	
		5. தாரம்	
2.	யோகஜம்	6. சந்தம்	௫
		7. சந்ததி	
		8. ஆத்மயோகம்	
		9. சுசிந்தியம்	
		10. சுபகம்	
		11. வாமம்	௬
3.	சிந்தியம்	12. பாவநாசம்	
		13. பரோத்பவம்	
		14. அம்ருதம்	
		15. காரணம்	
		16. பாவநம்	
		17. தௌர்க்கம்	
4.	காரணம்	18. மகேந்திரம்	௭
		19. பீமம்	
		20. மாரணம்	
		21. துவேஷ்டம்	
		22. பிரபூதம்	
		23. பரோத்பூதம்	
5.	அஜிதம்	24. பார்வதிசம்ஹிதை	௪
		25. பதுமசம்ஹிதை	
		26. அமேயம்	
		27. சப்தம்	
		28. ஆச்சாத்யம்	
		29. அசங்கியம்	
6.	தீப்தம்	30. அமிதௌஜசம்	௯
		31. ஆனந்தம்	
		32. மாதவோத்பூதம்	
		33. அத்புதம்	
		34. அக்ஷதம்	
7.	சூக்ஷ்மம்	சூக்ஷ்மசங்கிதை	௧

		35.	அநிதம்	
		36	மங்களம்	
		37	சுத்தம்	
		38	அப்ரமேயம்	
8.	சஹஸிரம்	39	ஜாதிபாக்	
		40.	பிரபுத்தம்	க௦
		41	விபுதம்	
		42	ஹஸ்தம்	
		43	அலங்காரம்	
		44	சுபோதகம்	
		45.	வித்தியாபுராணதந்திரம்	
		46.	வாசவம்	
		47	நீலலோஹிதம்	
		48.	பிரகாரணம்	
		49.	பூததந்திரம்	
9.	அம்சுமான்	50.	ஆத்மாலங்காரம்	கஉ
		51	காச்யபம்	
		52	கௌதமம்	
		53	ஐந்திரம்	
		54	பிராம்ஹ்யம்	
		55	வாசிஷ்டம்	
		56.	ஈசானம்	
10.	சுப்பிரபேதம்		சுப்பிரபேதம்	க
		57.	விஜயம்	
		58.	உத்பவம்	
		59.	சௌம்யம்	
11.	விஜயம்	60.	அகோரம்	அ
		51.	மிருத்தியுநாசநம்	
		62.	குபேரம்	
		63.	மஹாகோரம்	
		64.	விமலம்	

12.	நிச்சுவாசம்	65.	நிச்சுவாசம்	௮
		66.	உத்தரநிச்சுவாசம்	
		67.	நிச்சுவாசமுகோதயம்	
		68.	நிச்சுவாசநயனம்	
		69.	நிச்சுவாசகாரிகை	
		70.	கோரசம்ஞம்	
		71.	யமாக்யம்	
		72.	குஹ்யம்	
13.	சுவாயம்புவம்	73.	பிரஜாபதிமதம்	௩
		74.	பத்மம்	
		75.	சுவாயம்புவம்	
14.	ஆக்நேயம்		அநலம்	௧
15.	வீரம்	76.	பிரஸ்தாரம்	௧௩
		77.	புல்லமல்லம்	
		78.	பிரபோதம்	
		79.	போதம்	
		80.	போதகம்	
		81.	அமோஹம்	
		82.	மோஹசமயம்	
		83.	ஹாடகம்	
		84.	சகடாதிகம்	
		85.	ஹலம்	
		86.	விலேகனம்	
		87.	பத்திரம்	
		88.	வீரம்	
16.	ரௌரவம்	89.	காலக்நம்	௬
		90.	கலாதீதம்	
		91.	ரௌரவம்	
		92.	ரௌரவோத்தரம்	
		93.	மஹாகாளமதம்	
		94.	ஐந்திரம்	
17.	மகுடம்	95.	மகுடம்	௨
		96.	மகுடோத்தரம்	

		97.	அனந்தம்	
		98.	போகம்	
		99.	ஆக்ராந்தம்	
		100.	விருஷபிங்கம்	
		101.	விருஷோதரம்	
		102.	விருஷாத்புதம்	
		103.	சுதந்தம்	
18.	விமலம்	104.	ரௌத்திரம்	௧௬
		105.	பத்திரவிதம்	
		106.	அரேவதம்	
		107.	அதிக்ராந்தம்	
		108.	அட்டஹாசம்	
		109.	அலங்கிருதம்	
		110.	அர்ச்சிதம்	
		111.	தாரணம்	
		112.	தந்திரம்	
		113.	ஸ்திரம்	
		114.	ஸ்தாணு	
		115.	மஹாந்தம்	
		116.	வாருணம்	
		117.	நந்திகேசுவரம்	
		118.	ஏகபாதம்	
19.	சந்திரஞானம்.	119.	சங்கரம்	௧௪
		120.	நீலருத்திரகம்	
		121.	சிவபத்திரம்	
		122.	கற்பபேதம்	
		123.	ஸ்ரீமுகம்	
		124.	சிவசாசநம்	
		125.	சிவசேகரம்	
		126.	தேவிமதம்	

		127.	சதுர்முகம்	
		128.	மல்யம்	
		129.	அயோகம்	
		130.	சமுஸ்தோபம்	
		131.	பிரதிபிம்பகம்	
		132.	ஆத்துமாலங்காரம்	
		133.	வாயவ்யம்	
20.	முகபிம்பம்	134.	தௌடிகம்	௧௫
		135.	துடிநீரகம்	
		136.	கலாத்யயம்	
		137	துலாயோகம்	
		138.	குட்டிமம்	
		139	பட்டசேகரம்	
		140	மஹாவித்தை	
		141	மஹாசௌரம்	
		142.	கவசம்	
		143.	வராஹம்	
		144.	பிங்களமதம்	
		145.	பாசபந்தம்	
		146.	கண்டதரம்	
		147.	அங்குசம்	
		148.	தநுர்த்தரம்	
		149.	சிவஞானம்	
21.	புரோற்கீதம்	150.	விஞ்ஞானம்	௧௬
		151.	ஸ்ரீகாலஞானம்	
		152.	ஆயுர்வேதம்	
		153.	தநுர்வேதம்	
		154.	சர்ப்பதம்ஷ்ட்ரீவிபேதநம்	
		155.	கீதம்	
		156.	பரதம்	
		157.	ஆதோத்யம்	
		158	லளிதம்	
22.	லளிதம்	159	லளிதோத்தரம்	௩
		160	கௌமாரம்	

23.	சித்தம்	161.	சாரோத்தரம்	ச
		162.	ஔசநோத்தரம்	
		163.	சாலாபேதம்	
		164.	சசிகண்டம்	
24.	சந்தானம்	165.	இலிங்காத்யக்ஷம்	எ
		166.	சுராத்யக்ஷம்	
		167.	சங்கரம்	
		168.	அமலேச்வரம்	
		169.	அசுங்கியம்	
		170.	அநிலம்	
		171.	துவந்துவம்	
25.	சர்வோக்தம்	172.	சிவதர்மோத்தரம்	ரு
		173.	வாயுபுரோக்தம்	
		174.	திவ்யபுரோக்தம்	
		175.	ஈசானம்	
		176.	சர்வோத்கிதம்	
26.	பாரமேசுவரம்	177.	மதங்கம்	எ
		178.	யக்ஷணிபத்மம்	
		179.	பாரமேசுவரம்	
		180.	புஷ்கரம் (பௌஷ்கரம்)	
		181.	சுப்பிரயோகம்	
		182.	ஹம்சம்	
		183.	சாமாந்யம்	
27.	கிரணம்	184.	காருடம்	கூ
		185.	நைருதம்	
		186.	நீலம்	
		187.	ருக்ஷம்	
		188.	பாநுகம்	
		189.	தேநுகம்	
		190.	பிரபுத்தம்	
		191.	புத்தம்	
		192.	காலம்	

28.	வாதுளம்	193.	வாதுளம்	௧௨
		194.	உத்தரவாதுளம்	
		195.	காலஞானம்	
		196.	பிரரோஹிதம்	
		197.	சர்வம்	
		198.	தர்மாத்மகம்	
		199.	சிரேஷ்டம்	
		200.	நித்தியம்	
		201.	சுத்தம்	
		202.	மஹாநநம்	
		203.	விச்வம்	
		204.	விச்வாத்மகம்	

ஆ உபாகமம் ௨௦௭

சிவபெருமானுக்கு ஆகமங்கள் அங்கங்களாயமைந்தமை

𑌕𑌾𑌮𑌿𑌕𑌂 𑌪𑌾𑌦𑌯𑍁𑌗𑍍𑌮𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑍋𑌗𑌜𑌂 𑌗𑍁𑌲𑍍𑌫𑌮𑍇𑌵 𑌚।
𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌂 𑌪𑌾𑌦𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑍀𑌃 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾𑌃 𑌕𑌾𑌰𑌣𑌂 𑌜𑌙𑍍𑌘𑌿𑌕𑍇 𑌚
𑌤𑌥𑌾॥

𑌅𑌜𑌿𑌤𑌂 𑌜𑌾𑌨𑍁𑌦𑍇𑌶𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌦𑍀𑌪𑍍𑌤𑌮𑍂𑌰𑍁𑌪𑍍𑌰𑌦𑍇𑌶𑌕𑌮𑍍।
𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌂 𑌗𑍁𑌹𑍍𑌯𑌮𑍇𑌵𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌸𑌹𑌸𑍍𑌰𑌂 𑌕𑌟𑌿𑌦𑍇𑌶𑌕𑌮𑍍॥
𑌅𑌂𑌶𑍁𑌮𑌾𑌨𑍍𑌪𑍃𑌷𑍍𑌠𑌕𑌂 𑌸𑍁𑌪𑍍𑌰𑌭𑍇𑌦𑌂 𑌤𑍁 𑌨𑌾𑌭𑌿𑌕𑌮𑍍
𑌵𑌿𑌜𑌯𑌂 𑌕𑍁𑌕𑍍𑌷𑌿𑌦𑍇𑌶𑌂 𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌨𑌿𑌶𑍍𑌵𑌾𑌸𑌂 𑌹𑍃𑌦𑌯𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍॥
𑌸𑍍𑌵𑌾𑌯𑌂𑌭𑍁𑌵𑌸𑍍𑌤𑌨𑍌 𑌦𑍍𑌵𑍌 𑌤𑍁 𑌅𑌨𑌲𑌂 𑌨𑍇𑌤𑍍𑌰𑌮𑍇𑌵 𑌚।
𑌵𑍀𑌰𑌂 𑌕𑌣𑍍𑌠𑌪𑍍𑌰𑌦𑍇𑌶𑌸𑍍𑌤𑍁 𑌰𑍌𑌰𑌵𑌂 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌮𑍇𑌵 𑌚॥
𑌮𑍁𑌕𑍁𑌟𑌂 𑌮𑌕𑍁𑌟𑌂 𑌤𑌸𑍍𑌯 𑌬𑌿𑌮𑍍𑌬𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌙𑍍𑌗𑌮𑍇𑌵 𑌚।
𑌪𑌾𑌰𑌮𑍇𑌶𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍁𑌰𑌸𑍍𑌥𑌲𑌮𑍍॥

𑌸𑌿𑌂𑌹𑌕𑌣𑍍𑌠𑌂 𑌸𑌾𑌵𑌰𑍍𑌣𑌂 𑌪𑍍𑌰𑍋𑌦𑍍𑌗𑍀𑌤𑌂 𑌜𑌿𑌹𑍍𑌵𑌸𑌂𑌜𑍍𑌞𑌿𑌤𑌮𑍍।
𑌲𑌲𑌿𑌤𑌂 𑌸𑍃𑌕𑍍𑌵𑌣𑍍𑌯𑍋𑌶𑍍𑌚 𑌸𑌿𑌦𑍍𑌧𑌂 𑌚𑍈𑌵 𑌲𑌲𑌾𑌟𑌕𑌮𑍍॥
𑌸𑌨𑍍𑌤𑌾𑌨𑌂 𑌕𑍁𑌣𑍍𑌡𑌲𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑍋𑌕𑍍𑌤𑌮𑍁𑌪𑌵𑍀𑌤𑌕𑌮𑍍।
𑌪𑌾𑌰𑌮𑍇𑌶𑍇𑌨 𑌹𑌾𑌰𑌂 𑌚 𑌕𑌿𑌰𑌣𑌂 𑌰𑌤𑍍𑌨𑌭𑍂𑌷𑌣𑌮𑍍॥
𑌵𑌾𑌤𑍂𑌲𑌂 𑌪𑌾𑌰𑌮𑍇𑌶𑌸𑍍𑌯 𑌵𑌾𑌸𑌸𑍍𑌤𑍍𑌵𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌕𑍇𑌨 𑌚।
𑌬𑌿𑌂𑌬𑌂 𑌪𑍁𑌷𑍍𑌪𑍇𑌷𑍁 𑌶𑍋𑌭𑍍𑌯𑍇𑌷𑍁 𑌸𑌿𑌤𑌾𑌖𑍇𑌨 𑌨𑌿𑌵𑍇𑌶𑌿𑌤𑌮𑍍॥

(1)	காமிகம்	திருவடிகள்
(2)	யோகஜம்	கணைக்கால்கள்
(3)	சிந்தியம்	திருவடிவிரல்கள்
(4)	காரணம்	கெண்டைக்கால்கள்
(5)	அசிதம்	முழந்தாள்கள்
(6)	தீப்தம்	தொடைகள்
(7)	சூக்குமம்	குய்யத்தானம்
(8)	சகச்சிரம்	கடித்தானம்
(9)	அம்சுமான்	முதுகு
(10)	சுப்பிரபேதம்	கொப்பூழ்
(11)	விஜயம்	உதரம்
(12)	நிச்சுவாசம்	இருதயம்
(13)	சுவாயம்புவம்	முலைகள்
(14)	ஆக்கினேயம்	கண்கள்
(15)	வீரம்	கழுத்து
(16)	ரௌரவம்	செவிகள்
(17)	மகுடம்	திருமுடி

(18)	விமலம்	...	...	கைகள்
(19)	சந்திரஞானம்	...	...	மார்பு
(20)	முகவிம்பம்	...	...	திருமுகம்
(21)	புரோற்கீதம்	...	...	திருநாக்கு
(22)	இலளிதம்	...	...	கபோலங்கள்
(23)	சித்தம்	...	...	திருநெற்றி
(24)	சந்தானம்	...	...	குண்டலம்
(25)	சருவோக்தம்	...	...	உபவீதம்
(26)	பாரமேசுவரம்	...	...	ஆரம்
(27)	கிரணம்	...	...	இரத்தினுபரணங்கள்
(28)	வாதுளம்	...	...	திருப்பரிவட்டம்
	பிம்பம்	...	...	புஷ்பமும் மாலையும்
	சைவசித்தாந்தம்	...	...	நைவேத்தியம்

இவ்வாகமங்கள் சதாசிவரால் அனந்தேசுவரர்க்கும், அனந்தேசுவரரால் ஸ்ரீகண்டருக்கும், ஸ்ரீகண்டரால் தேவர்களுக்கும், தேவர்களால் முனிவர்களுக்கும், முனிவர்களால் மனிதர்களுக்கும், மனிதர்களால் மனிதர்களுக்கும் உபதேசிக்கப்படும். இங்ஙனம் உபதேசிக்கப்படுங்கால் உளவாகிய சம்பந்தம் ஆறும் முறையே பரசம்பந்தம், மகாசம்பந்தம், அந்தராளசம்பந்தம், திவ்வியசம்பந்தம், திவ்யாதிவ்யசம்பந்தம், அதிவ்வியசம்பந்தம் எனப் பெயர் பெறும்.

மகாசங்காரமுடிவின்கண்ணே உலகங்களை மீளப் படைக்குமாறு (இருக்குவேதத்து க0-ம் மண்டலத்து கஉகூ-ம் சூக்தத்து க, எ-ம் மந்திரங்கள் கூறுமாறு பரமவியோமம் எனப்படும் திருச்சிற்றம்பலத்து அத்தியக்ஷராகிய மகாசதாசிவ) பரப்பிரமசிவனுருடைய (காமம் எனப்படும்) பராசத்தி குடிலையை நோக்கியவழி, வேதாகமங்

கள் குடிலையினின்று நாதவடிவாயும் அதன்பின் விந்துவடிவாயும், அதன்பின் அக்ஷரவடிவாயும் முறையே தோன்ற, பின் அவற்றைச் சொற்றொடர்ப்படுத்திப் பிறர்க்கு அருளுமாறு அச்சிவபிரான் சகளநிஷ்களத் திருமேனிகொண்டருளிச் சதாசிவமூர்த்தியாய் நின்று தற்புருடமுதலிய நான்கு முகங்களால் வேதங்களைத்தோற்றுவித்து, மேற்கண்ணதாகிய ஈசானமுகசம்பந்தமாகிய ஐந்து சுரோதசுகளாலும் காமிகாதி இருபத்தெட்டு * ஆகமங்களையும் தோற்றுவித்து வேதங்களை அனந்தேசுரவழியானே யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம் யோ வை வேதாம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை "எவர் முதற்கண்ணே பிரமாவைப் படைத்தாரோ, எவர் வேதங்களை முதன்முதற் பிரமாவிக்கு அருளிச்செய்தாரோ" என்று சுவேதாசுவதரம் கூறுமாறு, பிரமாவுக்கு அருளிச்செய்து சிவாகமங்களைப் பிரணவர்முதலிய பதின்மரும் மகாருத்திரர் முதலிய பதினெண்மருமாகிய இருபத்தெண்மருக்கும் சிவபேதம் உருத்திரபேதம் எனப்பகுத்து ஓரோவொன்று ஒவ்வொருவருக்கு அருளிச்செய்து, பின்னர் அவ்விருபத்தெட்டினையும் வித்தியேசுவரர் எண்மருட்டலைவராகிய அனந்ததேவர்க்கு அருளிச்செய்ய, அவற்றை அவர் நூற்றுப்பதினெட்டு உருத்திரர்களுக்குத் தலைவராகிய ஸ்ரீகண்டருத்திரர்க்கு அருளிச்செய்ய அவற்றை அவர் கணங்கட்கும் தேவர்க்கும் முனிவர்க்கும் மனிதர்க்கும் அளித்தற்பொருட்டு, முதற்கண் நந்திபெருமானுக்கு அருளினர் என்று தத்துவவுண்மை அறிந்தோர் கூறுவர்.

"தைத்திரீய ஆரணியகத்து க0. உக. நகூ-ம் மந்திரத்திலே (வேதமுதலிய) சர்வவித்தைகளுக்கும் (கர்த்தா) ஈசானர்" என்று காணப்படுகின்றது.

அஸ்ய மஹதோ பூதஸ்ய நிஶ்வஸிதம்

"(இருக்குவேதம், யசுர்வேதம், சாமவேதம், அதர்வாங்கிரசு, இதிகாசம், புராணம், வித்தை, உபநிடதமுதலியன) பரம்பொருளினால் (லேசானே அருளிச்செய்யப்பட்டன என்பது தொனிக்கச்) சுவாசிக்கப்பட்டது" என்று கூறப்பட்டது.

---

* சைவாகமம் என்னும் பெயர் அன்னபூர்ணோபநிடதத்து ரு-ம் அத்தியாயத்து உச-ம் மந்திரத்திற் காணப்படுகின்றது.

அஷ்டாதஶாநாம் வித்யாநாமேதாஸாம் பிந்நவர்த்மநாம்।
ஆதிகர்த்தா கவிஸ்ஸாக்ஷாச்சூலபாணிரிதி ஶ்ருதி:॥

"பலமார்க்கமுடைய (இந்த வேதமுதலிய) பதினெண் வித்தைகளுக்கும் நேரே முதற்கர்த்தாவாயுள்ளார் சூலபாணியாகிய சிவபெருமான் என்று சுருதி கூறுகின்றது" என்று சிவபுராண வாயு சங்கிதை பூருவபாகத்து க-ம் அத்தியாயத்து உச-ம் சுலோகம் கூறுகின்றது. இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களும், சிக்ஷை, கற்பம், வியாகரணம், நிருக்தம், சந்தசு, சோதிடம் என்னும் ஆறு அங்கங்களும், புராணம், நியாயம், மீமாஞ்சை த்ருமசாஸ்திரம் என்னும் நான்கு உபாங்கங்களும், ஆயுர்வேதம், தநுர்வேதம், கந்தருவவேதம், அர்த்தவேதம் என்னும் நான்கு உபவேதங்களுஞ் சேர்ந்து பதினெண் வித்தைகளாகும்.

இதிஹாஸபுராணாப்யாம் கஷ்டம்ஹ்யுபப்ரும்ஹித:।
ஶைவாகமைஸ்து ஸர்வாங்கோபாங்கவிஸ்தரை:
ஸம்ஸ்காராதிகாரஶ்ச ஸம்யகேவோபப்ரும்ஹித:॥

"வேதம் இதிகாசபுராணங்கள்கொண்டு மிகவும் பிரயாசையோடு வியாக்கியானஞ் செய்யப்பட்டது; பின்னர் அவ்வேதம் சைவாகமங்களினாலே சர்வாங்கோபாங்கவிஸ்தாரமாக (உபப்பிருங்கணஞ் செய்யப்பட்டது; ஷடத்துவசுத்தி எனப்படும்) சம்ஸ்காராதிகாரமும் நன்கு உபப்பிருங்கணஞ்செய்யப்பட்டது" என்று சைவபுராணவாயுசங்கிதை பூருவபாகத்து உஅ-ம் அத்தியாயத்து கூ, கo-ம் சுலோகங்கள் கூறுகின்றன. அப்பயதீக்ஷிதயோகியார் சிவாகமங்கள் வேதத்துக்கு உபப்பிருங்கணங்களாதல்பற்றி வேதாந்தசூத்திரபாஷ்யமாகிய சிவார்க்கமணிதீபிகை க-ம் அத்தியாயத்து க-ம் பாதத்து ங-ம் சூத்திரத்திலே -

ஶைவாக3மா: புராணஶப்3தே3ந ஸங்க்3ரஹ:

"சைவாகமங்களும் புராணசப்தத்தினலே தொகுக்கப்படும்" என்று கூறினர். அருணந்திசிவாசாரியர் வேதங்கள் சூத்திரம்போன்றி ருத்தலிற் பொதுநூல் என்றும், அவ்வேதங்களுக்குப் பாஷ்யம் போன்றிருத்தலிற் சிவாகமங்கள் சிறப்புநூல் என்றும் பொருள் கொள்ளுமாறு சிவஞானசித்தியார் அ-ம் சூத்திரத்து கஙு-ம் செய்யுளில் "ஆரணநூல் பொது சைவமருஞ் சிறப்புநூலாம்" என்றருளிச்செய்தார். நீலகண்டசிவாசாரியர் பாசுபதாதிகரணத்தில் (உ. உ. ௩-அ) 'பிரஹ்மம், பிரணவம், பஞ்சாக்ஷரம், பிராசாதாதிமந்திரம் பசு பதி பாசாதி வஸ்து வியவகாரம், பஸ்மோத்தூளன திரிபுண்டரதாரணம், லிங்கார்ச்சனம், உருத்திராக்ஷதாரண முதலிய பரதருமங்கள் வேதத்தினும் சிவாகமத்தினும் சமமாகக் காணப்படுகின்றன என்றும், வேதத்துக்கும் சிவாகமத்துக்கும் வேற்றுமை இல்லை என்றும், வேதம் மூவருணத்தார்க்குரியதாகச் சிவாகமம் எல்லா வருணத்தார்க்கும் உரியது என்றும் கூறியருளினர்.

சிவாகமங்கள் சரியாபாதம், கிரியாபாதம், யோகபாதம், ஞானபாதம் என நான்காக வகுக்கப்படும். சரியாபாதத்திலே பிராயச்சித்தவிதி, பவித்திரவிதி, சிவலிங்கலக்ஷணம், செபமாலை யோகபட்டமுதலியவற்றின் இலக்ஷணமுதலிய கூறப்படும்; கிரியாபாதத்திலே மந்திரங்களின் உத்தாரணம், சந்தியாவந்தனம், பூசை செபஹோமங்கள், சமயவிசேஷ நிருவாண ஆசாரியாபிஷேகங்கள் கூறப்படும்; யோகபாதத்திலே முப்பத்தாறு தத்துவங்கள் தத்துவேசுவரர் இயமநியம ஆசனம் சமாதிமுறை முதலிய கூறப்படும்; ஞானபாதத்திற் பதிபசுபாச லக்ஷணங்கள் கூறப்படும்.

சரியாபாதமுதலிய நான்கு பாதமும் தனித்தனி நான்காகப் பகுக்கப்படும், இவற்றைச் சிவஞானபோதமாபாஷ்யத்திற்காண்க.

வடமொழியிலுள்ள மூலாகமம் இருபத்தெட்டனுள்ளே ஞான பாதத்துள்ள ஒவ்வோர் ஆகமம் ஐக்கியவாதசைவம், பாடாணவாத சைவம், பேதவாதசைவம், சிவசமவாதசைவம், சங்கிராந்தவாத சைவம், ஈசுரவவிகாரவாதசைவம் என்னும் அகச்சமயமுதலியவை களுக்கும் பொருள்கொள்ளுமாறு செய்து, சைவசித்தாந்த சமயத் தாக்கு நேரே பொருள்கொள்ளவொட்டாது மயங்கவைப்பதுவே யாக, தமிழ்மொழியாற் செய்யப்பட்ட இத்தத்துவவிளக்கம், அவ் விருபத்தெட்டாகம ஞானபாதத்தின் சாரமாய்நின்று பதிபசுபாச ங்களின் இலக்கணங்களை வழுவற மயக்கமின்றி உணர்த்திச் சிவா நுபவமுடைய ஞானாசாரியர்வாயிலாகச் சைவசம்ஸ்காரம்பெற்றுத் தன்னை ஓதல் ஓதுவித்தல் கேட்டல் கேட்பித்தல் சிந்தித்தல் என் னும் ஐவகை ஞானபூசைவாயிலாகத் தொடர்ந்த பக்குவர்களாகிய சீடர்களை ஆணவமலமயக்கத்தினின்றொழித்துச் சிவாநுபோக நிலையிற் செலுத்திச் சந்தேகமின்றி உய்விக்கும் என்பது தொனிக்க " மையறீரவெழுதுவனே " என்று கூறப்பட்டது.

இந்நூலாசிரியர் தாம் அருளிய வேதாகமசாரமாகிய வைதிக சைவசித்தாந்த தத்துவவிளக்கம் தமது ஞானாசாரியருடைய திருவ ருள்வலியினாற் சிதைந்துபோகாது எக்காலத்தும் நிலைபெறுவதொன் றுமென்பதும், தமிழிலே அருளிச்செய்யப்பட்ட மற்றைச்சாஸ்திரங் கள்போலச் சிலகாலத்தனவாம் என்று காலவளவைபற்றி எள்ளிக் கூறும் புன்மொழியினின்று நீங்கித் தாய்தாய் வச்சிரலேபம்போல நிலைத்து மெய்யன்பர்களை உய்விக்கும் என்பதும், புலப்படவே " கூறுவனே " என்று கூறாது " எழுதுவனே " என வரைந்தரு ளினர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருவாய்மலர்ந்தருளும் தே வாரப்பதிகங்களையெல்லாம் தமது திருக்கரத்தால் எழுதிவைத்தாற் போலவே, இத் தத்துவவிளக்கநூலையும் வரைவேனாயினேன் என் பாராய் " எழுதுவனே " எனக் கூறினார் என்னுமாம்.

ஞானாசாரியர் துதி

(௪) எழுமென தாசை முடித்தற் குளவெழு தாமரையும்
வழுதிதன் கூனு நிமிரவந் தாண்டன வையமுய்யக்
கழுமல வாணருந் தேவியுங் கண்டுதங் கண்களிப்பச்
செழுமலர் வாவிக் கரையினின் றாடிய சிற்றடியே.

(இ-ள்) எழும் எனது ஆசை முடித்தற்கு உள = (சமுத்திரம்போன்று விரிந்துகிடந்த வடமொழிச் சிவாகமப்பொருளை என் சிறிய தமிழ்ப்பாவினாற் பக்குவான்மாக்களுக்கு உணர்த்தவேண்டுமென)எழுகின்ற என்ஆசையை முற்றுவித்தற்குத் துணையாயுள்ளன (யாவை எனின், அவை); எழுதாமறையும் வழுதிதன் கூனும் நிமிர வந்தாண்டன = சுருதியின் கூனும் பாண்டியன் கூனும் நிமிருமாறு வந்து ஆண்டனவாய்; வையம் உய்ய கழுமலவாணரும் தேவியும் கண்டு தம் கண் களிப்ப செழுமலர் வாவிக்கரையில் நின்றாடிய சிற்றடியே = உலகமுய்யுமாறு சீகாழித்தலைவராகிய பிரமபுரீசரும் திருநிலைநாயகியம்மையாரும் கண்டு தங்கள் கண்கள் களிக்குமாறு செழிய தாமரைமலர்கள் நிறைந்த பிரமதீர்த்த வாவிக்கரையின் கண்ணே நின்று ஆனந்தபாஷ்பம் பொழிய ஆனந்தக் கூத்தாடினவாயுள்ள ஸ்ரீஞானசம்பந்தப்பெருமானுடைய சிறிய திருவடிகளேயாம் எ-று.

(வி-ரை) திருப்பாண்டிநாட்டிலே "மன்னன் எப்படி மன்னுயிர் அப்படி" என்றவாறு அரசனைப்போலக் குடிகளும் க்ஷமணசமயத்தாராய்விட, மயிர்பறி தலைகளும், ஊத்தைவாயும், உறிபொதிகலனும், மயிற்பீலிக்கையும், பாயுடையும், மனம்போல் மாசுண்ட சரீரமும், வெற்றரையுமுடைய க்ஷமணப்பதிதர்களே எங்கும் பரந்துவிட, அதனால் க்ஷமணிருள் விருத்தியாய் ஓங்கினமையின் வைதிகசைவ ஒளி குன்றிவிட்டது. விடவே, வேதமானது தலையெடுத்தோங்கமாட்டாது ஒடுங்கி முடங்கிவிட, பாண்டியராஜசபையிலே அப்பாண்டியன் சுரத்தை விபூதிகொண்டு போக்கியும், க்ஷமணர்கள் எ

திரே தேவாரத்திருவேட்டை அக்கினியிலிட்டுப் பச்சையாக எடுத்தும், வைகைநதியிலே "வாழ்கவந்தணர்" என்னும் திருப்பாசுரயேட்டை இட்டு எதிரேறும்படி செய்தும், இங்ஙனம் க்ஷமணர்களை வாதிலே செயித்து, அவர்கள் கழுவேறுமாறு செய்து, வைதிகசைவத்தைத் தலையெடுக்கச் செய்தமையின், "மறையின் கூன் நிமிர" என்றும், "வேந்தனுமோங்குக" என்று திருப்பாசுரத்திலே அருளிப் பாண்டியன் முதுகின் கூனையும் நிமிர்த்தி, அதனால் அவனது கூன்பாண்டியன் என்னும் பெயரை நெடுமாறன் என மாற்றி அநுக்கிரகித்தன மதுரைக்கெழுந்தருளிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருவடிகளேயாமாதலின் "எழுதாமறையும் வழுதிதன் கூனும் நிமிரவந்தாண்டன" என்று அவர் திருவடிகள் துதிக்கப்பட்டனவாம் என்க.

இங்ஙனம் க்ஷமணிருளை ஓட்டி, வைதிகசைவசமயஸ்தாபனஞ் செய்து புண்ணியபூமியெங்கும் நன்மைவிளைத்துத் தமிழ்வேதஞ் செய்த நன்றியை மறந்து, அத்தமிழ்வேதத்தைத்தூஷித்து அதனைக் காதினாலும் கேட்டல் கூடாதென்று நிந்திப்பவர்கள் கவுதமாச்சிரமத்திற்குப் போய்ப் பன்னிருவருஷம் அன்னம் அயின்றுவிட்டு அவர் செய்த நன்றியை மறந்து அவரைத் தூஷித்து அவராற் சபிக்கப்பட்டு வைதிகநெறியினின்று நீக்கப்பட்டகொடியோர்களேயாம்.

சிவபாதவிருதயர் பிரமதீர்த்தவாவியின்கண்ணே செயற்பாலனவாகிய ஸ்நாநாதி நியமங்களை முடித்துக் கரையிலேறித் தமது புதல்வராகிய பிள்ளையாருடைய திருவாயிலே பால் ஒழுகியிருப்பக் கண்டு, "நீ யார் தந்த பாலை உண்டனை? அவரைக் காட்டு என்று கோபித்து," ஓர் சிறு மாறுகொண்டு ஓச்ச, அப்பிள்ளையார் தமது திருக்கைவிரலால் அம்மையப்பர் இருவரையும் சுட்டித் "தோடுடைய செவியன்" என்னும் திருப்பதிகம் பாடி அச்சிறு மாற்றினால் எய்திய வருத்தந் தோன்றாது உமையம்மையார் அளித்த சிவஞானப்பாலை உண்டு சிவானந்தமேலிட்டுப் "பாடலினொடாடலிவை யின்றிடினும் பயில்வர்" என்றவாறு ஆனந்தபாஷ்பஞ் சொரிய

ஆனந்தக்கூத்தாடினார் என்று உணர்த்தற்கே "செழுமலர் வாவிக்க ரையினின்றாடிய சிற்றடியே" என்றும், இச் சிறுகுழந்தையார் அங் ஙனம் ஆனந்தாதீதத்தினின்று தம்மிருவரையும் பாடி ஆட அவ்வி ருவருங் கண்டு களித்தார்கள் என்று விளக்குதற்கே "கழுமல வாணருந் தேவியுங்கண்டு தங்கண்களிப்ப" என்றுங் கூறப்பட்டது.

வைதிக சைவசித்தாந்தத்தில் ஒழுகித் தம்மை அன்பினோடு வழுத்துகின்றவருடைய மலத்தைப் போக்கிச் சிவானந்தத்தை விளைவிக்குமியல்பினர் அப்பிரமபுரீசராமாதலின் அவர் எழுந்தருளி யிருக்குந் திருப்பதியின் பன்னிரு பெயர்களுட்போந்த மற்றோர் பெயராற் கூறாது நிருமலபதி எனப்படுங் கழுமலப்பெயரால் அது ஈண்டுக் கூறப்பட்டது.

உரோமசமுனிவர் என்பார் திருக்கைலாச மலையின்கண்ணே ஓர் பாரிசத்திலிருந்து தவஞ் செய்துகொண்டிருந்தகாலத்திலே, திரு வருளால் அவரது அந்தக்கரணங்கள் சிறிது பேதித்தபோது இ தற்குக் காரணம் என்னை என்று ஞானதிருஷ்டியினால் ஆராய்ந்தார்; அங்ஙனம் ஆராயுங்கால், கலியுகத்திலே உலகமெல்லாம் மெய்மொழி ஒழிந்துபோக, பொய்மொழி பெருகும் என்றும்; அறம் குன்ற மறம் ஓங்கும் என்றும், ஆசாரம் குன்ற அநாசாரம் மிகுக்கும் என்றும், வேதசிவாகமங்களின் உணர்ச்சி ஒடுங்க, சின்னூலுணர்ச்சி மலியும் என்றும், வைதிகநெறியும் சைவநெறியும் கோணிப்போக, பௌத்த ஆருகதசமயங்கள் பரந்தோங்கும் என்றும், அதனால் உல கிலுள்ளார் முழுமுதற்கடவுளாகிய சிவபெருமானை மறந்து நரகத் துக்கு ஆளாகப்போகின்றார்கள் என்றும் உணர்ந்து பரிதாபமுற்று, இவ்வுடலோடு தாம் வாழ்வதனால் எய்தும் பலன் யாது? என்று கூறி எழுந்து, உலகினர் ஏனைச்சமயங்களில் மயங்கி வீழாவண்ணம் தடுத்தற்கும், ஞானத்தினால் மோக்ஷம் எய்தும் என்று சாஸ்திரங் கள் கூறுகின்றமையால் தாம் மும்மலங்களினின்று நீங்கி முத்திய டைவதற்கும் வாய்ப்பாகிய புண்ணியஸ்தலம் யாது என்று நந்தி பெருமானை நணுகி நமஸ்கரித்து வினாவினார். அப்போது திருநந்தி தேவர் ரோமசமுனிவரை நோக்கி, முன்னாளிலே பிரமவிஷ்ணுக்

கள் வேண்டிய வேண்டுகோளுக்கிசைந்து, சிவபிரான் திருக்கைலாசத்தின் தக்ஷிணகொடுமுடியில் எழுந்தருளியிருந்துகொண்டு அதனை ஒவ்வொரு திக்கிலும் ஐந்து சக்கரவாகப்பக்ஷிகளாக, நான்கு திக்கினும் இருபது பக்ஷிகளால் ஏந்தி எழுந்தருளப்பண்ணிக்கொண்டு வந்து வீற்றிருக்கப்பெற்று, பிரமப்பிரளயகாலத்திலும் சலியாதிருக்கும் பூலோககைலாசமாகிய ஓர் திவ்யஸ்தானம் உண்டு; அங்கேபோய் உனது வேண்டுகோளை முற்றுவித்துக்கொள்க என்றார். அங்ஙனம் அந்தப் பூலோககைலாசமாகிய சீகாழியில் வந்து, முனிவர் சிவபெருமானையுற்றுத் தவஞ்செய்துகொண்டிருக்குங்கால், சிவபெருமான் அவர்க்குப் பிரசன்னராகி உனக்கு வேண்டிய வரம் யாது என்று கேட்க, அதற்கு முனிவர் சிவபெருமானை நமஸ்கரித்து எம்பெருமானே! கலியுகத்திலே தேவரீரை மறந்து உலகமெல்லாம் பௌத்த ஆருகத சமய இருட்டினுள்ளே வீழ்ந்து தடுமாறப்போகின்றார்களே! அச்சமயங்கள் பரவாவண்ணம் நிராகரணம் செய்யவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, அதற்கு அவர் அங்ஙனஞ் செய்கின்றேம் என்று திருவாய்மலர்ந்தருளிவிட்டு, உலகினர்பொருட்டு நீ கேட்ட வரம் ஒன்றன்றி, உன்பொருட்டுளதாக நீ வேண்டும் வரம் மற்றிலதோ என, அதற்கு முனிவர் என்னை அநாதியேபற்றிய மலத்திரயங்களை நீக்கி, சிவசாயுச்சியம் தந்தருளல் வேண்டும் என்று பிரார்த்தித்தார். அப்போதே சிவபிரான் முனிவர்க்குச் சாட்சுஷிதீக்ஷை செய்து, சிவஞானோபதேசம்வாயிலாக அவரது மலத்திரயங்களையும் போக்கி, பரமுத்தியிற் செலுத்தி, நிர்மலமாக்கிவிட்டார். அவர் நிர்மலமாக்கப்பட்டமையால், அந்தப் பூலோக கைலாசத்துக்கு நிர்மலபதி என்னும் காரணப்பெயர் போந்தது. நிர்மலபதி எனினும் கழுமலநகர் எனினும் ஒக்கும். திருக்கைலாசத்தினின்று இருபது சக்கரவாகப்பக்ஷிகளால் தூக்கப்பட்டு வந்தது இந்தக் கழுமலம் என்பது,

பார்கொண்டுமுடிக்கடல்கொண்டதொன்றுநின்பாதமெல்லாம்
நாலைந்துபுள்ளினமேந்தினவென்பர்நளிர்மதியங்
கால்கொண்டவண்கைச்சடைவிரித்தாடுங்கழுமலவர்க்
காளன்றியீற்றுமுண்டோவந்தணூழியகலிடமே

என்னும் ஸ்ரீவாகீசர் திராவிடசுருதியானும், ரோமசமுனிவர் பரசமயங்களால் உலகம் பழிபெருகப்பெறும் என்று நினைந்தமையும், அவர் வரம்பெற்ற பிரகாரம் நில்வுலகிலே நிலவிய பரசமயமாசு கழுவப்பட்டமையும்

ஒழுகலரிதழிகலியிலுழியுலகுபழிபெருகுவழியைநினையா
முழுதுடலிலெழுமயிர்கடழுவுமுனிதழுவினொடுகெழுவுசிவனைத்
தொழுதுலகிலிழகுமலமழியும்வகைழவுமுழைகழுமலநகர்ப்
பழுதிலிறையெழுதுமொழிதமிழ்விரகன்வழிமொழிகண்மொழிதகை
யவே

என்னும் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருவாக்கினால் அறியப்படுகின்றன.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் தமது தேவாரத் திருப்பதிகத்தினுலே அப்பிரமதீர்த்தமாகிய பொய்கையைச் சிறப்பித்து "அருநெறியமறைவல்ல முனியகன்பொய்கையலர்மேய" என்று அருளினாராக, நூலாசிரியரும் அதனைச் "செழுமலர்வாவி" என்று சிறப்பித்தருளினர்,

மறையின் கூனையும் பாண்டியன் கூனையும் ஒரே முறையில் விரைந்து நிமிர்த்துதலாகிய அரும்பெருஞ் செய்கைகள் செய்த திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருவடிகளுக்குத் தமது தத்துவ விளக்கநூலின்கண் நுழையும் சொற்பொருட் குற்றங்கள் என்னும் கூனையும் விரைந்து நிமிர்த்தியருளுதல் அரிதன்றென்னும் ஓர் பொருள் புலப்பட "எழுமெனதானை முடித்தற்குள சிற்றடியே" என்று அருளப்பட்டது

வேண்டினுண், டாகத் துறக்க துறந்தபி
னீண்டியற் பால பல

என்றுபொய்யாமொழிப்புலவரும், "காலமுண்டாகவே காதல்செய்துய்மின்" என்று ஸ்ரீமாணிக்கவாசகசுவாமிகளும், "விண்ணாயகன் கூத்து வெட்டவெளியே திளைத்துக் கண்ணாரமுதுண்டார் காலம்பெறவழுதார்" என்றும், "காலமுற்பெறவழுதவர்" என்றும் ஸ்ரீசேக்கிழார் நாயனாரும் அருளியவாறு சிவானந்தத்தேனை மூன்றும் வயசாகிய சிறுவயசிலே சுவாநுபவத்திற் பருகிக் களித்தார் என்பது தொனிக்கவே "சிற்றடி" என்று கூறப்பட்டது.

பதியியல்

பதிலக்ஷணம்

(௫) சிற்கனன் றன்னிக ரின்றிப் பரந்தோன் சிதைவறியா
வொற்கமி றோற்றத் துயர்ந்தோ னுறுதுக ளொன்றுமில்லோன்
சொற்கலை ஞாலத்து வித்தா யவன்றுற வெங்குமில்லோ
னற்கரு ணாலயன் வாழி தென்காழி நயந்தவனே.

(இ-ள்) சிற்கனன் = ஞானமே திருமேனியாகவுடையவரும்; தன்னிகரின்றிப் பரந்தோன் = தமக்கு ஒப்பாரும் மிக்காருமின்றி உயர்ந்தவரும்; சிதைவு அறியா ஒற்கமில் தோற்றத்து உயர்ந்தோன் = அழிவுறுது பரத்துக்குமேற் பரமாயினாரும்; உறுதுகள் ஒன்றும் இல்லோன் = (பிறிதொன்றற்குப்போல) எய்தும் மாசொன்றில்லாதவரும்; சொற்கலை ஞாலத்து வித்தாயவன் = சொற்பிரபஞ்சம் பொருட்பிரபஞ்சம் என்பவற்றிற்கு வித்தாயினவரும் (காரணமாயுள்ளவரும்); துறவு எங்கும் இல்லோன் = அவ்விருவகைப்பிரபஞ்சப்பொருளையும் எங்கும் வியாபித்து அவற்றினின்று நீங்காதவரும்; நற்கருணாலயன் = நல்ல அருளுக்கு ஆலயமாயுள்ளாரும் தென்காழி நயந்தவன் = தென்றிசைக்கணுள்ள சீகாழியைப் பதியாகக்

கொண்டு விரும்பிய பிரமபுரீசப்பெருமானேயாம் எ-று.

"ஒற்கமில் தோற்றம்" என்பது சுருங்குதலில்லாத தோற்ற முடைமையின் பரம் எனப்படும்.

ஜ்ஞாநசக்திர்மஹாதேவஸ்ய ஜ்ஞாநதேஹகுணைர்யுத:।
நாஸ்தி தஸ்ய சரீரஞ்ச ஜ்ஞாநாதிரிக்தமவ்யயம்॥

"சிவபிரான் சத்தியஞானனந்தகுணமுடைய மூர்த்தியாகக்கொள்ளப்படுகின்றார்; அழியாத ஞானசத்தியை விடுத்து அவர்க்குச் சரீரமில்லை" என்று தக்ஷகாண்டமும்,

தஸ்மாஜ்ஜ்ஞாநமயோ தேஹ: சிவஸ்ய பரிகீர்த்தித:।

"சிவபெருமானுடைய தேகம் ஞானமயம் என்று சொல்லப்படுகின்றது" என்று காமிகாகமமும்,

அகாதோதாரகம்பீரோ ஜ்ஞாநமஹோததௌ।

"(அவர்) அதிதாய்தாய், உதாரமாய், கம்பீரமாயுள்ள ஞானசமுத்திரம்" என்று இரத்தினத்திரயமும் கூறுதலாற் "சிற்கனன்" எனப்பட்டார்.

ந தத்ஸமஸ்சாப்யதிகஸ்ச த்ருஸ்யதே।

"அவருக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை" என்று சுவேதாசுவதரோபநிடதமும்;

அநிர்த்தேஸ்யோ ஹ்யநௌபம்யோ அப்ரமேயோ நிராமய:।

"அவர் அநிர்த்திதராய் உவமையிறந்தோராய் அளவிறந்தவராய் அநாமயமாயுள்ளார்" என்று வாதுளாகமமும்,

நிரௌபம்யோ ஹ்யப்ரமேயஸ்ச பரமாத்மா ப்ரகீர்த்தித:

"உவமையில்லாதவராய் பிரமாணரகிதராயுள்ளார் பரமான்மாவாகிய சிவபிரான்" என்று சர்வஞ்ஞானோத்தரமும் கூறுமாற்றால் "தன்னிகரின்றிப்பரந்தோன்" எனப்பட்டார்.

ஶிவம் பராத்பரம் ஸூக்ஷ்மம் நித்யம் ஸர்வகதாவ்யயம்।

"சிவமாய், பரதத்துவத்துக்கு மேற்பரமாய், சூக்குமமாய், காரணு சூனியராதலின் நித்தியராய் (எப்பொருளையும்) வியாபித்துப்பிரியாது அழிவிலராயிருப்பவரென்று கூறப்படலான் "ஒற்கமில் தோற்றத் துயர்ந்தோன்" என்றும், "சிதைவறியா" என்றும், "துறவெங்கு மில்லோன்" என்றும் உரைக்கப்பட்டார்.

அநாதிமலமுக்தத்வாத் ஸர்வஜ்ஞத்வாச்ச ய: ஶிவ:

"ஆன்மாக்களைப்போல மலமாசினுற் றொடக்குண்ணுது சிவபிரானுர் அநாதிமலமுத்தராய்ச் சர்வஞ்ஞராயிருத்தலிற் "சிவன்" எனப்படு கின்றூர்" என்று கிரணுகமம் கூறுதலின் "உறுதுகளொன்றுமி லோன்" எனக் கூறப்பட்டார்,

மந்த்ராத்வா ச பதாத்வா ச வர்ணாத்வா சேதி ஶப்தக:।
ஸர்வத்வா தத்வாத்வா கலாத்வா சார்ததஸ்த்ரிதா॥

"மந்திராத்துவா, பதாத்துவா, வர்ணுத்துவா என்னும் மூன்றும், சொற்பிரபஞ்சம் என்றும், புவனுத்துவா தத்துவாத்துவா கலாத் துவா என்னும் மூன்றும் பொருட்பிரபஞ்சம் என்றும் கூறப்படும்" என்றும்,

யஸ்மின் ஷடத்வதத்வஜ்ஞா வித்யாபதிம் தமீஶம் ஶிவம் ஸமீக்ஷ்யாமி ப்ரணமாமி யம்।

'எவரை அத்துவாக்களுக்கு அத்துவபதியாக அத்துவாக்களை அறிந்த பெரியோர் கூறுகின்றூரோ, அவ்வியல்பினராகிய சிவபிரா னுக்கு நமஸ்காரம்" என்றும்,

ஷட்வித்யாத்வமயஸ்யாஸ்ய ஸர்வஸ்ய ஜகத: பதி:।

"அறுவித அத்துவாமயமாகிய இந்தச் சமஸ்தப்பிரபஞ்சத்துக்கும் (சிவபிரான்) பதி" என்றும்,

அத்வநாமீஶ்வரேத|

"அத்துவாக்களுக்கு அத்துவபதியாயுள்ளவரே" என்றும்,

யதாகாலஶ்சாங்குரஸ்ய காலோந்மேஷப்ரயோஜக:|
ஶிவஶக்தி ஸமாவேஶாத்தத்ர ஜகதுத்பவ:||

"இருதுகாலத்தைத் தொடர்ந்து காலமானது முளையைத் தோற்றுவித்தற்கு நியாமகமாயிருத்தல்போல, சிவசத்தி என்னும் இருவர் கூட்டத்திற் பிரபஞ்சம் உண்டாகின்றது" என்று ஞானவரணவிளக்கமும் கூறுதலால், வித்துக்கு ஆதாரமாகிய நிலம் குளிர்ந்தவழி அதன்கண் வித்து உளதாக, அதினின்றும் அங்குரம் தோன்றுமாறுபோல, மாயை தனக்கு ஆதாரமாய்நின்று தோற்றுவிக்கும் சிவபிரானது சத்தியின்கண் நிலையுறுதலால், அச்சிவபிரானார் சத்திசங்கற்பித்தவிடத்து மாயையில் ஒடுங்கிய சொற்பிரபஞ்சம் பொருட்பிரபஞ்சம் இரண்டும் அதினின்று தோன்றுதலாற் "சொற்கலை ஞாலத்து வித்தாயவன்" என்று கூறப்பட்டார்.

ஆகாஶஶரீரம் ப்ரஹ்ம|

"ஆகாசத்தைச் சரீரமாகவுடையது பரப்பிரமசிவம்" என்று தைத்திரீயோபநிடதமும்,

யஸ்ய ஸா பரமா தேவீ ஶக்திராகாஶ ஸம்ஜ்ஞிதா|

"சிவ்பெருமானுடைய பரமதேவியாகிய சத்தியார் ஆகாசம் எனப்படுவார்" என்று கூர்மபுராணமும்,

ஸர்வாநுக்ராஹிகாஶக்தி: பரௌதார்யஶாலினீ|

"பெரு வன்மைத் தொகுதியுடைய சர்வகாருண்ணிய சத்தியையுடையர்" என்று சுவாயம்புவாகமமும் கூறுதலால் அவர் நற்கருணையன் எனப்பட்டார்.

ஶிவம் பராத்பரம் ஸூக்ஷ்மம் நித்யம் ஸர்வகதாவ்யயம் |
அசிந்திதமநௌபம்யமப்ரமேயமநாமயம் |
ஸாக்ஷாத்தத்வாதிகம் பராச்ச ஸூக்ஷ்மம் பராத்பரம் |
வ்யோமாதீதாத்பரம் ஸூக்ஷ்மம் நித்யம் காரணஶூந்யத: |
வ்யாப்ய ஸர்வகதம் ப்ரோக்தம் க்ஷீணாபாவாவ்யயம் ததா |
அமலத்வாதசிந்திதம் ஜ்ஞேயமநௌபம்யம் ததைவ ச |
ப்ரமாணாதீதஸித்தத்வாதப்ரமேயமிதி ஸ்ம்ருதம்
நிர்குணத்வாத்ஸ்வபாவேனாநாமயமிதி ஸ்ம்ருதம் |
ஏதத்தே கதிதம் லக்ஷ்ம ஶிவாக்யஸ்ய பராத்மன: ||

"சிவமாயும், பராற்பரமாயும், சூக்குமமாயும், நித்தியமாயும், அனைத்தையும் ஊடுருவியதாயும், சர்வவியாபகமாயும், அவ்வியயமாயும், அசிந்திதமாயும், உவமையில்லாததாயும், அப்பிரமேயமாயும், அநாமயமாயுமுள்ளார்; தூய்தாயிருத்தலாற் சிவம் எனவும், பரதத்துவத்துக்குமேற் பரமாயிருத்தலாற் பராற்பரம் எனவும், வியோமத்துக்கு மேலாயிருத்தலாற் சூக்குமம் எனவும், தம்மைத் தோற்றுவித்தற்குப் பிறிதுகாரணமின்மையில் நித்தியம் எனவும், எவற்றையும் நீக்கமற ஊடுருவி வியாபித்திருத்தலாற் சர்வகதம் எனவும், அழியாதிருத்தலின் அவ்வியயம் எனவும், அமலமாயிருத்தலில் அசிந்திதம் எனவும், ஒப்பிலாதிருத்தலில் அநௌபமம் எனவும், பிரமாணங்களைக் கடந்திருத்தலால் அப்பிரமேயம் எனவும், சாத்துவிகாதி குணமிலாது நிர்க்குணமாயித்தலால் அநாமயம் எனவும் கூறப்படும்" என்று சர்வஞ்ஞானோத்தராகமமும்,

விராஜம் விமலம் ஶாந்தம் ப்ரபஞ்சாதீதகோசரம் |
நிஷ்கலம் காரணாதீதம் ஸர்வஜ்ஞம் ஸர்வதோமுகம் ||

"துகளில்லதாயும், விமலமாயும், சாந்தமாயும், பிரபஞ்சாதீதகோசரமாயும், சலிப்பற்றதாயும், காரணாதீதமாயும், முற்றறிவுடையதாயுமுள்ளது சிவம்" என்று சுவச்சந்தபைரவாகமமும்,

ஶிவஸ்ய பரத்வாந்மந்த்ராதீதோ நிரஞ்ஜந:|
நிராமயோ நிராதாரோ வர்ணாத்யைஶ்ச விவர்ஜித:|
ஸர்வஜ்ஞஸ்ஸர்வக: ஶாந்த: ஸர்வேஶ: ஸர்வதோமுக:|
அதீந்த்ரியோ நிராலம்பஸ் ஸூக்ஷ்மஶ்ஶாஶ்வதோ த்ருவ:
ஸதைவ ஷாட்குண்யவாநப்ரமேயோ ஹ்யநௌபம:|
பஹிரந்தஶ்ச ஸர்வேஷு திலே தைலமிவ ஸ்தித:||

"சிவபரம்பொருளானது பரமாயது; ஆகலின், (அது) மந்திராதீதமாயும், நிரஞ்சனமாயும், நிராமயமாயும், நிராதாரமாயும், நிறமிலதாயும்; சர்வஞ்ஞமாயும், சர்வவியாபகமாயும், சாந்தமாயும், சர்வேசுரனுமாயும், சர்வதோமுகமாயும், அதீந்திரியமாயும், நிராலம்பமாயும், அதிசூக்குமமாயும், சாசுவதமாயும், துருவமாயும், ஆறுகுணமுடையதாயும், அப்பிரமேயமாயும், உவமையிலாததாயும், எள்ளில்எண்ணெய்போல் உள்ளும்வெளியுமாயும்உள்ளது" என்று சர்வஞ்ஞானோத்தராகமமும் பதிலக்கணத்தைவிதந்து கூறுகின்றன.

தத்துவப்பிரகாசம்

சித்கந ஏகோ வ்யாபீ நித்யஸ்ஸததோதித: ப்ரபு: ஶாந்த:|
ஜயதி ஜகதேகபீஜம் ஸர்வாநுக்ராஹக: ஶம்பு:|

(இவர்) சிற்கனராயும், ஏகராயும், வியாபியாயும், நித்தியராயும், நித்தியோதயராயும், பிரபுவாயும், சாந்தராயும், பிரபஞ்சத்துக்கு ஏககாரணராயும், சர்வானுக்கிரகராயுமுள்ள சம்புவானவர் சர்வோத்கிருஷ்டராய் ஓங்குகின்றார்.'

சத்திலக்ஷணம்

---

(௬) நயந்த பிறப்போடு நாசமில் லாதது நாடினர்தாம்
வியந்தரு வீடெய்த வீடோன் றில்லாதது மிக்கறிவா
லுயர்ந்த துலகங்க ளாக்குந் தொழில துயர்தரங்கக்
கயந்திகழ் காழிப் பிரானொளி யாகிய காரணமே.

(இ-ள்) நயந்த பிறப்பொடு நாசம் இல்லாதது=(அவாவினால் நமக்கு) எய்திய பிறப்பும் இறப்பும் இல்லாதது; நாடினர் வியந்தரு வீடு எய்த ஈடு ஒன்று இல்லாதது = முத்தியை நாடிய பக்குவான்மாக்கள் பெருமைபாலிக்கும் (சிவத்தோடு சூரியனும் கண்ணொளியும் போல இரண்டற அத்துவிதமாய்க் கலத்தலாகிய) பரமுத்தியை எய்தத் (தான் துணையாயிருத்தலில்) தனக்கு ஒப்பாகப் பிறிதொன்றில்லாதது; அறிவால் மிக்கு உயர்ந்தது = ஞானத்தினால் மிக ஓங்கியது; உலகங்கள் ஆக்கும் தொழிலது = உலகங்களையெல்லாம் படைக்குந் தொழிலுடையது; அது யாதெனின் உயர் தரங்க கயந்திகழ் காழிப்பிரான் ஒளியாகிய காரணம் = உயர்ந்த அலைகளையுடைய வாவிகள் பிரகாசிக்கும் சீகாழிச்சிவபெருமானுடைய தேஜஸ் எனப்படும் சத்தியாகிய காரணமாம் எ-று,

ஃஜாத இதெ்யவம் கஷிறாஃ ப்ரபத்யதெ

"(உருத்திர!) நீர் பிறவாதுள்ளீர் என்று கூறி, நடுங்கிக்கொண்டு ஒருவன் நம்மை அணுகுகின்றான்" என்று சுவேதாசுவதரோபநிடதமும்,

ஆதிமத்யாந்த விஹீநமேகம்

"முதல் நடு இறுதி இல்லாத ஒருவர்" என்று கைவல்லியோபநிடதமும்,

குணஸ்ஸா பராஶக்திஸ்தாஶ்ரயகுணீ ஶிவ:|

"பராசத்தியார் குணம்; அந்தக் குணத்துக்கு ஆசிரயமாயுள்ளார் குணியாகிய சிவன்" என்று காலோத்தராகமமும்,

பராஸ்ய ஶக்திர்விவிதைவ ஶ்ரூயதே|

"அவருடைய பராசத்தி (ஞானேச்சாக் கிரியை முதலியவாய்ப்) பலதிறப்படுவது" என்று சுவேதாசுவதரோபநிடதமும் கூறுமாற்றான், குணிப்பொருளாகிய சிவபெருமான் நித்தியரென்பது பெறப்படுவதேயாக, அவரது குணமாகிய பராசத்தியும் நித்தியமாதல் பெறப்படுதல்பற்றி "நயந்தபிறப்பொடு நாசமில்லாதது" என்று கூறப்பட்டது.

ஜ்ஞாநக்ரியாத்மிகா ஸாபி நித்யா நித்யோதிதப்ரபா|

"ஞானக்கிரியா சொரூபமாயிருக்கின்ற அப்பராசத்தியார் நித்தியராயும், நித்தியோதயப்பிரகாசராயுமுள்ளார்" என்று பவுஷ்காரகமம் கூறுதலும் அக்கருத்துப்பற்றியேயாம்.

ஆதித்யவச்சிவோ ஜ்ஞேய: ஶக்திரஶ்மிரிவ ஸ்திதா|

"சிவன் ஆதித்தியன் போன்றும், அவர் சக்தி ஒளிபோன்றும் உள்ளார்" என்று சுவச்சந்தபைரவாகமமும்,

வஹ்நேரூஷ்மேவ ஶக்திர்நாபிந்நா ஸாவிநீ விபோ:|
ஶக்திஹீநே ந ஶிவோ நாஸ்தி ஶிவஹீநா ந ஶக்திகா|

"சிவபிரானுக்குத் தீயின் சூடுபோலச் சத்தியார் வேறுபடாதுள்ளார்; சத்தியின்றிச் சிவபிரான் இல்லை; சிவனையின்றிச் சத்தி இல்லை" என்று சுப்பிரபேதாகமமும்,

யதா ஶிவஸ்ததா தேவீ யதா தேவீ ததா ஶிவ:|
தாநயோரந்தரம் வித்யாச் சந்த்ரசந்த்ரிகயோரிவ||

"எங்ஙனம் சிவபிரானே, அங்ஙனம் தேவியாரும், எங்ஙனம் தேவியாரோ, அங்ஙனம் சிவபிரானும் உளர்; சந்திரனும் சந்திரிகையும் போல் இவ்விருவர்க்கும் பேதம் இல்லை" என்று வாயுசங்கிதையும் கூறுமாற்றால் அம்மையார் "காழிப்பிரானொளி" என்று கூறப்பட்டார்.

தத்வோபரி சிவஸ்தத்வம் ஸர்வதத்வோபரிஸ்திதம்|
சிவாத்யவநிபர்யந்தம் வ்யாப்தம் தேந தேஜஸா||

"சத்திதத்துவத்துக்கு மேற்பட்டது சிவதத்துவம், இது சமஸ்த தத்துவங்களுக்கும் மேலாயுள்ளது; சிவதத்துவமுதற் பிருதிவியீறாயுள்ளது; அந்தச் சிவனொளியினால் வியாபிக்கப்பட்டது" என்று சுப்பிரபேதாகமம் கூறுதலானும்,

பாஶஜ்ஞாநேந முக்திஸ்யாத் பஶுஜ்ஞாநேந தேந ச|
ஸர்வத்ர முக்திஃ பதிஜ்ஞாநேந ஸித்யதி||

"பாசஞானத்தினாலும் முக்தி எய்தாது; அங்ஙனம் பசுஞானத்தினாலும் அது கிட்டாது; எங்குமாய முத்தி பதி ஞானம் எனப்படும் அருண்ஞானத்தினால் எய்துகின்றது" என்று பராக்கியாகமமும்

சிவஶக்திஸ்வரூபம் நிர்மலம் ஜ்ஞாநமேவ ய:|

"சிவசத்தியின் சொரூபம் நிர்மலமாகிய ஞானமே" என்று காலோத்தராகமமும் கூறுதலின் "மிக்கறிவாலுயர்ந்தது" என்று கூறப்பட்டது.

ஜ்ஞாநகாரணம் ஸ்ருஷ்டிஸம்ஹாரம் ஸம்ஹாரகாரணம்|
நிமித்தஸ்ய காரணேஷ்டு ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹ்ருதி|

—ஞானசித்தியாகமம்.

ஸம்ஸாரேஸ்மின் ஸ்ரீராமயா ஸ்ருஷ்டி காரணவத்|

—நிச்சுவாசகாரிகை.

9

"பரமேஶ குலாலேந க்ரியதே ஸசராசரம்

—ஞானசித்தியாகமம்.

"முதற்காரணம் மண்;' துணைக்காரணம் சக்கரம்; நிமித்தகாரணம் குலாலன்; இம்மூன்று காரணத்தினாலும் மட்பாண்டம் எய்துகின்றது; ஈசுவரன் குலாலனையும், சத்தி சக்கரத்தையும், மாயை மண்ணையும் நிகர்ப்பனவாம்; பரமேசுவரராகிய குலாலனால் இந்தச் சராசரம் இயற்றப்படுகின்றது" என்று ஞானசித்தியாகமமும் நிச்சுவாசகாரிகையும்,

தயோஸ்ஸங்காஶாத்ஜ்ஞத்வ ஸர்வலோகஸமுத்பவ: ।
ஸர்வேஷாம் ஜகதாமேஷாம் மாதா ஶக்தி: பிதா ஶிவ: ॥

"சத்தி சிவம் என்னும் இவரின் கூட்டத்தினாற் சேதனாசேதனமாகிய சமஸ்தப்பிரபஞ்சமும் உண்டாகின்றன; இந்தப் பிரபஞ்சத்துக்கும் தாயார் சிவசத்தி; தந்தையார் சிவம்" என்று வாதுளோத்தரமும்,

ஸ யுக்தம் விப்ருர்மஹாமந்த்ரேண கர்மணா நாஹஸேதஜஸா ।
க்ரோதிஸ்வர்ஷா க்ருத்யம் யதாயதாவஸ்த்ருதே ॥

"இங்ஙனம் கூறிப்போந்த மந்திரசரீரியாகிய அந்தச் சிவபிரான் தடையிறந்த வுண்மையுள்ள சத்தியாகிய காரணத்தைக்கொண்டு சிருஷ்டியாதி பஞ்சகிருத்தியத்தையும் எஞ்ஞான்றும் எவ்வெக்காலத்துக்கு எது இயைகின்றதோ, அவ்வாறே செய்கின்றார்" என்று மிருகேந்திரமும்

நிமித்தமீஶ்வரஸ்தேஷாமுபாதானம் ச பிந்துமாந் ।
தபநே தீதிதிர்யத்வச்சந்த்ரே கௌமுதீவா யதா ।
ஸர்வதா ஶிவஶக்தி: காரணம் ஸஹகாரிணீ ॥

"அவற்றுக்கு நிமித்தகாரணர் சிவபிரான்; உபதானகாரணம் சுத்தமாயை; சூரியனிற் கிரணமும், சந்திரனிற் சந்திரிகையும், அக்கி

னியில் உஷ்ணமும் போலச் சிவபெருமானிடத்திலே இருக்கும் ச மவேதையாகிய சத்தி சஹகாரணமாயுள்ளது" என்று சதரத்தி னசங்கிரகவியானமும் கூறுகின்றன. இங்ஙனம் பஞ்சகிருத்தியஞ் செய்வாரேனும்

ஸ்ரவா நிவ்ருஹ்ஸ்சாரி கன்னிகாஸக்திரவ்யயே

"சிவபிரான் (நித்தியப்) பிரம்சாரி; சத்தியார் (நித்திய) கன்னி கை" என்று வாதுளோத்தரமும் கூற, அருணந்திசிவாசாரியர் "பவன்பிரமசாரியாகும் பான்மொழி கன்னியாகுந் தவந்தருஞா னத்தோர்க்கித்தன்மைதான்றெரியுமன்றே" என்றுங் கூறியதா கக் காணப்படலான் "உலகங்களாக்குந்தொழிலது" என்று கூறப் பட்டது.

இருக்குயசுர்சாமவேதங்களினும் பிருகதாரணியகமுதலிய உ பநிஷதங்களினும் பிரதிபாதிக்கப்படும்

தத்ஸவிதுர்வரேண்யம் பர்கோதேவஸ்ய தீமஹி தியோ யோ ந: ப்ரசோதயாத்

என்னும் சந்தியாகாயத்திரி மந்திரத்தின் பொருள்

தேவஸ்ய ஸவிது: பர்க:=(எந்தச்) சிவசூரியனுடைய (ஞா னேச்சாக்கிரியா சொரூப) சத்தியோளியானது,

ந: தியஃ ப்ரசோதயாத்=எங்கள் ஞான இச்சாக்கிரியைகளை உஞற்றுகின்றதோ,

தத் வரேண்யம்=அந்த முக்கியப்பொருளாகிய சிவசத்தியொ ளியை,

தீமஹி=தியானிப்போமாயினோம் என்பதேயாம்.

தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி

—கடோபநிடதம்

—முண்டகோபநிடதம்

—சுவேதாசுவதரோபநிடதம்

"சிவப்பிரஹ்மத்தின் ஒளியினால் எல்லாம் பிரகாசிப்பனவாயின" என்று உபநிடதங்கள் கூறியவாறு, சூரியசந்திரா முதலியவனைத் தும் தம்மிடத்தினின்று ஒளிபெற்றுப் பிரகாசிப்பனவேயாக, தம் து பிரகாசம் அவ்வாறு பிறிதொன்றை அவாவாது நித்திய சுத் த சுயம்பிரகாசமாய் நிற்றலின், சிவபிரான் "தேவ" எனப்படு வர். ஆகலின், தேவசவிதா என்றதற்குச் சிவசூரியன் எனப் பொ ருள்கொள்ளப்பட்டது.

"உலகின்கண்ணே துன்னிய பெரிய புறவிருளைப் பருதியங் கடவுள் கெடுத்துக் கண்ணுக்குக் காட்சிகொடுத்தாற்போல, உடம் பகத்துள்ள உயிரின் அகவிருளாகிய ஆணவமலசத்தியைக் கெ டுத்து மெய்ப்பொருளைத் தெரித்தல்பற்றிச் சிவபிரான் சூரியனா கக் கூறப்பட்டார்.

எவற்றையும் பிரகாசிப்பித்தலாற் பாஸயதி (ஸாஸயதி) பா (ஸா) என்றும், எவற்றையும் விரும்பச்செய்தலால் ரம்யதி (ரஂயதி) ர (ர) என்றும், யாவும் தோன்றி நின்றொடுங்குதலின் யஸ்மாத் கச் சதி ஆகச்சதி (யஸ்மாத் கச்சதி ஆகச்சதி) க (க) என்றும் பொருள்பட லான், பர்க்கஸ் என்னும் சப்தம் போந்தது, பர்க்கஸ் எனினும், தேஜஸ் எனினும், ஒளி எனினும் ஒக்கும்.

சூரியனுக்கு ஒளி உளதாதல்போல, சிவத்துக்குச் சத்தி உள தாமுண்மையைப் பர்க்கஸ் என்றது உணர்த்திற்று, இதனாற் சிவ சூரியன் (தேவசவிதா) என்றது பதிப்பொருளின் மேற்று; சீவான் மாக்கள் பலவாதலின் அப்பன்மையை உணர்த்த "ந:" எங்களு டைய எனக்கூறப்பட்டது. பாசத்தை ஒட்டிய நல்வினை தீவினைக ளிற் சிவசத்தி ஆன்மாக்களை உளுற்றுதலின் "ப்ரசோதயாத்" என் னுஞ் சொற்கொண்டு பாசமும் பெறப்பட்டது.

ஆன்மதத்துவம் இருபத்திநான்கையும் பூ: என்றும் வித்தி யாதத்துவம் ஏழையும் புவ: என்றும் சிவதத்துவம் ஐந்தையும் ஸ்வ:

என்றும் உணர்த்த மூன்று வியாகிருதிகளும், வைதிகசைவசந்தியாகாயத்திரி மந்திரத்துக்கு முன் நிறுத்திச் சுக்கில யசுர்வேதத்து ௩௬—ம் அத்தியாயத்து ௩—ம் மந்திரம் கூறுகின்றது. இம்முத்திறத்தத்துவவியாகிருதிக்குமேல் உள்ளது துரிய அருண் ஞான சிதம்பரவெல்லையாதலில் ஓங்காரப்பிரணவம் நிறுத்தி உரைக்கப்படும். சிவாகமங்களிற்போல, வைதிகசைவகாயத்திரி மந்திரத்தினும் பதிபசுபாசத்துண்மை மேலே காட்டப்பட்டவாறு கண்டு தெளிக. அச்சந்தியாமந்திரத்துக்கு உபப்பிருங்கணமாகச் சிவாகமம்

ஶிவார்கஶக்திதீதித்யா ஸமர்த்தீக்ருத த்ருக்க்ரியா:|
ஶிவம் ஶக்த்யாதிபிஸ்ஸார்த்தம் பஶ்யத்யாத்மா ஹதாவ்ருதி꞉||

"சிவசூரியனுடைய சத்தியொளியினாற் சமர்த்தமாக்கப்பட்ட (விளக்கப்பட்ட) அறிவுக்கண்ணினாற் சத்தியோடுகூடச் சிவத்தை ஆன்மா பார்க்கின்றான்; அதனாற் பாசம் நீங்கிப்போயிற்று" என்று நிச்சுவாசகாரிகையும்,

தமாத்மஸ்தம் யேநுபஶ்யந்தி தீராஸ்தேஷாம் ஸுகம் ஶாஶ்வதம் நேதரேஷாம்|

—கடோபநிடதம்.

—சுவேதாசுவதரோபநிடதம்.

—அதர்வசிரோபநிடதம்.

"எந்தத் திண்ணிய அறிஞர் ஆன்மாவில் இருப்பவராக (அருட்சத்தியோடு) அந்தச் சிவபிரானைக் காண்கின்றார்களோ, அவர்களுக்கு நித்தியமாகிய சுகம்; பிறர்க்கு (அஃது) இன்று" என்று உபநிடதங்கள் கூற, இவற்றிற்கு உபப்பிருங்கணமாக

ததாத்மஸ்தம் யதா ஶக்த்யா ஸாக்ஷாத்பஶ்யந்தி யே ஶிவம்|
தேஷாம் ஶாஶ்வதிகீ ஸித்திர் நேதரேஷாமிதி ஶ்ருதி꞉||

" ஆகலின், எவர்கள் (சிந்தையின்கண்ணே சத்தியோடுகூடச் சிவனைக் காண்கின்றார்களோ, அவர்களுக்கு நித்தியமாகிய இன்பம் பிறர்க்கு (அஃது) இன்றாம் என்று சுருதி கூறிற்று " என்று வாயு சங்கிதையும்,

வரஸோர்க-கிரணவ்யகாஸீக்ருத சக்ஷுஷ:|
ஸூக்ஷ்மதா ந்ருக்ஷிவஸூர்யஸ்ய-காயதேபிவசேஜஸா||

"(சூரியகிரணத்தினாற் சூரியன்) கண்ணுக்குத் (தோற்றுமாறு) போல, சிவசூரியனுடைய கிரணத்தினாற் பிரகாசிக்கப்பெற்ற கண்ணையுடைய மூக்தான்மாவுக்குச் சிவசம்புவானவர் சிவவொளியாகிய சத்தியினால் அறியப்படுகின்றார்" என்று சித்தாந்தரகசியமும் கூறுதலான், இருக்காதி வேதங்களிற் கூறப்பட்ட காயத்திரி மந்திரத்தினராகிய தேவசவிதாவைச் சிவாகமம் சிவார்க்கர் என்றும் பரமேசார்க்கர் என்றும், பர்க்கஸைச் சத்தியொளி என்றும், தேஜஸைக் கிரணம் என்றும் கூறிற்று. பர்க்கஸ் என்பது ஒளியையும், சத்தியையும் ஒருங்கு உணர்த்திநிற்கும் ஓர் மொழி.

சிவம், சத்தி, ஆன்மா என்னும் மூன்றுக்கும் முறையே உவமையாய்ப் போந்தன சூரியன், கிரணம், கண் என்பனவாம். இதுபற்றியே "முன்னெழுத்துப் பானு முதல்வியெழுத் தோளியாம் பின்னெழுத்துக் கண்ணாய்ப்பிறங்குமே" என்றார் பிறரும்.

காயத்திரியிற் கண்டவாறு ஆன்மாக்களுடைய ஞானேச்சாக்கிரியைகளை உண்ணின்று உணர்த்துவது சிவனது அதிசூக்கும நடனம் ஐந்தொழிலென்று சிவாகமங்கள் கூறுகின்றன. அது

உலகமே யுருவமாக யோனிக ளுறுப்ப தாக
வில்தபே ரிச்சா ஞானக் கிரியையுட் கரண மாக
விலகிலா வுயிர்ப்பு லின்கட் கறிவினை யாக்கி யைந்து
நலந்த தொழில்க ளோடு நாடக நடிப்பு னிதன்.

என்னும் அருணந்திசிவாசாரியசுவாமிகள் திருவாக்கினால் உணரப்படும் இந்தக் காயத்திரிப்பொருள் தொனிக்கவே சிவஞானபோதம்,

ஊ௫ஸொ ஊஸ-டியிதாஆ-தா-தவஸ௶ ஊஸ-டியிதா ஶிவ:।

"கண்ணுக்கு (உருவத்தைக்) காட்டுபவனும் அக்கண்ணோடொருங்கியைந்து நின்று அதனைக் காண்பவனும் ஆன்மாவேயாம்; (அதுபோல), அவ்வான்மாவுக்கு (விடயத்தைக்) காட்டுபவனும், (அவ்வான்மாவோடு ஒருங்கியைந்து நின்று அதனைக்) காண்பவனும் சிவபிரானேயாம் என்றது.

சூரியன் ஒளியினாற் கண் ஒளியானது சூரியனை உறைத்துப் பார்க்குங்கால் எங்கும் சூரியவிம்பமே தோன்றும்; ஆகலின் ஆண்டுச் சூரியகிரணமும் கண்ணும் இலவாய்ப்போயின என்றும் சூரியவிம்பமாத்திரம் ஆண்டு உண்டென்றும் கூறல் பொருந்தாது; அதுபோல ஞாதிரு ஞான ஞேயம் என்னும் மூன்றும் பகுப்பின்றி வாதிறந்து நின்றன என்றே பொருள் கொள்ளப்படும்.

ஜ்ஞாநெ நந ஜ்ஞெயாரொகூ௵ வஸ்து௲ஜ் ஜ்ஞாநம் வரித்௵ஜெஅ।

"சிவன்றுண்ஞானத்தினால் ஞேயப்பொருளாகிய சிவத்தை அடைந்து பின்னர்ச் சிவஞானநினைவையும் விடுக்க" என்று காரணாகமும், "வீயுவிட்டோட்டிவெளியேபுறப்பட்டு மெய்யருளாந் தாயுடன் சென்று பின் தாதையைக் கூடிப் பின்றாயைமறந் தேயுமதேநிட்டை யென்றானெழிற் கச்சியே கம்பனே" என்று பட்டினத்தடிகளும்,

ஞானமுஞேயப்பொருளும்—பற்றும்
ஞாதாவுமில்லையென்பார்க்கரியாராம்
ஞானமுஞேயப்பொருளும்—பற்றும்
ஞாதாவும்மாய்ப்பதுப்பார்க்குமேட்டாராம்

என்று சிவஞானசுவாமிகளும் கூறினமை காண்க. ஈண்டு காயத்திரிக்கு ஞானத்து ஞானபாதத்துச் சைவசித்தாந்தப்பொருள் கூறப்பட்டவாறு தேர்க. இந்தச் சைவசித்தாந்தப்பொருளைக் காயத்திரிமந்திரம் புலப்பட விளக்காது பர்க்கஸாகிய சிவசக்தியையே தியானித்தல்வேண்டுமென்று கூறினமை,

परो धर्मो योगपर्यन्तो श्रुतिशिरोगतः।

"பரதருமமானது யோகபரியந்தமே சுருதிசிரசில் (உபநிடதங்களில்) அமைந்தது" என்றும்,

स्थूलं दिव्यं च रूपं सूक्ष्मं सूक्ष्मं ततः परम्।
ब्रह्माद्यैर्देवैर्दृश्यं स्थूलं सूक्ष्मं तु योगिभिः
ततः परञ्च नित्यं ज्ञानानन्दमव्ययम्।
तन्निष्ठैः पाशुपतैर्दृश्यं तद्व्रतचारिभिः।
...क्षः॥

"சிவபெருமானுக்கு ஸ்தூலவடிவம், சூக்குமவடிவம், பரவடிவம் என மூன்று வடிவங்கள் உள்ளன; (பிரம விஷ்ணு முதலிய தேவர்களாகிய) எங்களாற் காணப்படுவது (அவரது) ஸ்தூலவடிவம்; (சிவஞான) யோகிகளாற் காணப்படுவது சூக்குமவடிவம்; அவரது நித்தியமாய (அகண்டாகார) நித்தவியாபக சச்சிதானந்த பரவடிவம் (பாசுபத) விரதமுண்டைய (சிவஞான) நிஷ்ட அன்பர்களாற் காணற்பாலது" என்றும்

तन्त्रोक्तः परो धर्मश्चर्याद्याश्च चतुर्विधः।
तेषु पादेषु शैवो योगः शिवं प्रत्यक्षयेद्ध्रुवम्।

"வைதிக சிவாகமங்களிற் கூறப்பட்ட பரதருமமானது சரியை கிரியை யோகம் ஞானம் என நான்கு வகைப்படும்; இந்நான்கு பாதங்களுள்ளே சிவயோகம் சிவத்தை உறுதியாய்ப் பிரத்தியக்ஷமாக்கும்" என்றும் வாயுசங்கிதை உரைத்தலானுமாம்.

காயத்திரிமந்திரமானது தனது தேவசங்கிதாவாகிய ஜெயப் பெயருள் விஷயத்தைச் சிவஞானபோதமானது ("சிவஞானபோத வசனலங்காரதீப" த்து கக-ம் சூத்திரத்து கoக-ம் பிரிவிற்கண்டவா று) வேதசாரமாகிய ஞானத்து ஞானபாதத் தற்றார்க்குப் பொ ருள்செய்வதாக இடங்கொடுத்தும், தியானயோகங்கூறும் மற்றை ய உபநிடதமுடிவுகளுக்கிசையப் பரக்கலாகிய சிவசத்தியைத் தியா னிக்குமாறும் விதித்தது. தியானிக்குமாறு எங்ஙனமெனின், அச் சிவசத்தி சிவனார் திருவடியாம் என்று மேலே நிரூபிக்கப்பட்ட தன்றோ.

தத் விஷ்ணோ: பரமம் பதம் ஸதா பச்யந்தி ஸூரய:

"அந்தச் சிவனது பரமாகாசமாகிய திருவடியைப் பெரியோர் எக்காலமும் பார்க்கின்றார்" என்று இருக்குவேதம் கூறிற்று. ஈண்டு விஷ்ணுசப்தம் சிவபிரான் மேலதென்றும், இது அந்நுவா வின் கண்ரக்கண்ணதென்றும் "வைதிகசுத்தாத்துவித சைவசித் தாந்த தத்துவப்பட விளைவிடை" யின் கச-ம் பக்கத்திற் காட்டி யிருக்கின்றேம். இத்திருவடி சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவமென் னும் இரு திருவடிகளாகக் கூறப்படுகின்றதென்றும், இத்திருவ டிகளின் பகுதியவர்யுள்ளன சர்வஞ்ஞதை, திருப்தி, அநாதிபோதம், அலுப்தசக்தி, அனந்தசக்தி, சுவதந்திரத்துவம், விசுத்ததேகம், நிராம யாத்துமா என்னும் எண் குணங்களாமென்றும் மேலே கூறப்பட் டது.

ததா வித்வாந் புண்யபாபே விதூய நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி

"அப்போது அறிஞன் புண்ணியபாவங்களை உதறிச் சர்வஞ்ஞதா தி (எண் குணங்களைச்) பரம சாமியமாக அடைகின்றான்" என்று முண்டகோபநிடதம் கூறுகின்றது. சர்வஞ்ஞதாதி எண் குணங்க

ளும் தன்மாட்டுவிளங்குமாறு (ஸ்ரீகண்ட சைவபாஷ்யத்து ரு. உ. உச-ஞ் சூத்திரபாஷ்யத்தினும், ச. க. ரு-ஞ் சூத்திரபாஷ்யத்தினும் கூறப்பட்டவாறு) பரமாஹம்பாவனையாகிய சிவோஹம்பாவனை செய்யவேண்டும் என்க. ஒளிரூடமாகிய சிவசத்தியாம் பரக்கசுடைய ஸ்தானம் ஸ்ரீகண்ட சைவபாஷ்யத்து உபநிடத உபக்கிரமணிகையின் ருஉ-ம் பக்க முதலியவற்றிற் காட்டப்படும் இருக்குவேதம், சுவேதாசுவதரோபநிடதம், தைத்திரியோபநிடதம், கடோபநிடதம், பிருகதாரணியோபநிடதம், சாந்தோக்கியோபநிடதம் கைவல்லியோபநிடதம், தைத்திரீய யாரணியகம் எனப்படும் மகாநாராயணோபநிடதம், பிரச்நோபநிடதம், முண்டகோபநிடதம், அதர்வசிகோபநிடதம் என்பவைகளாற் பிரதிபாதிக்கப்பட்ட நிருபாதிக பலத்தில்லை எல்லையேயாம். இது ஞானயோகாந்தமென்பது "உறைந்திடுந்தில்லை ஞானயோகம், ஞானமாமாம், ...ணைச் சென்முத்தராய்த் திரியலாமே" என்னும் கோயிற்புராணச்செய்யுட்பாகத்தாற் றுணியப்படும்.

"சென்று சென்றணுவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்றாந் திருப்பெருந்துறையுறை சிவன்" எனவும், "பரமுமமிலுந் தெரிபொருட்டுவாற் படிவழி சென்று சென்றேறிச், சிவமுந்தா னுங்கலந்ததோர் கலவி தெரியினுந் தெரிவுறாவண்ணம் வந்தனு காது நுணுகியுள்கலந்தோன்" எனவும், "சென்று சென்றணு வாய்த் தேய்ந்து தேய்ந்தொன்றாய், மென்றிறையியர்கையியபுதற குழ்" என்வும், "துரியப்பரியிலிருந்த பச்சமனைப்பெரியவியாச்சிலத் துள்ளே புகவிட்டு" எனவும் கூறப்பட்டவாறு, "வேதாந்தமேபாத" த்து க, கo-ஞ் சூத்திரங்களில் ஓதப்பட்டவாறே, "திரு வைந்தெழுத்தி னுய்த்துணர்ந்து ஏகனாகி நிற்கும் ஸ்தானமும் அந்தச் சிவபிரானது திருவருளிரக்கத்தின் துரிய எல்லையாகிய சிதம்பர பரக்கஸ் ஒளியேயாம். இந்தச் சிவசத்தியானது ஞேயபப்

பொருளாகிய சிவத்தைக் காணுதற்குபாயந்தது என்பது தோன்ற "நாடினர்தாம் வியத்துருவ் செய்தவிடொன்றிலாதது காழிப்பி ராலொளியாகிய காரணம்" என்றும் கூறப்பட்டது.

ஊர்த்வாதிஷ்டானம் ஸ்வஸக்திர்ணோக்தோ!
தஸ்யாம் திவி ஸமாஸீனோ நிஷ்கலோ வ்யோமஸக்திக:!
கோஷ்டெளவெளவாஸநோ ஸக்தாவமிவ நிஷ்டாஸ்ரயாத்மிகா!

"பதியாகிய சிவபிரானுக்கு அதிஷ்டானமாயுள்ளது அவர் சக்தி யாகிய ஒளியாம்; அந்த ஆகாசசக்தியில் நிச்சலராகிய சிவபிரான் நிஷ்கம்பராய் நன்குவிளங்குவாராயினார்; அந்தச் சக்தியே எல்லை யாயும், பரையாயும், சூக்குமமாயும், நிக்கெங்கும் செறிந்ததாயும், அமிர்தமாயுமுள்ளார்" என்று மதங்காகமமும்;

ஸாக்ஷெளவஸ்த்க்ஷௌரவீ யாப ஸக்தி ஸ்வீக்ருதா பரா!
ஸவிநிர்மலா நிரம்ஹோஸ்ய ப்ரபாஷ் திவஸ்யேவ!!

"ஏகமாகிய, சிவபிரானுக்கு யாதொரு சிவசம்பந்தமாய் நிர்மலமா கிய பராசத்தி உண்டோ, அந்த சத்தி சம்புவாகிய பிரபுவுக்கு அக்கினிக்கு உஷ்ணம்போல வேறுபடாததாயுள்ளது" என்று நிச் சுவாசகாரிகையும் கூறுகின்றன.

தத்துவப்பிரகாசம்

ஸேயம் ஸக்தி ருதேத்யஸ்தம் நைதி ஸ்பந்ததே நசாப்யேதி!
ஞானக்ரியாஸ்வபாவா ஸ்வஸ்தா ஜ்யோதிஸ்ஸ்வரூபம் ஜயதி!!

(இ-ள்) சிவசத்தி உதிப்பதுமில்லை, அஸ்தமிப்பதுமில்லை, சலிப்பது மில்லை, விகிர்த்தியை அடைவதுமில்லை, ஞானக்கிரியாசொருபமா யுள்ள சிவனுக்குரிய ஒளியானது உற்கிருஷ்டமாய் ஓங்குகின்றது.

இதுவுமது

---

(௭) காரண னாகிய காழிப் பிரான்கக னாதியிந்தப்
பாரள வாகப் பரக்கும் புவனாதி கள்படைப்பப்
பேரள வாகுந் தொழிலிற் பிறழாக் கருவியதாய்ச்
சீரள வாமைநின் றாள்செய்ய தாளென் சிரத்தனவே.

(இ-ள்) காரணனாகிய காழிப்பிரான் — பிரபஞ்சத்துக்கு நிமித்தகாரணராகிய சீகாழிச் சிவபிரான்; ககனாதியிந்தப் பாரளவாகப் பரக்கும் புவனாதிகள் படைப்ப — சாந்தியதீதகலைமுதல் இந்த நிவிர்த்திகலை இறுதியாயுள்ள, ஐங்கலைகளினும் விரிந்துள்ள அநாசிருதபுவனமுதற் காலாக்கினிருத்திரபுவனமிறுதியாகிய இருநூற்றிருபத்துநான்கு புவனங்களையும் சிருஷ்டித்தற்கு; பேரளவாகுந் தொழிலிற் பிறழாக்கருவியதாய் — அளவுபடாப்பெருமையையுடைய தமக்கு அளவாகக்கொண்டு பஞ்சகிருத்தியஞ் செய்தற்கண்ணே பிறழாத் துணைக்காரணமாகி; சீரளவாமை நின்றாள் செய்ய தாள் என் சிரத்தன — தன் ஞானப்பெருமையை அறிதற்கரிதாய் நின்ற பராசத்தியாரின் சிவந்த திருவடிகள் என் தலையின்மேலனவாம். எ-று.

[illegible]
[illegible]
[illegible]

"பிரமாண்டத்தை நிவிர்த்திகலை என்றும், அப்புமுதற் பிரகிருதி இறுதியாயுள்ளன பிரதிஷ்டாகலை என்றும், இராகதத்துவமுதல் மாயாதத்துவம் இறுதியாகிய வித்தியாதத்துவம் ஏழும் வித்தியாகலை என்றும், சுத்தவித்தைமுதற் சாதாக்கிய தத்துவம் இறுதியாயுள்ள மூன்றும் சாந்திகலை என்றும், சத்திதத்துவமும் அதன்

முடிவிலுள்ள சிவதத்துவமும சாந்தியதீதகலை என்றும், இந்தப் பார் எனப்படும் நிவிர்த்திகலைமுதற் ககனம் எனப்படும சாந்தியதீதகலை இறுதியாயுள்ள ஐந்து தத்துவகலைகளிலும் முப்பத்தாறு தத்துவங்களும் நிலையுற்றன.

(க) சாந்தியதீதகலையின் பாலதாகிய

(க) சிவதத்துவத்தில் அநாசிருதை, அநாதை, அனந்தை, வியோமரூபிணி, வியாபினி, ஊர்த்துவகை, மோசிகை, ரோசிகை, தீபிகை, இந்திகை என்னும் பத்தும்,

(உ) சத்திதத்துவத்திற் சாந்தியதீதை, சாந்தி, வித்தை, பிரதிஷ்டை, நிவிர்த்தி என்னும் ஐந்துமாகப் புவனங்கள் பதினைந்து உள்ளன.

(உ) சாந்திகலையின் பாலதாகிய

(க) சாதாக்கியதத்துவத்திற் சதாசிவம் என ஒன்றும்,

(உ) ஈசுரதத்துவத்திற் சிகண்டி, ஸ்ரீகண்ட, திரிமூர்த்தி, ஏகருத்திர, ஏகநேத்திர, சிவோத்தம, சூட்சும, அனந்த என்னும் எட்டும்,

(ங) சுத்தவித்தியாதத்துவத்தில் மனோன்மனி, சர்வபூததமனி, பலப்பிரமதனி, பலவிகரணி, கலவிகரணி, காளி, இரௌத்திரி, ஜ்யேஷ்டை, வாமை என்னும் ஒன்பதுமாகப் புவனங்கள் பதினெட்டு உள்ளன.

(ங) வித்தியாகலையின் பாலதாகிய

(க) மாயாதத்துவத்தில் அங்குஷ்டமாத்திர, ஈசான, ஏகேக்ஷண, ஏகபிங்கள, உத்பவ, பவ, வாமதேவ, மகாதியுதி என்னும் எட்டும்,

(உ) காலதத்துவத்திற் சிகேத, ஏகவீர என்னும் இரண்டும்,

(ங) கலாதத்துவத்திற் பஞ்சாந்தக, சூரக என்னும் இரண்டும்

(௪) வித்தியாதத்துவத்திற் பிங்க, தியோதி என்னும் இரண்டும்,

(௫) நியதிதத்துவத்திற் சம்வர்த்த, குரோத என்னும் இரண்டும்,

(௬) இராகதத்துவத்தில் ஏகசிவ, அனந்த, அஜ, உமாபதி, பிரசண்ட என்னும் ஐந்தும்,

(௭) புருஷதத்துவத்தில் ஏகவீர, ஈசான, பவேச, உக்கிர, பீமேச, வாம என்னும் ஆறுமாக இருபத்தேழு புவனங்கள் உள்ளன.

(௪) பிரதிஷ்டாகலையின் பாலதாகிய

(௧) பிரகிருதிதத்துவத்தில் ஸ்ரீகண்ட, ஔம, கௌமார, வைஷ்ணவ, பிராஹ்ம, பைரவ, கிருத, அகிர்த என்னும் எட்டும்,

(௨) புத்திதத்துவத்திற் பிராஹ்ம, பிராஜேசக, சௌமிய, ஐந்திரக, காந்தருவ, யாக்ஷ, ராக்ஷச, பைசாச என்னும் எட்டும்,

(௩) அகங்காரதத்துவத்திற் ஸ்தலேசுவர என்னும் ஒன்றும்,

(௪) மனாதி கிராணபரியந்தமுள்ள ஆறு தத்துவங்களினும் ஸ்தூலேசுவர என்னும் ஒன்றும்,

(௫) கர்மேந்திரியத்திற் சங்குகர்ண என ஒன்றும்,

(௬) சப்தாதியிற் காளஞ்சர, மண்டலேசுவர, மாகோட, துவிரண்ட, சகலண்ட என்னும் ஐந்தும்,

(௭) ஆகாயதத்துவத்தில் ஸ்தாணு, சுவர்ணாக்ஷ, பத்திரகர்ண, கோகர்ண, மகாலய, அவிமுக்த, உருத்திரகோடி, வஸ்திராபதக என்னும் எட்டும்,

(௮) வாயுதத்துவத்திற் பீமேசுவர, மகேந்திர, அட்டகாச, விமலேச, நகல, நாகல, குருக்ஷேத்திர, கயா என்னும் எட்டும்,

(௯) தேஜஸ்தத்துவத்திற் பைரவ, கேதார, மகாகாள, மத்திய மேச, ஆம்ராதக, ஜல்பேச, ஸ்ரீசைல, ஹரிச்சந்திர என்னும் எட்டும்;

(௧௦) அப்புத்தத்துவத்தில் லகுளீச, பாரபூதி, ஷண்டிமுண்டி, ஆஷாடி, புஷ்கர, நைமிசி, பிரபாச, அமரேச என்னும் எட்டுமாகப் புவனங்கள் ஐம்பத்தாறு உள்ளன.

(ரு) நிவிர்த்திகலையின்பாலதாகிய பிருதிவிதத்துவத்தில்

(க) அண்டகடாகத்துக்கு மேலே உள்ள திரிலோசனர்க்கு மேல் வீரபத்திர, பத்திரகாளி என்னும் இரண்டும்,

(உ) அண்டகடாக ஓட்டுக்கு மேலே திரிலோசன, லீப்ஸ, நய, விவாக, சம்வாஹ, திரிதசேச, திரியக்ஷ, கஜேத்தியக்ஷ, விபு, சம்பு என்னும் பத்தும்,

(௩) அண்ட கடாகத்துக்குக் கீழே தம்ஷ்டிரி, வஜ்ரக, பஞ்சீந்திர, உதும்பரீச, கிரசன, மாருதாசன, குரோதன, அனந்த, விருஷோத்தார, விருஷ என்னும் பத்தும்,

வடகிழக்கிலே (ஈசானதிசையிலே) பலப்பிரிய, பூதபால, ஜ்யேஷ்ட, சர்வ, சுரேச, வேதபாரக, ஞானபுக், சாவஞ்ஞ, ஈச, வித்தியாதிப என்னும் பத்தும்,

வடக்கிலே (குபேரதிசையிலே) பிரகாமத, பிரசாதக, ஸ்ரீதிருக், ரத்தினதிருக், லட்சுமீதிருக், ஜடாதர, சௌம்யதேக, நரூபரூபவான், நிதீச என்னும் பத்தும்,

வடமேற்கிலே (வாயுதிசையிலே) மேகவாகன, சயர்த்தி, பஞ்சசிக, பஞ்சாந்தக, க்ஷயாந்தக, தீக்ஷ்ண, சூட்சும, வாயுவேக, லகு, சீக்கிர என்னும் பத்தும்,

மேற்கிலே (வருண திசையிலே) ஈசாத, மேகநாத, ஜலாந்தக, தீர்க்கபாகு, ஜயபத்திர, சுவேத, மகாபல, பாசஹஸ்த, அதிபல, புல என்னும் பத்தும்,

தென்மேற்கிலே (நிருதி திசையிலே) தம்ஷ்டிரா, லோகித, தாம்ரக, விரூபாக்ஷ, ஊர்த்துவகேச, பயாநக, குரூரதிருஷ்டி, ஹந்தர, மாரண, நிருதி என்னும் பத்தும்,

தெற்கிலே (யமதிசையிலே) தருமபதி, அதர்மபதி, வியோக்தா, சம்யோக்திரு, கர்த்திரு, விதாதா, தாதா, ஹர, மிருத்தியு, யாம்ய என்னும் பத்தும்,

தென்கிழக்கிலே (அக்கினி திசையிலே) சூயாந்தக, பஸ்மாந்தக, பப்ரு, தகந, ஜ்வலந, காதக, ஹர, பிங்கல, குதாசன, அக்கிநிருத்திர என்னும் பத்தும்,

கிழக்கிலே (இந்திர திசையிலே) திரிதசாதிப, பிநாகி, சரஸ்தா, அவ்யய, விபூதி, பிரமர்த்தன, வஜ்ரதேக, புத்த, அஜ, கபாலீச என்னும் பத்தும்,

அடியண்ட கடாகத்திலே ரௌத்திர, வைஷ்ணவ, பிராஹ்ம, ஹாடக, கூஷ்மாண்ட, காலாக்கினிருத்திர என்னும் ஆறுமாக நூற்றெட்டுப்புவனங்கள் உள்ளன.

இந்த ஐந்து கலைகளினும் புவனங்கள் இருநூற்றிருபத்திநான்காமாறு தெளியப்படும்.

ஆதி என்றமையாற் புவனங்கள் மாத்திரமன்றித் தத்துவங்களும், கலைகளும், வர்ணங்களும், பதங்களும், மந்திரங்களும் பெறப்பட்டன.

கரோதி ஸம்ஸ்ருதிம் பும்ஸா மாஜ்ஞயா சமவேதயா।

"(தம்மை) விட்டு நீங்காத (சமவேதமாகிய) ஆணையினாற் (சிற்சத்தியினால்) ஆன்மாக்களுக்குச் சிருஷ்டி முதலிய பஞ்சகிருத்தியங்களைச் செய்கின்றார்" என்று **சிவஞானபோதம்** கூறுகின்றமையின், சிவபெருமானது சங்கற்ப ரூபமாகிய சத்திகரணமானது "பேரளவாகுந் தொழிலிற் பிறழாக்கருவி" எனக் கூறப்பட்டது.

காரணத்திரயம்

(அ) தனதுயர் தத்துவந் தான்பரஞ் சத்தி கருவியிப்பால்
வினைதரு வையம் பிறந்தும் விரிந்து மொடுங்குமிந்தச்
சினமலி தத்துவந் தன்னிற் சிரபுர நாதனுமக்
கனமலி பூண்முலை யுங்கருத் தாவுங் கருவியுமே.

(இ-ள்) உயர் தனது தத்துவம் தான் பரம் சத்தி கருவி - (எத்தத்துவங்களினும்) உயர்ந்த சிவதத்துவம் ஐந்தினும் சிவபெருமானாகிய தாமே (சிருஷ்டியாதி கிருத்தியஞ்செய்யும் நிமித்தகாரணராகிய) பரமாவர், அவர்க்குத் (துணைக்) கருவியாயுள்ளார் சத்தியார்; (இந்தச் சிவபெருமானது ஆஞ்ஞாசத்தியை வகித்த அனந்தேசுவரநாயனாரால் அச்சிவதத்துவம் ஐந்தையும் அடக்கிய சுத்தமாயைக்கு) இப்பால் சினமலி தத்துவம் தன்னில் வினைதரு வையம் பிறந்தும் விரிந்தும் ஒடுங்கும்-அதோபாகத்திலுள்ள முதற்காரணமாகிய கோரரூபமாயுள்ள அசுத்தமாயையினின்றும் கன்மானுசாரமாகச் சரீராதிகளைப் பிறப்பிக்கும் காலதத்துவமுதற் பிருதிவி தத்துவமீறாகிய தத்துவங்களும் தோன்றி விரிந்துநின்று ஒடுங்கும்; சிரபுரநாதனும் அக்கனமலி பூண்முலையும் கர்த்தாவும் கருவியும் - (ஆகலின்) சீகாழிச் சிவபெருமானும் அப்பெருமை வாய்ந்த ஆபரணமணிந்த சிவசத்தியாகிய இருவருமே முறையே **நிமித்தகாரண**மும் துணைக்காரணமுமாயுள்ளார் எ-று.

சத்தேத்வஙி சிவ: கர்த்தா ப்ரோக்தோநந்தோஸிதே ப்ரபு:।
யதா பூமண்டலேசேந நியுக்த: ஸ்வசமப்ரபு:।
ததாசௌ குருதே சர்வம் தச்சக்திப்ரதிபோதித:॥

"(சுத்தவித்தைமுதற் சிவதத்துவம் ஈறாகிய ஐந்து தத்துவங்கள் அடங்கிய) சுத்தாத்துவாவிலே சிவபெருமான் (சிருஷ்டியாதி கிருத்திய) கர்த்தா; (சுத்தமாயைக்கு இப்பாலுள்ள) அசுத்தமாயையிலே அனந்தேசுவரர் (சிருஷ்டியாதி கிருத்திய) கர்த்தாவாயுள்ளார்; பூமண்டலாதிபதியாகிய அரசனால் தனக்குச் சமானமாகிய பிரபுவானவன் நியோகிக்கப்பட்டாற்போல, அந்தச் சிவபெருமானது சத்தியினாலே உணர்த்தப்பட்ட இந்த அனந்தேசுவரர் (அனைத்தையுஞ்) செய்கின்றார்" என்று கிரணாகமம் கூறுகின்றது.

தத்துவப்பிரகாசம்

மாயாபி நாத்ரோபாதாநம் மோஹகத்வாத் ஸ்வதேஜஸா ।

"இவற்றிற் (சுத்தாத்துவகாரியங்களில்) அசுத்தமாயை உபாதானகாரணமன்று; (இந்த அசுத்தமாயை) தன் தேஜசினால் (எவரையும்) மோகிப்பித்தலின்."

சிவனுஞ் சத்தியாரும் பந்தமோக்ஷகாரணர்.

(௯) *கருமல பாசம சேதனங் கட்டுண்பர் சேதனரென்
றிருமையில் வைய மடங்குமென் றெண்ணுக வித்துணையே
திருமலி யாகமஞ் செப்பிய வான்பொருள் முற்சிறந்த
விருவரு மேகட்டு வார்விடு வாருமென் றெய்துமினே.

(இ-ள்) கருமல பாசம் அசேதனம்-கரிய மலமாகிய பாசம் ஜடம்; சேதனர் கட்டுண்பர்-பசுக்கள் பாசத்தினாற் கட்டுண்பர்; என்று இருமையில் வையம் அடங்கும் என்று எண்ணுக-(அசேதனம் சேதனர்) என்று கூறும் இரண்டினுள்ளே பிரபஞ்சம் அடங்கும் என்று உணர்க; முற்சிறந்த இருவருமே கட்டுவார் விடுவாருமென்று எய்துமின்-(பசு பாசம் என்னும் இரண்டுக்கும்) முற்பட்டு ஓங்கிய சிவபெருமான் சத்தியார் என்னும் இருவருமே பசுக்களை மாயேய

* இச்செய்யுள் சிவப்பிரகாசத்துக்கு மதுரைச் சிவப்பிரகாசர் எழுதிய பொது ௪-ஞ் செய்யுளுரையினும், உண்மை ௧௧-ம் செய்யுளுரையினும் உதாகரிக்கப்பட்டுள்ளது.

மலமாகிய பாசத்திற்ற் பிணிப்பவரும், அப்பசுக்களைப் பாசத்தி னின்று நீக்கி அருளுபவருமாவர் என்று ஓர்க; இத்துணையே திருமலி ஆகமம் செப்பிய வான்பொருள் - (பதி பசு பாசம் என் னும்) இவ்வளவே அருள்வளம் நிறைந்த சிவாகமங்கள் கூறிய பெரிய முப்பொருள்களுமாம் எ-று.

வித்யேதி சேதநாம் ப்ராஹு: ஸ்ததாவித்யாமசேதநாம்।
வித்யா வித்யாத்மகஞ்சைவ விச்வம் விச்வகுரோர் விபோ:॥

"சேதனத்தைப் (பசுவை) வித்தை என்றும், அசேனத்தைப் (பா சத்தை) அவித்தை என்றும் கூறுப; வியாபகராய் விசுவகுருவா யுள்ள சிவனாது பிரபஞ்சம் சேதன அசேதன இயற்கையது" என்று வாயுசங்கிதை கூறுமாற்றாற் பாசம் அசேதனம் என்றும், பசுக்கள் சேதனர் என்றும் கூறப்பட்டது.

அநாதிமல சம்பந்தாத் கிஞ்சிஜ்ஞோணுர் மயோதித:।
அநாதிமல முக்தத்வாத் சர்வஜ்ஞோசௌ தத:சிவ:।
விசுத்தம் ஸ்படிகம் கஸ்மாத் தஸ்மாத் தாம்ரம் சகாளிகம்।
யதாதத்ர நிமித்தம் நோ ததாநைவ சிவாத்மநோ:॥

"அநாதிமல சம்பந்தத்தினால் அணுவாகிய பசு கிஞ்சிஞ் ஞனென் எனவும், அநாதிமலத்தினின்றும் நீங்கினமையிற் சிவ பிரான் சர்வஞ்ஞராயுள்ளார் எனவும் என்னாற் கூறப்பட்டது; யாதொரு காரணமுமின்றி ஸ்படிகமானது தூய்மையாயும் செம் பானது களிம்புடையதாயும் இருக்கின்றனவோ, அங்ஙனமே (அநாதிமலமுக்ததுவம்) சிவபிரானுக்கும், (அநாதிமலபத்ததுவம்) பசுவுக்கும் (இயல்பாய்) உள்ளன" என்றும்,

முக்த்யர்த்தம் சபசுர்பத்தோ நாந்யதா சோஸ்ய ஜாயதே।
யாவச் சரீரசம்ஸ்லேஷோ ந ஸம்ஜாதோ ந போகபுக்।
மாயேயம் தத்வபுஸ்தஸ்ய ததபாவாந் ந முக்திபாக்।
தேந தேந ஸ்வதந்த்ரத்வாந் மலிநோ மலிநீக்ருத:।
யதா வஸ்த்ரம் ஸதோஷத்வாந் மலதஸ் தம் விசுத்யதி॥

"மோக்ஷத்தின் பொருட்டே அப்பசு கட்டப்படுகின்றான்; மற்றொன்றினால் அவனுக்கு முத்தி உண்டாகாது; சரீரசம்பந்தம் எதுவரையுமில்லையோ, அதுவரையும் போகம் புசிக்க இயலான்; அந்தச் சரீரம் மாயேயம்; அந்தச் சரீரமின்றி முத்தி எய்தான்;

அந்த மலத்தோடு கூடிய அந்த மாயையத்தினாற் பாதந்திரனை மையால் மலினனாகிய பசு மலினமாக்கப்பட்டான் (அழுக்கினோடு பின்னரும் அழுக்காக்கப்பட்டான் என்பது); எங்ஙனம் அழுக் குள்ள வஸ்திரம் அழுக்கானமைபற்றி அழுக்காக்கப்பட்டுத் தூய் மை அடைகின்றதோ, அங்ஙனம் பசுவுமாம்" என்றும் கிரணாகமம் கூறுகின்றது.

பதி பசு பாசம்

(௧௦) எய்தும் பொருளொரு மூன்று பதிபசு பாசமென்றே
மெய்தந்த வாகமங் கூறு மவற்றினுள் வெங்குருவாழ்
மைதங்கு கண்டன் பதிபசு வென்ப தணுக்கண்மற்றுக்
கைதந்த பாசங்க ளாணவ மாயையுங் கன்மமுமே.

(இ-ள்) எய்தும் ஒருபொருள் பதி பசு பாசம் மூன்று என்று மெய் தந்த ஆகமம் கூறும் - அநாதியாய் எய்திய ஒப்பில்லாத பொருள்கள் பதி பசு பாசம் என்னும் முப்பொருள்களாம் என்று மெய்ப்பொருள் பொதிந்த சிவாகமங்கள் கூறுவனவாம்; அவற்றி னுள் வெங்குருவாழ் மைதங்கு கண்டன் பதி - அம்முப்பொருள்க ளுள்ளே சீகாழிப்பதியில் எழுந்தருளிய கரிய கண்டத்தினராகிய சிவபெருமானே பதியாவர்; பசு என்பது அணுக்கள் - பசு எனப் படுவது ஆன்மாக்களாம்; கைதந்த பாசங்கள் ஆணவம் மாயையும் கன்மமுமே - (பிறவியிற் செலுத்திச்) சிறுமையுறுத்தும் பாசங்க ளாவன ஆணவமும் மாயையும் கன்மமுமாம் எ-று.

பதி: பசுச்ச பாசச்ச பதார்த்தாஸ்த்ரிவிதோ மதா:।
பதிஸ்தத்ர சிவ: ப்ரோக்தோ நிஷ்களோ நிர்மல: ச்ருத:।
ஆத்மானோ வ்யாபினோ நந்தா : சித்ரூபா: பசவஸ்திரிதா।
மாயாகர்மமலச்சந்நஸ் ஸகலஸ்ஸோபிதீயதே॥

"பதிபசுபாசங்கள் எனப் பதார்த்தங்கள் மூவகைப்படும்; பதியாவார் நிஷ்களரும் நிர்மலருமாகிய சிவன் என்று கூறப்படுகின் றார்; ஆன்மாக்கள் வியாபகமாய் எண்ணில்லாதனவாய் அறிவுருபங் களாயுள்ளன; அவை மூவகைப்படும்; மலம் மாயை கன்மங்க ளோடு கூடினவர் சகலர் எனப்படுவர்" என்று சித்தாந்தவிவேகமும்,

மலமாயா ச கர்மாக்யம் பசூநாம் பந்த உச்யதே।

"மலம் மாயை கர்மம் என்பன பசுக்களின் பந்தம் எனப்படும்" என்று இரௌரவாகமமும் கூறுமாற்றால் பதிபசுபாசம்என்னும் முப்பொருள்களைப் பிரதிபாதிப்பன சிவாகமங்கள் என்றும், பதியாவார் சிவபெருமான் என்றும், பசுக்கள் பல என்றும், பாசங்கள் ஆணவம் மாயை கன்மம் என்றும் உணர்க.

தத்துவப்பிரகாசம்

சைவாகமேஷு முக்யம் பதிபசுபாசா இதி க்ரமாத் த்ரிதயம்

"கிரமமாகப் பதி பசு பாசம் என்னும் மூன்றும் சைவாகமங்களில் முக்கியமாகக் (கூறப்படுகின்றன.)"

பஞ்சகிருத்தியம்

(கக) கன்மனக் தன்னைக் கனிவிக்குங் காழிப் பிரான்கருணைப்
பன்மைப் படுந்தொழி லைந்து படைப்பு நிலைதொகுத்த
லின்மை நிகழ்ந்த வொளிப்புத் துயர்நின் றெடுத்தலென்ப
வன்மைப் படாநிலை மைபெரி யோனுக் கமைந்தனவே.

(இ-ள்) கன்மனந்தன்னைக் கனிவிக்கும் காழிப்பிரான் - கற்போரும் காடின்னியமாகிய மனதை உருக்கிக் கனிவிக்கும் சீகாழிப் பெருமான்; கருணைப் பன்மைப் படுந்தொழில் ஐந்து-காருண்ணிய சத்தியினுற பன்மைப் படச்செய்யும் கிருத்தியங்கள் ஐந்தாம்; படைப்பு நிலை தொகுத்தலின்மை நிகழ்ந்த ஒளிப்பு துயர் நின்றெடுத்தல் என்ப - அவை சிருஷ்டியும் ஸ்திதியும் சங்காரமும் திரோபவமும் அநுக்கிரகமுமாம் என்பர்; அன்மைப்படா நிலைமை பெரியோனுக்கு அமைந்தன - நித்தியமாகிய பஞ்சகிருத்திய நிலைமை அப்பெரியோர்க்கு அமைந்தனவாம் எ-று.

யதோவா இமானி பூதானி ஜாயந்தே யேந ஜாதானி ஜீவந்தி யத் ப்ரயந்த்யபிஸம்விசந்தி தத்விஜிஜ்ஞாஸஸ்வ தத்ப்ரஹ்ம।

"எதிலிருந்து இந்தச் (சேதனு சேதனப்) பிரபஞ்சங்கள் பிறக்கின்றனவோ, எதனாற் பிறந்தவை ஜீவிக்கின்றனவோ, (இறுதியில்) எதனைப்போயடைகின்றனவோ, அதனை அறிக; அது பிரஹ்மம்" எனச் சிருஷ்டி ஸ்திதி சங்காரங்களைத் தைத்திரீயோபநிடதம் கூறுகின்றது.

தத்துவப்பிரகாசம்

பஞ்சவிதம் தத்க்ருத்யம் ஸ்ருஷ்டி ஸ்திதிஸம்ஹ்ருதிதிரோபாவா:।
தத்வதநுக்ரஹகாரணம் ப்ரோக்தம் ஸததோதிதஸ்யாஸ்ய॥

"சிருஷ்டி, ஸ்திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகமாகிய ஐந்துவித கிருத்தியங்களும் என்ஞான்றும் அவர்க்கு இயைந்தனவாம்."

பதியியல் முற்றிற்று.

பசுவியல்

(கஉ) அமையா நிலைமை யணுக்களோர் மூன்று வகையவைதாங்
கமையா னிறைந்தவிஞ் ஞான கலர்ப்பிரள யாகலர்மற்
றிமையா ரிமைப்ப வராகுஞ் சகல ரிவரின் முன்னோர்
தமையா ரெனின்மல மேயவை சேடித்த தன்மையரே.

(இ-ள்) அமையா நிலைமை அணுக்களோர் மூன்று வகை - கணிக்கப்படாத நிலைமையினையுடைய பசுக்கள் மூத்திறப்படும்; அவைதாம் கமையானிறைந்த விஞ்ஞானகலர் பிரளயாகலர் இமையா ரிமைப்பவராகுஞ் சகலர் - அந்தப் பசுக்கள் பொறையானிறைந்த விஞ்ஞானகலரும் பிரளயாகலரும் தேவர் மனிதராகிய சகலருமாம்; இவரின் முன்னோர்தமை யாரெனின் மலமேயவை சேடித்த தன்மையர் - (சகலர் பிரளயாகலர் என்னும்) இவர்க்கு முற்பட்ட விஞ்ஞானகலரை யாரென்று ஆராயின், அவர் ஆணவமலமொன்றுமே (உடையராய், முற்செனனத்திற் பிரளயாகலராயிருந்து மாயை கன்மம் என்னும்) அவை இரண்டையும் நீக்கியபெற்றியராம் எ-று.

ய ஈசேஸ்ய த்பவிதஸ் சதுஷ்பத:।

"எவர் இருகாலும் நாற்காலுமுடைய பசுக்களை ஆளுகின்றாரோ" என்று இருக்குவேதமும் (கO. கஉக. ங),

யேஷாமீசே பசுபதி: பசூநாம் சதுஷ்பதா முதச த்விபதாம்।

"நாற்காலும் இருகாலுமுடைய பசுக்களைப் பசுக்களுக்குப் பதியாயுள்ளார் (சிவபெருமான்) ஆளுகின்றார்" என்று தைத்திரீய யசுர்வேதமும் (ங. க. ச),

பசவஸ்து சதுஷ்பாதா த்விபாதாச்சேதி சுசுரும:।

"பசுக்கள் நாற்காலும் இருகாலுமுடைய எனக் கேள்வியுறுகின்றேம்" என்று காமிகாகமமும் கூறுகின்றன.

தத்துவப்பிரகாசம்

பசவஸ்திரிவிதா ஜ்ஞேயா விஜ்ஞாநப்ரளயகேவலௌ ஸகல:।

"பசுக்கள் விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் என மூத்திறப்பவர்."

மூத்திற ஆன்மாக்களின் இலக்ஷணம்

(கங.) தன்மை யொழிக்குமப் பாசமுங் கன்மமுஞ் சார்ந்துமற்றைப்
பின்னொரு பாச மிலார்பிரள யாகலர் பேசியவக்
கன்மமு மாயையு மாணவ முங்கலந் தார்சகல
ரென்னு மிவரின்முன் னோரிரு பான்மைய ரென்றறியே.

(இ - ள்) தன்மை ஒழிக்கும் அப்பாசமும் கன்மமுஞ் சார்ந்து பின்னொரு பாசமிலார் பிரளயாகலர் - ஆன்மாவின் இச்சாஞானக் கிரியையினியல்பை ஒழிக்கும் அவ்வாணவமலமும் கன்மமலமும் கலந்து மற்றோர் மாயாமல பாசமில்லாதவரே பிரளயாகலர்; பேசிய அக்கன்மமும் மாயையும் ஆணவமும் கலந்தார் சகலர் - மேலே கூறப்பட்ட அந்தக் கன்மமும் மாயையும் ஆணவமுமாகிய மூன்றும் சார்ந்தவர் சகலர்; என்னும் இவரின் முன்னோர் இருபான்மை

யர் என்றறியே-பிரளயாகலர் சகலர் என்னும் இவர்க்கு முற்பட்டோர் ஆணவமல மாத்திரமுடையராகிய விஞ்ஞானகலர் இருதிறப்படுவர் என்று அறிதி எ-று.

மலகர்மயுதோ விப்ரா: ப்ரளயாகல இஷ்யதே।
மாயாகர்மமலைர்யுக்தஸ் ஸகலஸ்தத்ர கத்யதே॥

"மலகன்மங்களோடு கூடினவர் பிரளயாகலர்; மாயா கன்ம மலங்களோடியைந்தவர் சகலர்" என்று காமிகாகமம் கூறுகின்றது.

தத்துவப்பிரகாசம்

மலயுக்தஸ்தத்ராத்யோ மலகர்மயுதோ த்விதீய: ஸ்யாத்।
மலமாயாகர்மயுதஸ்சகலஸ்தேஷு த்விதாபவேதாத்ய:॥

"முதலாவதாகிய விஞ்ஞானகலர் மலமாத்திரமுடையர்; இரண்டாவதாகிய பிரளயாகலர் மலகர்ம மிரண்டுமுடையர்; சகலர் மலம் மாயை கன்மம் என்னும் மூன்றுமுடையர்; இம்மூவருள்ளே முதலாவதாகிய விஞ்ஞானகலர் இருதிறப்படுவர்."

விஞ்ஞானகலர் இருதிறத்தராதல்

(கச) §அறிந்தவர் தீர்ந்த துகளினர் தீராத் துகளர் முன்னர்ச்
செறிந்தவர் விஞ்சைக்கு நாயக ரெண்ம ரெனச்சிறந்தோர்
பிறிந்தவர் மந்திர ராமெழு கோடியர் பேரொலியான்
மறிந்த திரைப்புனல் வெங்குரு வாணன் வகுத்தவரே.

(இ-ள்) அறிந்தவர் - விஞ்ஞானகலர்; தீர்ந்த துகளினர் தீராத்துகளர்-மிகுந்த பரிபக்குவமலமுடையரென்றும் குறைந்த பக்குவமலமுடையரென்றும் (இருவகைப்படுவர்); முன்னர்ச் செறிந்த எண்மர் விஞ்சைக்கு நாயகர் எனச் சிறந்தோர்-முன்னர்க் கூறப்பட்டவர் அனந்தாதி அஷ்டவித்தியேசுவரர் எனப்பட்ட உயர்வு

---

§ இச்செய்யுள் சிவப்பிரகாசத்துக்கு மதுரைச் சிவப்பிரகாசர் எழுதிய பாயிரம் அ-ஞ் செய்யுளுரையினும், பொது கச-ஞ் செய்யுளுரையினும் உதகரிக்கப்பட்டுள்ளது.

டையோராம்; பிறிந்தவர் மந்திரராம் எழுகோடியர்-அவரிற் பிரித்துக் கூறப்பட்டோர் சப்தகோடி மகாமந்திரராம்; வகுத்தவர் பேரொலியான் மலிந்த திரைப்புனல் வெங்குருவாணன் - இங்ஙனம் வகுத்தவர் மிகுந்த ஒலியினால் மடங்கும் அலைநீராற் சூழ்ந்த வெங்குரு என்னப்படும் சீகாழிக்கு நாயகராகிய சிவபெருமானேயாம் எ-று.

"விஞ்ஞானகலருள்ளே பக்குவமல முடையார் இருபிரகாரத்தினர்; அத்தியந்த பரிபக்குவமுள்ள விஞ்ஞானகலர் ஈசுவர தத்துவத்தில் வசிப்பவர்களாகிய அனந்தாதி எண்மர்; அனந்தாதியரை அபேக்ஷித்துச் சிறிது அபக்குவமுடையராயுள்ளோர். சுத்தவித்தையில் வசிப்பவர்களாகிய சப்தகோடி மகாமந்திரர்களாம்" என்று சித்தாந்தசாராவளி வியாக்கியானம் கூறுகின்றது.

தத்துவப்பிரகாசம்

ஆத்யஸ் சமாப்தகலுஷோ ஸமாப்த கலுஷோத்விதீயஸ் ஸ்யாத்।
ஆத்யாந்நுக்ருஹ்ய சிவோ வித்யேசத்வே நியோஜயத்யஷ்டௌ।
மந்த்ராச்ச கரோத்யபராந் தேசோக்த்ா: கோடயஸ் சப்த॥

"முற்பட்டவராகிய விஞ்ஞானகலர் தீர்ந்தமலமுடையர் எனவும், தீராமலமுடையர் எனவும் இருவகைப்படுவர்; இவருள் முற்கூறப்பட்ட தீர்ந்தமலமுடையார் ஈசுவரதத்துவத்திலுள்ள சிவோத்தமர் முதலிய அஷ்டவித்தியேசுவரரோயாம்; தீராமலமுடைய மற்றையோரைச் சுத்தவித்தியாதத்துவத்தில் மந்திரர்களாக்கினார்; அவர்கள் சப்தகோடியினர்."

அபக்குவ விஞ்ஞானகலர்
பக்குவ அபக்குவப் பிரளயாகலர்

(கரு) *வருத்தவ ரிற்புவ னாதிப ரேனைய மற்றவர்பின்
றொருத்தவ ரிற்பந்த முற்றினர் தூநெறிச் செல்வர்பின்பான்
மிருத்தவர் தாம்புரி யட்டகத் தோடும் வினைவழியாற்
பகுத்த பிறப்பிற் சகலர்முப் பாசமும் பற்றினரே.

---

* இச்செய்யுள் சிவப்பிரகாசத்துக்கு மதுரைச் சிவப்பிரகாசர் எழுதிய பாயிரம் அ-ஞ் செய்யுளுரையில் உதகரிக்கப்பட்டுள்ளது.

(இ-ள்) வகுத்தவரிலை ஏனைய மற்றவர் புவனாதிபர் - இங்ஙனம் வகுக்கப்பட்ட விஞ்ஞானகலரினின்றும் (மிகுதியும் அபக்குவமல முடைய) எஞ்சிய விஞ்ஞானகலர் (அசுத்த மாயாதத்துவத்துக்கும் சுத்தவித்தியாதத்துவத்துக்கும் இடைக்கணுள்ள) புவனாதிபர்களாயிருப்பர்; பின் தொகுத்தவரிற் பந்தமுற்றினர் தூநெறிச் செல்வர் - (விஞ்ஞானகலர்க்குப்) பின் தொகுக்கப்பட்ட பிரளயாகலருள்ளே பந்தத்தினின்று நீங்கினவராகிய மிக்க பக்குவமுடையார் முத்திநெறியிற் றலைப்படுவர்; பின்பான் மிகுத்தவர் தாம் புரியட்டகத்தோடும் வினைவழியாற் பகுத்த பிறப்பிற் சகலர் முப்பாசமும் பற்றினர் - பின்னுள்ள அபக்குவராகிய பிரளயாகலர் புரியட்டகதேகத்தோடும் இருவினைக்-கீடாக வகுக்கப்பட்ட பிறவியின்கண்ணே சகலராய் ஆணவம் மாயை கன்மம் என்னும் முப்பாசமும் பற்றினோராவர் எ-று.

தத்துவப்பிரகாசம்

ப்ரளயாகலேஷு யேஷாம் பக்வே மலகர்மணீ வ்ரஜந்த்யகேயே।
புர்யஷ்டகதேஹயுதா யோநிஷ்வகிலாசு கர்மவசாத்॥

"பிரளயாகலருள்ளே மலம் பரிபாகமுற்று, அதனாற் கன்மமும் பக்குவத்தை அடையப்பெற்றவர்கள் மோக்ஷத்தை அடைகின்றார்கள்; அபக்குவராயுள்ள ஏனையோர் புரியட்டக தேகமுடையாராய்க் கன்மவசத்தினாலே போகத்தின்பொருட்டுச் சமஸ்த யோனிகளையுடைய புவன சரீரங்களிற் செல்லுகின்றார்கள்."

புரியட்டகம்

(கசு) பற்றிய சத்தம் பரிச முருப மிரதகந்த
மற்ற மனம்புத்தி யாங்கார மென்றிவை வல்வினையாற்
சுற்றி யமைந்த புரியட் டகமென்று சொல்லுவர்வான்
பெற்றி யமைந்த பிரமா புரந்தொழப் பெற்றவரே.

(இ-ள்) பற்றிய சத்தம் பரிசம் உருபம் இரதம் கந்தம் மற்றை மனம் புத்தி ஆங்காரம் என்று இவை வல்வினையாற் சுற்றி அமைந்த புரியட்டகம் என்று சொல்லுவர்-விஷயங்களைப்பற்றிய சத்தம் பரி

சம் ரூபம் இரசம் கந்தம் என்னும் தன்மாத்திரை ஐந்தும் மனம் புத்தி அகங்காரம் என்னும் மூன்றுமாகிய இவை வலிய வினை காரணமாக ஆன்மாவைப்பற்றியுற்ற புரியட்டக தேகமென்று கூறு வர் (யாரெனில்); வான்பெற்றி அமைந்த பிரமாபுரம் தொழப் பெற்றவர் - ஆகாயம் வரையும் உயர்ந்தமைந்த தன்மையோடுகூடிய பிரமாபுரம் எனப்படும் சீகாழியை வணங்கப்பெறும் பேறு பெற்ற அறிஞர்களாகும் எ-று.

பிரளயாகலரிற் சிலர் விஞ்ஞானகலராதல்

(கஎ) *பெற்ற தவப்பய னாற்பிரள யாகல ரிற்சிலரைக்
குற்றமின் மந்திர நாயக ராக்குமெங் கொச்சையர்கோன்
மற்றவர் மண்டலர் க்ரோதா திபர்வீரர் சீகண்ட ரி[வர்க்கே.
ருற்ற வுருத்திர ரெட்டெட்டொன் றொன்றுநூ றெண்ணி

(இ-ள்) எம் கொச்சையர்கோன் - எமது கொச்சை எனப் பெயரிய சீகாழிக்குத் தலைவராகிய சிவபிரான்; பெற்ற தவப்பயனாற் பிரள யாகலரிற் சிலரை - அடைந்துகொண்ட புண்ணிய தவப்பிரயோ சனத்தினாற் பிரளயாகலரிற் சிலரை; குற்றமில் மந்திரநாயகராக் கும் - குற்றமில்லாத (விஞ்ஞானகல) மந்திரநாயகராக்குவர்; அவர் மண்டலர் எட்டு குரோதாதிபர் எட்டு வீரரொன்று சீகண்ட ரொன்று சீருற்ற உருத்திரர் நூறு இவர்க்கு எண் - அவர்கள் மண்டலாதிபர் எண்மர், குரோதாதிபர் எண்மர், வீரர் ஒருவர், சீகண்டருத்திரர் ஒருவர், உருத்திரர் நூற்றுவருமாக, இவர்களின் தொகை நூற்றுப்பதினெட்டாம் எ-று.

“வித்தியாமண்டலிகளாகிய எண்மரும், குரோதாதிபராகிய எண்மரும், ஸ்ரீகண்டருத்திரர் ஒருவரும், வீரபத்திரர் ஒருவரும், உருத்திரர் நூற்றுவருமாகிய அந்த நூற்றுப்பதினெண்மரையும் சிவபெருமான் சிருஷ்டிகாலத்திலே நிரதிகரண தீக்ஷையால் அநுக்கிர கித்து அந்த (விஞ்ஞானகலமந்திரேசுவர) அதிகாரத்தில் ஆஞ்ஞா பிப்பர்” எனப் பவுட்கராகமம் கூறுகின்றது.

இந்த நூற்றுப்பதினெண்மரும் பிரளயாகலரைச் சார்ந்தவ ரென்க.

* இச்செய்யுள் சிவப்பிரகாசத்துக்கு மறைஞான சிவப்பிரகாசர் எழுதிய பாயிரம் அ-ஞ் செய்யுளுரையில் உதகரிக்கப்பட்டுள்ளது.

தத்துவப்பிரகாசம்

சதமஷ்டாதச தேஷாம் குருதே ஸ்வயமேவ மந்த்ரேசாந்।
தத்ராஷ்டௌ மண்டலிந: க்ரோதாத்யாஸ்தத்சமாச்ச வீரேச:।
ஸ்ரீகண்டச்சத்ருத்ரா: சதமித்யஷ்டா தசாப்யதிகம்॥

"(ககனேசர் முதலிய) மண்டலாதிபர் எண்மரும், குரோதாதிபர் எண்மரும், ஸ்ரீகண்டரும், வீரபத்திரரும், சதருத்திரருமாகிய நூற்றுப் பதினெட்டுப் (பிரமாண்ட ஆதாரர்களாகிய அந்நூற்றுப் பதினெட்டுப் பிரளயாகல) ருத்திரர்களுடைய மலங்களைச் (சிவபெருமான்) தாமே நீக்கி மந்திரேசுவரபதத்தில் யோஜிக்கின்றார்."

சகலர்க்கு அருளுதல்

(சஅ) எண்ணும் வினைப்பய னுற்புவ னந்தொறும் போகமென்று
நண்ணி வருஞ்சக லர்க்கொரு கால நயந்தங்ஙனே
பண்ணிய கன்மந் தொலையொத் துழிச்சத்தி பாதமுறக்
கண்ணிய னுங்குரு வாய்க்காழி வேந்தன் கதிதருமே.

(இ-ள்) எண்ணும் வினைப்பயனுற் புவனந்தொறும் போகம் என்றும் நண்ணிவருஞ் சகலர்க்கு - கணிக்கப்படும் கன்மப்பயனினுற் புவனங்கடோறும் போகத்தை எஞ்ஞான்றும் பொருந்தித் துய்த்து ,வரும் சகலராயினோர்க்கு; அங்ஙனே ஒருகால் நயந்து பண்ணிய கன்மம் தொலை ஒத்துழி சத்திபாதமுற - ஈண்டு ஒருகால் மிகுத்துச் செய்த புண்ணிய பாவங்கள் சமப்படுமிடத்து அதனுற் சத்திநிபாதம் தலைக்கூடுங்கால்; காழிவேந்தன் கண்ணியனும் குருவாய்க் கதிதரும் - சீகாழித் தலைவராகிய சிவபிரான் கண்போற் சிறந்து குருநாதராக எழுந்தருளிவந்து முத்தியைப் பாலித்தருள்வார் எ-று.

யேஷாம் போதே ந ஸம்ஜாதம் காலஜ்ஞாநம் (வராநநே)।
ந தேஷாம் ஜாயதே போத: சாத்ரகோடிசதைரபி॥

"எவர்களுடைய அறிவிலே மலபரிபாககாலமாகிய சத்திநிபாதத்தில் ஞானம் பிறக்கவில்லையோ, அவர்களுக்கு நூறுகோடி சாஸ்திரங்களாலும் சிவசாக்ஷாத்காரஞானம் உண்டாகாது" என்று **தேவிகாலோத்தரம்** கூறுகின்றது.

சிவபுண்ணியத்தால் வருவது இருவினையொப்பு என்றும், அது வரவே முதன்மையும் போகப்பற்றும் கழியும் என்றும், மலபரிபாகத்தால் வருவது சத்திநிபாதம் என்றும், அது வரவே போக போக்கியக் கருவிகளிற் செறிதல் கழியும் என்றும், இவை நான்கும் வந்து அவை நான்கும் கழிந்தால் உணர்வாய்நின்ற ஞானக்கூத்தன் ஒரு மூர்த்திகொடு குறுகும் என்றும், அந்தக் குருவருளால் ஷடத்துவசுத்தியாகிய உருக்கழியும் என்றும், அது கழிந்தாற் கேவல சகலம் நீங்கும் என்றும், அது நீங்கினால் அறிதற்றொழில் உண்டாதல் ஒடுங்கிக் கழியும் என்றும், அது கழிந்தால் ஞானப்பெருக்கம் உளதாம் என்றும், அது பெருகினால் இச்சை ஞானம் கிரியை மூன்றும் கழியும் என்றும், அது கழிந்தால் மலநீக்கம் வாதனைமல நீக்கம் வரும் என்றும், அது வந்தால் ஆன்மாவுக்கு வியாபக அறிவு விளங்கி ஏகதேசக்காட்சிப்படும் சுட்டுணர்வு கழிந்து சிவானந்தம் எய்தும் என்றும் சித்தாந்தசாஸ்திரம் கூறுகின்றது.

தத்துவப்பிரகாசம்

பரிபக்வமலாநேதாநுத்சாதநஹேதுசக்திபாதேந।
யோஜயதி பரே தத்வே ஸ தீக்ஷயாசார்யமூர்த்திஸ்தித:॥

"(சிவபெருமான்) ஆசாரியமூர்த்தியை அதிஷ்டித்துநின்று (திரோதான சத்தியை) ஒழித்தல்வாயிலாக எய்தும் சத்திநிபாதத்தினாற் பரிபக்குவமுற்ற மலத்தையுடைய இந்த ஆன்மாக்களைச் (சிவானந்த) பரதத்துவத்திற் சேர்ப்பிக்கின்றார்."

பாசவியல்

ஆணவமுதலிய மூன்று

(கக) *கதிதரு காழிமன் சுட்டேப் பாசங்கண் மூன்றவைதாம்
பொதிதரு மாணவம் போகஞ்செய் கன்மமு மாயையுமா
முதியது தானென்று முன்னரில் லாதது சேதனன்கண்
ணதிக மறைப்பன வாயிர கோடி விருத்திகளே.

---

* இச்செய்யுள் சிவஞானசித்தியார்க்கு மறைஞானதேசிகர் எழுதிய உ-ஞ் சூத்திரத்து அ0; அஎ-ஞ் செய்யுளுரைகளினும், சிவப்பிரகாசத்துக்கு மதுரைச் சிவப்பிரகாசர் எழுதிய பொது அ-ம், உக-ஞ் செய்யுளுரைகளினும் உதகரிக்கப்பட்டுள்ளது.

(இ-ள்) கதிதரு காழிமன் கட்டும் அப்பாசங்கள் மூன்று - முத்தியாலிக்கும் சீகாழிப்பெருமான் (அநாதியே ஆன்மாவைப் பந்தித்த ஆணவ் முதலியவற்றைத் திரோதானசத்தியினாற் சேட்டித்துப்) பந்திக்கும் அப்பாசங்கள் மூன்று வகைப்படும்; அவை தாம் பொதிதருமாணவம் போகஞ்செய் கன்மமும் மாயையுமாம் - அப்பாசங்கள் ஆன்மாவின் அறிவை மறைத்துநிற்கும் ஆணவமலமும், போகம் கொடுக்கும் கன்மமலமும், மாயாமலமுமாம்; முதியது தான் ஒன்று - முதற்கண்ணே கூறப்பட்ட ஆணவமலமானது ஒன்றே; முன்னர் நில்லாதது - (இது ஆன்மாவினின்று பிரிக்குமாறு புலப்பட) முற்பட்டு நில்லாதது; சேதனன் கண் அதிகம் மறைப்பன ஆயிரகோடி விருத்திகள் - (அநேக) ஆன்மாக்களின் (ஞானக்கிரியா) சத்திகளை மிகுதியும் மறைப்பனவாகிய அநேக சத்திகளை (உடையது) என்று.

ஸஹஜம் மலமித்யுக்தமாகந்துகமலம் (ச்ருணு)।
மாயேயம் கர்மஜஞ்சைவ த்விவிதம் (சிவசாசநே)॥

“ஆணவமலம் சகஜமலம் எனவும், மாயாகன்மகாரியம் இரண்டும் ஆகந்துகமலம் எனவும்” சுப்பிரபேதாகமம் கூறுகின்றது.

தத்துவப்பிரகாசம்

பாசா:சதுர்விதாஸ்ஸ்யு:பும்சோமலகர்மஜௌ மதௌ ப்ரதமதௌ।
மாயேய திரோதாயகௌ (சிவசக்திஸமுத்பவௌ) சாந்யௌ॥

“ஆன்மாவுக்கு நால்வகைப் பாசங்கள் உண்டு; அவை முதற்கண்ணேயுள்ள மலமும், கன்மமும் மற்றைய மாயேயமும், திரோதாயியுமாம்”

ஆணவம்

(உ0) விருத்திக ளான்மறைக் கின்றவவ் வாணவம் வெங்குருமன்
கருத்திய னூன்முறை தேரிற் கலந்துட னுபனுவை
யருத்திய நஞ்சென மோகஞ்செய் தாசை யனுபவத்திற்
பெருத்திடச் செம்பினிற் காளிதம் போலப் பிணைந்துளதே.

(இ-ள்) விருத்திகளான் மறைக்கின்ற அவ்வாணவம் - (அளவிறந்த) சத்திகள்கொண்டு ஆன்மாவை மறைக்கின்ற அந்த ஆணவமலலக்ஷணத்தை; வெங்குருமன் கருத்து இயல் நூன்முறை

தேரில் - ஸ்ரீகாழிநாதர் திருவுளத்துக்கியைந்த வேதசிவாகமநெறி யானே ஆராயின்; கலந்து உடனாய் அணுவை அருந்திய நஞ்சென மோகஞ் செய்து-ஆன்மாக்களுடனே அவ்வாணவம் (அபேதமாய்க்) கலந்து நிற்றலால் ஒன்றாயும், (பொருட்டன்மையால் வேறாயும்), செயற்றன்மையால் உடனாயுமாகி, அவற்றுக்கு ஊட்டிய நஞ்சு போல மயக்கஞ் செய்து; ஆசை அனுபவத்தில் பெருத்திடச் செம்பினிற் காளிதம் போலப் பிணைந்துளது - (புகழ்பொருள்) ஆசையானது (விஷய) அநுபவத்திலே கதிக்குமாறு செம்பிற் களிம்பு போல (அவ்வான்மாக்களில்) இசைந்துளது எ-று.

தாம்ரகாளிகவத்யோகாத்ஸஹஜ: பரிகீர்த்தித: ||

"(ஆன்மாவோடு ஆணவமானது இயைந்து நிற்பது) தாம்பிரத்திற் களிம்பு சகஜமாய் இசைந்திருப்பது போலாம் என்று சொல்லப் படும்" என்று மதங்காகமங் கூறுகின்றது.

தத்துவப்பிரகாசம்

ஏகோஹ்யநேகசக்திர்த்ருக் க்ரியயோச்சாதகோமல: பும்ஸ: |
துஷகம்புகவஜ்ஜ்ஞேயஸ் தாம்ராச்ரிதகாளிகாவத்வா ||

"ஆணவமலம் ஒன்றனரே; இது அநேக சத்திகளையுடையதாய் ஆன்மாவின் ஞானக்கிரியைகளை மறைப்பதாயுள்ளது; இது நெல்லின் உமிபோன்றேனும், தாம்பிரத்திற் களிம்புபோன்றேனும் உள்ளது என அறியற்பாற்று."

கன்மம்

(உக) *பிணைந்தவப் பாசம பெருக்கியவ் வாசை யனுநுகர்தற்
கணைந்தன கன்ம மிருவகைத் தாமறம் பாவமென்ப [யா
தணைந்தும் பிணைந்துந்தஞ் சார்பினிற் றேன்றுமன் சன்னிதி
யுணர்ந்தவர் வித்தும் விளைவுமொப் பாமென வோதுவரே.

(இ - ள்) பிணைந்த அப்பாசம் அவ்வாசை பெருக்கி அநு நுகர்தற்கு அணைந்தன கன்மம் இருவகைத்தாம்-ஆன்மாவை அநாதியே பற்றிய அவ்வாணவமலம் அவ்வாசையைப் பெருக்க, அவ்வான்மா

---

* இச்செய்யுள் சிவப்பிரகாசத்துக்கு மதுரைச் சிவப்பிரகாசர் எழுதிய பொது உ0-ஞ் செய்யுளுரையில் உதகரிக்கப்பட்டுள்ளது.

வானது போகந் துய்த்தற்குச் சேர்ந்தனவாகிய வினைகள் இரு வகையாம்; அறம் பாவம் என்ப - அவ்வினைகள் புண்ணியமும் பாவமுமாம் என்பர்; மன் சந்நிதியால் தணந்தும் பிணைந்தும் தம் சார்பினிற்றோன்றும் - சொழிகாயகருடைய சன்னிதியினால் அவை (இருவினைகள்) அவ்வான்மாக்களை (இதாகிதமாகப்) பிரிந்தும் கூடி யும் தத்தஞ்சார்பிலே தோன்றுவனவாம்; உணர்ந்தவர் வித்தும் விளைவும் ஒப்பாம் என ஓதுவர் - அறிஞர்கள் அவ்வினையை (மறு சனனத்துக்குரியதாய) வித்துக்கும் (இந்தச் சனனத்துக்குரிய தாய) விளைவுக்கும் ஒப்பாமென்று கூறுவர் எ-று.

தத்துவப்பிரகாசம்

கர்மாநாதி ப்ரோக்தம் தர்மாதர்மாத்மகம் விசித்ரஞ்ச[1]

"கன்மமானது அநாதிக்கண்ணதாய்ப் புண்ணியபாவம் எனப் பல திறப்பட்டிருக்கும்."

மாயை

(உ௬) *ஓதிய வல்வினை யூட்டக் கருவி யுடம்புலக
மாதிமைப் போகமு மாய்நின்ற மாயை மயக்குவித்தே
போதந் தரும்பொரு ளாய்நிற்கு மிப்புவ னாதிகளுக்
காதியு மாய்விரிந் தந்தமு மாகி யொடுங்கியதே.

(இ-ள்) ஓதிய வல்வினை ஊட்ட உடம்பு கருவி உலகம் மாதர் இமைப் போகமுமாய் நின்ற மாயை - மேலே கூறப்பட்ட வலிய வினையை ஊட்டுமாறு தனுவாயும் கரணமாயும் புவனமாயும் மாதர் முதலிய சிறுபோகமாயும் நின்ற மாயையானது; மயக்குவித்தே போதம் தரும் பொருளாய் நிற்கும் - அறிவை மயக்குவித்துக் (கலாதிகளால் ஏகதேசக்) காட்சிதரும் பொருளாகிநிற்கும்; இப் புவனாதிகளுக்கு ஆதியுமாய் விரிந்து அந்தமுமாகி ஒடுங்கியது - இப்புவனாதிகள் தோற்றுதற்கு முதற்காரணமாய் விரிந்தும், அவற் றுக்கு அந்தமுமாகி ஒடுங்கியும் இருக்கும் எ-று.

---

* இச்செய்யுள் சிவப்பிரகாசத்துக்கு மதுரைச் சிவப்பிரகாசர் எழுதிய பொது உ0-ஞ் செய்யுளுரையில் உதகரிக்கப்பட்டுள்ளது.

மயத்யஸ்'ராஜ் ஜகத்விச்வம் மாயா தேந ஸமீரிதா।

"(சுத்தமாயையிலே இருத்தலொழிந்த) பசுக்களையெல்லாம் மயக்குகின்றமையின் (அசுத்த) மாயை எனப்பட்டது" என்று பவுட்கராகமமும்,

தடேதக'சிவம் பீஜம் ஜகத: சித்ரசக்திமத்।
ஸஹகார்யதிகாராந்தஸம்ரோதிவ்யாப்யநச்வரம்॥

"அம்மாயையானது ஒன்றாயும், மயக்குதலால் அசிவமாயும், பிரபஞ்சத்துக்கு உபாதானமாயும் பல்வேறு வகைப்பட்ட சத்தியுள்ளதாயும், சககாரிகளாகிய கன்மங்களின் அதிகாரம் இருக்கும்வரையில் ஆன்மாக்களை மறைப்பதாயும் வியாபகமாயும் நித்தியமாயும் இருக்கின்றது" என்று மிருகேந்திராகமமும் கூறுமாற்றால், ஈண்டு "மலை மயக்குவித்தே" எனக் கூறப்பட்டது.

தத்துவப்பிரகாசம்

மாயாச வஸ்துரூபா மூலம் விச்வஸ்ய நித்யா சா।

"மாயையானது வஸ்துரூபமாய் உலகத்துக்கு மூலகாரணமாய் நித்தியமாய் உள்ளது."

திரோதானசத்தி

(உரு) ஒடுங்கிய பாசத் தொகையொரு மூன்று முறுந்தொழிலிற்
றுடங்கிய போதிற் றுணைமையிற் றோணி புரத்துறையும்
விடங்கெழு கண்டர்தஞ் சத்தியி னேவலின் மற்றதுவும்
படர்ந்தெழு பாசமென் றாவை யூக்கஞ்செய் பான்மையரே.

(இ - ள்) ஒடுங்கிய பாசத் தொகையொரு மூன்றும் - சர்வசங்காரகாலத்தில் (ஆன்மாவோடு) ஒடுங்கிநின்ற பாசம் மூன்றும்; உறுந் தொழிலில் துடங்கிய போதில் துணைமையில் தோணிபுரத்து உறையும் விடம் கெழு கண்டர் தஞ்சத்தியின் - தத்தமக்குரிய தொழில்களில் தொடங்கியபோது ஒப்பில்லாத தோணிபுரத்தின் கண்ணே, எழுந்தருளியிருக்கும் காளகண்டராகிய சிவபெருமானுடைய (அவிநாபூத) சிவசத்தியினது; ஏவலில் அதுவும் படர்ந்து எழுபாசம் என்றார் அவை ஊக்கஞ் செய் பான்மையர் - (ஆன்மாக்

கிளைப்பற்றிய அந்த மும்மலங்களுக்கு அநுகூலமாய்நின்று அவற்றை) ஏவுதலினுல், (உபசாரம்பற்றி) அதனை முதிர்ந்து எழும் திரோதாயி மலம் என்று கூறினர் அப்பாசங்களினின்று நீங்கும் பெரியோர் எ-று.

தாஸாம் மாஹேச்வரீ சக்திஸ்சர்வாநுக்ராஹிகாசிவா।
தர்மாநுவர்த்தநாதேவ பாச இத்யுபசர்யதே॥

"(இயல்பாகவே)சர்வான்மாக்களையும் அநுக்கிரகிக்கும் சிவையாகிய திரோதான சத்தியானது மறைக்கும் மலசத்திகளை அதிஷ்டித்துத் தொடர்ந்திருத்தலாற் பாசம் என உபசாரமாகக் கூறப்படும்" என்றது ஸ்ரீ ருகேந்திராகமம்.

தத்துவப்பிரகாசம்

பாசாநுக்ராஹித்வாத் புருஷதிரோதாயிகா விபோ: சக்தி:।
பாசத்வேநாபிஹிதா: கதிதா: பாசாச்சதுர்விதாஸ்த்வேவம்॥

"(சிவத்தைத் தெரியவொட்டாது) ஆன்மாவை மறைக்குந் (திரோதானஞ்செய்யும்) சிவனுடைய சத்தியானது (ஆணவாதி) பாசங்களைச் செலுத்தியருளுகின்றமையின், அத்திரோதானசத்தியானது பாசமாக உபசரித்துக் கூறப்படும்; இங்ஙனம் பாசம் நால்வகைப் பட்டதாயிற்று."

சிவதத்துவம்

(உ௫) யான்மையிற் றத்துவ மைந்தென்பர் சுத்தம் பரமவற்றுட்
சீர்மலி தெய்வச் சிரபுரங் காண்சிவ தத்துவமென்
றேர்மலி கூந்த லிறைவியுங் கோனு மிருந்திலரேற்
கூர்மலி சிந்தையி னூர்சிவ மாமென்று கூறுவரே.

(இ-ள்) பான்மையில் சுத்தம் தத்துவம் ஐந்து என்பர் - கூறும் பான்மையிற் சுத்ததத்துவம் ஐந்து என்று அறிஞர் கூறுவர்; அவற்றுள் பரம் சீர்மலி தெய்வச் சிரபுரம் காண் சிவதத்துவம் - அவ்வைந்தனுள்ளே மேலாயது சிறப்புவாய்ந்த திவ்ய சிரபுரமாகிய அந்தச் சிவதத்துவமாம்; என்று ஏர்மலி கூந்தல் இறைவியும் கோனும் இருந்திலரேல் - என்று இங்ஙனம் கூறப்படும் சிவதத்து

வமே இடமாக அழகுவாய்ந்த கேசத்தையுடைய இறைவியும் இறைவரும் இருந்திலரேல்; கூர்மலி சிந்தையினர் சிவமாமென்று கூறுவரே-நுண்ணறிவாளர் அத்தத்துவத்தைச் சிவதத்துவமென்று சொல்வாரோ? சொல்லார் எ-று. ஏகாரம் எதிர்மறைப்பொருட்கண் வந்தது.

சிவம் சக்திஞ்ச சாதாக்யமீசம் வித்யாக்யமேவச।

"சிவதத்துவம், சத்திதத்துவம், சாதாக்கியதத்துவம், ஈசுவரதத்துவம், சுத்தவித்தியாதத்துவம் (எனச் சிவதத்துவங்கள் ஐந்து)" என்று பிருகச்சாபாலோபநிடதமும்,

சிவம் சக்திச்ச ஸாதாக்யமீச்வரந்ததநந்தரம்।
சுத்தவித்யாச பஞ்சைதே சுத்ததத்வம் ப்ரகீர்த்திதம்॥

"சிவம், சத்தி, சாதாக்கியம், ஈசுவரம், சுத்தவித்தை என்னும் ஐந்தும் சுத்ததத்துவமெனப்படும்" என்று காலோத்தராகமமும் கூறுகின்றன.

தத்துவப்பிரகாசம்

சுத்தாநி பஞ்சதத்வாந்யாத்யந்தேசு ஸ்மரந்தி சிவதத்வம்।

"சுதத தத்துவங்கள் ஐந்தாகும்; அவற்றுள்ளே தலையாயது சிவதத்துவம் எனக் கூறுவர்."

அத்துவா

(உரு) கூறிய வங்கியுங் கோலு மெனக்கொச்சை வேந்தனெங்கு
மாறில னகி மகிழ்ந்துட னிற்றலின் மற்றதுவும்
வேறின்மை சால விளம்பத் தகுமதன் பால்விளையு
மாறியல் பாமத்து வாதத்து வாகமத் தாய்ந்தனவே.

(இ-ள்) கூறிய அங்கியும் கோலும் எனக் கொச்சைவேந்தன் எங்கும் மாறிலனகி மகிழ்ந்து உடனிற்றலில் - கூறப்பட்ட அக்கினியும் காட்டமும் போலக் கொச்சை நகர்க்கு இறைவராகிய சிவபிரான் யாண்டும் வேறுபாடின்றி மகிழ்ந்து இயைந்து நிற்றலினல்; அதுவும் வேறின்மை சால விளம்பத்தகும் - சிவபெருமானினின்று வேறற்று நிற்றலால் அந்தச் சிவதத்துவமும் சிவனென்று மிருதியும் கூறற்பாலதாகும்; அதன்பால் விளையும் ஆறு இயல்பாம் அத்துவா தத்துவாகமத்து ஆய்ந்தன - (குடிலையினின்றும் வேறாகாத) அந்தச்

சிவதத்துவத்திலே நின்றும் தோன்றும் இயல்பாகிய ஆறு அத்துவாககளும் சத்தியமாகிய வேதாகமத்தில் ஆராயப்பட்டனவாம் எ-று.

அத்வாநம் ஷட்விதம்.ப்ரோக்தம் தத்வாத்வாதி விநாயக।
தத்வாத்வா ப்ரதமம் வித்தி புவநாத்வா த்விதீயகம்।
மந்த்ராத்வா வை த்ருதீயந்து வர்ணாத்வாவை சதுர்த்தகம்।
பதாத்துவா பஞ்சமம் ஜ்ஞேயம் கலாத்வா ஷஷ்டமம் ஸ்ம்ருதம்॥

"ஏ விநாயக! (சிவதத்துவமுதலிய) தத்துவாத்துவாமுதலாக அத்துவா அறுவகைப்படும்; முதலாவது தத்துவாத்துவா எனவும், இரண்டாவது புவனாத்துவா எனவும், மூன்றாவது மந்திராத்துவா எனவும், நான்காவது வர்ணாத்துவா எனவும், ஐந்தாவது பதாத்துவா எனவும், ஆறாவது கலாத்துவா எனவும் அறிதி" என்று சிவபிரான் கூறியதாகச் சுப்பிரபேதாகமம் கூறுகின்றது.

சிவதத்துவமைந்தின்றொழில்

(உசு)‡ஆய்ந்தவத் தத்துவ மைந்தா வனசிவ தத்துவத்தோ
டாய்ந்தவச் சத்தி சதாசிவ மீசனும் வித்தையுமென்
றோர்ந்தறி வித்தினுக் குண்ணெகிழ்ப் பானது சத்தியதிற்
போந்தெழு மங்குர மைம்முகக் கோனென்று போற்றுவரே.

(இ-ள்) ஆய்ந்த அத்தத்துவம் ஐந்தாவன சிவதத்துவத்தோடு ஆய்ந்த அச்சத்தி சதாசிவம் ஈசனும் வித்தையும் என்று ஓர்ந்தறி - ஆராயப்பட்ட அச்சிவதத்துவங்கள் ஐந்தாவன சிவதத்துவத்தோடு சத்திதத்துவமும், சதாசிவதத்துவமும், ஈசுவரதத்துவமும், சுத்தவித்தியாதத்துவமுமாம் என்று ஓர்ந்து அறிக; வித்தினுக்கு உள் நெகிழ்ப்பானது சத்தி - சிவதத்துவமாகிய வித்தின் உள் நெகிழ்ச்சியாயுள்ளது சத்திதத்துவம்; அதிற் போந்து எழும் அங்குரம் ஐம்முகக்கோன் என்று போற்றுவர் - (அந்த வித்தும் நெகிழ்ச்சியும் கூடினவிடத்திலே) உண்டாகும் முளையாயுள்ளார் (ஈசானாதி) ஐம்முகமுடைய (தாண்டவேசுவர சமஷ்டிரூப) சதாசிவப்பெருமான் என்று துதிப்பர் எ-று.

---

‡ இச்செய்யுள் சிவப்பிரகாசத்துக்கு மதுரைச் சிவப்பிரகாசர் எழுதிய பொது கூ-ஞ் செய்யுளுரையில் உதகரிக்கப்பட்டுள்ளது.

தத்துவப்பிரகாசம்

சக்திசதாசிவதத்வே ஈச்வரவித்யாக்யதத்வேச]

"(மேலே கூறப்பட்ட சிவதத்துவத்தோடு) சத்திதத்துவம், சதாசிவதத்துவம், ஈசுவரதத்துவம், சுத்தவித்தியாதத்துவம் எனத் தத்துவம் ஐந்தாம்."

இருவுமது

(உஎ)போற்றும் பரத்திற் பொதிகின்ற ஞானங் கிரியையொத்துத்
தோற்றுஞ் சதாசிவ ஞானஞ் சுருங்கித் தொழின்மிகுத்தல்
சாற்றும் மகேசமெய்ஞ் ஞானந் தழைத்துத் தொழில்குறைதன்
மாற்றரும் வித்தை சிரபுர நாதன் வகுத்தனவே.

(இ - ள்) போற்றும் பரத்தில் பொதிகின்ற ஞானம் கிரியை ஒத்துத் தோற்றும் சதாசிவம் - (அறிஞர்)போற்றும் சிவதத்துவ சத்தி தத்துவங்களிற் பொதிந்த ஞானமும் கிரியையும் சமப்பட்டவிடத்துச் சதாசிவதத்துவம் உண்டாம்; ஞானம் சுருங்கித் தொழின் மிகுத்தல் சாற்றும் மகேசம் - ஞானம் குறைந்து கிரியை மிகுத்துத் தோற்றப் பெறுதல் ஈசுவரதத்துவமாம்; மெய்ஞ்ஞானம் தழைத்துத் தொழில் குறைதல் மாற்றரும் வித்தை-சத்தியஞானமோங்கிக் கிரியை குறைதல் யாற்றுதற்கரிய சுத்தவித்தியாதத்துவமாம்; சிரபுநாதன் வகுத்தனவே -(இவை) சீகாழிநாயகராகிய சிவபிரானால் வகுக்கப்பட்டனவாம் எ-று.

தத்துவப்பிரகாசம்

*ஜ்ஞாநகிரியாக்யசக்த்யோரபகர்ஷோத்கர்ஷயோரபாவேக]
ய: ப்ரசஸ்தம் ப்ராஹுஸ் ஸதாசிவாக்யம் புதாஸ்தத்வம்]
ந்யக்பவதி யத்ரசக்திர் ஜ்ஞாநாக்யோத்ரிக்ததாம் க்ரியா பஜதே]

* இந்தச் சுலோகங்களாற் சத்திதத்துவசிவதத்துவம் இரண்டும் நிஷ்களசிவனார்க்கும், சாதாக்கியதத்துவம் நிஷ்களசகளசதாசிவனார்க்கும், சுத்தவித்தை ஈசுவரம் இரண்டும் சகளமகேசுவரர்க்கும் ஸ்தானங்களாம் என அறியப்படுகின்றது.

ஈச்வரதத்வம் ததிஹ ப்ரோக்தம் சர்வார்த்தகர்த்ருசதா।
ந்யக்பவதி கர்த்ருசக்திர் ஜ்ஞாநாக்யோத்ரேகமச்நுதே யத்ர।
தத் தத்வம் வித்யாக்யம் ப்ரகாசகம் ஜ்ஞாநரூபத்வாத்॥

கலாதத்துவம்

(உ௮) வருத்த வினைப்பயன் றுய்த்தற் கணுக்கட்கு மாயையெனத்
தொகுத்ததி னின்றும் கலைவருந் தோணிப் பிரானருளான்
மிகுத்துட னாகி மறைக்கு மலத்தின் விருத்திதன்னைப்
பகுத்தெழு விக்குங் கிரியையை நுண்ணிதிற் பையநின்றே.

(இ-ள்) தோணிப்பிரான் அருளால் வகுத்த வினைப்பயன் துய்த்தற்கு அணுக்கட்கு மாயை எனத் தொகுத்ததினின்றும் கலைவரும்-சீகாழிச் சிவபெருமான் திருவருளால் வகுக்கப்பட்ட வினைப்போக (பிராரத்தம்) துய்க்குமாறு ஆன்மாக்கள்பொருட்டுச் (சஞ்சிதவினை புத்திதத்துவம் பற்றுக்கோடாகக் கிடக்கப்பெறும்) மாயை எனத் தொகுக்கப்பட்டதினின்றும் கலாதத்துவம் தோ[ன்று]ம்; மிகுத்து உடனாகி மறைக்கும் மலத்தின் விருத்திதனைப் பைய நின்று நுண்ணிதிற் கிரியையை எழுவிக்கும் - அக்கலாதத்துவம் கதித்து உடனாகி (ஆன்மாவின் ஞானேச்சாக்கிரியைகளை) மறைக்கும் மலசத்திகளை ஒதுக்கி மெதுவாகநின்று நுண்ணிதாக (ஆன்மாவின்) கிரியையை எழுப்பும் எ-று.

தத்துவப்பிரகாசம்

பும்சோஜ்ஞ கர்த்ருதார்த்தம் மாயாததஸ்தத்வபஞ்சகம் பவதி।
காலோ நியதிச்ச ததா கலாச வித்யாசராகச்ச।
மாயாதஸ்ததநுகலாமலம் நிருண்மேகஸ்து கலயித்வா।
வ்யம்ஜயதி கர்த்ருசக்திம் கலேதி தேநேஹ கதிதேயம்॥

"ஆன்மாவுக்கு அறிதற்றொழில் எய்தும்பொருட்டு (அசுத்த) மாயையினின்றும் ஐந்து தத்துவங்கள் உண்டாகின்றன; அவை காலம், நியதி, கலை, வித்தை, இராகம் என்பனவாம்; மாயையினின்றும் அதன் கலையானது ஆன்மாக்களின் மலத்தை நீக்கிக் கர்த்திருசக்தியை விளக்குகின்றது; ஆகலின், அது கலை எனப் படும்."

கலாதிமாயாவிகாரங்கள்

(உக) பையர வின்விடம் பாலடி சிற்பெய்து பாத்திரத்திட்
டையமில் லாரயில் விப்பது போல வணுக்கடம்மை
வெய்ய வினைப்பய னின்னமு தாய்விளை வித்தயிற்று
மையுறு சிந்தை மயக்கிய மாயா விகாரங்களே.

(இ - ள்) பையரவின் விடம் பால் அடிசிற் பெய்து பாத்திரத்து இட்டு ஐயமிலார் அயில்விப்பது போல - படத்தையுடைய பாம்பின் விஷத்தை க்ஷீரான்னத்திற் கலந்து அதனைப் பாத்திரத்தில் இட்டுச் சந்தேகமுறமாட்டாத உறவினர் (ஒருவர்க்கு) ஊட்டுவது போல; அணுக்கள் தம்மை வெய்ய வினைப்பயன் இன் அமுதாய் விளைவித்து அயிற்றும் - ஆன்மாக்களுக்குக் கொடிய வினைப்பயன்களாகிய சுகதுக்கங்களை இனிய அமிர்தமாக ஆசையுறச்செய்து துய்ப்பிக்கும்; (அவை யாவை எனின்); மையுறு சிந்தை மயக்கிய மாயாவிகாரங்களே - ஆணவத்திறுற் (பந்திக்கப்பட்ட) ஆன்மாவை மோகிக்கச் செய்த (கலாதி) மாயாவிகாரகாரியங்களாம் எ-று.

மாயாயாஃஸ் சாக்ஷாந்ந மோஹகத்வம் கிந்துகார்யத்வாரேண।

"(அனந்தசிவாசாரியர்) மாயைக்கு நேரே மோகஞ் செய்யும் தன்மை இல்லை; பின் அதன் காரியமாகிய (கலைவித்தை இராகமுதலிய) காரியத்துவாரத்தினுலே மயக்கஞ் செய்வதாகும்" என்று கூறிய தூலைம் அக்கருத்துப்பற்றியேயாம்.

தத்துவப்பிரகாசம்

சாதாரணீ நராணும் காரணமபிசேயமகிலபுவநாநாம்।
நிகிலஜநகர்மகசிதாஸ்வபாவதோ மோஹஸம்ஜநநீ॥

"இந்த மாயையானது சாதாரண்மாய்ச் சமஸ்த புவனங்களிலுள்ள மனிதர்க்கும் காரணமாயிருந்தாலும், சமஸ்த மனிதருடைய கர்மங்களோடு இயல்பாகவே இசைந்து மோகத்தைத் (தன்து காரியங்களாகிய கலாதிதத்துவங்களாற்) பிறப்பிப்பதாயுள்ளது"

வித்தியாதத்துவம்

(௯௦) கார்மரு வும்பொழிற் காழிப் பிரான்கண் ணொழியவொன்றும்
வாரல மாயா விகாரமென் றேயறி வான்கலைப்பாற்
பேரலர் கூர்புந்தி நோக்கப் பிறங்கிருட் செல்சுடர்போ
லேரொளி வித்தைவந் தெய்துங் கலைபோ லிசைந்துநின்றே.

(இ-ள்) கார்மருவும் பொழில் காழிப்பிரான்கண் ஒழிய மாயா விகாரம் ஒன்றும் வாரல என்றே அறி - மேகம் படியும் சோலை சூழ்ந்த சீகாழிப்பெருமானையன்றி மாயாவிகாரகாரியம் ஒன்றும் சேட்டியாது என்று அறிதி; பேரலர் கூர் புந்தி நோக்க - மிகுதியும் பரந்த ஆன்மாவின் கூரிய புத்தியானது அறியுமாறு; கலை இசைந்து நின்று போல் - கலாதத்துவமானது (மாயையினின்று தோன்றி ஆன்மாவின் கிரியையை எழுப்பி) இயைந்து நின்றாற்போல; வான் கலைப்பால் - பெரிய கலாதத்துவத்தினின்று; பிறங்கு இருள் செல் சுடர்போல் ஏர் ஒளி வித்தை வந்தெய்தும் - மிகுந்த அந்தகாரத்திலே (வந்து சிறிது இருளைத் துரக்குமாறு) தோன்றும் தீபம் போலப் (பேரந்தகாரமாகிய ஆணவமலவிருளைச் சிறிது நீக்குமாறு) மிகுந்த பிரகாசம்பொருந்திய வித்தியாதத்துவம் வந்து தோன்றும் எ-று.

காலதத்துவம்

(௯௧) நின்று மிறந்து மெதிர்வதுமாய் நிகழ் பல்பொருளோ
டொன்றிய காலமு மாயைதன் பால்வரு முற்றதனை
னன்று மெதிர்வது மாகிய போக நயந்தணுக்கட்
கென்றுஞ் செலக்கட் டலிற்கா லமாமென் றியம்புவரே.

(இ-ள்) நின்றும் இறந்தும் எதிர்வந்தும் மாய் நிகழ் பல்பொருள் ஒன்றிய காலமும் மாயை தன்பால் வரும் - நிகழ்காலமாய் நிற்றலும், இறந்தகாலமாய்ச் சென்றமையும், எதிர்காலமாய் வருவதுமாக நிகழும் பலபொருள்களோடு இயைந்துநிற்கும் காலமும் மாயையினின்றே தோற்றும்; உற்றதனால் நன்றும் எதிர்வதுமாகிய போகம் நயந்து அணுக்கட்கு என்றும் செலக் கட்டலில் காலமாம் என்று இயம்புவரே - (பொருள்களை எக்காலமும்) நீங்காமற் கூட்டி, அதனால் மிகுதியும் எதிர்காலத்துப்போகங்களை விரும்பி ஆன்மாக்களை அப்போகத்திற் செல்லுமாறு பந்தித்து வருதலால் காலம் என்று பெரியோர் கூறுவர் எ-று.

தத்துவப்பிரகாசம்

நாநாவிதசக்திமயீ ஸா ஜநயதி காலதத்வமேவாதௌ ।
பாவி பவத்பூதமயம் கலயதி ஜகதேஷ காலோத: ॥

"நாநாவிதசக்திமயமாகிய அந்த மாயை காலதத்துவத்தை முதற்கண்ணே பிறப்பிக்கின்றது; இந்தக் காலமும் பின்னர் எதிர்கால நிகழ்கால இறந்தகாலத்துள்ள இந்த ஜகத்தைச் செலுத்துகின்றது."

வித்தியாதத்துவம்

(கஉ.) இயம்புஞ் சுகதுக்க மோகமென் றின்னே யெழுமதியை
வயம்பெற நோக்குழி வாய்க்கும் கருவியதாகும்வித்தை
பயம்பெறு முக்குணப் பான்மையி னல்வந்த பல்பொருளை
நயம்பெற நோக்குமப் புந்தியி னலென்று நாட்டுவரே.

(இ-ள்) இயம்பும் சுகம் துக்கம் மோகம் என்று இன்னே எழுமதியை - சொல்லப்படுகின்ற இன்பம் என்றும், துன்பம் என்றும், மயக்கம் என்றும் இங்ஙனம் (அதுவதுவாக) எழுகின்ற புத்தியை; வயம்பெற நோக்குழி வாய்க்கும் கருவியதாகும் வித்தை - ஆன்மாவானது வெற்றிபெறும்வண்ணம் நோக்கும்போது, அதற்கு உதவியாய் அறிவை விளக்கும் கருவியாக எய்துவது வித்தியாதத்துவம்; பயம்பெறு முக்குணப்பான்மையினல் வந்த பல்பொருளை நயம்பெற அப்புந்தியினல் நோக்கும் என்று நாட்டுவர் - பயன்படும் முக்குணங்களினல் எய்தித் தோன்றும் பல விஷயங்களை இதம்பட அந்த அறிவினல் (என்றும் வித்தியாதத்துவம்) நோக்கும் என்று ஸ்தாபிப்பர் பெரியோர் எ-று.

தத்துவப்பிரகாசம்

புத்திர் யதாஸ்ய போக்யா சுகாதிரூபா ததாபவேத்கரணம் ।
வித்யேயம் கரணம் ஸ்யாத் விஷயக்ரஹணே புநர்புத்தி: ।

"எப்போது ஆன்மாவுக்கு விஷயம் சுக(துக்கமோக) போக்கியரூபமாய் இருக்குமோ, அப்போது புத்தியானது கரணமாயிருக்கும்; விஷயத்தைப் பற்றுதற்கு வித்தியாதத்துவம் கரணமாயிருந்து பின்னர்த்தான் புத்தி (கரணமாயிருந்தது)."

நியதிதத்துவம்

(கூகூ) நாட்டிய மாயையி னின்றுநற் காலத் தொடுநியதி
யீட்டியு வல்வினைக் கெய்தும் பயனியல் பாயவற்றிற்
கூட்டியு மல்லன நீத்துங் குறிப்பால் வரைந்து நிற்குங்
காட்டிய மாயைக் கிரண்டுமல் லால்வழி காண்பரிதே.

(இ-ள்) நாட்டிய மாயையில் நின்று நற்காலத்தொடு நியதி ஈட்டிய வல்வினைக்கெய்தும்-மேலே நாட்டப்பட்ட மாயையிலே நின்று தோன்றிய நல்ல காலதத்துவத்தோடு நியதிதத்துவமும் ஆன்மாக்கள் ஆர்ச்சித்த கன்மங்களைப் (புசிப்பிக்குமாறு) அதன்பால் நின்று தோன்றும்; பயனியல்பாயவற்றிற் கூட்டியும் அல்லன நீத்தும் குறிப்பால் வரைந்துநிற்கும் - கன்மபலமாயவற்றுள்ளே ஆன்மாக்கள் ஆர்ச்சித்த கன்மத்துக்கு வாய்ந்தவற்றை (அவற்றுக்குக்),கூட்டியும் அல்லாதவற்றை ஒழித்தும் (அரசனாணைபோல) குறிப்பினோடு வரைவு செய்துநிற்கும்; காட்டிய மாயைக்கு இரண்டுமல்லால் வழி காண்பு அரிது-(அரூபமாய்ச் சூக்குமமாயுள்ளதென்று) நிரூபித்த மாயைக்குக் காலம் நியதி என்னும் இரண்டுமின்றி அதனை அநுமானித்தற்கு வழி (மற்றொன்று) இல்லை எ-று.

தத்துவப்பிரகாசம்

நியதிர்நியமரூபா மாயாதஸ் ஸாப்யநந்தரம் பவதி।
நியமயதி யேந நிகிலம் தேநேயம் நியதிரித்யுக்தா॥

"நியதிதத்துவமானது நியமனரூபமாயுள்ளது; அது மாயையினின்றும் பின்னர் உண்டாகின்றது; சமஸ்தமும் நியதிதத்துவத்தினால் நியமிக்கப்படுகின்றமையின், இது நியதி என்று கூறப்பட்டது."

இராகதத்துவம்

(கூ௪) காணப் படுவன் வித்தையிற் கண்டுழிக் கண்டதெல்லாம்
பேணித் தனதெனும் பின்றாழ் விழைவு வரைவின்றியே
பூணப் புணர்ப்ப தராகம் பொதுமையிற் றோன்றுமென்பு
வேணிற் புணர்கனுஞ் சுகமஞ் சதாமென் றியைந்தனவே.

(இ - ள்) காணப்படுவன வித்தையிற் கண்டுழி - காணப்படும் விஷயங்களையெல்லாம் வித்தியாதத்துவம் வாயிலாகக் கண்டவிடத்து; கண்டதெல்லாம் பேணித் தனது எனும் பின்றாழ் விழைவு - அங்ஙனம் காணப்பட்டவற்றையெல்லாம் விரும்பித் தனது என்று கூறத்தகும் பின்றங்கும் ஆசையானது; வரைவு இன்றியே பூணப் புணர்ப்பது அராகம் - அளவுபடாது ஆன்மாக்களுக்கு எய்துமாறு சேர்ப்பிப்பது அராகதத்துவம்; பொதுமையில் தோற்றும் என்பர் - இத்தத்துவமானது கலாதத்துவத்திற் கிரியையும வித்தியாதத்துவத்தினால் ஞானமுமாகிய இரண்டும் சமமானவிடத்து உதயமாகாநிற்கும் என்பர்; ஏணில் புணர் கஞ்சுகம் அஞ்சதாம் என்று இயைந்தன - வலிமையோடு புணர்க்கப்பட்ட கஞ்சுகம் ஐந்தாம் என்று கூறத்தக்கனவாகக் (கலை, வித்தை, காலம், நியதி, இராகம் என்னும் தத்துவங்கள் ஆன்மாக்களுக்கு) இயைந்தனவாம் எ - று.

தத்துவப்பிரகாசம்

ராகோபிஷ்வங்காத்மா விஷயச்சேதம் விநைவ ஸாமாந்ய:॥

"சாமானியமாய் விஷயப்பற்று நீங்காதுள்ள ஆன்மாவின் ஆசையே இராகம் என்படும்."

புருஷதத்துவம்; மூலப்பிரகிருதி.

(௯௫)* இயைந்தவத் தத்துவ மைந்தினு மெஞ்சா வகைப்பிணிப்புண்
டயர்ந்துழிப் பின்னைப் புருட னெனப்பெய ராமனுவென்
றுயர்ந்தவ ரோதுவ ரோதுங் கலையினின் றுற்பவிக்குங்
குயந்தரு மூலப் பகுதிய தாமென்று கூறுவரே

(இ - ள்) இயைந்த அத்தத்துவம் அஞ்சினும் எஞ்சாவகை பிணிப்புண்டு அணு அயர்ந்துழி பின்னைப் புருடன் எனப்பெயராம் என்று உயர்ந்தவர் ஓதுவர் - பஞ்சகஞ்சுகமாக இயைந்த காலம் நியதி கலை வித்தை இராகம் என்னும் ஐந்து தத்துவங்களினாலும் குறைவின்றிப் பிணிப்புண்டு விஷயபோகத்தில் ஆன்மாவானது

* இச்செய்யுள் சிவஞானசித்தியார்க்கு நிரம்பவழகியர் எழுதிய உரையுள் சூத்திரத்து ௫௰-ஞ் செய்யுளுரையில் உதாரிக்கப்பட்டுள்ளது.

மயங்குமிடத்த அதற்குப் (பின்) புருடனெனப் பெயராமென்று பெரியோர் கூறுவர்; எனும கலையில் நின்று மயந்தரும் மூலப் பகுதியது உ..பயக்குமாம் என்று கூறுவர் - மேலே கூறிய கலா தத்துவாதத்தினின்று (மயக்கத்தைத் தருகின்ற) சூக்குமமாகிய மூலப் பகுதியானது உற்பவிக்குமாம் என்றும் (அவர்) கூறுவர் எ-று.

தத்துவப்பிரகாசம்

தத்வைரேபி: கலிதோ போக்த்ருத்வதசாயாம் யதா பசுர்நேத:।
புருஷாக்யதாம் ததாயம் லபதே தத்வேஷு கணநாஞ்ச॥

"ஆன்மாவானவன் இந்தக் கலாதிதத்துவங்களோடு கூடி எப்போது போக்தாவாகுந் தசையிற் செலுத்தப்பட்டானோ, அப்போது புருஷன் என்றும் தத்துவங்களுள் ஒன்றான புருஷதத்துவம் என்றும் கணிக்கப் படுகின்றான்"

முக்குணம்; புத்தி.

(௫௯) கூறிய மூலப் பகுதியிற் றோன்றுங் குணமவைதாந்
தேறிய சாத்விக ராசத தாமத மென்றுசெப்பு
மூறிய முக்குண மொத்தவை மூன்று முயர்விழிவுற்
றேறியக் காற்புத்தி தத்துவ மாகுமென் றெண்ணுவரே.

(இ-ள்) கூறிய மூலப்பகுதியிற் குணம் தோன்றும் அவைதாம் தேறிய சாத்துவித ராசத தாமதம் என்று செப்பும் - மேலே கூறிய மூலப்பகுதியிற் குணங்கள் தோன்றும், அவை தெளிந்த சாத்துவிக இராசத தாமச குணங்களென்று (சிவசாஸ்திரங்கள்) கூறும்; ஊறிய முக்குணம் ஒத்து - இங்ஙனம் தோற்றிய முக்குணங்களும் ஒத்து; அவை மூன்றும் உயர்வு இழிவு உற்று (பின்) அம்முக்குணங்களும் வைஷம்யமுற்று; ஏறியக்கால் புத்திதத்துவம் ஆகும் என்று எண்ணுவர் - சாத்துவிககுணம் மேலிடுமிடத்துப் புத்தி தத்துவம் எய்தும் என்று கொள்வர் எ-று.

தத்துவப்பிரகாசம்.

அவ்யக்தாத் குணதத்வம் ப்ரக்யாவ்யாபாரநியமரூபமிஹ।
ஸத்வம்ரஜஸ்தமோபிச கதா: கமோஹா இதயபி॥

"அவ்வியக்தத்தினின்று வியாபார நியமரூபமாய் வெளிப்பட்ட குணதத்துவம் உண்டாகின்றது; இது சுகதுக்க மோகரூபமாகிய சத்துவம், ரஜஸ், தமஸ் என மூத்திறப்படும்."

அகங்காரதத்துவம்

(௧௭) எண்ணிய புத்தியின் முக்குணஞ் சீரியல் பாய்வகுத்து
நண்ணிய வாங்கா ரமூன்றுரு வாமவை நாட்டியபோ
தண்ணிய தைசத வைகா ரியந்திகழ் பூதாதியென்
றண்ணல் வகுத்த முதனூ னெறிவழி யாய்ந்துகொள்ளே.

(இ-ள்) எண்ணிய புத்தியின் முக்குணம் சீர் இயல்பாய் வகுத்து நண்ணிய அகங்காரம் மூன்று உருவாம் - மேலே எய்திய புத்தி தத்துவத்தில் அடங்கிய முக்குணங்களை அழகுற வகுத்து அதனால் எய்திய அகங்காரதத்துவமானது மூன்று சொரூபமாம்; அவை நாட்டியபோது அண்ணிய தைசத வைகாரியம் திகழ் பூதாதி என்று அண்ணல் வகுத்த முதனூல் நெறி வழி ஆய்ந்துகொள்ளே - அவை எவை என்று ஸ்தாபிக்குங்கால், அவை (ஆன்மாக்களைச்) சார்ந்த தைசதாகங்காரமும், வைகாரிகாகங்காரமும், விளங்கும் பூதாதியகங்காரமுமாம் என்று சிவபிரானருளிய ஆகமநெறி முறையானே ஆராய்ந்துகொள்க எ-று.

தத்துவப்பிரகாசம்

சாபி த்ரிவிதா குணத: ப்ரோக்தா கர்மாநுஸாரேண।
ஸ்யாத் த்ரிவிதோ(அ)ஹங்காரோ ஜீவந ஸம்ரம்பகர்வரூபோயம்।
ஸாத்விகாராஜஸதாமஸபேதேந ஸ ஜாயதே புநஸ்த்ரேதா।
ஸசைதஜஸ வைகாரிக பூதாதிகநாமபிஸ் ஸமுச்யதே॥

"கர்மாநுசாரமாக அந்தப் புத்திதத்துவம் முக்குணமுடையதாகக் கூறப்பட்டது; (அதினின்றும் தோன்றிய) அகங்காரம் நான் என்னும் விருத்திரூபமுடையதாய் மூவகைப்படும்; அவை சாத்துவிக ராசத தாமதம் என்னும் முப்பிரகாரமாகித் தைசதாகங்காரம் வைகாரிகாகங்காரம் பூதாதியகங்காரம் என்னும் பெயர்களாற கூறப்படும்."

ஞானேந்திரியம்; கன்மேந்திரியம்; தன்மாத்திரை; பூதாதி.

(௯அ) கொள்ளுமித் தத்துவ முற்கூ றதிற்செவி யாதிமன
மெள்ளிய கன்மேந் திரியம்பின் னீறு மிரண்டினிற்பின்
றெள்ளிய தன்மாத் திரைவருஞ் சேர்ந்ததன் மாத்திரையி
லொள்ளிய பூதங்க ளைந்துக் கு மாமென்ப ருற்பவமே.

(இ-ள்) கொள்ளும் இத்தத்துவ முற்கூறு இதிற் செவியாதி மனம் - (மேலே முக்கூறாகப்) பகுக்கப்பட்ட இந்த அகங்காரதத்துவத்தின் முற்கூறாகிய தைசதவகங்காரத்திலே சுரோத்திராதியும் மனசும் தோன்றும்; பின் எள்ளிய கன்மேந்திரியம் ஈறும் - பின்னுள்ள வைகாரிகாகங்காரமானது நிந்திக்கப்படும் வாக்காதிகளைப் பிறப்பிக்கும்; இரண்டினிற் பின் தெள்ளிய தன்மாத்திரை வரும் - இருவகை அகங்காரத்துக்குப் பின் (பூதாதி அகங்காரத்தினின்று) அநுபவிக்கப்படும் சத்தாதிதன்மாத்திரைகள் தோன்றும்; சேர்ந்த தன்மாத்திரையில் ஒள்ளிய பூதங்கள் ஐந்துக்கும் உற்பவம் ஆம் என்பர் - சேர்ந்து நின்ற சப்தாதி தன்மாத்திரை ஐந்திலேதான் மாசில்லாத ஆகாசாதி பூதங்கள் ஐந்தும் உற்பத்தியாம் என்பர் எ-று.

மனம், ஞானேந்திரியம், கன்மேந்திரியம் யாவை என்பது.

(௯௯) பவந்தரு மம்மனப் பண்பிச்சை பாரிப்ப தாம்விகற்பங்
கவர்ந்தெழு மிந்திரி யங்கள்கண் டோசல்செவி மூக்கொடுநா
வியந்தரு ஞானேந் திரியந்தன் மேந்திரி யங்கள்கைகால்
வயந்தரு வாக்கொடு பாயுரு பத்தமென் றுங்கவையே.

(இ-ள்) பவந்தரும் அம்மனப் பண்பு இச்சை விகற்பம் பாரிப்பதாம் - செனனத்தைக் கொடுக்கும் அம் மனத்தின் குணம் விரும்பிய பொருளிலே விகற்பத்தை உண்டாக்குவதாம்; கவர்ந்து எழும் இந்திரியங்கள் இயந்தரும் செவி தோல் கண் நா மூக்கு ஞானேந்திரியம் - விடயங்களைக் கவர்ந்தெழாநின்ற இந்திரியங்களாகிய ஒலி கேட்கும் சோத்திரம், துவக்கு, சட்சு, சிங்குவை, ஆக்கிராணம் என்னும் ஐந்தும் ஞானேந்திரியமாம்; வயந்தரு கன்மேந்திரியங்கள்

வாக்கொடு கால் கை பாயுரு உபத்தம் என்றுங்கவையே - வலி யுடைய கன்மேந்திரியங்கள் வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபஸ் தம் என்பவைகளாம் எ-று.

தத்துவப்பிரகாசம்

இச்சாரூபம்ஹி மனோவ்யாபாரஸ்தஸ்ய பவதி ஸங்கல்ப:।
புத்யக்ஷாணிச ச்ரோத்ரம்த்வக்த்ருக்ஜிஹ்வாச நாஸாச।
வாக்பாணிபாதபாயூபஸ்தா: கர்மேந்த்ரியாணி ஸ்யு:॥

"இச்சாரூபமாயுள்ளது மனம்; அதின் வியாபாரம் சங்கற்பம்; ஞானேந்திரியங்கள் சுரோத்திரம் துவக்கு சட்சு ஜிஹ்வா ஆக்கிராணம் என்பனவாம்; வாக்கு பாதம் பாணி பாயுரு உபஸ்தம் என்பன கன்மேந்திரியங்களாம்."

அந்தக்கரணம் நான்கு; புறக்கரணம் பத்து

(௩0) ஆங்கவை தம்மின் மனம்புத்தி யாங்காரஞ் சித்தமென்றே
யீங்கிவை யுட்கரணம்மொரு நான்குமற் றேனையவாந்
தீங்கிவை யின்றனை யீரைந்துந் தேரிற் புறக்கரண
மோங்கிய போகத் திவையாங் கருவியென் றுன்னினரே.

(இ-ள்) ஆங்கவை தம்மில் மனம் புத்தி அகங்காரம் சித்தம் ஈங் கிவை ஒரு நான்கும் உட்கரணம் - மேலே போந்த தத்துவங்க ளுள்ளே கணிக்கப்பட்ட மனம் புத்தி அகங்காரம் சித்தம் என்று கூறப்படும் இவைபோர் நான்கும் உட்கரணமாம்; ஏனையவாம் தீங்கு இவையின்றன ஈரைந்தும் தேரிற் புறக்கரணம்-ஏனையவாகிய (உட்கரணத்துக்கு) மாறுபட்ட ஞானேந்திரியம் ஐந்தும் கன்மேந் திரியம் ஐந்துமாகிய பத்தும் புறக்கரணம்; ஓங்கிய போகத்து இவையாங்கருவி என்று உன்னினர் -மிகுந்த போகத்தை (ஆன்மா) துய்த்தற்கு இந்தப் பதினொன்கு தத்துவங்களே கருவியாம் என்று (மேலோர்) எண்ணினர் எ-று.

தத்துவப்பிரகாசம்

அந்த:கரணம் த்ரேதாபுத்திரஹங்காரசேதஸீசேதி।
புத்தீந்த்ரிய கர்மேந்த்ரியபேதாத்பாஹ்யம் புனர்பவேத்தசதா॥

"அந்தக்கரணமானது புத்தி அகங்காரம் * சித்தமும் எனமூன்றும்; ஞானேந்திரிய கன்மேந்திரிய பேதத்தினாற் புறக்கரணம் பின்னர்ப் பத்துவகை ஆகும்."

ஞானேந்திரிய கன்மேந்திரியங்கட்கு விஷயம்

(சுக) உன்னிய சொல்லுச் செவிக்குக்கண் ணுக்குரு வம்பரிச
மன்னிய தோலுக்கு மூக்குக்கு நாற்ற மிரதமென்ப
வின்னிய நாவுக் கியம்ப னடத்தல் கொடைவிடுத்தல்
பன்னிய வானந்தங் கன்மேந் திரியம் பயின்றனவே.

(இ-ள்) செவிக்கு உன்னிய சொல்லு கண்ணுக்கு உருவம் மன்னிய தோலுக்கு பரிசம் மூக்குக்கு நாற்றம் இன்னிய நாவுக்கு இரதம் என்பர் - சோத்திரத்துக்குச் சப்தமும், சட்சுவுக்கு ரூபமும், தோலுக்குப் பரிசமும், ஆக்கிராணத்துக்குக் கந்தமும், சிங்நுவைக்கு இர்தமும் விஷயங்களாம் என்பர்; கன்மேந்திரியம் இயம்பல் நடத்தல் கொடை விடுத்தல் பன்னிய ஆனந்தம் பயின்றன - கன்மேந்திரியங்களுள்ளே வாக்குக்கு வசனமும், பாதத்துக்குக் கமனமும், பாணிக்குக் கொடுத்தலும், பாயுருவிற்கு விசர்க்கமும், உபஸ்தத்துக்கு ஆனந்தமும் விஷயங்களாக இயைந்தனவாம் எ-று.

தத்துவப்பிரகாசம்

க்ராஹ்யாஸ் தேஷாம் சப்தஸ்பர்சௌ ரூபம் ரஸச்ச கந்தச்ச।
இத்யேதேஷாம் விஷயா: க்ரமேண பஞ்சாபி பஞ்சாநாம்।
வசநதாந விஹரணோத்ஸர்க்காநந்தாச்ச கர்மைஷாம்॥
"ஞானேந்திரியம் ஐந்துக்கும் முறையே விஷயம் சப்த பரிச ரூப ரச கந்தம் ஐந்துமாம்; கர்மேந்திரியங்கள் ஐந்துக்கும் விஷயம் வசன தான விகரண உற்சர்க்க ஆனந்தம் என்னும் ஐந்துமாம்."

தன்மாத்திரையினின்று பூதோற்பத்தி

(சுஉ) பயில்வுறு சத்த பரிச முருவ மிரதகந்த
மியல்வுறு தன்மாத் திரையைந்து மாவன மீங்கிவற்றிற்
புயலுறு வான்வளி பொன்று வனல்பொரு நீரொடுமண்
வியலுறு பூதங்க ளைந்து முறையா விளைந்தனவே.

* சித்தமும் என்னும் உம்மையினால் மனசும் கொள்ளப்படும்.

(இ - ள்) இயல்புறு தன்மாத்திரை பயில்வுறு சத்தம் பரிசம் உருவம் இரதம் கந்தம் ஐந்து ஆவன - இயல்பைப் பொருந்திய தன்மாத்திரைகள் பயிலப்படும் சத்தம் பரிசம் உருவம் இரதம் கந்தம் என்னும் ஐந்தாவனவாம்; ஈங்கு இவற்றில் முறையாகப் புயலுறு வான் வளி பொன்ற அனல் பொரு நீரொடு மண் வியலுறு பூதம் ஐந்தும் விளைந்தன - ஈண்டு சத்த முதலிய தன்மாத்திரைகளினின்று முறையானே மேகங்கள் சஞ்சரிக்கும் ஆகாயம் வாயு தேயு அப்பு பிருதிவி என்னும் பெரிய பூதங்கள் ஐந்தும் பிறந்தனவாம் எ-று.

தத்துவப்பிரகாசம்.

தந்மாத்ரேப்ய: கபவந தேஜோம்ப: க்ஷ்மேதி பஞ்சபூதாநி
"தன்மாத்திரைகளினின்று ஆகாயம், வாயு, தேயு, அப்பு, பிருதிவி என்னும் ஐந்து பூதங்களும் (பிறந்தன)."

ஆகாயாதிகளின் குணமும் தொழிலும்

(சங)விளையுங் குணமொன் றுக் கோரொன் று மேற்படும் விண்முதலா
விளையுந் தனையு மிடங்கொடுக் குங்கூட்டும் வெம்மைதரு [ய்
மிளகும் பொறுக்கு மடைவே யிவையுயர் வான்முதலாய்
வளையுங் கடற்புவி தோறுமெஞ் சாமல் வருந்தொழிலே.

(இ - ள்) விளையும் குணம் ஒன்றுக்கு ஓரொன்று விண்முதலாய் மேற்படும் - உண்டாகும் *சத்தமுதலாகிய குணங்கள் ஒன்றுக்கொன்று ஆகாய முதலியவற்றுக்கு மேற்பட்டுவரும்; உயர் வான் முதலாய் இவை அடைவே விளையுந்தனையும் இடங்கொடுக்கும் கூட்டும் வெம்மைதரும் இளகும் பொறுக்கும்-விரிந்த ஆகாய முதலியவாய இவைகளுள் ஆகாயமானது முறையானே வாயு முதலிய நான்குக்கும் அவையுள்ள வரையும் இடம் கொடுக்கும், வாயு அனைத்தையுஞ் சேர்க்கும், தேயு வெம்மைதரும், அப்பு நெகிழ்ச்சி

* ஆகாயத்துக்குச் சத்தகுணம் ஒன்றாகவும், வாயுவுக்குச சத்தம், பரிசம் என இரண்டாகவும், தேயுவுக்குச் சத்தம், பரிசம், ரூபம் என மூன்றாகவும், அப்புவுக்குச சத்தம், பரிசம், ரூபம், ரசம் என நான்காகவும், பிருதிவிக்குச் சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என ஐந்தாகவும் குணங்கள் மேற்பட்டு வரும்.

தரும், பிருதிவி அனைத்தையும் தாங்கும்; கடல்வளையும் புவிதோறும் எஞ்சாமல் வருந்தொழில்-கடல் சூழ்ந்த பூமியெங்கும் குறைவுபடாது அவ்வாகாய முதலிய பூதங்களுக் கெய்தும் தொழில்களாம் எ-று.

தத்துவப்பிரகாசம்

பூதாநி பஞ்ச தேப்யோ பவந்தி தாந்யேக குணவ்ருத்யா।
அவகாச வ்யூஹந பாக சம்க்ரஹண தாரணம் க்ரமாதேஷாம்।
வ்யாபாரா: பூதாநாம் வ்யோமாதீநாம் சமுத்திஷ்டா:॥

"ஐந்து பூதங்களுள்ளே ஆகாயமுதலாக ஒன்றுக்கொன்று குணம் அதிகமாகும்; ஆகாய முதலிய ஐந்துக்கும் இடங்கொடுத்தன்முதலிய தொழில்கள் ஐந்து உள்ளன."

ஆன்மாக்களின் சுகதுக்கம்

(௪௪) தொழிலுறு மாயைத் தொடக்குண்ட சிவனைத் தொக்குநின்றங்
கெழிலுறு மேனி யிருபாற் கரணங் குணமொருமூன்
றொழிவில வாகிச் சுகதுக்க மோக முடன்கொடுத்துக்
கழிபடு துன்பங் களின்பய னாகக் கவர்விக்குமே.

(இ-ள்) தொழிலுறு மாயை தொடக்குண்ட சிவனைத் தொக்கு நின்று அங்கு எழிலுறு மேனி இருபாற் கரணம் குணம் ஒரு மூன்று ஒழிவிலவாகிச் சுகதுக்கம் மோகம் உடன்கொடுத்து-மாயையிற் காரியப்பட்ட கலைமுதலிய தத்துவங்களினாற் றொடக்குண்ட ஆன்மாவைப்பற்றி நின்று, அவ்வான்மாக்களுக்கு ஆங்கே அழகமைந்த தேகம், அந்தக்கரணம் புறக்கரணம் என்னும் இருவகைக் கரணம், முக்குணம் என்னும் இவைகள் இடையறாது இன்ப துன்பமோகங்களை உடனே கொடுத்து; கழிபடுதுன்பங்களின் பயனாகக் கவர்விக்கும்-மிகுந்த துன்பத்தையே பயனாகத் துய்ப்பிக்கின்றன எ-று.

அந்தக்கரணங்களின் இலக்ஷணம்

(௪௫) கவரும் பொருளொன்றைக் கண்முதலாய கரணங் கண்ணுற்
றிவரு மனம்விகற் பிக்குமெஞ் சாதவாங் காரம்புத்தி

பவரும் படியா னெனதெனப் பாவிக்கும் பற்றிமுற்றுந்
தவரு மதிமிகத் தேறுமிப் பாலகன் றன்மையென்றே.

(இ-ள்) கவரும் பொருள் ஒன்றைக் கண்முதலாய கரணம் கண்ணுற்று இவரும் மனம் விகற்பிக்கும்- புசிக்கற்பாலதாகிய பொருளொன்றைக் கண்முதலாகிய ஞானேந்திரியமும் கன்மேந்திரியமும் பற்றி இவரும், அப்போது மனம் விகற்பிக்கும்; எஞ்சாத ஆங்காரம் புத்தி பவரும்படி யான் எனது எனப் பாவிக்கும் பற்றி முற்றுந் தவரும் மதிமிக இப்பால் அதன் தன்மை என்று தேறும்- குறையாத அகங்காரமும் புத்தியும் நெருங்குமாறு (முறையானே அகங்காரமானது) யான் எனது என்று அபிமானிக்கும், விஷயங்களிற்சென்று பற்றி எங்கும் விரியும் (புத்தியானது) இவ்விடத்து அப்பொருளினியல்பு இங்ஙனமாம் என்று நிச்சயிக்கும் எ-று.

உயிரால் அதிஷ்டிக்கப்பட்டு ஐம்பொறிகள் அறிந்த விடயங்களுள் ஒன்றனை இஃது யாதாகற்பாற்றெனச் சித்தம் சிந்தித்தறியும், யான் சிந்தித்தேன் என்று அறியமாட்டாது; மனம் அதனை இஃதின்னதாகற்பாற்று எனவும், அஃதாமோ அன்றோ எனவும் எனச் சங்கற்பவிகற்பஞ் செய்து அறியும், யான் சங்கற்ப விகற்பஞ் செய்தேன் என்று அறியமாட்டாது; அகங்காரம் அதனை இன்னதெனத் துணிவேன் யான் என்று ஒருப்பட்டெழுந்தறியும், யான் ஒருபட்டெழுந்தேன் என்று அறியமாட்டாது; புத்தி அதனை இன்னது இதுவென நிச்சயித்தறியும், யான் நிச்சயித்தேன் என்று அறியமாட்டாது.

ஆன்மவியல்பு

(௬௪) என்றுடன் றேறிய புத்திக் கிசைந்த பொருணயந்து
சென்றுந் திரிந்தும் பயில்வுறுஞ் சேதனன் சேதமின்றி
நின்றுண்டு போகத்தை நீக்கிமற் றுண்பன நேடியின்னே
பொன்றும் பிறக்கும் புனற்சுழிப் பட்டதோர் புல்லெனவே.

(இ-ள்) என்று உடன் தேறிய புத்திக்கு இசைந்த பொருள் நயந்து சென்றும் திரிந்தும் பயில்வுறும் சேதனன்- இருவினைக்கீடாக வந்த விஷயத்தை இஃது இன்னது என நிச்சயித்த புத்திக்கு வாய்ந்த பொருளை விரும்பிப் பக்குவப்பட்ட போகம் துய்க்கச் சென்றும், பக்குவப்படாத போகங்களை அடையமாட்டாது மீண்டு

திரிந்தும் பயிலாநின்ற ஆன்மாவானது; சேதமின்றி நின்று உண்டு போகத்தை நீக்கி உண்பன இன்னே தேடிப் புனற் சுழிப்பட்ட தொர் புல்லெனப பொன்றும் பிறக்கும்-ஆர்ச்சித்த கருமம் குறைவுபடாது பக்குவமான வினைப்பயன்களைத் துய்த்துப் போகத்தை மாற்றி; துய்க்கக் கிடந்தனவாகிய போகங்களை இப்போது தேடிப் போய் நீர்ச்சுழிப்பட்ட புற்போல இறக்கும் பின்பு பிறக்கும் எ-று

ஆன்மாக்களை இளைப்பாற்றல்

(கூஎ) *புல்லிய பாசங்க ளுய்த்திடப் போகம் புமானுகர்ந்து
செல்லிய காலத் துறுஞ்செல்ல னீங்கச் சிரபுரக்கோன்
சொல்லிய மண்முத லாயின மாயையி லேதொகுத்தங்
கெல்லியி னித்திரை போலிளைப் பாற்று மணுக்களையே.

(இ-ள்) புல்லிய பாசங்கள் உய்த்திடப் போகம் புமான் நுகர்ந்து செல்லிய காலத்து உறும் செல்லல் நீங்கச் சிரபுரக்கோன்-இழிவாகிய ஆணவம் மாயை கன்மம் என்னும் பாசங்கள் செலுத்த ஆன்மாக்கள் போகத்தைப் புசித்துச் செல்லுங்காலத்து (அவ்வான்மாக்கள் படும் துன்பத்தையும், அவைகள் பக்குவப்பட்ட கன்மங்களைப் புசித்து முடித்தமையையும், மற்றோர் கன்மம் பாகப்படும் வரையும்) அவ்வான்மாக்களுக்கு எய்தும் துன்பம் நீங்கத் திருவுளங்கொண்டு சீகாழித் தலைவராகிய சிவபிரான்; சொல்லிய மண் முதலாயின மாயையிலே தொகுத்து-சொல்லப்பட்ட பிருதிவிமுதலிய தத்துவங்களையும் கருவி முதலியவற்றையும் மாயையிலே ஒடுக்கி; அங்கு எல்லியில் நித்திரைபோல அணுக்களை இளைப்பாற்றும்-அங்கே இராத்திரியிற் செயப்படும் நித்திரைச்சங்காரம்போல அவ்வான்மாக்களை (மாயையிலே ஒடுக்கி) இளைப்பாற்றுவிப்பர் (எனவே சங்கரிப்பார்) எ-று.

போகஸாதநமாக்ஷிப்ய க்ருத்வா காரண ஸம்ச்ரயம்।
தச்ச ஸாத்மகமாக்ரம்ய விச்ரமாயாவதிஷ்டதே।
பசூநாம் பவகிந்நாநாம் ஸ்வபூத ஹிதாய த:॥

"சம்சாரத்தில் வருத்தமடைந்த ஆன்மாக்களை இளைப்பாற்றுமாறு சர்வசெந்துக்களுக்கும் இன்பம்செய்யும் கர்த்தாவாகிய சிவபிரான்

---

*இச்செய்யுள் சிவப்பிரகாசத்துக்கு மதுரைச் சிவப்பிரகாசர் எழுதிய பொதுவு கூ-ஞ் செய்யுளுரையில் உதாரிக்கப்பட்டுள்ளது.

போகசாதனங்களாகிய தநுகரணாதிகளை ஒடுக்கி ஆன்மாக்களோடு கூட மாயையிலே லயிக்கச்செய்து அதனையும் ஆக்கிரமித்துக்கொண்டிருக்கின்றார்" என்று மிருகேந்திராகமம் கூறுகின்றது.

தத்துவப்பிரகாசம்

சம்ஸாரே கிந்நாநாம் நிகிலாநாம் ப்ராணிநாம் ப்ரபு: க்ருபயா ।
குருதே மஹார்த்த ஸம்ஹ்ருதிமேதேஷாமேவ விச்ராந்த்யை ॥

"சம்சாரத்திலே இளைத்துப்போய சமஸ்தமாகிய இந்த ஆன்மாக்களுக்கும் இளைப்பாறுதல் செய்யும் பொருட்டுச் சிவபிரான் அருளினாலே மகாசங்காரத்தைச் செய்கின்றார்"

முப்பொருள் நித்தியம்

(சஅ) கலைகண்ண தாஞ்சுத்த தத்துவங் காழியர் கோனருளால்
விலைபுல னுஞ்சத்தி யுள்ளே யொடுங்கிடு மேதகு நாற்
றலைகெழு சத்தி சிவதத் துவந்தன்னி லேயொடுங்குங்
கிலைதரு மாயை சிவத்தோ டணுவுக்குங் கேடில்லையே.

(இ-ள்) கலைகண்ணதாம் சுத்ததத்துவம் காழியர்கோன் அருளால் விலைபுலனும் சத்தியுள்ளே ஒடுங்கிடும்—அனைத்துக்கும் ஆதாரமாகிய சுத்ததத்துவமாகிய சுத்தவித்தை ஈசுரம் சாதாக்கியம் என்னும் சிவதத்துவங்களும் சீகாழித்தலைவராகிய சிவபிரான் திருவருளால் விளைநிலமாகிய சத்திதத்துவத்தில் ஒடுங்கும்; மேதகுநால் தலைகெழு சத்தி சிவதத்துவந் தன்னிலே ஒடுங்கும்—மேம்பட்ட வேதாகம விரிவுகளிற் கூறப்பட்ட சத்திதத்துவமானது சிவமாகிய தத்துவம் எனப்படும் சிவதத்துவத்திலே ஒடுங்கும்; கிலைதரு மாயை சிவத்தோடு அணுவுக்கும் கேடில்லை—சேதனாசேதனப் பொருட்கிளைகளைத் தோற்றுவிக்கும் மாயைக்கும் சிவனார்க்கும் ஆன்மாக்களுக்கும் அநித்தியம் என்பதில்லை! எனவே, சிவன் சீவன் *மாயை என்னும் முப்பொருள்களும் நித்தியபதார்த்தங்களாம் என்பது) எ-று.

---

* மாயையைக் கூறவே ஆணவம் கன்மம் என்னும் இரண்டும் உபலக்ஷணையினாற் பெறப்படும்.

த்வாஸுபர்ணு ஸயுஜா ஸகாயா ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே।
தயோரந்ய: பிப்பலம் ஸ்வாத்வத்யநச்நந்நயோ அபிசாகசீதி॥
"பிரியாநண்பினையுடைய இரு பக்ஷிகள் ஒரே சரீரமாகிய மரத்தை யுற்றிருக்கின்றன; அவற்றில் ஒன்று இனிமையாகிய பழத்தை உண்கின்றது; மற்றது உண்ணாது பார்த்துக்கொண்டிருக்கின்றது" என்று இருக்குவேதம் கூறுகின்றது. ஈண்டுக்கூறப்பட்ட இருபக்ஷிகளும் பதி யாகிய சிவபிரானையும், பசு வாகிய ஆன்மாவையும் உணர்த்திய. விருக்ஷமானது மாயாகாரியமாகிய சரீரத்தைச் சுட்டிற்று.

தத்துவப்பிரகாசம்

மாயா புருஷ: சிவ இத்யேதத் த்ரிதயம் மஹார்த்த ஸம்ஹாரே।
அவசிஷ்யதே புநஸ்தத் ப்ரவர்த்ததே பூர்வவத் ஸ்ருஷ்டௌ॥
"மகாசங்காரகாலத்திற் பதியாகிய சிவன், புருஷனாகிய சீவன், மாயை என்னும் மூன்றும் அழியாது சேஷித்து நிற்கின்றன; பின் சிருஷ்டிகாலத்தில் முன்போலப் பிரவர்த்திக்கின்றன."

ஆன்மாக்கள்பொருட்டுத் தத்துவங்கள் தோற்றி ஒடுங்குதல்

(சக)இல்லா தனபிறந் துள்ளன மாயுமென் றிம்மயக்க
நல்லா கமமறி ஞர்க்கில்லை நாட்டிய தத்துவங்க
ளெல்லா மியம்பு முறையே பிறக்கு மிறக்குமுத்த
ரல்லா வணுக்கட் கனுபவ காரண மாகிநின்றே.

(இ-ள்) இல்லாதன பிறந்து உள்ளன மாயும் என்று இம்மயக்கம் நல்லாகம அறிஞர்க்கு இல்லை—இல்லாதனவாகிய பொருள்கள் புதியனவாகத் தோன்றி அநாதியாயுள்ள பொருள்கள் மாயும் என்று கூறும் இந்த மயக்கம் 'நல்ல சிவாகமங்களை அறிந்த அறிவினர்க்கு இல்லை; நாட்டிய தத்துவங்களெல்லாம் இயம்பும் முறையே முத்தர் அல்லா அணுக்கட்கு அநுபவகாரணமாகிப் பிறக்கும்' நின்று இறக்கும்—மேலே ஸ்தாபிக்கப்பட்ட தத்துவங்களனைத்தும் கூறிய முறையானே முத்தரல்லாத ஆன்மாக்கள் போகம் புசித்து ஒழிக்குமாறு காரணமாகி அவை தோன்றி நின்று அழியும் எ-று.

முத்தொழில்

(நுo)ஆகுத லாவது தோற்ற மடக்க மழிதலென்றே
நீகுறி யாயெள்ளு மெண்ணெயு போனினை நீண்டகொம்பிற்
கோகுல மார்பொழிற் கொச்சைப் பிரான்கழல் கூட்டுதற்கே
யாகுமென் றேயணுக் கட்கியல் பாகு மனுபவமே.

(இ-ள்) ஆகுதலாவது தோற்றம் - சிவதத்துவமுதற் பிருதிவியீறாக உற்பவிப்பதே தத்துவங்களின் சிருஷ்டியாம்; அடக்கம் அழிதலென்றே நீ குறியாய்-தோன்றின முறையானே ஒடுங்குதலே சங்காரம் என்றறிதி; எள்ளும் எண்ணெயும் போனினை — எள்ளும் எள்ளுக்குள் எண்ணெய்யும்போலக் காரியப்பட்ட விடத்தும், சங்கரிக்கப்பட்டவிடத்தும் திரிபதார்த்தங்களின் குறையாத முறையை அறிந்துகொள்ளுதி; நீண்ட கொம்பிற் கோகுலமார்பொழிற் கொச்சைப்பிரான் கழல் கூடுதற்கே ஆகும் என்றே அணுக்கட் கியல்பாகும் அநுபவம்-சோலையிலுள்ள மரக்கொம்பர்கள் தோறும் குயில்கள் ஆரவாரிக்கும் கொச்சை என்னும் சீகாழிப்பதிக்கு நாயகராகிய சிவபிரானது திருவடிகளிலே சேர்க்கும் சாயுச்சியம் உண்டாவதற்காக ஆன்மாக்களுக்கு இயல்பா முறையாற் கன்மப்பொசிப்பாகிய அநுபவம் உண்டாம் எ-று.

எண்ணெய்யை உள்ளே அடக்கிய எள்ளைப் போல்வதே சங்காரம் எனவும், எள்ளினின்று தோற்றிய எண்ணெய் போல்வதே சிருஷ்டி எனவும் ஓர்க.

சிவத்தை அடையுமாறு

(நுக) *பவமே வியநெறி பந்திக்கு மீசன் பசுக்கடம்மை
யவமே வியநெறிப் போகங்க ளான்முற்ற வந்நிலையே
தவமே வியநெறி சத்திகண் ணுச்சென் று சார்ந்துபின்னைச்
சிவமே வுவரென்று காண்கொச்சை காவலன் சித்திரப்பே.

(இ-ள்) பவம் மேவிய நெறி பசுக்கடம்மைப் பந்திக்கும் ஈசன்-ஒவ்வோர் பிறவியும் பொருந்தும் முறையை அறிந்து ஆன்மாக்களை

*இச்செய்யுள் சிவப்பிரகாசத்துக்கு மதுரைச் சிவப்பிரகாசர் எழுதிய புரயிரம் உ-ஞ் செய்யுளுரையினும், பொது எ-ஞ் செய்யுளுரையினும், உண்மை கூ-ஞ் செய்யுளுரையினும் உதாரிக்கப்பட்டுள்ளது.

(அவ்வவர்க்கு வாய்ந்த) தநுகரணாதிகள் கொண்டு பந்திக்கும் சிவபெருமான்; அவம் மேவிய நெறிப்போகங்களால் முற்று-அவத்தை அடைந்த நெறியானே அப்பசுக்கள் போகங்களைப் புசித்து முற்றிவிட; அந்நிலையே தவமேவிய நெறிசத்திகண்ணைச்சென்று-அவ் அவசரத்திலே சிவபுண்ணியத் தவத்தினால் எய்தும் ஞானநெறி காரணமாக எய்தும் அருட்சத்தி வாயிலாகச் சார்ந்துபோய்; பின்னைச் சிவமேவுவர் என்று காண் -அவ்வான்மாக்கள் சிவத்தை அடைவார்கள் என்று அறிதி; கொச்சைகாவலன் சித்திரிப்பே-இஃதெல்லாம் கொச்சை எனப் பெயரிய சீகாழித்தலைவராகிய சிவபெருமானுடைய விசித்திர செய்கைகளாம் எ-று.

'எண்பத்துநான்கு நூறாயிரயோனிகளினும் சிறைப்பட்டு மாறி மாறிப் பிறந்து நல்வினை தீவினைகளை ஆர்ச்சித்தும் பாகப்பட்ட வினைகளைப் பொசிப்பதுமாய் உழல்வதே சகலாவஸ்தையாம்.

“பங்கமும் பிரிவுந் தெரிபொருட் பனுவற்படி வழி சென்று சென்றேறிச்” சைவத்தில் எய்தப்பெற்றோர் ஆசாரியார் காட்டும் சிவாகம நெறியிற் சமயதீக்ஷை பெற்று. சரியை நெறியிற்றலைப்பட்டு, அது முற்றிய பின்னர் விசேஷதீக்ஷை பெற்றுக் கிரியை நெறியிற்றலைப்பட்டு, அது முற்றிய பின்னர் யோகநூல் கேட்டு யோகநெறியைத் தலைப்பட்டு இம்மூன்றும் முறையான் முற்றிய பின்னர் நிருவாண தீக்ஷைபெற்று ஞானநெறியைத் தலைப்பட்டு வீடுபேறடைவர் என்றமைபற்றியே ஈண்டு “தவமேவிய நெறி” என்று கூறப்பட்டது.

நிருவாணதீக்ஷையிற் றசகாரியங்களும் தசகாரியங்களை அடக்கிய நின்மலாவஸ்தை ஐந்தும், அவற்றின் பொருளை அடக்கிய பஞ்சாக்ஷரவுண்மையும் பிறவும் உணர்த்தப்படும். அங்ஙனம் ஞானாசாரியர் அறிவுறுத்திய நெறியானே “அவனருளே கண்ணாகக் காணினல்லால்” என்றும் “நின்னருட்கண்ணாலே நோக்காதாரல்லாதாரே” என்றும், “அவனருளாலே யவன்றாள் வணங்கி” என்றும் “மெய்யருளாந் தாயுடன்சென்றுபின் றாதையைக் கூடிப் பின்றாயைமறந் தேயுமதேநிட்டை யென்றா னெழிற்கச்சி யேகம்பனே” என்றும் கூறும் திருவாக்குகளுக்கியையக் கண்ணானது சூரியனது கிரணம் வாயிலாகச் சூரிய விம்பத்தைக்கண்டு உலகம் தோன்

றுது நின்றவாறுபோல, ஆன்மா அருட்சத்தியொளிவாயிலாகச் சிவத்தைச்சார்ந்து மற்றொன்றும் தோன்றப்பெறுது நிற்கும் உண்மை பற்றியே "சிவமேவுவரென்றுகாண்" என்று கூறப்பட்டது.

"சித்தத்துவந்தெமக்கின்பம்பட" என்னும் முதற்செய்யுளிற் பராசரமுனிவரது அஞ்ஞானமாகிய கொச்சையை நீக்கி ஆட்கொண்டமைபோல, இறுதிச்செய்யுளில் ஆன்மாக்களுடைய ஆணவமாகிய கொச்சையை நீக்கி ஆட்கொண்டருளுபவர் அக்கொச்சைபுரப்பெருமானுதலின் "கொச்சைகாவலன் சித்திரிப்பே" என்று ஈண்டும் கூறப்பட்டது.

தத்துவவிளக்க மூலமும் உரையும் முற்றுப் பெற்றன.

திருச்சிற்றம்பலம்.

இந்நூலைப் பார்த்து எழுதுவதற்கு ஏடுதந்த சாலிவாடீசுவரபுரத்து மகா-ா-ாஸ்ரீ பால்வண்ணமுதலியாரவர்களுக்கும், இதனை ஒத்துப் பார்த்தற்குப் பிரதி தந்த பாறுவாதீனத்து மகா-ா-ா-ஸ்ரீ முத்துக்குமாரத்தம்பிரானவர்களுக்கும் நன்றிசெலுத்தும் கடப்பாடுடையேம்.

இந்நூலின் டைட்டில்பேஜ் உள்பட முதற்பத்துப்பாரங்கள் மதுரைச் சூரியோதயப்பிரசினும், ஏனைய பாரங்கள் மதுரை வடக்குமாசிவீதி ஸ்ரீ ராமச்சந்திர விலாசம் அச்சியந்திர சாலையினும் பதிப்பிக்கப்பட்டன.

பிழைதிருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
3	19	திவய	திய
13	14	முதநூல்	முதனூல்
15	10	வஸி	ஸிவ
19	20	மந்த்ரு	மந்த்ர
32	1	தந்தந்த்ர	தந்த்ர
ஏவம் யந்த்ரம் ஸமாலிக்ய ப்ரணவேனைவ வேஷ்டயேத்॥

"யந்திரரூபம் சிவலிங்கமே; எல்லாவற்றுக்கும் அடிப்புறத்திற் பீடத்தை வரைக; இதற்குமேல் முதலாம் சுவரத்தையும், இதற்குமேல் உகாரத்தையும், இதற்குமேல் மகாரத்தையும், இதற்குமேல் விந்துவையும், இதற்குமேல் நாதத்தையும் வரைக; இங்ஙனம் யந்திரம் வரைந்தபின்னர்ப் பிரணவத்தினால் அதனை வளைந்துவிடுக" என்றும்,

தேவதார்த்தம்.

𑌦𑍇𑌵𑌤𑌾𑌰𑍍𑌥𑌂 𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌕𑍂𑌟𑌂 𑌶𑌙𑍍𑌕𑌰𑌭𑌾𑌷𑌿𑌤𑌮𑍍।
𑌸𑌦𑍍𑌯𑍋𑌜𑌾𑌤𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌾𑌮𑍀𑌤𑍍𑌯𑍁𑌪𑌕𑍍𑌰𑌮𑍍𑌯 𑌸𑌦𑌾𑌶𑌿𑌵𑍋𑌮𑍍।
𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌾𑌹 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌃 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌪𑌞𑍍𑌚𑌕𑌵𑌾𑌚𑌕𑌮𑍍।
𑌪𑍍𑌰𑌣𑌵𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌰𑍂𑌪𑌿𑌣𑍍𑌯𑌃 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌾𑌃 𑌪𑌞𑍍𑌚𑍈𑌵 𑌦𑍇𑌵𑌤𑌾𑌃।
𑌏𑌤𑌾 𑌏𑌵 𑌶𑌿𑌵𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌤𑍍𑌵𑍇𑌨𑍋𑌪𑌬𑍃𑌂𑌹𑌿𑌤𑌾𑌃।
𑌶𑌿𑌵𑌸𑍍𑌯 𑌵𑌾𑌚𑌕𑍋 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌃 𑌶𑌿𑌵𑌮𑍂𑌰𑍍𑌤𑍇𑌶𑍍𑌚 𑌵𑌾𑌚𑌕𑌃।
𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌮𑌤𑍋𑌰𑍍𑌭𑍇𑌦𑍋 𑌨𑌾𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 𑌯𑌤𑌃॥

தேவதார்த்தம் ப்ரவக்ஷ்யாமி கூடம் ஶங்கரபாஷிதம்।
ஸத்யோஜாதம் ப்ரபத்யாமீத்யுபக்ரம்ய ஸதாஶிவோம்।
இதி ப்ராஹ ஶ்ருதிஸ் ஸாக்ஷாத் ப்ரஹ்ம பஞ்சகவாசகம்।
ப்ரணவம் ப்ரஹ்மரூபிண்யஸ் ஸூக்ஷ்மாஃ பஞ்சைவ தேவதாஃ।
ஏதா ஏவ ஶிவஸ்யாபி மூர்த்தித்வேனோபப்ரும்ஹிதாஃ।
ஶிவஸ்ய வாசகோ மந்த்ரஶ்ஶிவமூர்த்தேஶ்சவாசகஃ।
மூர்த்திமூர்த்திமதோர் பேதோ நாத்யந்தம் வித்யதே யதஃ॥

"இரகசியமாக எனது தந்தையாரால் உரைக்கப்பட்ட தேவதார்த்தத்தைச் சொல்கின்றேன்; "ஸத்யோஜாதம் ப்ரபத்யாமி" என்று தொடங்கிச் "சதாசிவோம்" என்பதிறுதியாகத் (தைத்திரீய ஆரணியக) சுருதி பஞ்சப்பிரம மந்திரத்தைச் சொல்லிற்று; பிரணவமானது சூக்குமமாகிய ஐந்து தேவதா பிரஹ்மரூபங்களாயுள்ளது; இவை சிவனாது மூர்த்திகளாக உபப்பிருங்கணஞ் செய்யப்படுகின்றன; சிவனாது வாசகமந்திரம் சிவமூர்த்திக்கும் வாசகமே; மூர்த்திக்கும் மூர்த்திமானுக்கும் அத்தியந்தம் பேதம் இல்லை" என்றும்,

𑌈𑌶𑌾𑌨𑌮𑍁𑌕𑍁𑌟𑍋𑌪𑍇𑌤𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌸𑍍𑌯𑌃 𑌪𑍁𑌰𑌾𑌤𑌨𑌃।
𑌅𑌘𑍋𑌰𑌹𑍃𑌦𑌯𑍋 𑌵𑌾𑌮𑌦𑍇𑌵𑌗𑍁𑌹𑍍𑌯𑌃 𑌪𑍍𑌰𑌦𑍇𑌶𑌵𑌾𑌨𑍍।
𑌸𑌦𑍍𑌯𑌪𑌾𑌦𑌶𑍍𑌚 𑌤𑌨𑍍𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌃 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍𑌸𑌕𑌲𑌨𑌿𑌷𑍍𑌕𑌲𑌃।
𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌤𑍍𑌵𑌾𑌦𑌿 𑌷𑌟𑍍𑌶𑌕𑍍𑌤𑌿 𑌷𑌡𑌙𑍍𑌗𑍀𑌕𑍃𑌤𑌵𑌿𑌗𑍍𑌰𑌹𑌃॥

ஈஶாநமுகுடோபேத꞉ புருஷாஸ்ய꞉ புராதந꞉।
அகோரஹ்ருதயோ வாமதேவகுஹ்ய꞉ ப்ரதேஶவாந்।
ஸத்யபாதஶ்ச தந்மூர்த்திஸ் ஸாக்ஷாத் ஸகல்நிஷ்கல꞉।
ஸர்வஜ்ஞத்வாதி ஷட்சக்தி ஷடங்கீக்ருதவிக்ரஹ꞉॥

"ஈசானம் சிரசையும், தற்புருஷம் முகத்தையும், அகோரம் இருதயத்தையும், வாமதேவம் குஹ்யத்தையும், சத்தியோஜாதம் பாதத்தையும் பொருந்திய; இந்தவடிவம் சாக்ஷாத்தாகச் சகள நிஷ்களம்; சர்வஞ்ஞைதமுதலிய ஆறு சத்திகளாகிய (இருதயம் சிரசு சிகை கவசம் நேத்திரம் அஸ்திரம் என்னும்) அங்கங்களால் அமைந்தது (இந்த வடிவம்)" என்றும்,

(𑌶𑌿𑌵𑌸𑍍𑌯 𑌵𑌿𑌗𑍍𑌰𑌹𑌃) 𑌪𑌞𑍍𑌚 𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 [illegible]।
[illegible]।
[illegible]।
𑌈𑌶𑌾𑌨𑌮𑍇𑌵 𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 [illegible]।
[illegible]।
[illegible]।
[illegible]॥

(ஶிவஸ்ய விக்ரஹ:) பஞ்ச வக்த்ராணி ஶ்ருணு ஸாம்ப்ரதம்।
பஞ்சமாதி ஸமாரப்ய ஸத்யோஜாதாத்யநுக்ரமாத்।
ஊர்த்வாந்தமீஶாநாந்தஞ்ச முகபஞ்சகமீரிதம்।
ஈஶாநஸ்யைவ தேவஸ்ய சதுர்வ்யூஹபதே ஸ்திதம்।
புருஷாத்யந்த ஸத்யாந்தம் ப்ரஹ்மரூப சதுஷ்டயம்।
பஞ்சப்ரஹ்ம ஸமஷ்டிஸ் ஸ்யாதீஶாநம் ப்ரஹ்மவிஶ்ருதம்।
புருஷாத்யந்து தத்வ்யஷ்டிஸ் ஸத்யோஜாதாந்தகம் முநே॥

"சிவனது ஐந்து முகங்களைப்பற்றி இப்பொழுது சொல்வேம் கேள்; ஐந்தாவதாகிய சத்தியோஜாதாதிமுதல் ஊர்த்துவமாகிய ஈசானமிறுதியாயுள்ளன சிவனது ஐந்துமுகம்; ஈசானர்க்குத் தற்புருஷமுதற் சத்தியோஜாதமிறுதியாகிய நான்கு பிரஹ்மரூபமும் நான்கு வியூகபதத்தன; ஈசானப்பிரஹ்மம் பஞ்சப்பிரஹ்ம சமஷ்டியாகக் கூறப்படுகின்றது; தற்புருஷமுதற் சத்தியோஜாதமிறுதியாயுள்ளன வியஷ்டிப்பிரஹ்மரூபங்களாம்;" (இதனால் நாதத்தின் தானத்தில் ஈசானப்பிரஹ்மமும், பிந்துமுதலிய நான்கு அக்ஷரஸ்தானங்களில் மற்றைத் தற்புருஷமுதலிய நான்கும் நின்றவாறு யூகிக்க) என்றும் கைலாசசங்கிதை சொல்கின்றது.

பிரபஞ்சார்த்தம்.

𑌓𑌮𑌿𑌤𑍀𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌸𑍃𑌷𑍍𑌟𑌿 𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑌿𑌰𑍍𑌮𑌿𑌤𑌮𑍍।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍇𑌵 𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑌸𑍍𑌯 𑌜𑌗𑌤𑍍𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌃 𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌾।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌚𑍍𑌛𑌕𑍍𑌤𑍇𑌸𑍍𑌤𑌦𑌾 𑌦𑍍𑌵𑌯𑌂 𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌂 𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌃।
𑌶𑌿𑌵𑌶𑌕𑍍𑌤𑌿𑌸𑌮𑌾𑌯𑍋𑌗𑌃 𑌪𑌰𑌮𑍇𑌤𑌿 𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌃।
𑌪𑌰𑌾𑌶𑌕𑍍𑌤𑍇𑌸𑍍𑌸𑌂𑌜𑌾𑌤𑌾 𑌚𑌿𑌚𑍍𑌛𑌕𑍍𑌤𑌿𑌸𑍍𑌤𑌦𑍁𑌦𑍍𑌭𑌵𑌾।
𑌆𑌨𑌨𑍍𑌦𑌶𑌕𑍍𑌤𑌿𑌸𑍍𑌸𑌂𑌜𑌾𑌤𑌾 𑌇𑌚𑍍𑌛𑌾𑌶𑌕𑍍𑌤𑌿𑌸𑍍𑌤𑌦𑍁𑌦𑍍𑌭𑌵𑌾।
𑌜𑍍𑌞𑌾𑌨𑌶𑌕𑍍𑌤𑌿𑌸𑍍𑌤𑌤𑍋 𑌜𑌾𑌤𑌾 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌶𑌕𑍍𑌤𑌿𑌸𑍍𑌤𑌤𑍋𑌽𑌭𑌵𑌤𑍍।
𑌤𑌾𑌭𑍍𑌯𑌃 𑌏𑌵 𑌸𑌂𑌜𑌾𑌤𑌾 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑌾𑌃 𑌕𑌲𑌾𑌃 𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍॥

ஓமிதீதம் ஸர்வமிதி ஶ்ருதிராஹ ஸநாதநீ।
தஸ்மாத்வேதீத்யுபக்ரம்ய ஜகத்ஸிருஷ்டி: ப்ரகீர்த்திதா।
தஸ்யாஶ் ஶ்ருதேஸ்து தாத்பர்யம் வக்ஷ்யாமி ஶ்ருணுதாமிதம்।
ஶிவஶக்தி ஸமாயோக: பரமாத்மேதி நிஶ்சிதம்।
பராஶக்தேஸ்து ஸஞ்ஜாதா சிச்சக்திஸ்து ததுத்பவா।
ஆநந்தசக்திஸ் தஜ்ஜா ஸ்யாதிச்சாசக்திஸ்ததுத்பவா।
ஜ்ஞாநஶக்திஸ்ததோ ஜாதா க்ரியாஶக்திஸ்து பஞ்சமீ।
ஏதாப்ய ஏவ ஸஞ்ஜாதா நிவ்ருத்யாத்யா: கலாஶ்ஶுபே।

"ஈதெல்லாம் ஓம் என்பது" எனத் (தைத்திரீய சிக்ஷாவல்லி எட்டாம் அநுவாகச்)சுருதிகூறிற்று; ஆகலின், இதி(என்பது)தொடங்கி ஜகத்சிருஷ்டி கூறப்படுகின்றது; இந்தச் சுருதியின் தாற்பரியஞ் சொல்கின்றேன் கேட்குதி; சிவமும் சத்தியும் கூடியதே பரமான்மா; பராசத்தியினின்று பிறந்தது சிற்சத்தி; இதினின்று பிறந்தது ஆனந்தசத்தி; இதினின்று பிறந்தது இச்சாசத்தி; இதினின்று பிறந்தது ஞானசத்தி; இதினின்று பிறந்தது ஐந்தாவதாகிய கிரியாசத்தி; இவற்றினின்று நிவிர்த்தியாதிகலைகள் உண்டாயின" என்றும்,

ஶ்ரீதாநந்தஸமுத்பந்நௌ நாதபிந்தூ ப்ரகீர்த்திதௌ।
இச்சாஶக்தேர் மகாரஸ்து ஜ்ஞாநஶக்தேஸ்து பஞ்சம:।
ஸ்வர: க்ரியாஶக்திஜாதோ அகாரஸ்து ஸதாஶிவ:।
ஶிவாதீஶாந உத்பந்நஸ்தஸ்தத்புருஷோத்பவ:।
தஸ்மாதகோரஸ்தஸ்மாத் வாம: ஸத்யோஜாதோ தத:।
ஏதஸ்மாந்மாத்ருகா ஷட்த்ரிம்ஶந்மாத்ரு ஸமுத்பவ:॥

சிதாநந்தஸமுத்பந்நௌ நாதபிந்தூ ப்ரகீர்த்திதௌ।
இச்சாசக்தேர் மகாரஸ்து ஜ்ஞாநஶக்தேஸ்து பஞ்சம:।
ஸ்வர: க்ரியாஶக்தி ஜாதோ அகாரஸ்து ஶதீஶ்வர।
ஶிவாதீஶாந உத்பந்நஸ்ததஸ்தத்புருஷோத்பவ:।
தஸ்மாதகோரஸ்ததோ வாம: ஸத்யோஜாதோத்பவஸ்தத:।
ஏதஸ்மாந்மாத்ருகாதஷ்டத்ரிம்ஶந்மாத்ரு ஸமுத்பவ:॥

"சிதானந்தசக்தியிலிருந்து நாதபிந்துக்களும், இச்சாசத்தியி லிருந்து மகாரமும், ஞானசத்தியிலிருந்து உகாரமும், கிரியாசத்தி யிலிருந்து அகாரமும் பிறந்தன; சிவத்திலிருந்து ஈசானமும், இதி லிருந்து தற்புருஷமும், இதிலிருந்து அகோரமும், இதிலிருந்து வாமதேவமும், இதிலிருந்து சத்தியோசாதமும் உதித்தன; இந்த மாதிருகாக்ஷரங்களிலிருந்து அஷ்டதிரும்சத்மாதிருகலைகள் பிறந் தன" என்றும் அக்கைலாசசங்கிதை கூறுகின்றது.

ஸ்லோ./76 P.

𑌅𑌷𑍍𑌟𑍌 𑌕𑌲𑌾𑌃 𑌸𑌮𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌾 𑌅𑌕𑌾𑌰𑍇 𑌸𑌦𑍍𑌯𑌜𑌾𑌃 𑌶𑌿𑌵𑍇।
𑌉𑌕𑌾𑌰𑍇 𑌵𑌾𑌮𑌰𑍂𑌪𑌿𑌣𑍍𑌯𑌸𑍍𑌤𑍍𑌰𑌯𑍋𑌦𑌶 𑌸𑌮𑍀𑌰𑌿𑌤𑌾𑌃।
𑌅𑌷𑍍𑌟𑌾𑌵𑌘𑍋𑌰𑌰𑍂𑌪𑌿𑌣𑍍𑌯𑍋 𑌮𑌕𑌾𑌰𑍇 𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌃 𑌕𑌲𑌾𑌃।
𑌬𑌿𑌨𑍍𑌦𑍌 𑌚𑌤𑌸𑍍𑌰𑌸𑍍𑌸𑌂𑌭𑍂𑌤𑌾𑌃 𑌕𑌲𑌾𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌗𑍋𑌚𑌰𑌾𑌃।
𑌨𑌾𑌦𑍇 𑌪𑌞𑍍𑌚 𑌸𑌮𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌾𑌃 𑌕𑌲𑌾 𑌈𑌶𑌾𑌨𑌸𑌂𑌭𑌵𑌾𑌃॥

அஷ்டௌ கலாஸ் ஸமாக்யாதா அகாரே ஸத்யஜாஃ ஶிவே।
உகாரேவாமரூபிண்யஸ்த்ரயோதஶ ஸமீரிதாஃ।
அஷ்டாவகோரரூபிண்யோ மகாரே ஸம்ஸ்திதாஃ கலாஃ।
பிந்தௌ சதஸ்ரஸ்ஸம்பூதாஃ கலாஃ புருஷகோசராஃ।
நாதேபஞ்ச ஸமாக்யாதாஃ கலா ஈஶாநஸம்பவாஃ॥

"சிவனாகிய அகாரத்திலே சத்தியோஜாத எண்கலைகளும், உகாரத்திலே வாமதேவ பதின்மூன்று கலைகளும், மகாரத்திலே அகோர எண்கலைகளும், பிந்துவிலே தற்புருஷ நான்கு கலைகளும், நாதத்திலே ஈசாந பஞ்சகலைகளுமாக (முப்பத்தெட்டுக்கலைகளும்) பிறந்தன" என்றும்,

ஸ்லோ. 198 P.

𑌈𑌶𑌾𑌨𑌾𑌚𑍍𑌛𑌾𑌨𑍍𑌤𑍍𑌯𑌤𑍀𑌤𑌾𑌖𑍍𑌯𑌾 𑌕𑌲𑌾𑌜𑌾𑌤𑌾 𑌤𑌤𑍍𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌤𑍍।
𑌉𑌤𑍍𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌕𑌲𑌾 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌘𑍋𑌰𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑌵𑌾।
𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾 𑌚 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌶𑍍𑌚 𑌵𑌾𑌮𑌸𑌦𑍍𑌯𑍋𑌦𑍍𑌭𑌵𑍇 𑌮𑌤𑍇॥

ஈஶாநாச் சாந்த்யதீதாக்யா கலாஜாதாத பூருஷாத்।
உத்பத்யதே ஶாந்திகலா வித்யாகோர ஸமுத்பவா।
ப்ரதிஷ்டாச நிவ்ருத்திஶ்ச வாமஸத்யோத்பவே மதே॥

"ஈசானத்திலிருந்து சாந்தியதீதகலையும், தற்புருஷத்திலிரு ந்து சாந்திகலையும், அகோரத்திலிருந்து வித்தியாகலையும், வாம

சத்தியோஜாதங்களிலிருந்து பிரதிஷ்டாகலை நிவிர்த்திகலைகளும் பிறந்தன'' என்றும்,

𑌇𑌚𑍍𑌛𑌾𑌶𑌕𑍍𑌤𑌿𑌮𑍁𑌖𑌾𑌤𑍍𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌵𑌿𑌭𑍋𑌰𑍍𑌮𑌿𑌥𑍁𑌨𑌪𑌞𑍍𑌚𑌕𑌮𑍍 ।
𑌅𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌾𑌦𑌿 𑌕𑍃𑌤𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌹𑍇𑌤𑍁𑌃 𑌪𑌞𑍍𑌚𑌕𑌮𑌿𑌷𑍍𑌯𑌤𑍇 ।
𑌵𑌾𑌚𑍍𑌯𑌵𑌾𑌚𑌕𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌾𑌨𑍍𑌮𑌿𑌥𑍁𑌨𑌤𑍍𑌵𑌮𑍁𑌪𑍇𑌯𑍁𑌷𑌿 ।
𑌕𑌲𑌾𑌵𑌰𑍍𑌣𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑍇𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌪𑌞𑍍𑌚𑌕𑍇 𑌭𑍂𑌤𑌪𑌞𑍍𑌚𑌕𑌮𑍍 ।
𑌵𑌿𑌯𑌦𑌾𑌦𑌿 𑌕𑍍𑌰𑌮𑌾𑌜𑍍𑌜𑌾𑌤𑌂 𑌤𑌸𑍍𑌮𑌾𑌨𑍍𑌮𑍁𑌨𑌿𑌪𑍁𑌙𑍍𑌗𑌵 ।
𑌆𑌦𑍍𑌯𑌂 𑌮𑌿𑌥𑍁𑌨𑌮𑌾𑌰𑌭𑍍𑌯 𑌪𑌞𑍍𑌚𑌕𑌂 𑌯𑌨𑍍𑌮𑌯𑌂 𑌵𑌿𑌦𑍁𑌃 ॥

ஈசஇச்சக்தி முகத்தோ விபோர் மிதுந பஞ்சகம்।
அநுக்ரஹாதி க்ருத்யாநாம் ஹேதுঃ பஞ்சகமிஷ்யதே।
வாச்யவாசக ஸம்பந்தாந் மிதுநத்வமுபேயுஷி।
கலாவர்ண ஸ்வரூபேஸ்மிந் பஞ்சகே பூதபஞ்சகம்।
வியதாதி க்ரமாதா ஜாதம்பநம் முநிபுங்கவ।
ஆத்யம் மிதுந மாரப்ய பஞ்சகம் யந்மயம் விதுঃ॥

''வியாபகமாகிய ஈசஇச்சத்திவாயிலாக மிதுனபஞ்சகம் எய்துகின்றது; அநுக்கிரகமுதலிய கிருத்தியங்களுக்கு ஹேதுவாயுள்ளது பஞ்சகம் என்று கூறப்படுகின்றது; வாச்சிய வாசக சம்பந்தத்தினால் மிதுனத்துவம் உண்டாகுங்கால், இந்தச் சாந்தியதீத கலைகளுடையவும் நாதபிந்துவர்ணங்களுடையவும் ரூபமாயுள்ள இந்தப் பஞ்சகத்திலே (ஆகாயமுதலிய) பூதபஞ்சகம் முறையே உண்டாயிற்று; முதற்கணுள்ள மிதுனபஞ்சகத்தை எப்பிரகாரமேற்கக் கொள்கின்றார்களோ (அவ்வாறே பூதபஞ்சகமும் கொள்ளற்பாற்று)'' என்றும்,

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

ஶப்தைககுண ஆகாஶஶ்ஶப்த ஸ்பர்ஶ குணோமருத்।
ஶப்த ஸ்பர்ஶ ரூபகுண ப்ராதாநோ வஹ்நி ருச்யதே।
ஶப்த ஸ்ப்ர்ஶ ரூபரஸ குணகம்,ஸலிலம் மதம்।
ஶப்த ஸ்பர்ஶ ரூபரஸ கந்தாட்யாப்ருதிவீ மதா।
வ்யாபகத்வஞ் ச பூதாநாமிதமேவம் ப்ரகீர்த்திதம்।
வ்யாபகத்வம் வைபரீத்யேந கந்தாதி க்ரமதோபவேத்।
பூதபஞ்சக ரூபோயம் ப்ரபஞ்சஃ பரிகீர்த்யதே॥

"ஆகாயம் சப்தகுணம் ஒன்றுடையது; வாயு சப்தம் பரிசம் என்னும் இரு குணமுடையது; தேயு சப்த பரிச ரூபம் என்னும் முக்குணமுடையது; அப்பு சப்த பரிச ரூப ரசம் என்னும் நான்கு குணமுடையது; பிருதிவி சப்த பரிச ரூப ரச கந்தம் என்னும் ஐந்துகுணமுடையது; (ஆகாயாதி) பூதங்களுடைய வியாபகம் இங்ஙனம் கூறப்படுகின்றது; கந்தமுதலியவற்றின் கிரமவியாப்பியத்துவமும் இதற்கு மாறுகவே இருக்கும்; பூதபஞ்சகரூபமாக இந்தப் பிரபஞ்சம் கூறப்படுகின்றது" என்றும் அந்தக் கைலாசசங்கிதை உபதேசிக்கின்றது.

மேலும், சிவதத்துவ வித்தியாதத்துவ ஆன்மதத்துவத்தின் பாற்பட்ட முப்பத்தாறு தத்துவங்களும் பிறவும் பிரணவத்தின் பிரபஞ்சார்த்தத்தில் அடங்கும்.

குருரூபம்.

𑌅𑌷𑍍𑌟𑌤𑍍𑌰𑌿𑌂𑌶𑌤𑍍𑌕𑌲𑌾𑌨𑍍𑌯𑌾𑌸 𑌸𑌾𑌮𑌰𑍍𑌥𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑍈𑌤 𑌭𑌾𑌵𑌨𑌾𑌤𑍍।
𑌸𑌦𑌾𑌶𑌿𑌵𑍋𑌽𑌹𑌮𑍇𑌵𑍇𑌤𑌿 𑌭𑌾𑌵𑌿𑌤𑌾𑌤𑍍𑌮𑌾 𑌗𑌰𑍁𑌶𑍍𑌶𑌿𑌵𑌃।
𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑌦𑍇𑌵𑌤𑌾 𑌯𑌨𑍍𑌤𑍍𑌰𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌤𑍍𑌮𑌾 𑌨𑌹𑌿 𑌸𑌂𑌶𑌯𑌃॥

அஷ்டத்ரிஶத் கலாந்யாஸ ஸாமர்த்யாத்வைத பாவநாத்।
ஸதாஶிவோஹ மேவேதி பாவிதாத்மா குருஶ்ஶிவஃ।
ப்ரபஞ்ச தேவதா யந்த்ர மந்த்ராத்மா நஹி ஸம்ஶயஃ॥

"அஷ்டதிரிம்சத் கலாநியாச சாமர்த்தியத்தினால் எய்திய அத்வைதபாவனையினுற் சதாசிவோஹம் என்று பாவிக்கும் இயல் பினராகிய குருவானவர் பிரபஞ்ச தேவதாயந்திர மந்திரான்மாவா யிருக்கின்ற சிவபிரானே, சந்தேகமில்லை" என்றும்,

சிஷ்யாத்தும ரூபம்.

𑌏𑌵𑌂 𑌵𑌿𑌧𑌾𑌚𑌾𑌰𑍍𑌯 𑌕𑍃𑌪𑌾𑌪𑌾𑌟𑌿𑌤𑌾𑌖𑌿𑌲 𑌬𑌨𑍍𑌧𑌨𑌃|
𑌶𑌿𑌷𑍍𑌯𑌶𑍍𑌶𑌿𑌵𑌪𑌦𑌾𑌸𑌕𑍍𑌤𑍋 𑌗𑍁𑌰𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌾 𑌭𑌵𑌤𑌿 𑌧𑍍𑌰𑍁𑌵𑌮𑍍|
𑌶𑌿𑌵𑌰𑍂𑌪𑍋 𑌗𑍁𑌰𑍁𑌃 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌶𑍍𑌶𑌿𑌷𑍍𑌯𑍋 𑌗𑍁𑌰𑍁𑌵𑌪𑍁𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌃||

ஏவம்விதாசார்ய க்ருபா பாடிதாகிலபந்தந:।
சிஷ்யஸ்சிவ பதாசக்தோ குர்வாத்மா பவதி த்ருவம்।
சிவரூபோ குரு: ப்ரோக்தஸ்சிஷ்யோ குருவபு: ஸ்ம்ருத:॥

"இவ்வியல்பினராகிய சிவாசாரியருடைய அருளினால் நிர்மூலமாக்கப்பட்ட சமஸ்த பந்தத்தையுடையனாகிய சீடன் சிவபெருமானுடைய திருவடியிலே உறுதியோடு பற்றுடையனாய்க் குருவைத் தனக்கு ஆன்மாவாகக்கொண்டவனாகின்றான்; குருவிசுவரூபராகவும், சீடன் குருவின் உடலாகவும் கொள்ளப்படுகின்றான்" என்றும் கைலாசசங்கிதை சொல்கின்றது.

இங்ஙனம் மேலே கூறியவாறு பிரணவத்தின் மந்திரார்த்த முதலிய ஆறும் உபப்பிருங்கணப்பிரகாரம் சுருக்கிக் கூறப்பட்டமை காண்க.

𑌸𑌰𑍍𑌵𑍇 𑌵𑍇𑌦𑌾 𑌯𑌤𑍍𑌪𑌦𑌮𑌾𑌮𑌨𑌨𑍍𑌤𑌿 𑌤𑌪𑌾𑌂𑌸𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾
𑌣𑌿 𑌚 𑌯𑌦𑍍𑌵𑌦𑌨𑍍𑌤𑌿 | 𑌯𑌦𑌿𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑌂 𑌚𑌰𑌨𑍍𑌤𑌿 𑌤
𑌤𑍍𑌤𑍇 𑌪𑌦𑌂 𑌸𑌙𑍍𑌗𑍍𑌰𑌹𑍇𑌣 𑌬𑍍𑌰𑌵𑍀𑌮𑍍𑌯𑍋𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌤𑌤𑍍||

ஸர்வே வேதா யத்பதமாமநந்தி தபாம்ஸி ஸர்வாணிச
யத்வதந்தி । யதிச்சந்தோ ப்ரஹ்மசர்யம் சரந்தி தத்தே
பதம் ஸங்க்ரஹேண ப்ரவீம்யோமித்யேதத்॥

"எல்லா வேதங்களும் எப்பதத்தைச் சொல்கின்றனவோ, ஞானங்களெல்லாம் எப்பதத்தைக் கூறுகின்றனவோ, பிரமசரியத் தொழுகுவோர் எப்பதத்தை விரும்புகின்றனரோ, அப்பதத்தைச் சங்கிரகமாக ஓம் என உனக்குச் சொல்வேன்" என்று கடவல்லி (௨, ௧௫)யும்,

𑌤𑍍𑌵𑌦𑍀𑌯𑌃 𑌪𑍍𑌰𑌣𑌵𑌃 𑌕𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌮𑌦𑍀𑌯𑌃 𑌪𑍍𑌰𑌣𑌵𑌸𑍍𑌤𑌥𑌾।
𑌅𑌕𑌾𑌰𑍋 𑌮𑌕𑌾𑌰𑌾 𑌮𑌦𑍀𑌯𑍇 𑌪𑍍𑌰𑌣𑌵𑍇 𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌃।
𑌉𑌕𑌾𑌰𑌞𑍍𑌚 𑌮𑌕𑌾𑌰𑌞𑍍𑌚 𑌅𑌕𑌾𑌰𑌞𑍍𑌚 𑌕𑍍𑌰𑌮𑍇𑌣 𑌤𑍁।
𑌤𑍍𑌵𑌦𑍀𑌯𑌂 𑌪𑍍𑌰𑌣𑌵𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌤𑍍𑌰𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌪𑍍𑌲𑍁𑌤𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍॥

த்வதீயஃ ப்ரணவஃ கஸ்மிந்மதீயஃ ப்ரணவஸ்ததா।
அகாரோ மகாரா மதீயே ப்ரணவே ஸ்திதாஃ।
உகாரஞ்ச மகாரஞ்ச அகாரஞ்ச க்ரமேணது।
த்வதீயம் ப்ரணவம் வித்தி த்ரிமாத்ரம் ப்லுதமுத்தமம்॥

"ஒரு பிரணவம் (உனக்கு) உரியது; அவ்வாறு (மற்றொன்று) எமக்கு (சிவபிரானுக்கு) உரியது; எமது பிரணவத்தில் அகாரம், உகாரம், மகாரம் உள்ளன; (வர்ணவியத்தியயத்தினால் எய்திய) உகாரம் மகாரம் அகாரம் என்பன கிரமமாக உனது பிரணவமாய் மும்மாத்திரை (அளபெடைப்) புலுதமாம் என்று அறிதி" என்று லிங்கபுராணமும் கூறுகின்றன.

𑌹𑌰𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌹𑌰𑌣𑌾𑌤𑍍 𑌵𑌿𑌭𑍁𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑍁𑌚𑍍𑌯𑌤𑍇।
𑌭𑌗𑌵𑌾𑌨𑍍𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌦𑌵𑌨𑌾𑌦𑍋𑌮𑌿𑌤𑌿 𑌸𑍍𑌮𑍃𑌤𑌃॥

ஹரஸ்ஸர்வஸ்ய ஹரணாத் விபுத்வாத் விஷ்ணுருச்யதே।
பகவாந்ஸர்வவிஜ்ஞாநாதவநாதோமிதி ஸ்ம்ருதஃ॥

"அனைத்தையுஞ் சங்கரிப்பவராதலில் ஹரன் எனவும், வியாபகராதலில் விஷ்ணு எனவும், சர்வஞ்ஞராதலில் பகவான் எனவும், காப்பவராதலில் ஓம் எனவும் திருநாமங்கள் சிவபிரானுக்குப் போந்தன" என்று கூர்மபுராணம் கூறுகின்றது. பிரணவத்தின் தாதுவர்த்தம் எமது பிரஹ்மசூத்திரத்தமிழ்மொழிபெயர்ப்பாகிய சிவாத்துவித சைவபாஷ்யத்து கஅ௯-ம் பக்கத்திற் காண்க.

வியாகிருதியர்த்தம்.

𑌯𑌥𑌾 𑌵𑍍𑌯𑌾𑌹𑍃𑌤𑌂 𑌵𑌾 [illegible] 𑌪𑍍𑌰𑌜𑌾𑌯𑌤𑌿
[illegible] 𑌪𑍍𑌰𑌜𑌾𑌯𑌤𑍇 [illegible] 𑌭𑌵𑌤𑍀𑌤𑌿

𑌸𑍍𑌵𑌰𑌿𑌤𑍍𑌯𑌸𑍍𑌯 𑌶𑌿𑌰𑍋 𑌨𑌾𑌭𑌿𑌰𑍍𑌭𑍁𑌵𑍋 𑌭𑍂𑌃 𑌪𑌾𑌦𑌾 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯
𑌶𑍍𑌚𑌕𑍍𑌷𑍁𑌃| 𑌚𑌕𑍍𑌷𑍁𑌰𑌾𑌯𑌤𑍍𑌤𑌾 𑌹𑌿 𑌪𑍁𑌰𑍁𑌷𑌸𑍍𑌯 𑌮𑌹𑌤𑍀 𑌮𑌾𑌤𑍍𑌰𑌾 𑌚𑌕𑍍𑌷𑍁
𑌷𑌾 𑌹𑍍𑌯𑌯𑌂 𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌶𑍍𑌚𑌰𑌤𑌿 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌵𑍈 𑌚𑌕𑍍𑌷𑍁𑌰𑌕𑍍𑌷𑌿𑌣𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿
𑌤𑍋 𑌹𑌿 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑍇𑌷𑍁 𑌚𑌰𑌤𑍍𑌯𑍇𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍 𑌭𑍂𑌰𑍍𑌭𑍁
𑌵𑌃 𑌸𑍍𑌵𑌰𑌿𑌤𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑍀𑌤𑌾𑌨𑍇𑌨 𑌹𑌿 𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿𑌰𑍍𑌵𑌿𑌶𑍍𑌵𑌾
𑌤𑍍𑌮𑌾 𑌵𑌿𑌶𑍍𑌵𑌚𑌕𑍍𑌷𑍁𑌰𑌿𑌵𑍋𑌪𑌾𑌸𑌿𑌤𑍋 𑌭𑌵𑌤𑌿||

அதா வ்யாஹ்ருதம் வா இதமாஸீத் ஸ ஸத்யம் ப்ராஜாபதிஸ்தபஸ் தப்த்வாநுவ்யாஹரத் பூர்புவஃ ஸ்வரித் யேஷை வாஸ்ய ப்ராஜாபதேஸ் ஸ்தவிஷ்டா தநூர் யா லோகவதீதி ஸ்வரித்யஸ்யாஶ்ஶிரோநாபிர்புவோ பூஃ பாதா ஆதித்யஶ் சக்ஷுஃ । சக்ஷுராயத்தாஹி புருஷஸ்ய மஹதீ மாத்ரா சக்ஷுஷா ஹ்யயம் மாத்ராஶ்சரதி ஸத்யம் வை சக்ஷுரக்ஷிண்யவஸ்திதோ ஹி புருஷஸ் ஸர்வார்த்தேஷு சரத்யேதஸ்மாத் பூர்புவஃ ஸ்வரித்யுபாஸீதாநேந ஹி ப்ரஜாபதிர் விஶ்வாத்மா விஶ்வசக்ஷு ரிவோபாஸிதோ பவதி॥

*“இது (பிரபஞ்சம்) அவ்வியாகிருதமாய் இருந்தது; பின் சத்தியமாய்ப் பிரஜாபதியானவர் பூர் புவர் சுவர் என்னும் சுவரத்தை வியாகரித்தார் (கூறினர்); இந்த மூன்றும் பிரஜாபதியின் (அஃதாவது மேலே கூறியாங்கு பிராணாதித்தியரின்) உலகவடிவமாகிய ஸ்தூல் சரீரம்; சுவர் என்றது அதின் (சரீரத்தின்) தலை; புவர் என்றது (அதின்) நாபி; பூர் என்றது (அதின்) பாதங்கள்; சூரியன் கண்; புருஷனுடைய பெரும் பொருள்கள் கண்வசப்பட்டுள்ளன; கண்ணினாலேதான் விஷயம் அறியப்படுகின்றது; கண் சத்தியம்; கண்ணுட் புருஷன் சர்வார்த்தங்களினும் செல்கின்றான்; ஆகலின், ஒருவன் ஞாயிற்றைப் பூர் புவர் சுவர் என்று வழிபடுவானாக; அதினால் விசுவான்மாவாகிய *பிரஜாபதியானவர் உலகத்தின் நேத்திரம் போல உபாசிக்கப்படுகின்றார்” என்றும்,*

---

* பிரஜாபதி என்றது பிரஜைகளாகிய பசுக்களுக்குப் பதி என்பது பொருள்; அஃதாவது பசுபதி என்பதாம்.

சாவித்திரி.

மைத். ௬: ௭.

𑌤𑌤𑍍𑌸𑌵𑌿𑌤𑍁𑌰𑍍𑌵𑌰𑍇𑌣𑍍𑌯𑌮𑌿𑌤𑍍𑌯𑌸𑍌 𑌵𑌾 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌸𑍍𑌸𑌵𑌿𑌤𑌾 𑌸 𑌵𑌾 𑌏𑌵𑌂 𑌪𑍍𑌰𑌵𑌰𑌣𑍀𑌯 𑌆𑌤𑍍𑌮𑌕𑌾𑌮𑍇𑌨𑍇𑌤𑍍𑌯𑌾𑌹𑍁𑌰𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌾𑌦𑌿𑌨𑍋𑌽𑌥 𑌭𑌰𑍍𑌗𑍋 𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌧𑍀𑌮𑌹𑍀𑌤𑌿 𑌸𑌵𑌿𑌤𑌾 𑌵𑍈 𑌦𑍇𑌵𑌸𑍍𑌤𑌤𑍋 𑌯𑍋𑌽𑌸𑍍𑌯 𑌭𑌰𑍍𑌗𑌾𑌖𑍍𑌯𑌸𑍍𑌤𑌂 𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌾𑌮𑍀𑌤𑍍𑌯𑌾𑌹𑍁𑌰𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌾𑌦𑌿𑌨𑍋𑌽𑌥 𑌧𑌿𑌯𑍋 𑌯𑍋 𑌨𑌃 𑌪𑍍𑌰𑌚𑍋𑌦𑌯𑌾𑌦𑌿𑌤𑌿 𑌬𑍁𑌦𑍍𑌧𑌯𑍋 𑌵𑍈 𑌧𑌿𑌯𑌸𑍍𑌤𑌾 𑌯𑍋𑌽𑌸𑍍𑌮𑌾𑌕𑌂 𑌪𑍍𑌰𑌚𑍋𑌦𑌯𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌾𑌹𑍁𑌰𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌾𑌦𑌿𑌨𑌃 । 𑌅𑌥 𑌭𑌰𑍍𑌗 𑌇𑌤𑌿 𑌯𑍋 𑌹 𑌵𑌾 𑌅𑌮𑍁𑌷𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑍇 𑌨𑌿𑌹𑌿𑌤𑌸𑍍𑌤𑌾𑌰𑌕𑍋𑌽𑌕𑍍𑌷𑌿𑌣𑌿 𑌵𑍈𑌷 𑌭𑌰𑍍𑌗𑌾𑌖𑍍𑌯𑍋 𑌭𑌾𑌭𑌿𑌰𑍍𑌗𑌤𑌿𑌰𑌸𑍍𑌯 𑌹𑍀𑌤𑌿 𑌭𑌰𑍍𑌗𑍋 𑌭𑌰𑍍𑌜𑌯𑌤𑍀𑌤𑌿 𑌵𑍈𑌷 𑌭𑌰𑍍𑌗 𑌇𑌤𑌿 𑌰𑍁𑌦𑍍𑌰𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌾𑌦𑌿𑌨𑌃 ॥

தத்ஸவிதுர்வரேண்யமித்யஸௌ வா ஆதித்யஸ்ஸவிதா ஸ வா ஏவம் ப்ரவரணீய ஆத்மகாமேநேத்யாஹுர் ப்ரஹ்மவாதிநோத பர்கோ தேவஸ்ய தீமஹீதி ஸவிதா வை தேவஸ்ததோ யோஸ்ய பர்காக்யஸ்தம் சிந்தயாமீத்யாஹுர் ப்ரஹ்மவாதிநோத தியோ யோந: ப்ரசோதயாதிதி புத்தயோ வை தியஸ்தா யோஸ்மாகம் ப்ரசோதயாதித்யாஹுர் ப்ரஹ்மவாதிந: । அத பர்கா இதி யோஹ வா அமுஷ்மிந்நாதித்யே நிஹிதஸ்தாரகோக்ஷிணி வைஷ பர்காக்யோ பாபிர்கதிரஸ்யஹீதி பர்கோ பர்ஜயதீதி வைஷ பர்கா இதி ருத்ரோ ப்ரஹ்மவாதிந:॥

“இந்த ஆதித்தியன் சவிதா; அவர் பரமான்விலே பற்றுள்ளவனால் விரும்பற்பாலர்” எனவும், “சவிதா என்பவர் சிவபிரான்; பர்க்கர் எனப்படும் அவரைச் சிந்திக்கின்றேன்” எனவும், “எவர் எங்களுடைய கருத்துகளைச் செலுத்துகின்றாரோ” எனவும் பிரஹ்மவாதிகள் கூறுகின்றனர். (அஃதாவது எவர் எங்களுடைய கருத்துக்களைச் செலுத்துகின்றாரோ, அந்தச் சிவாதித்தியன் (மத்தியில்) விரும்பற்பாலராயுள்ள பர்க்கரைச் (சிவபெருமானைத்) தியானிக்கின்றோம்) என்பது அச்சாவித்திரியின் பொருளாம்.

பர்க்கர் எனப் பெயரிய எவர் இந்த ஆதித்தியனிலேனும், கண்மணியிலுள்ளேனும் இருத்தப்பெற்றாரோ, அவரது கதி ஒளியினுலாமாதலின் பர்க்கர் எனப்படுகின்றார்; அல்லது (சமஸ்த பாவங்களையும், அல்லது உலகங்களையும்) வறுத்தலினுற் பர்க்கர் எனப்படுகின்றார்; அல்லது பர்க்கர் உருத்திரர் (சிவபெருமான்) எனப்படுகின்றார் என்று பிரஹ்மவாதிகள் கூறுகின்றார்கள்.

𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌸𑌵𑌿𑌤𑍁𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑍇 𑌯𑍋 𑌭𑌰𑍍𑌗𑍋 𑌨𑍋 𑌧𑌿𑌯𑌃 𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍।
𑌪𑍍𑌰𑌚𑍋𑌦𑌯𑌾𑌤𑍍 𑌤𑌂 𑌵𑌰𑍇𑌣𑍍𑌯𑌂 𑌧𑍀𑌮𑌹𑍀𑌤𑍍𑌯𑌨𑍍𑌵𑌯𑌃 𑌕𑍍𑌰𑌮𑌃॥

தேவஸ்ய ஸவிதுர்மத்யே யோ பர்க்கோ நோ தியஃ க்ரமாத்।
ப்ரசோதயாத் தம் வரேண்யம் தீமஹீத்யந்வயஃ க்ரமஃ॥

"சிவாதித்தியனுக்கு மத்தியிலே உள்ள எந்தப் பர்க்கர் (சிவபிரான்) எங்கள் கருத்துக்களைச் செலுத்துகின்றாரோ, அந்த விரும்பற்பாலாரயினுரைத் தியானிக்கின்றோம்" என்று யாஜ்ஞவற்கியர் கூறுகின்றார்.

𑌅𑌥 𑌭 𑌇𑌤𑌿 𑌭𑌾𑌸𑌯𑌤𑍀𑌮𑌾𑌁𑌲𑍍𑌲𑍋𑌕𑌾𑌨𑍍 𑌰 𑌇𑌤𑌿 𑌰𑌞𑍍𑌜𑌯
𑌤𑍀𑌮𑌾𑌨𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌗 𑌇𑌤𑌿 𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑍍𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌾𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑍍𑌯𑌸𑍍𑌮𑌾
𑌦𑌿𑌮𑌾𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌭𑌰𑌗𑌤𑍍𑌵𑌾𑌦𑍍𑌭𑌰𑍍𑌗𑌃।

அத ப இதி பாஸயதீமாங்லோகாந்ர இதி ரஞ்ஜயதீ
மாநி பூதாநி க இதி கச்சந்த்யஸ்மிந்நாகச்சந்த்யஸ்மா
திமாஃ ப்ரஜாஸ்தஸ்மாத்பரகத்வாத்பர்க்கஃ।

இந்தச் (சேதனுசேதனப்) பிரபஞ்சங்களையெல்லாம் பிரகாசிப்பித்தலாற் ப (𑌭) எனவும், இந்தச் சேதனப் பிரபஞ்சங்களை இச்சிப்பித்தலால் ர () எனவும், இப்பிரஜைகளெல்லாம் இவரிலே ஒடுங்கி மீளுதலாற் க (𑌗) எனவும் பொருள்படுதலில் அவர் பர்க்கர் எனப்படுவர் என்றும்,

ஈண்டுக் கூறப்பட்ட பிரகாசம் என்படும் பாசனத்திஞல் ஞானசத்தியும், ரஞ்சனத்திஞல் இச்சாசத்தியும், கமனுகமனங்களாற் கிரியாசத்தியும் பெறப்பட்டு ஸகாராந்தமாகியபர்க்கஸ் (𑌭𑌰𑍍𑌗𑌸𑍍) என்பது ஞானேச்சாக்கிரியா சொரூப (சிவஞாது) பராசத்தியின் மேலாயிற்று. சூரியனுக்குப் பொருட்படுத்துங்காற் பர்க்கஸ் என்றது அதின் ஒளிமேலாகின்றது என்றும் மைத்திராயணேபநிடதம் கூறுகின்றது.

𑌤𑌤𑍍𑌸𑌵𑌿𑌤𑍁𑌰𑍍𑌵𑌰𑍇𑌣𑍍𑌯𑌂 𑌭𑌰𑍍𑌗𑍋 𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌧𑍀𑌮𑌹𑌿
𑌧𑌿𑌯𑍋 𑌯𑍋 𑌨𑌃 𑌪𑍍𑌰𑌚𑍋𑌦𑌯𑌾𑌤𑍍।

தத்ஸவிதுர் வரேண்யம் பர்க்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோநஃ ப்ரசோதயாத்।

"ஆகலின் எந்தச் சிவசூரியனுடைய (ஞானேச்சாக்கிரியாசொரூப) பராசத்தியொளியானது எங்கள் (ஞானேச்சாக்கிரியாசொரூப)க் கிருத்துக்களை உளுற்றுகின்றதோ, அந்த விரும்பற்பாலராம் பராசத்தி ஒளிப்பொருளைத் தியானிக்கின்றோம்" என்பது மற்றோர் பொருள். இதற்கிசைந்தே

𑌶𑌿𑌵𑌾𑌰𑍍𑌕𑌶𑌕𑍍𑌤𑌿𑌦𑍀𑌧𑌿𑌤𑍍𑌯𑌾 𑌸𑌮𑌰𑍍𑌥𑍀𑌕𑍃𑌤𑌚𑌿𑌦𑍍𑌦𑍃𑌶𑌾।
𑌶𑌿𑌵𑌂 𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌭𑌿𑌸𑍍𑌸𑌾𑌰𑍍𑌧𑌂 𑌪𑌶𑍍𑌯𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌸𑌦𑌾𑌵𑍃𑌤𑌃॥

ஶிவார்க்கஶக்திதீதித்யா சமர்த்தீக்ருதசித்ருஶா।
ஶிவம் ஶக்த்யாதிபிஸ் ஸார்த்தம் பஶ்யத்யாத்மா சதாவ்ருதிஃ॥

"சிவசூரியனுடைய பராசத்தியொளியினால் வன்மையுடைத்தாக்கப்பட்ட (ஸ்தூலசித்தாகிய) ஆன்மக்கண்ணினால் (உபாசகன்) சத்தியோடுகூடச் சிவத்தைப் பார்க்கின்றான்; பாசம் நீங்கிப் போயிற்று" என்று அக்காயத்திரிப்பொருளைச் 'சிவாகமமும்' வலியுறுத்திற்று.

பிரணவத்தின் வியஷ்டிரூபமாகிய அகார உகார மகாரங்கள் முறையே அக்நிமீளே (𑌅𑌗𑍍𑌨𑌿𑌮𑍀𑌳𑍇) என ஆதி இருக்குவேதத்து ஆதியினும், யோநிஸ்ஸமுத்ரோ பந்துஃ (𑌯𑍋𑌨𑌿𑌸𑍍𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑍋 𑌬𑌂𑌧𑍁𑌃) என மத்தியவேதமாகிய யசுர்வேதத்தினும், ஸமாநம்வரம் (𑌸𑌮𑌾𑌨𑌂 𑌵𑌃) என இறுதிவேதமாகிய சாமத்தில் இறுதியினும் நின்று வேதங்களுக்கெல்லாம் ஓங்காரப்பொருளாயினார் சிவபெருமான் என்று உணர்த்தினாற்போல, பிரணவத்தின் முதல் அக்ஷரமும் இறுதியக்ஷரமுமாகிய ஓகாரமும் மகாரமும் பன்னிரு திருமுறைகளின் முதற்றிருமுறையின் முதலிலே தோடு எனவும், இறுதித் திருமுறையிலே உலகெலாம் எனவும் நின்று பன்னிரு திருமுறைகளுக்கும் ஓங்காரப் பொருளாயினார் சிவபிரான் என்றுணர்த்தின.

பெரிய வடவிருக்ஷத்துக்கு அதன் நுட்பமாகிய வித்து உளதாமாறுபோலச் சமஸ்த சாஸ்திரங்கட்கு மூலமாயும், சர்வசாஸ்திரப் பிரதிபாதிதமாயும், சுப்பிரமணியப்பெருமானால் வினவப்பட்டபோது பிரமாவுக்குப் பொருள் தெரியாது மயக்கம் எய்தச் செய்ததாயும், அப்பெருமானால் வாமதேவமுனிவர்க்கு நேரே உபதேசிக்கப் பெற்றதாயும், காசியில் இறப்பவர்க்கு எமது விசுவநாதப்

பெருமானால் உபதேசிக்கப்படும் தாரகப்பிரஹ்மமாயுமுள்ள பிரணவத்தின் முதல் அக்ஷரமாகிய ஓகாரத்தை, பிரஹ்ம க்ஷத்திரிய வைசியர் என்னும் துவிஜர்களால் நியமமாகக் காலை மாலை யுச்சிகளிலே ஜபிக்கற்பாலதாய் வேதசாரமாயுள்ள காயத்திரியின் முதல் அக்ஷரமாகிய தகரத்தின்மீது "எங்களை வாழ முன்னாள் ஏடு வைகையிலிட்ட பெருவாழ்வாகிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் தாம் திராவிட சுருதியை ஆரம்பித்தபோது ஆரியவேதத்தினின்று வேறுபடாத தமிழ்வேதம் என்றுணர்த்தத் "தோடுடையசெவியன்" என்று தொடங்கிச் சிவஞாது சத்திபாகத்தைச் சிறப்பித்துக் குறிப்பித்தருளினார்.

ஏதத³க்ஷரமேதாஞ்ச ஜபந் வ்யாஹ்ருதிபூர்விகாம்।
ஸந்த்⁴யயோர் வேத³வித்³விப்ரோ வேத³புண்யேந யுஜ்யதே॥

ஏததக்ஷரமேதாஞ்ச ஜபந் வ்யாஹ்ருதிபூர்விகாம்।
ஸந்த்யயோர் வேத்வித்விப்ரோ வேதபுண்யேந யுஜ்யதே॥

"இந்தப் பிரணவத்தையும் மூன்று வியாகிருதி பூருவமாகிய இந்தக் காயத்திரியையும் சந்தியாகாலங்களிலே செபிக்கும் அந்தணன் மூன்று வேதங்களையும் ஓதிய புண்ணியத்தை அடைகின்றான்" என்றது மநுதரும சாஸ்திரம்.

தோடுடையசெவியன்விடையேறியோர்தூவெண்மதிசூடிக்
காடுடையசுடலைப்பொடிபூசியென்னுள்ளங்கவர்கள்வ
னேடுடையமலரான்முனைநாட்பணிந்தேத்தவருள்செய்த
பீடுடையபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே.

—ஞா, திருப்பிரமபுரம்.

தாமென்றுமனந்தளராத்தகுதியராயுலகத்துக்
காமென்றுசரண்புகுந்தார்தமைக்காக்குங்கருணையினான்
ஓமென்றுமறைபயில்வார்பிரமபுரத்துறைகின்ற
காமன்றனுடலெரியக்கனல்சேர்ந்தகண்ணானே.

—ஞா, திருப்பிரமபுரம்.

தையலார்மையலிலேதாழ்ந்துவிழக்கடவேனைப்
பையவேகொடுபோந்துபாசமெனுந்தாழுருவி
யுய்யுநெறிகாட்டுவித்திட்டோங்காரத்துட்பொருளை
யையனெனக்கருளியவாறார்பெறுவாரச்சோவே.

—திருவாசகம்.

(உ௬) பஞ்சாக்ஷரம்.

நமஶ்ஶிவாய ச ஶிவதராய ச|

நமஸ்ஸிவாய ச ஸிவதராய ச।

—யசுர்வேதம், ச. ரு. அ. க

ஸர்வலிங்காய நம꞉ | ஶிவாய நம꞉ | ஶிவலிங்காய நம꞉||

ஸர்வலிங்காயநம꞉ । ஸிவாயநம꞉ । ஸிவலிங்காயநம꞉॥

—தைத்திரீய ஆரணியகம், கo. கசு. ரு-ச

என்று யசுர்வேத மத்தியிலுள்ள உருத்திராத்தியாயத்து மத்தியினும், தைத்திரீய ஆரணியகத்திலும் ஸ்தூல சூக்கும பஞ்சாக்ஷரங்கள் முறையே கூறப்பட்டுள்ளன.

திரயீ எனப்படும் இருக்கு யசுர் சாமம் என்பவற்றின் நடுக்கணுள்ளது யசுர்வேதம்; யசுர்வேத ஏழுகாண்டங்களின் நடுக்கணுள்ளது நான்காவது கண்டத்து ஐந்தாம் பிரசினமாகிய ஸ்ரீருத்திரம்; இந்த ஸ்ரீருத்திரத்துள்ளது நம꞉ஸோமாயச என்னும் அநுவாகத்திலுள்ள நம꞉ ஸிவாய என்பது; இதின் மத்தியிலுள்ளது சிவனார் திருநாமமாகிய சிவ என்னும் ஈரெழுத்தாம்; ஆகலின், வேதபுருஷனுக்குக் கண்ணுயது உருத்திரம்; கண்மணியாயது பஞ்சாக்ஷரம்; மணியாடு பாவையாயுள்ளது சிவனார் திருநாமமாகிய சிவ என்னும் ஈரெழுத்தாம்.

ஓமித்யேகாக்ஷரே மந்த்ரே ஸ்தித꞉ ஸர்வகத꞉ ஶிவ꞉|
யாநி மந்த்ராணி ஸூக்ஷ்மாணி மாலாமந்த்ராண்யஶேஷத꞉|
ஓம் நம꞉ ஶிவாயேதி ஸம்ஸ்திதாநி யதாக்ரமம்|
மந்த்ரஷடக்ஷரே ஸூக்ஷ்மே பஞ்சப்ரஹ்ம தநு꞉ ஶிவ꞉|
வாச்யவாசகஸம்பந்த꞉ ஸ்திதஸ்ஸாக்ஷாத் ஸ்வபாவத꞉||

ஓமித்யேகாக்ஷரே மந்த்ரே ஸ்திதஸ்ஸர்வகதஸ்ஸிவ꞉।
யாநிமந்த்ராணி ஸூக்ஷ்மாணி மாலாமந்த்ராண்யஸேஷத꞉।

ஓம்நமஶ்ஶிவாயேதி ஸம்ஸ்திதாநி யதாக்ரமம்।
மந்த்ரே ஷடக்ஷரே ஸூக்ஷ்மே பஞ்சப்ரஹ்மதநுஶ்ஶிவ:।
வாச்ய வாசக பாவேந ஸ்திதஸ்ஸாக்ஷாத் ஸ்வபாவத:॥

—தருமசங்கிதை.

ஶிவஜ்ஞாநாநி யாவந்தி வித்யாஸ்தாநாநி யாநி ச।
ஷடக்ஷரஸ்ய ஸூத்ரஸ்ய தாநி பாஷ்யம் ஸமாஸத:।
கிந்தஸ்ய பஹுபிர்மந்த்ரை: ஶாஸ்த்ரைர்வா பஹுவிஸ்தரை:।
யஸ்யோம்நமஶ்ஶிவாயேதி மந்த்ரோயம் ஹ்ருதி ஸம்ஸ்தித:।
தேநாதீதம் ஶ்ருதம் தேந க்ருதம் ஸர்வமநுஷ்டிதம்।
யோ நமஸ்காரஸம்யுக்தம் ஶிவாயேத்யக்ஷரத்ரயம்।
ஜிஹ்வாக்ரே வர்த்ததே யஸ்ய ஸபலம் தஸ்ய ஜீவிதம்।
அந்த்யஜோ வாதமோ வாபி மூர்க்கோ வா பண்டிதோபி வா।
பஞ்சாக்ஷரஜபே நிஷ்டோ முச்யதே பாபபஞ்ஜராத்॥

வாயுசங்கிதை, உ. [illegible] : [illegible]

ஶிவஜ்ஞாநாநி யாவந்தி வித்யாஸ்தாநாநி யாநிச।
ஷடக்ஷரஸ்ய ஸூத்ரஸ்ய தாநி பாஷ்யம் ஸமாஸத:।
கிந்தஸ்ய பஹுபிர்மந்த்ரைஶ்ஶாஸ்த்ரைர்வா பஹுவிஸ்தரை:।
யஸ்யோம்நமஶ்ஶிவாயேதி மந்த்ரோயம் ஹ்ருதி ஸம்ஸ்தித:।
தேநாதீதம் ஶ்ருதந் தேந க்ருதம் ஸர்வமநுஷ்டிதம்।
நமஸ்காராதி ஸம்யுக்தம் ஶிவாயேத்யக்ஷரத்ரயம்।
ஜிஹ்வாக்ரே வர்த்ததே யஸ்ய ஸபலந்தஸ்ய ஜீவிதம்।
அந்த்யஜோ வாதமோ வாபி மூர்க்கோ வா பண்டிதோபி வா।
பஞ்சாக்ஷரஜபே நிஷ்டோ முச்யதே பாபபஞ்ஜராத்॥

—வாயுசங்கிதை.

"ஏகாக்ஷரமாகிய ஓங்காரமந்திரத்திலே சர்வவியாபகராகிய சிவபிரான் உளராயினர்; மாலாமந்திரமுதலிய அனைத்திற்கும் எந்தச் சூக்குமமந்திரங்களும் ஓம் நமஃ ஶிவாய என்பதிலே கிரமமாய் நிலைத்தனவோ, சூக்குமமாகிய அந்த ஷடக்ஷரமந்திரத்திற் பஞ்சப்பிரமதநுவுடைய சிவபிரான் வாச்சியவாசகசம்பந்தத்தினால்

இயல்பாய் நேரே உள்ளாயினர்; எவ்வளவு சிவஞானங்களுண்டோ, எவ்வளவு வித்தியாஸ்தானங்களுண்டோ, அவையெல்லாம் ஷடக்ஷரமாகிய சூத்திரத்தின் பாஷ்யமாம்; எவனுடைய இதயத்திலே இந்தப் பஞ்சாக்ஷரம் இருக்கின்றதோ, அவனால் எல்லாம் படிக்கப்பட்டன; எல்லாம் கேட்கப்பட்டன; எல்லாஞ் செய்யப்பட்டன; எல்லாம் அநுஷ்டிக்கப்பட்டன; அவனுக்கு அநேக மந்திரங்களினால் எய்தும் (பயன்) என்! அநேக விஸ்தாரமாகிய சாஸ்திரங்களினாற் (பயன்) என்! நகார மகாரத்தை முதற்கண்ணே கொண்ட சிவாய என்னும் மூன்று அக்ஷரமும் எவனது நாநுனியின்கண் இருக்கின்றதோ, அவனது செனனம் சாபல்லியமாம்; சண்டாளனேனும், அதமனேனும், மூடனேனும், பண்டிதனேனும் ஆகுக, பஞ்சாக்ஷர செபநிஷ்டனேயாமாயின் அவன் பாவபஞ்சரத்தினின்று வீடுறுகின்றான்" என்று சிவபுராண தருமசங்கிதை வாயுசங்கிதை முதலியவைகளிற் கூறப்பட்டிருக்கின்றது.

𑌶𑌿𑌕𑌾𑌰𑌂 𑌶𑌿𑌵𑌰𑍂𑌪𑌂 𑌚 𑌵𑌕𑌾𑌰𑌂 𑌶𑌕𑍍𑌤𑌿𑌰𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ।
𑌯𑌕𑌾𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌰𑍂𑌪𑌂 𑌚 𑌨𑌕𑌾𑌰𑌂 𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌿𑌰𑍂𑌪𑌕𑌮𑍍 ।
𑌮𑌕𑌾𑌰𑌂 𑌮𑌲𑌰𑍂𑌪𑌂 𑌚 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 𑌪𑌞𑍍𑌚𑌵𑌰𑍍𑌣𑌕𑌃 ॥

ஶிகாரம் ஶிவரூபந்து வகாரம் ஶக்திருச்யதே।
யகாரமாத்மரூபஞ்ச நகாரம் க்ராந்திரூபகம்।
மகாரம் மலரூபஞ்ச இத்யர்த்தః பஞ்சவர்ணகః॥

என்னும் சிவாகமசுலோகத்துப் பஞ்சாக்ஷரப்பொருள்,

தேங்குபேரொளியாகியசிவமெனுநாமு
நீங்குறுதநஞ்சத்தியாய்நிலைபெறுமருளுந்
தூங்குமாவியுந்தொடர்திரோதாயியும்பிந்த
வோங்குமாணவத்தெறுழ்வலியுரைப்பரிதணங்கே

என்னும் திருவானைக்காப்புராணச் செய்யுளால் அறிக.

காதலாகிக்கசிந்துகண்ணீர்மல்கி
யோதுவார்தமைநன்னெறிக்குய்ப்பது
வேதநான்கினுமெய்ப்பொருளாவது
நாதன்னாமநமச்சிவாயவே.

—ஞா, நமச்சிவாயத்திருப்பதிகம்.

விண்ணுறவடுக்கியவிறகின்வெவ்வழ
லுண்ணியபுகிலவையொன்றுமில்லையாம்
பண்ணியவுலகினிற்பயின்றபாவத்தை
நண்ணிநின்றறுப்பதுநமச்சிவாயவே.

—நா, நமச்சிவாயத்திருப்பதிகம்.

மற்றுப்பற்றெனக்கின்றிநின்றிருப்பாதமேமனம்பாவித்தேன்
பெற்றலும்பிறந்தேனினிப்பிறவாததன்மைவந்தெய்தினேன்
கற்றவர்தொழுதேத்துஞ்சீர்க்கறையூரிற்பாண்டிக்கொடுமுடி
நற்றவாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே.

—சு, திருப்பாண்டிக்கொடுமுடி.

நமச்சிவாயவாழ்கநாதன்றாள்வாழ்க.

—திருவாசகம்.

கருவாய்க்கிடந்துன்கழலேநினையுங்கருத்துடையே
னுருவாய்த்தெரிந்துன்றனாமம்பயின்றேனுன்றருளாற்
றிருவாய்ப்பொலியச்சிவாயநமவென்றுநீறணிந்தேன்
றருவாய்சிவகதிநீபாதிரிப்புலியூரரனே.

—நா, திருப்பாதிரிப்புலியூர்.

அல்லலாகவைம்பூதங்களாட்டினும்
வல்லவாறுசிவாயநமவென்று
நல்லமேவியநாதனடிதொழ
வெல்லவந்தவினைப்பகைவீடுமே.

—நா, திருநல்லம்.

துன்பாயமாசார்துவராயபோர்வையார்
புன்பேச்சுக்கேளாதேபுண்ணியனைநண்ணுமின்க
ணன்பாற்சிவாயவெனுநாலூர்மயானத்தே
யின்பாயிருந்தானையேத்துவார்க்கின்பமே.

—ஞா, திருநாலூர்மயானம்.

விண்ணினார்பணிந்தேத்தவியப்புறு
மண்ணினார்மறவாதுசிவாயவென்
றெண்ணினார்க்கிடமாவெழில்வானகம்
பண்ணினாவர்பாலைத்துறையரே.

—நா, திருப்பாலைத்துறை.

இலங்கையாக்கர்தமக்கிறையேயிடந்துகயிலையெடுக்கின்றயே
புலன்கள்கெட்டவுடன்பாடினனேபொறிகள்கெடவுடன்பாடினனே
யிலங்கியமேனியிராவணனேயெய்துபெயருமிராவணனே
கலந்தருள்பெற்றதுமாவசியேக்கீர்தியனடிமாவசியே.

—ஞா, திருப்பிரமபுரம்

ஏதுமொன்றுமறிவிலராயினு
மோதியஞ்செழுத்தும்முணர்வார்கட்குப்
பேதமின்றியவரவருள்ளத்தே
மாதுந்தாமுமகிழ்வர்மாற்பேறரே.

—நா, திருமாற்பேறு.

நானேயோதவஞ்செய்தேன்சிவாயநமவெனப்பெற்றேன்
றேனாயின்னமுதமுமாய்த்தித்திக்குஞ்சிவபெருமான்
றானேவந்தெனதுள்ளம்புகுந்தடியேற்கருள்செய்தா
னூனாருமுயிர்வாழ்க்கையொறுத்தன்றேவெறுத்திடவே.

—திருவாசகம்.

வாயிலேவைக்குமளவின்மருந்தாகித்
தீயபிறவிநோய்தீர்க்குமே—தூயவே
கம்பெருமாதேவியொடுமன்னுகயிலாயத்
தெம்பெருமானோரஞ்செழுத்து.

அஞ்செழுத்துங்கண்டீரருமறைகளாவனவு
மஞ்செழுத்துங்கற்கவணித்தாகு—நஞ்சவித்த
காளத்தியார்யார்க்குங்காண்டற்கரிதாய்ப்போய்
நீளத்தேநின்றநெறி.

—பதினோராந்திருமுறை.

(உச) சிவபெருமான் ஒருவரே வழிபடற்பாலர்.

ஜ்யாயிஷ்டத்வாந்நம் ப்ரஜ்ஞாயிதத்வம் ஸர்வமிதம் ப்ரஹ்ம விஷ்ணுருத்ரேந்த்ராஸ் ஸம்ப்ரஸூயந்தே ! ஸர்வாணி சேந்த்ரியாணி ஸஹ பூதைர்ந காரணம் காரணாநாம் த்யாதா

[illegible]
[illegible]
[illegible]

த்யாயீதேஸாநம் ப்ரத்யாயிதவ்யம் ஸர்வமிதம் ப்ரஹ்மவிஷ்ணு ருத்ரேந்த்ராஸ்தே ஸம்ப்ர ஸூயந்தே । ஸர்வாணி சேந்திரியாணி ஸஹ பூதைர்நகாரணம் காரணாநாம் தாதா த்யாதா காரணந்து த்யேய்ஸ்ஸர்வைஸ்வர்ய ஸம்பந்நஸ்ஸர்வேஸ்வரஸ் ஸம்புராகாஸ மத்யே ....: ஸிவ ஏகோ த்யேயஸ்ஸிவங்கரஸ் ஸர்வமந்யத் பரித்யஜ்ய ஸமாப்தாதர்வஸிகா ॥

"மிகவும் தியானிக்கற்பாலராகிய (மகாசதாசிவ நிருத்த) ஈசானரைத் தியானிக்க; அந்தப் பிரம விஷ்ணு உருத்திர மகேசுவரர்களாகிய இவரெல்லாம் உற்பத்தியாகின்றனர்; எல்லா இந்திரியங்களும் பூதங்களுடனே கூட (உற்பத்தியாகின்றன); காரணமும் காரணங்களைப் படைத்தோரும் கருதினோருமாகியவர் (உற்பவித்த)லின்று, காரணமும் சர்வைசுவரிய சம்பன்னரும் சர்வேசுவரரும் சம்புவுமாகியவரே (பரம்வியோமமாகிய திருத்திற்றம்பல) ஆகாயமத்தியிற் றியானிக்கற்பாலர்" என்று அதர்வசிகை முதற்கண்ணே ஏனைத் தேவர்களைத் தவிர்த்தும், "மற்றெல்லாம் விடுத்து இன்பஞ் செய்பவராகிய சிவ்பிரான் ஒருவரே தியானிக்கற்பாலர் அதர்வசிகை முற்றிற்று" என்று பின்னரும் அவர்களைத் தவிர்த்தது.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

யஸ்மாத் ஸர்வமிதம் ப்ரஹ்மவிஷ்ணு ருத்ரேந்த்ரபூர்வகம்।
ஸஹபூதேந்த்ரியைஸ் ஸர்வைஃ ப்ரதமம் ஸம்ப்ரஸூயதே।
காரணஞ்ச யோ தாதா த்யாதா பரமகாரணம்।
நஸம்ப்ரஸூயதே யஸ்மாத் குதஸ்சநகதாசந।
ஸர்வைஸ்வர்யேண ஸம்பந்நோ நாம்நா ஸர்வேஸ்வரஃ ஸ்வயம்।
ஸர்வைர் முமுக்ஷுபிர் த்யேயஸ் ஸம்புராகாஸமத்யகஃ॥

"எவரிடத்திருந்து பிரமவிஷ்ணு ருத்திர மகேசுவர பூருவமான இவைகளைத்தும் சகல பூதேந்திரியங்களுடனே கூட ஆதியிற் பிறந்தனவோ, காரணங்களைப் படைத்தோரும் கருதினோரும் பரமகாரணருமாகிய எவர் (சமஷ்டிரூபசதாசிவர்) யாண்டாயினும் எப்போதாயினும் பிறிதொன்றினின்று பிறக்கின்றிலரோ, சர்வைசுவரிய பரிபூரணராகியும் தாமே பெயரினாற் சர்வேசுவரராகிய சம்புவாகியும் இருக்கின்றாரோ, அவரே தகராகாயமத்தியில் இருப்பவராக முமுட்சுக்களாற் றியானிக்கற்பாலர்" என்றது உபப்பிருங்கணம்.

வையநீரேற்றானுமலருறையுநான்முகனு
மையன்மாரிருவர்க்குமளப்பரிதாலவன்பெருமை
தையலார்பாட்டோவாச்சாய்க்காட்டெம்பெருமானைத்
தெய்வமாப்பேணாதார்தெளிவுடைமைதேறோமே.

—ஞா, திருச்சாய்க்காடு.

மாற்றேனெழுத்தஞ்சுமென்றனாவின்
மறவேன்றிருவருள்கள்வஞ்சநெஞ்சி
னேற்றேன்பிறதெய்வமெண்ணாநாயே
னெம்பெருமான்றிருவடியேயெண்ணினல்லால்
மேற்றான்நீசெய்வனகள்செய்யக்கண்டு
வேதனைக்கேயிடங்கொடுத்துநாளுநாளு
மாற்றேனடியேனையஞ்சலென்னா
யாவடுதண்டுறையுறையுமமரரேறே.

—நா, திருவாவடுதுறை.

(உரு) சிவபெருமானுக்கு ஒப்பாரும் இல்லை மிக்காரும் இல்லை.

ந தத்ஸமஶ்சாப்யதிகஶ்ச த்ருஶ்யதே।

ந தத்ஸமஶ் சாப்யதிஶ்ச த்ருஶ்யதே।

"அவருக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை" என்று சுவேதாசுவதர (சு. அ) மும்,

397D

தத்ஸமோ நாஸ்தி லோகேஷு ந வரோ நாபர: க்வசித்|

தத்ஸமோ நாஸ்தி லோகேஷு ந வரோ நாபர: க்வசித்|

"உலகங்களில் அவர்க்கு ஒப்பாரும் இல்லை, பிறரொருவர் அவர்க்கு மிக்காராகவும் இல்லை" என்று ஸ்காந்ததக்ஷகாண்டமும் கூறுகின்றன; இவ்வுண்மை பிரஹ்மசூத்திரசைவபாஷ்யத்து "அன்னியப்பிரதிஷேதாதிகரண"த்(௩-௨-௧, ௩-௫௦)திலும், "பராதிகரண"த் (௩-௨-௪—௩-௨-௮) திலும் நிரூபணஞ் செய்யப்பட்டிருக்கின்றது.

கற்றானைக்கங்கைவார்சடையான்றன்னைக்
காவிரிசூழ்வலஞ்சுழியுங்கருதினானை
யற்றார்க்குமலந்தார்க்குமருள்செய்வானை
யாரூரும்புகுவானையறிந்தோமன்றே
மற்றொருந்தன்னொப்பாரில்லாதானை
வானவர்களெப்பொழுதும்வணங்கியேத்தப்
பெற்றானைப்பெரும்பற்றப்புலியூரானைப்
பேசாதநாளெல்லாம்பிறவாநாளே.

—நா, கோயில்.

வானத்திளந்திங்கட்கண்ணிதன்னை
வளர்சடைமேல்வைத்துகந்தமைந்தர்போலு
மூவொத்தவேலொன்றுடையார்போலு
மொளிநீறுபூசுமொருவர்போலுந்
தானத்தின்முப்பொழுதுந்தாமேபோலுந்
தம்மிற்பிறர்பெரியாரில்லைபோலு
மேனத்தெயிறிலங்கப்பூண்டார்போலு
மின்னம்பர்த்தான்றோன்றியீசனாரே.

—நா, திருவின்னம்பர்.

(௨௯) அந்தரியாமி.

𑌯𑌃 𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌾𑌂 𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍 𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌾 𑌅𑌨𑍍𑌤𑌰𑍋 𑌯𑌮𑌯𑌤𑍍𑌯𑍇𑌷 𑌤 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌯𑌾𑌮𑍍𑌯𑌮𑍃𑌤𑌃 । 𑌯𑍋𑌽𑌪𑍍𑌸𑍁 𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌨𑌦𑍍𑌭𑍍𑌯𑍋𑌽𑌨𑍍𑌤𑌰𑍋 𑌯𑌮𑌯𑌤𑍍𑌯𑍇𑌷 𑌤 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌯𑌾𑌮𑍍𑌯𑌮𑍃𑌤𑌃 । 𑌯𑍋 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑍇 𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌦𑌨𑍍𑌤𑌰𑍋 𑌯𑌮𑌯𑌤𑍍𑌯𑍇𑌷 𑌤 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌯𑌾𑌮𑍍𑌯𑌮𑍃𑌤𑌃 ॥

யஃ ப்ருதிவ்யாம் திஷ்டந் ப்ருதிவ்யா அந்தரோ யமயத்யேஷத ஆத்மாந்தர்யாம்யம்ருதஃ | யொப்ஸு திஷ்டந் யோபோந்தரோ யமயத்யேஷத ஆத்மாந்தர்யாம்யம்ருதஃ | யோ விஞ்ஞாநே திஷ்டந்யோ விஜ்ஞாந மந்தரோ யமயத்யேஷத ஆத்மாந்தர்யாம்யம்ருதஃ ||

“எவர் பூமியினும் அப்புவினும் (அங்ஙனம் ஏனையவற்றினும்) இருந்து அந்தப் பூமி அப்பு முதலியவற்றையும் உண்ணின்று செலுத்துகின்றாரோ, எவர் ஆன்மாவிலிருந்து அதனை உண்ணின்று செலுத்துகின்றாரோ அவர் உன் அந்தரியாமியாகிய பரமான்மா எனப்படும் சிவனாம்” என்று பிருகதாரணியோபநிடதம் (௫. ௭. ௩, ௪, ௨௨) கூறுமாற்றால் சமஸ்த சேதநாசேதனப் பிரபஞ்சங்களையும் உண்ணின்று உஞற்றுபவர் சிவபெருமானேயாம்.

ஆட்டுவித்தாலாரொருவராடாதாரே
அடக்குவித்தாலாரொருவரடங்காதாரே
ஓட்டுவித்தாலாரொருவரோடாதாரே
உருகுவித்தாலாரொருவருருகாதாரே
பாட்டுவித்தாலாரொருவர்பாடாதாரே
பணிவித்தாலாரொருவர்பணியாதாரே
காட்டுவித்தாலாரொருவர்காணாதாரே
காண்பாரார்கண்ணுதலாய்க்காட்டாக்காலே.

—நா. தனித்திருத்தாண்டகம்.

(உஎ) சிவபெருமானைச் சரணடைதல்வேண்டும்.

தம் ஹ தேவமாத்மபுத்திப்ரகாஶம் முமுக்ஷுர்வை
ஶரணமஹம் ப்ரபத்யே।

தம்ஹ தேவமாத்மபுத்தி ப்ரகாஶம் முமுக்ஷுர்வை,
ஶரணமஹம் ப்ரபத்யே।

"ஆன்மசிற்சத்தியைப் பிரகாசஞ் செய்கின்றவராகிய அந்தச் சிவபெருமானை மோக்ஷவிச்சையுடையேனுகிய நான் சரணடைகின்றேன்" என்றது சுவேதாசுவதரம் (சா. கஅ)

படைக்கலமாகவுன்னுமத்தெழுத்தஞ்செனுவிற்கொண்டே
னிடைக்கலமல்லேனெழுபிறப்புமுனக்காட்செய்கின்றேன்
றுடைக்கினும்போகேன்றொழுதுவணங்கித்தூநீறணிந்துன்
னடைக்கலங்கண்டாயணிதில்லைச்சிற்றம்பலத்தரனே.

—நா, கோயில்.

(உஅ) சிவபெருமானை எக்காலமும் தியானித்தல் வேண்டும்.

ஸ்தித்வா ஶயாநஶ்ச தயா ஸஞ்சரஞ்ஜாஸநாஸிகஃ।
ஸர்வதா ஸர்வகார்யேஷு ஶிவமேவ ஹ்ருதி ஸ்மரேத்।
ஸர்வஜ்ஞோபி ச யோகம் ஶிவஸ்ய பரமாத்மநஃ।
தே வை நிர்தூய ஸகலாந் பாவௌகாந் ஶங்கரப்ரியாஃ।
இஹைவ வாஞ்சிதம் ஸர்வம் தேஹாந்தே ச ஶிவாஜ்ஞயா।
ஸாரூப்யம் யாந்தி தேவஸ்ய பரமாநந்த நிர்பராஃ।

ஸ்திதஶ்ஶயாநஶ்ச ததா ஸஞ்சரந்நாஸநாந்விதஃ।
ஸர்வதா ஸர்வ கார்யேஷு ஶிவமேவ ஹ்ருதி ஸ்மரந்
ஏவம் சரந்தி யே யோகம் ஶிவஸ்ய பரமாத்மநஃ।
தே ஸ்வ நிர்தக்த ஸகல பாபௌகாஶ்ஶங்கரப்ரியாஃ।
லபந்தே வாஞ்சிதம் ஸர்வம் தேஹாந்தே ச ஶிவாஜ்ஞயா।
ஸாரூப்யம் யாந்தி தேவஸ்ய பரமாநந்த நிர்ப்பரம்॥

“எவர்கள் நிற்கும்போதும், படுக்கும்போதும், நடக்கும் போதும், இருக்கும்போதும், மற்றெக்காரியங்களைச் செய்யும்போதும் இதயத்திற் சிவபிரானைச் சிந்தித்துக்கொண்டு இங்ஙனம் இந்த யோகத்தை அனுஷ்டிக்கின்றார்களோ, அவர்கள் சகலபாவங்களும் தகிக்கப்பெற்றவராய்ச் சிவபிரானுக்கு அன்பர்களாய்ச் சர்வாபீஷ்டங்களுமுடையவர்களாய்த் தேகாந்தத்திற் சிவபிரான் ஆஞ்ஞையினால் அவரது பரமானந்த நிறைவையுடைய சிவசாரூப்பியத்தை அடைகின்றார்கள்” என்று உபதேசகாண்டம் கூறுகின்றது.

அரவினொடாமையும்பூண்டுவெந்துகில்வேங்கையதளும்
விரவுந்திருமுடிதன்மேல்வெண்டிங்கள்சூடிவிரும்பிப்
பரவுந்தனிக்கடம்பூரிற்பைங்கண்வெள்ளேற்றண்ணல்பாத
மிரவும்பகலும்பணியவின்பநமக்கதுவாமே.

—ஞா, திருக்கடம்பூர்.

பனைக்கைமும்மதவேழமுரித்தவ
னினைப்பவர்மனங்கோயிலாக்கொண்டவ
னனைத்தும்வேடமாமம்பலக்கூத்தனைத்
தினைத்தனைப்பொழுதும்மறந்துய்வனோ.

—நா, கோயில்.

அழுக்குமெய்கொடுன்றிருவடியடைந்தே
னதுவுநான்படப்பாலதொன்றானாற்
பிழுக்கைவாரியும்பால்கொள்வரடிகேள்
பிழைப்பனாகிலும்திருவடிப்பிழையேன்
வழுக்கிவீழினுந்திருப்பெயரல்லால்
மற்றுநானறியேன்மறுமாற்ற
மொழுக்கவென்கணுக்கொருமருந்துரையா
யொற்றியூரெனுமூருறைவானே.

—சு, திருவொற்றியூர்.

நின்றாலுமிருந்தாலுங்கிடந்தாலுநடந்தாலு
மென்றாலுந்துயின்றாலும்விழித்தாலுமிமைத்தாலு
மன்றாடுமலர்ப்பாதமொருகாலுமறவாமை
குன்றாதவுணர்வுடையார்தொண்டராங்குணமிக்கார்.

—பெரியபுராணம்.

---

(௨௬) ஒருவர் தியானரூபம் எங்ஙனமோ அங்ஙனமே சிவபிரான் அந்தத்தியானவுருவாய் நின்று அருளுவர்.

𑌯𑍇𑌨 𑌯𑍇𑌨𑌹𑌿 𑌰𑍂𑌪𑍇𑌣 𑌸𑌾𑌧𑌕𑌃 𑌸𑌂𑌸𑍍𑌮𑌰𑍇𑌤𑍍𑌤𑌦𑌾।
𑌤𑌸𑍍𑌯 𑌤𑌨𑍍𑌮𑌯𑌤𑌾𑌂 𑌯𑌾𑌤𑌿 𑌚𑌿𑌨𑍍𑌤𑌾𑌮𑌣𑌿𑌰𑌿𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑌃॥

யேந யேநஹி ரூபேண ஸாதகஸ்ஸம்ஸ்மரேத்ததா।
தஸ்ய தந்மயதாம் யாதி சிந்தாமணிரிவேஶ்வர:॥

"சாதகன் எந்தெந்த ரூபமாகத் தியானிக்கின்றானோ, அப்போது அவனுக்குச் சிந்தாமணிபோலச் சிவபெருமான் அந்தந்த ரூபத்தை அடைகின்றார்" என்று சர்வசுரோதசாரசங்கிரகம் கூறுகின்றது.

ஆருருவவுள்குவாருள்ளத்துள்ளே
யவ்வுருவாய்நிற்கின்றவருளுந்தோன்றும்
வாருருவப்பூண்முலைநன்மங்கைதன்னை
மகிழ்ந்தொருபால்வைத்துகந்தவடிவுந்தோன்றும்
நீருருவக்கடலிலங்கையரக்கர்கோனை
நெறுநெறெனவடர்த்திட்டநிலையுந்தோன்றும்
போருருவக்கூற்றுதைத்தபொற்புத்தோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே.

—நா, திருப்பூவணம்.

(௩௦) சிவபெருமான் நாராயணனை ஓர் சத்தியாகத் தம்து ஓர் பாகத்திற்கொண்டமை.

𑌏𑌕𑍈𑌵 𑌶𑌕𑍍𑌤𑌿𑌃 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌯 𑌭𑌿𑌨𑍍𑌨𑌾 𑌚𑌤𑍁𑌰𑍍𑌧𑌾
𑌵𑌿𑌨𑌿𑌯𑍋𑌗𑌕𑌾𑌲𑍇 । 𑌭𑍋𑌗𑍇 𑌭𑌵𑌾𑌨𑍀 𑌪𑍁𑌰𑍁𑌷𑍇
𑌷𑍁 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 𑌕𑍋𑌪𑍇 𑌤𑍁 𑌕𑌾𑌳𑍀 𑌸𑌮𑌰𑍇 𑌤𑍁 𑌦𑍁𑌰𑍍𑌗𑌾 ॥

ஏகைவ ஶக்திஃ பரமேஶ்வரஸ்ய பிந்நா சதுர்த்தா விநி யோககாலே । போகே பவாநீ புருஷேஷு விஷ்ணுஃ கோபேது காளீ ஸமரேது துர்க்கா ॥

"சிவபிரானுடைய ஒரு சத்திதானே விநியோககாலத்தில் நான்கு பிரகாரமாக வேறுபடும்; போகத்திற் பவாநியும், புருஷருள் விஷ்ணுவும், கோபத்திற் காளியும், யுத்தத்தில் துர்க்கையுமாம்" என்று சிவாகமமும்,

𑌤𑍍𑌵𑌂 𑌮𑍇 𑌚𑌤𑌸𑍃𑌣𑌾𑌂 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌶𑌕𑍍𑌤𑍀𑌨𑌾𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌹𑍍𑌵𑌯𑌃 ।

த்வம் மே சதஸ்ருணாம் மத்யே ஶக்தீநாம் புருஷாஹ்வயஃ ।

"நான்கு சத்திகளுள்ளே நீவிர் புருஷசத்தியாவீர்" என்று அசுரகாண்டமும் கூறுகின்றன.

> மாதொருபாலுமாலொருபாலும்மகிழ்கின்ற
> நாதனென்றேத்துநம்பரன்வைகுந்நகர்போலு
> மாதவிமேயவண்டிசைபாடமயிலாடப்
> போதலர்செம்பொன்புன்னைகொடுக்கும்புறவம்மே.

—ஞா, திருப்புறவம்.

> மண்ணுமோர்பாகமுடையார்மாலுமோர்பாகமுடையார்
> விண்ணுமோர்பாகமுடையார்வேதமுடையவிமலர்
> கண்ணுமோர்பாகமுடையார்கங்கைசடையிற்கரந்தார்
> பெண்ணுமோர்பாகமுடையார்பெரும்புலியூர்பிரியாரே.

—ஞா, திருப்பெரும்புலியூர்.

எரியலா லுருவமில்லையேறலாலேறில்லைக்
கரியலாற்போர்வையில்லைக்காண்டகுசோதியார்க்குப்
பிரிவிலாவமரர்கூடிப்பெருந்தகைப்பிரானென்றேத்து
மரியலாற்றேவியில்லையையனையாறனார்க்கே.

—நா, திருவையாறு.

காரேறுநெடுங்குடுமிக்கயிலாயன்காண்
  கறைக்கண்டன்காண்கண்ணார்நெற்றியான்காண்
போரேறுநெடுங்கொடிமேலுயர்த்தினான்காண்
  புண்ணியன்காணெண்ணரும்பல்குணத்தினான்கா
ணீரேறுசுடர்ச்சூலப்படையினான்கா
  ணின்மலன்காணிகரேதுமில்லாதான்காண்
சீரேறுதிருமாலோர்பாகத்தான்காண்
  டிருவாரூரான்காணென்சிந்தையானே.

—நா, திருவாரூர்.

---

(௩௧) சிவபெருமான் ஐயனாரைப் புதல்வராக்கொண்டவர்.

𑌏𑌵𑌂 𑌤𑌯𑍋𑌸𑍍𑌸𑌞𑍍𑌜𑌾𑌤𑌤𑍍𑌵𑌾𑌚𑍍𑌛𑌾𑌸𑍍𑌤𑌾𑌪𑌿 𑌚 𑌤𑌦𑌾𑌭𑌵𑌤𑍍।
𑌹𑌰𑍇𑌰𑍍𑌹𑌰𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌤𑌦𑌾 𑌪𑍁𑌤𑍍𑌰𑌤𑍍𑌵𑌮𑌿𑌤𑌿 𑌭𑌾𑌵𑌿𑌤𑌮𑍍॥

ஏவந்தயோஸ்ஸஞ்ஜாதத்வாச்சாஸ்தாபிச ததாபவத்।
ஹரேர்ஹரஸ்யாபி ததாபுத்ரத்வமிதி பாவிதம்॥

"இங்ஙனம் (ஹரி ஹரன் என்னும்) இருவர்க்கும் ஜனித்தமையால் ஹரிஹரபுத்திரர் எனப்பட்டார்" என்றது ஸ்காந்தபுராணம்.

பார்த்தனுக்கருளும்வைத்தார்பாம்பரையாடவைத்தார்
சாத்தனைமகனாவைத்தார்சாமுண்டிசாமவேதங்
கூத்தொடும்பாடவைத்தார்கோளராமதியநல்ல
தீர்த்தமுஞ்சடைமேல்வைத்தார் திருப்பயற்றூரனாரே.

—நா, திருப்பயற்றூர்.

(௩௨) சிவபெருமான் நாராயணர் இதயத்திலே தியானப்பொருளாயுள்ளார்.

𑌪𑌦𑍍𑌮𑌕𑍋𑌶 𑌪𑍍𑌰𑌤𑍀𑌕𑌾𑌶𑌂 । 𑌤𑌸𑍍𑌯 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌵𑌹𑍍𑌨𑌿𑌶𑌿𑌖𑌾 । 𑌤𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌶𑌿𑌖𑌾𑌯𑌾 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 ।

பத்மகோஶ ப்ரதீகாஶம் । தஸ்ய மத்யே. வஹ்நிஶிகா । தஸ்யாஸ்ஶிகாயா மத்யே பரமாத்மா வ்யவஸ்திதஃ।

(நாராயணர் இதயம்) தாமரைமுகையை நிகர்த்தது; அதின் மத்தியிலே அக்கினிசிகை உளது; அந்தச் சிகையின் மத்தியிலே பரமான்மா (சிவபெருமான்) உளர்" என்று தைத்திரீய ஆரணியகம் (௧௰. ௧௩. ௩௰) கூறுகின்றது. இவ்விஷயத்தைப் பிரஹ்ம சூத்திர சைவபாஷ்யத்துச் ''சாரீராதிகரண'' (௩௫—௪௰)த்திற் காண்க.

பையஞ்சுடர்விடுநாகப்பள்ளிகொள்வானுள்ளத்தானுங்
கையஞ்சுநான்குடையானைக்கால்விரலாலடர்த்தானும்
பொய்யஞ்சிவாய்மைகள்பேசிப்புகழ்புரிந்தார்க்கருள்செய்யு
மையஞ்சினப்புறத்தானுமாரூரமர்ந்தவம்மானே.

—நா, திருவாரூர்.

பொறுத்திருந்தபுள்ளூர்வானுள்ளானாகி
யுள்ளிருந்தங்குண்ணோய்களைவான்றனைச்
செறுத்திருந்தமும்மதில்கண்மூன்றும்வேவச்
சிலைகுனியத்தீமூட்டுந்திண்மையானை
மறுத்திருந்தகையானுமீந்தாரல்லி
யிருந்தானையொருதலையுத்தெரியநோக்கிக்
கறுத்திருந்தகண்டமுடையான்போலுங்
கண்ணுங்கருகாவூரெந்தைதானே.

—நா, திருக்கருகாவூர்.

(௫௩) சிவபெருமான் கண்ணில் உள்ளார்.

[illegible]

ய ஏஷோ(அ)க்ஷிணி புருஷோ த்ருஶ்யத ஏஷ ஆத்மேதி ஹோவாசைததம்ருதமபயமேதத் ப்ரஹ்ம।

"இவர் கண்ணுள்ளே புருஷராகக் காணப்படுகின்றனர்; இவர் (பரம) ஆன்மா; இவர் அழியாதவர்; பயமில்லாதவர்; இவர் பிரஹ்மம்" என்றது சாந்தோக்கியம் (ச. கடு. க); இது * உபகோசலவித்தை எனப்படும்.

திருவேயென்செல்வமேதேனேவானோர்
செழுஞ்சுடரேசெழுஞ்சுடர்நற்சோதிமிக்க
வுருவேயென்னுறவேயென்னூனேயூனி
னுள்ளமேயுள்ளத்தினுள்ளேநின்ற
கருவேயென்கற்பகமேகண்ணேகண்ணிற்
கருமணியேமணியாடுபாவாய்காவா
யருவாயவல்வினைநோயடையாவண்ண
மாவடுதண்டுறையுறையுமமரரேறே.

—நா, திருவாவடுதுறை.

(௫௪) ஆதித்தியன் மத்தியிலுள்ளார் சிவபெருமான்.

[illegible]

ய ஏஷோ(அ)ந்தராதித்யே ஹிரண்மயஃ புருஷோ த்ருஶ்யதே ஹிரண்ய ஶ்மஶ்ருர்ஹிரண்யகேஶ ஆப்ரணகாத்ஸர்வ ஏவ ஸுவர்ணஸ் தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ।

* இதனை உத்தரமீமாஞ்சா சைவபாஷ்யத் (க. உ. கடு) திற் காண்க.

"பொற்முடியோடும், பொற்கேசத்தோடும், நகந்தொடுத்து முழுமையும் பொன்வண்ணமாயும் (கபி எனப்படும்) சூரியனால் * விகசிதமாய் இரு புண்டரீகம்போலும் கண்களுமுடையவர் இந்த ஞாயிறு மத்தியிலுள்ள இரண்ணியபுருஷர்" என்றது சாந்தோக்கியம் (க. சு. சு, எ)

𑌅𑌸𑍌 𑌯𑍋𑌽𑌵𑌸𑌰𑍍𑌪𑌤𑌿 𑌨𑍀𑌲𑌗𑍍𑌰𑍀𑌵𑍋 𑌵𑌿𑌲𑍋
𑌹𑌿𑌤𑌃 । 𑌉𑌤𑍈𑌨𑌂 𑌗𑍋𑌪𑌾 𑌅𑌦𑍃𑌶𑌨𑍍𑌨𑌦𑍃𑌶𑌨𑍍
𑌉𑌦𑌹𑌾𑌰𑍍𑌯𑌃 । 𑌉𑌤𑍈𑌨𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌸 𑌦𑍃
𑌷𑍍𑌟𑍋 𑌮𑍃𑌡𑌯𑌾𑌤𑌿 𑌨𑌃 ॥

*அஸௌ யோவஸர்ப்பதி நீலகிரீவோ விலோஹிதஃ।
உதைநம் கோபா அத்ருஶந்நத்ருஶந்நுதஹார்யஃ। உதைநம் விஶ்வாபூதாநி ஸத்ருஷ்டோ ம்ருஷ்டயாதிநஃ।*

"(சூரியமண்டலத்துள்ளிருந்து உதயாஸ்தமனஞ் செய்விக்கும்பொருட்டுச் சிவபிரான்) பிரவிருத்திக்கின்றனர்; இவர் நீலகண்டமும் செந்நிறமுமுடையர்; (ஆதித்தியரூபாகிய) இவரைக் கோபாலரும், உதகம் எடுக்கும் மடவோரும் கண்டார்கள்; அவரைக் (கோமஹிஷாதி) செந்துக்களும் பார்க்கின்றன; அவ்வியல்பினராகிய அவர் (அகக்கண்ணுக்குப்) புலப்படின், எங்களுக்கு ஆனந்தத்தை விளைவிப்பாராக" என்று தைத்திரீயசங்கிதை (சு. ரு. க. ௩) கூறுகின்றது.

அருக்கன்பாதம்வணங்குவரந்தியி
னருக்கனாவானரனுருவல்லனே
யிருக்குநான்மறையீசனையேதொழுங்
கருத்தினைநினையார்கன்மனவரே.

—நா, ஆதிபுராணத்திருக்குறுந்தொகை.

---

* விகசிதமாகிய கண்கள் இரண்டையும் கூறவே, திருநெற்றியில் முகுளித கமலம்போலும் மற்றோர் கண் உண்டென்பது பெறப்பட்டது.

(௫௫) இருளுக்கு (அஃதாவது பிரகிருதிமண்டலத்துக்கு) மேலே சிவபெருமான் ஆதித்தியவண்ணர் எனப்படுதல்.

𑌉𑌮𑌾𑌸𑌹𑌾𑌯𑌂 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌂 𑌪𑍍𑌰𑌭𑍁𑌂 𑌤𑍍𑌰𑌿𑌲𑍋𑌚
𑌨𑌂 𑌨𑍀𑌲𑌕𑌣𑍍𑌠𑌂 𑌪𑍍𑌰𑌶𑌾𑌨𑍍𑌤𑌂 𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌵𑌾 𑌮𑍁𑌨𑌿𑌰𑍍𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 𑌭𑍂𑌤
𑌯𑍋𑌨𑌿𑌂 𑌸𑌮𑌸𑍍𑌤𑌸𑌾𑌕𑍍𑌷𑌿𑌂 𑌤𑌮𑌸𑌃 𑌪𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑍍 ।

உமாஸஹாயம் பரமேஶ்வரம் ப்ரபும் த்ரிலோசநம்
நீலகண்டம் ப்ரஶாந்தம் த்யாத்வா முநிர்கச்சதி பூத
யோநிம் ஸமஸ்த ஸாக்ஷிம் தமஸ: பரஸ்தாத் ।

"உமாசகாயரும், பரமேசுவரரும், பிரபுவும், முக்கண்ணரும், நீலகண்டரும், பிரசாந்தருமாயினரை முனியானவன் தியானித்து பூதகாரணரும் சமஸ்த சாட்சியுமாயினரை இருளுக்குமேற் போயடைகின்றான்" என்றது கைவல்லியோபநிடதசுருதி.

𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌵𑌰𑍍𑌣𑌂 𑌤𑌮𑌸𑌃 𑌪𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑍍 । 𑌤𑌮𑍇𑌵 𑌵𑌿
𑌦𑍍𑌵𑌾𑌨𑌮𑍃𑌤 𑌇𑌹 𑌭𑌵𑌤𑌿 । 𑌨𑌾𑌨𑍍𑌯𑌃 𑌪𑌨𑍍𑌥𑌾 𑌵𑌿𑌦𑍍𑌯
𑌤𑍇𑌽𑌯𑌨𑌾𑌯 ।

ஆதித்யவர்ணந்தமஸ: பரஸ்தாத் । தமேவ வித்வாநம்
ருத இஹ பவதி । நாந்ய: பந்தா வித்யதேயநாய ।

"இருளுக்குமேலே ஆதித்தியவண்ணராகிய அவரை (அறிந்து) வித்துவான் ஈண்டுச் (சர்வஞ்ஞதாதி குணங்களையுடையனாய்ச்) சிவனாகின்றான்; (முக்தி) வழிக்கு இந்த வழியன்றி வேறு வழி இல்லை" என்றது தைத்திரீய ஆரணியகம் (௩. ௧௩. ௪௦)

அண்டமா*ரிருளூடு கடந்தும்பர்
உண்டுபோலுமோ ரொண்சுடரச்சுடர்
கண்டிங் காரறிவா ரறிவாரெலாம்
வெண்டிங் கட்கண்ணி வேதியனென்பரே.

—நா, சித்தத்தொகைத்திருக்குறுந்தொகை.

---

* "வானுழைவாளம்பலத்தரன்" (இருட்கு அப்பாலாகிய வானிடத்துண்டாகிய ஒளியையுடைய திருச்சிற்றம்பலத்தில் வாழும் அரன்) என்று திருக்கோவையாரும் அப்பொருள்படக் கூறிற்று.

(௩௯) சிவபெருமான் பொன்வண்ணர்.

யஸ்ஸுக்ர இவ ஸூர்யோ ஹிரண்யமிவ ரோசதே।

யஸ்ஸுக்ர இவ ஸூர்யோ ஹிரண்யமிவ ரோசதே।

"எந்த உருத்திரர் சூரியனை ஒத்த ஒளியினராய்ப் பொற்பிரகாசத்தினராயுள்ளார்" என்று இருக்குவேத (க. ௪௩. ரு) மும்,

நமோ ஹிரண்யபாஹவே ஹிரண்யவர்ணாய
ஹிரண்யரூபாய ஹிரண்யபதயே ....
நமோநம:।

நமோ ஹிரண்யபாஹவே ஹிரண்யவர்ணாய ஹிரண்யரூபாய ஹிரண்யபதயே .... நமோநம:।

"பொற்கையினர்க்கு, பொன்வண்ணர்க்கு, பொன்ருபர்க்கு, பொற்பதிக்கு நமஸ்காரம்! நமஸ்காரம்!!" என்று தைத்திரீய ஆரணியக (க0. உஉ. ௪0) மும் கூறுகின்றன.

சிவபிரான் திருமேனியைப் பொன்னிறமுடையதென்று ஆரியசுருதிகள் கூற, அவற்றுக்கியைந்து திராவிடசுருதிகளும் அங்ஙனம் பொன்வண்ணர் என்று கூறுதலோடமையாது, செம்பவளவண்ணர், மாணிக்கவண்ணர், தீவண்ணர் என்றற்றொடக்கத்தனவாகவும் அங்கங்கே புகழ்வனவாயின. ஸ்படிகமேனியர், சங்கொத்தமேனியர் என்றற்றொடக்கத்தனவாக அத்திராவிடசுருதிகள் சிற்சில இடங்களிற் புகழ்வது அவர் செம்பவளமேனியிற் படிந்திருக்கும் விபூதியின் வெண்ணிற மிகுதிப்பாடு பற்றியாம்.

பொன்னேர்தருமேனியனேபுரியு
மின்னேர்சடையாய்விரைகாவிரியி
னன்னீர்வயனாகேச்சரநகரின்
மன்னேயெனவல்வினைமாய்ந்தறுமே.

—ஞா, திருநாகேச்சரம்.

மாசிறொண்டர்மலர்கொண்டுவணங்கிட
வாசையாரவருணல்கியசெல்வத்தர்
காய்சினத்தவிடையார்கருகாவூரெம்
மீசர்வண்ணம்மெரியும்மெரிவண்ணமே.

—ஞா, திருக்கருகாவூர்.

வம்பலரும்மலர்க்கோதைபாகம்மகிழ்மைந்தனுஞ்
செம்பவளத்திருமேனிவெண்ணீறணிசெல்வனுங்
கொம்பமரும்மலர்வண்டுகெண்டுந்திருக்கோட்டாற்று
ணம்பனென்னப்பணிவார்க்கருள்செய்யெங்கணாதனே.

—ஞா, திருக்கோட்டாறு.

வெறுப்புறுத்த திருவடியாற்கூற்றட்டானை
விளக்கினொளிமின்னினொளிமுத்தின்சோதி
யொப்புறுத்தத்திருவுருவத்தொருவன்றன்னை
யோதாதேவேதமுணர்ந்தான்றன்னை
யப்புறுத்தகடனஞ்சமுண்டான்றன்னை
யமுதுண்டாருலந்தாலுமுலவாதானை
யப்புறுத்தநீரகத்தேயழலானானை
யாரூரிற்கண்டடியேனயர்த்தவாறே.

—நா, திருவாரூர்.

பொன்னார்மேனியனேபுலித்தோலையரைக்கசைத்து
மின்னார்செஞ்சடைமேன்மிளிர்கொன்றையணிந்தவனே
மன்னேமாமணியேமழபாடியுண்மாணிக்கமே
யன்னேயுன்னையல்லாலினியாரைநினைக்கேனே.

—சு, திருமழபாடி.

மருவார்கொன்றைமதிசூடிமாணிக்கத்தின்மலைபோல
வருவார்விடைமேன்மாதோடுமகிழ்ந்துபூதப்படைசூழத்
திருமால்பிரமனிந்திரற்குந்தேவர்நாகர்தானவர்க்கும்
பெருமான்கடவூர்மயானத்துப்பெரியபெருமானடிகளே.

—சு, திருக்கடவூர்மயானம்.

---

(௩௭) சிவபெருமானை அறிதலாற் பாசங்கள் (மலமாயாகன்மங்கள்) நீங்கும்; இதனாற் பிறவி அறும்.

ஜ்ஞாத்வா தேவம் முச்யதே ஸர்வபாஶை:।

ஞாத்வா தேவம் முச்யதே ஸர்வபாசை:।

"சிவபெருமானை அறிந்து சமஸ்த (மலமாயாகன்ம) பாசங்களினின்று விடுறுகின்றான்" என்று சுவேதாசுவதரோபநிடத (க. அ; சு. கரு.)மும்,

𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌰𑌣𑌿𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑌣𑌵𑌞𑍍𑌚𑍋𑌤𑍍𑌤𑌰𑌾𑌰𑌣𑌿𑌮𑍍।
𑌧𑍍𑌯𑌾𑌨𑌨𑌿𑌰𑍍𑌮𑌥𑌨𑌾𑌦𑍇𑌵 𑌪𑌾𑌶𑌂 𑌦𑌹𑌤𑌿 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌃॥

ஆத்மாநமரணிம் க்ருத்வா ப்ரணவஞ் சோத்தராரணிம்।
த்யாநநிர்மதநாதேவ பாஶம் தஹதி பண்டித:॥

“(இதயகுகையின்கண்ணே) ஆன்மாவையும் பிரணவத்தையும் முறையே கீழ் அரணியாகவும் மேல் அரணியாகவுங்கொண்டு தியானித்தலாம் கடைதலினாற் பாசத்தைத் தகிக்கின்றான் அறிஞன்” என்று கைவல்லியோபநிடதமும் கூறுகின்றன.

வீசுமின்புரைகாதன்மேதகு
பாசவல்வினைதீர்த்தபண்பினன்
பூசுநீற்றினன்பூம்புகலியைப்
பேசுமின்பெரிதின்பமாகவே.

—ஞா, திருப்பிரமபுரம்.

பாசமானகளைவார்பரிவார்க்கமுதமனையா
ராசைதீரக்கொடுப்பாரலங்கல்விடைமேல்வருவார்
காசைமலர்போன்மிடற்றார்கடவூர்மயானமமர்ந்தார்
பேசவருவாரொருவரவரெம்பெருமானடிகளே.

—ஞா, திருக்கடவூர்மயானம்.

ஊனத்திருணீங்கிடவேண்டின்
ஞானப்பொருள்கொண்டடிபேணுந்
தேனொத்தினியானமருஞ்சேர்
வானம்மயிலாடுதுறையே.

—ஞா, திருமயிலாடுதுறை.

வந்தித்திருக்குமடியார்தங்கள்வருமேல்வினையோடு
பந்தித்திருந்தபாவந்தீர்க்கும்பரமனுறைகோயின்
முந்தியெழுந்தமுழவினோசைமுதுகல்வரைகண்மே
லந்திப்பிறைவந்தணையுஞ்சாரலண்ணாமலையாரே.

—ஞா, திருவண்ணாமலை.

பாலூருமலைப்பாம்பும்பனிமதியுமத்தமு
மேலூருஞ்செஞ்சடையான்வெண்ணூல்சேர்மார்பினு
னாலூர்மயானத்துநம்பான்றனடிநினைந்து
மாலூருஞ்சிந்தையர்பால்வந்தூராமறுபிறப்பே.

—ஞா, திருநாலூர்மயானம்.

இரவிநீள்சுடரெழுவதன்முன்ன
மெழுந்துதன்முலைக்கலசங்களேந்தி
சுரபிபால்சொரிந்தாட்டிநின்பாதந்
தொடர்ந்தவார்த்தைதிடம்படக்கேட்டுப்
பரவியுள்கிவன்பாசத்தையறுத்துப்
பரமவந்துநுன்பாதத்தையடைந்தே
னிரவிநித்திலமத்தருசெம்பொ
னளிக்குந்தென்றிருநின்றியூரானே.

—சு, திருநின்றியூர்.

வெந்துவிழுமுடற்பிறவிமெய்யென்றுவினைபெருக்கிக்
கொந்துகுழற்கோல்வளையார்குவிமுலைமேல்வீழ்வேனைப்
பந்தமறுத்தேனையாண்டுபரிசறவென்றுரிசுமறுத்
தந்தமெனக்கருளியவாறார்பெறுவாரச்சோவே.

—திருவாசகம்.

செம்மைநலமறியாதசிதடரொடுந்திரிவேனை
மும்மைமலமறுவித்துமுதலாயமுதல்வன்று
னம்மையுமோர்பொருளாக்கிநாய்சிவிகையேற்றுவித்த
வம்மையெனக்கருளியவாறார்பெறுவாரச்சோவே.

—திருவாசகம்.

(நஅ) சிவபெருமான் மன்மதனைத் தகித்தமை.

ஹ்ஸ்மீசகார மந்மதம்।
பஸ்மீசகார மந்மதம்।"

"(சிவபெருமான்) மன்மதனைச் சாம்பராக்கினர்" என்று சரபோபநிடதமும்,

சிவபுராணம். கக: ரு—கரு.

ஐயக்ஷேண ந நிரீக்ஷ்யோஹம் ஸம்ஸாரஸ்த்ர।
ஸந்ஸ்ராராய ஸம்ஸாரம் வேவரோநஸ்ராஸந்ஷ்।
ஸமெருவிஹீநெ) ஸவியெ ந ஶோரதரணமெ।
ஸஜ்ஜம் க்ருகவாஸவகிதம் யந்ஸ்ஜோஷநாஷயஷ்।

𑌸𑌂𑌧𑌾𑌯 𑌤𑌤𑍍𑌰 𑌤𑌂 𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌮𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌂 𑌯𑍋𑌗𑌿𑌨𑌾𑌮𑌪𑌿।
𑌕𑍃𑌤𑍍𑌵𑌾𑌪𑌿 𑌮𑌹𑌤𑍀𑌂 𑌚𑌿𑌨𑍍𑌤𑌾𑌂 𑌨𑌾𑌕𑌿𑌨𑍋𑌮𑌾𑌪𑌿𑌨𑌾𑌕𑌿𑌨𑌿।
𑌕𑌿𑌮𑌰𑍍𑌥𑌂 𑌪𑍍𑌰𑍇𑌷𑌯𑌾𑌮𑌾𑌸𑍁𑌰𑍍 𑌦𑍁𑌷𑍍𑌟𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌮𑌮𑍇𑌦𑍃𑌶𑌮𑍍।
𑌵𑌾𑌮𑌂 𑌚𑌕𑍍𑌷𑍁𑌶𑍍𑌚 𑌬𑌾𑌹𑍁𑌶𑍍𑌚 𑌭𑌯𑌶𑌂𑌸𑌿 𑌸𑍍𑌫𑍁𑌰𑌤𑍍𑌯𑌹𑍋।
𑌕𑌥𑌂 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 𑌕𑍍𑌷𑍇𑌮𑌂 𑌸𑌂𑌯𑍁𑌗𑍇 𑌤𑍍𑌰𑌿𑌪𑍁𑌰𑌦𑍍𑌵𑌿𑌷𑌃।
𑌤𑌤𑍍𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍁 𑌤𑌥𑌾𑌸𑌰𑍍𑌵𑌂 𑌜𑍀𑌵𑌾𑌮𑌿 𑌯𑌦𑌿𑌵𑌾 𑌮𑍍𑌰𑌿𑌯𑍇।
𑌨𑍇𑌤𑍍𑌰𑌾𑌨𑌨𑍍𑌦𑌕𑌰𑌂 𑌦𑍇𑌵𑌂 𑌨𑍇𑌤𑍍𑌰𑌾𑌭𑍍𑌯𑌾𑌮𑍈𑌕𑍍𑌷𑌿𑌷𑌿 𑌪𑍍𑌰𑌭𑍁𑌮𑍍।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌭𑌾𑌗𑍍𑌯𑌵𑌤𑌾𑌂 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌭𑌾𑌗𑍍𑌯𑌵𑌾𑌨𑌹𑌮𑍇𑌵𑌹𑌿।
𑌇𑌤𑌿 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿 𑌸𑌂𑌮𑍋𑌹𑌨𑌮𑌹𑌾𑌮𑌨𑍁𑌮𑍍।
𑌤𑌤𑌃 𑌪𑍍𑌰𑌾𑌂𑌜𑌲𑌯𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑍇 𑌦𑍇𑌵𑌾𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌪𑍁𑌰𑍋𑌗𑌮𑌾𑌃।
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]॥

அதக்ஷணேந நிர்முக்தமோஹ: பஞ்சஶரஸ்ததா·
புநஶ்சாதாய ஸஶரம் வேபமாநஶ் ஶராஸநம்।
ஶநைர்விலில்யே ஸவிதே ந மேருதருமண்டலே।
ஸஜ்ஜம் க்ருத்வாஸகிதம் தநுஸ்ஸம்மோஹநாஹ்வயம்।
ஸந்தர்ய தத்ர தம் லக்ஷ்யமலக்ஷ்யம் யோகிநாமபி।
க்ருத்வாபி மஹதீம் சிந்தாம் நாகிநோமாபிநாகிநி।
கிமர்த்தம் ப்ரேஷயாமாஸுர் துஷ்டம் கர்ம மமேத்ருஶம்।
வாமம் சக்ஷுஶ்ச பாஹுஶ்ச பயஶம்ஸி ஸ்புரத்யஹோ।
கதம் பவிஷ்யதி க்ஷேமம் ஸம்யுகே த்ரிபுரத்விஷ:
தத்திஷ்டது ததாஸர்வம் ஜீவாமி யதிவா ம்ரியே।
நேத்ராநந்தகரம்தேவம் நேத்ராப்யாமைக்ஷிஷி ப்ரபும்
தஸ்மாத்பாக்யவதாம் மத்யே பாக்யவாநஹமேவஹி।
இதிதஸ்மிந் ப்ரஜாபதி ஸம்மோஹநமஹாமநும்।
தத: ப்ராம்ஜலயஸ்ஸர்வே தேவாவிஷ்ணுபுரோகமா:।

ஸ்வஸ்திகாமாய தஸ்மாய ஸ்வஸ்தீதி மநஸா ஜபந்|
மண்டலீக்ருத கோதண்டம் நமேருதருஷண்டகம்|
ஸர்வஜ்ஞஸ்ய ததஸ் தஸ்ய ஸர்வேசஸ்ய தயாநிதே:|
த்ருதீயா தக்ஷிண: கோணாத்கீலோ ஜாத: க்ருசாநவ்ணு:|
பஸ்மீசகார ஸஹஸா மஹிஷா க்ஷாணுபும்ஜவத்|
மோஹேந ஸாரதிர்நைவ விவேத பதிபஞ்சதாம்||

"பிரமாதிதேவர்களால் அனுப்பப்பட்டு இரதியோடு கைலாசத்தை அடைந்து மன்மதன் மகாதேவரைக் கண்டவுடனே மயக்கமுற்று வீழ்ந்தான்; பின்னர் அவன் சிறிது நேரத்துள் மயக்கந் தெளிந்தவனாய் நடுக்கத்தோடு வில்லையும் அம்பையும் கையில் எடுத்துப் பக்கத்திலேயுள்ள தேவபுன்னைமாவரிசைக்குள்ளே மெதுவாய்க் காந்துநின்று பயத்தினோடு வில்லிலே நாணேற்றி யோகிகள் குறிப்புக்குமெட்டாதவரிடத்திற் குறிப்பிட்டுச் சம்மோஹனம் என்கின்ற பாணத்தை நாணிலே தொடுத்து இவ்வியல்பினதாகிய துஷ்டகர்மத்தைப் பினாகபாணியாகிய சிவபெருமானிடத்துச் செய்தற்குத் 'தேவர்கள் எதன்பொருட்டுத் தன்னை அனுப்பினார்கள்' என்று மிகுதியும் அபாயத்துக்குக் காரணமாக இடக்கண்ணும் புயமுந் துடிக்கின்றனவே; ஆ! திரிபுரதஹனராகிய சிவனாரோடு செய்யும் யுத்தத்தில் எனக்கு எங்ஙனம் க்ஷேமம் உண்டாகும்; இது நிற்க; யான் பிழைக்கின்றேனோ! இறக்கின்றேனோ! கண்களுக்குப் பரமானந்தம் விளைக்கும் பிரபுவாகிய சிவபிரானைத் தரிசித்தமையாற் பாக்கியவான்களுள்ளே யான் சிறந்த பாக்கியவானாகின்றேன் என்று பலவாறு நினைந்து சம்மோஹனம் என்னும் மஹாமந்திரத்தைச் செபிக்கும்போது விஷ்ணுமுதலிய தேவரெல்லாம் அஞ்சலியஸ்தராய்ச் சுபத்தை எண்ணிய மன்மதனுக்குச் சுவஸ்தி என்று மனசினால் செபித்தார்கள்; அவன் தேவபுன்னைமாவரிசைமறைவினின்று வில்லைவளைத்தான்; சர்வஞ்ஞரும், சர்வேசரும், தயாநிதியுமாகிய சிவபிரானாரது மூன்றாவது கண்ணின் கடையினின்று அணுத்தீப்பொறி ஒன்றுளதாய் அவனைக் குங்குலியப்பொடிக்குவியல்போல் விரைந்தெரித்துச் சாம்பராக்கிவிட்டது; அப்போது மதிமயக்கத்தினால் இரதியானவள் தனது கணவன் நாசமுற்றதை அறிந்தாளில்லை" என்று சிவரகசியகண்டமும் கூறுகின்றன.

காமனெரிப்பிழம்பாகநோக்கிக்காம்பனதோளியொடுங்கலந்து
பூமருநான்முகன்போல்வரேத்தப்புகலிநிலாவியபுண்ணியனே [ய்
யீமவனத்தெரியாட்டுகந்தவெம்பெருமானிதுவென்கொல்சொல்லா
வீமருதண்பொழில்சூழ்மிழலைவிண்ணிழிகோயில்விரும்பியதே.

—ஞா, திருப்புகலியுந்திருவீழிமிழலையும்.

மகரத்தாடுகொடியோனுடலம்பொடிசெய்தவனுடைய
நிகரொப்பிலாத்தேவிக்கருள்செய்நீலகண்டனூர்
பகரத்தாரன்னம்பகன்றில்பாதம்பணிந்தேத்தத்
தகரப்புன்னைதாழைப்பொழில்சேர்சண்பைநகரமே.

—ஞா, திருச்சண்பைநகர்.

கழைபடுகாடுதென்றல்குயில்கூவவஞ்சுகணையோனணைந்துபுகலும்
மழைவடிவண்ணனெண்ணிமகவோனைவிட்டமலரானதொட்டமதனை [த்
னெழில்பொடிவேந்துவீழ விமையோர்கணங்களெரியென்றிறைஞ்சியகல
தழல்படுநெற்றியொற்றைநயனஞ்சிவந்ததழல்வண்ணனெந்தைசரணே.

—நா, தசபுராணம்.

ஐவணமாம்பகழியுடையடன்மதனன்பொடியாகச்
செவ்வணமாந்திருநயனம்விழிசெய்தசிவமூர்த்தி
மையணவுங்கண்டத்துவளர்சடையெம்மாரமுதை
யெவ்வணநான்பிரிந்திருக்கேனென்னாரூரிறைவனையே.

—சு, திருவாரூர்.

(நக) அடியார் விரும்பியதைச் சிவபெருமான் பிரசாதிப்பவர்.

ஸ ஏவ ஭கவாநீஶ: ஸர்வாபீஷ்டம் ப்ரதாஸ்யதி। 395 P.

ஸ ஏவ பகவா நீஶஸ் ஸர்வாபீஷ்டம் ப்ரதாஸ்யதி।

"பகவானாகிய அந்தச் சிவபிரான் வேண்டியவனைத்தையும் கொடுப்பார்" என்று தக்ஷகாண்டமும், 29 P.

அதிக் ப்ரதோஷி ஭ஜதாம் நமதாமர்த்திதாத் ஶிவோ।

அதிக் ப்ரதோஷி பஜதாம் நமதாமர்த்திதாத் ஶிவோ।

"பிரபுவே! தேவரீரை வழிபடுபவர்க்கும், வணங்குகின்றவர்களுக்கும் (இவர்கள்) வேண்டுதலுக்கு மேலே கொடுக்கின்றீர்" என்று சம்பவகாண்டமும் கூறுகின்றன.

வாயானைமனத்தானைமனத்துணின்ற
கருத்தானைக்கருத்தறிந்துமுடிப்பான்றன்னைத்
தூயானைத்தூவெள்ளையேற்றான்றன்னைச்
சுடர்த்திங்கட்சடையானைத்தொடர்ந்துநின்ற
தாயானைத்தவமாயதன்மையானைத்
தலையாயதேவாதிதேவர்க்கென்றுஞ்
சேயானைத்தென்கூடற்றிருவாலவாய்ச்
சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே.

—நா, திருவாலவாய்.

கனத்தகத்துக்கடுஞ்சுடராய்நின்றாய்நீயே
கடல்வரைவானாகாயமானாய்நீயே
தனத்தகத்துத்தலைகலனாக்கொண்டாய்நீயே
சார்ந்தாரைத்தகைந்தாளவல்லாய்நீயே
மனத்திருந்தகருத்தறிந்துமுடிப்பாய்நீயே
மலர்ச்சேவடியென்மேல்வைத்தாய்நீயே
சினத்திருந்ததிருநீலகண்டனீயே
திருவையாறகலாதசெம்பொற்சோதி.

—நா, திருவையாறு.

மையனையகண்டத்தாய்மாலுமற்றை
வானவருமறியாதவண்ணச்சூலக்
கையவனேகடியிலங்கைக்கோனையன்று
கால்விரலாற்கதிர்முடியுந்தோளுஞ்செற்ற
மெய்யவனேயடியார்கள்வேண்டிற்றீயும்
விண்ணவனேவிண்ணப்பங்கேட்டுநல்குஞ்
செய்யவனேதிருச்சோற்றுத்துறையுளானே
திகழொளியேசிவனேயுன்னபயநானே.

—நா, திருச்சோற்றுத்துறை.

தூண்டுசுடரனையசோதிகண்டாய்
தொல்லமரர்சூளாமணிதான்கண்டாய்
காண்டற்கரியகடவுள்கண்டாய்
கருதுவார்க்காற்றவெளியான்கண்டாய்
வேண்டுவோர்வேண்டுவதேயீவான்கண்டாய்
மெய்ந்நெறிகண்டாய்விரதமெல்லா
மாண்டமனத்தார்மனத்தான்கண்டாய்
மறைக்காட்டுறையுமணாளன்றானே.

—நா, திருமறைக்காடு.

---

(௪௦) அகஸ்தியமகாமுனிவர்க்குப் பொதியமலை அருளப்பட்டமை.

𑌏𑌵𑌂 𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌿𑌤𑍋 𑌦𑍇𑌵𑍈𑌃 𑌸𑍍𑌮𑌿𑌤𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌶𑌿𑌵𑌃 𑌸𑍍𑌵𑌯𑌮𑍍।
𑌅𑌗𑌸𑍍𑌤𑍍𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌸𑍍𑌤𑍁𑌲𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌹𑌿𑌣𑍋𑌦𑍍𑌰𑍋𑌹𑌿𑌣𑍀𑌶𑌦𑍃𑌕𑍍।
𑌚𑌕𑍍𑌰𑍇 𑌤𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌶𑍇𑌶𑌮𑌧𑍀𑌶𑌃 𑌸𑍁𑌧𑌿𑌯𑌂 𑌮𑍁𑌨𑌿𑌮𑍍।
𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌵𑍇𑌷𑌂 𑌤𑌤𑍍𑌰𑍈𑌵 𑌤𑌸𑍍𑌮𑍈 𑌸𑌂𑌦𑌰𑍍𑌶𑌯𑌚𑍍𑌛𑌿𑌵𑌃।
𑌸𑍋𑌽𑌪𑍍𑌯𑌾𑌜𑍍𑌞𑌯𑌾𑌸𑍍𑌯 𑌦𑍁𑌃𑌖𑍇𑌨 𑌸𑌪𑌤𑍍𑌨𑍀𑌕𑍋 𑌮𑍁𑌨𑍀𑌶𑍍𑌵𑌰𑌃।
𑌵𑌿𑌯𑌨𑍍𑌮𑌾𑌰𑍍𑌗𑍇𑌣 𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌪 𑌮𑌲𑌯𑌾𑌦𑍍𑌰𑍇𑌰𑍁𑌪𑌤𑍍𑌯𑌕𑌾𑌮𑍍।
𑌶𑌿𑌵𑌭𑌾𑌵𑌨𑌯𑌾 𑌤𑍁𑌲𑍍𑌯𑍇 𑌶𑌿𑌵𑌸𑍍𑌯 𑌮𑍁𑌨𑌿𑌪𑍁𑌙𑍍𑌗𑌵𑍇।
𑌮𑌲𑌯𑌂 𑌸𑌮𑌨𑍁𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍇 𑌵𑌿𑌷𑌮𑌾𑌭𑍂𑌸𑍍𑌸𑌮𑌾𑌭𑌵𑌤𑍍॥

ஏவம் ஸம்ப்ரார்த்திதோ தேவைஃ ஸ்மிதம் க்ருத்வா ஶிவஸ் ஸ்வயம்।
அகஸ்த்யமாத்மநஸ்துல்யம் ப்ராஹிணோத்ரோஹிணீஶத்ருக்।
சக்ரே தம் தக்ஷிணாஶேஶமதீஶஸ் ஸுதியம் முநிம்।
கல்யாணவேஷந்தத்ரைவ தஸ்மை ஸந்தர்ஶயச்சிவஃ।
ஸோப்யாஜ்ஞயாஸ்ய துஃகேந ஸபத்நீகோ முநீஶ்வர:।
வியந்மார்க்கேண ஸம்ப்ராப மலயாத்ரே ருபத்யகாம்।
ஶிவபாவநயா துல்யே ஶிவஸ்ய முநிபுங்கவே।
மலயம் ஸமநுப்ராப்தே விஷமாபூஸ் ஸமாபவத்॥

"இங்ஙனம் (வீழாதிருக்குமாறு அநுக்கிரகிக்கவேண்டுமென்று) தேவர்கள் வேண்ட, சந்திரசேகரராகிய சிவபிரான் புன்சிரிப்போடு தமக்குத் துல்லியராகிய அகஸ்தியமுனிவரை அனுப்பி மகாபுத்திசாலியாகிய அம்முனிவரைத் தென்றிசைக்கு அதிபராக்கித் தமது திருக்கல்யாணக்கோலத்தையும் அவ்விடத்தே பின்னர்க் காட்சிகொடுத்தருளினர்; பின்னர் அம்முனிவரும் சிவபிரான் ஆஞ்ஞையினால் மிகு மனவருத்தமுற்று மனைவியாரோடு ஆகாயமார்க்கமாகப் பொதியாசலத்தின் அடியை அடைந்தார்; எஞ்ஞான்றுஞ் சிவபாவனை செய்தலினாலே அச்சிவபிரானுக்குச் சமானமாகிய முனிவர் பொதியாசலத்தை அடைந்தவுடனே மேடு பள்ளமாகிய பூமி சமமாய்விட்டது" என்றது சம்பவகாண்டம்.

வந்தெதிரிந்திரன்வழிபடமகிழ்ந்து
　　வானநாடுநீயாளெனவருளிச்
சந்திமூன்றிலுந்தாபரநிறுத்திச்
உக்த்வா வாணீம் ஸ்மேர ஸ்வாமேவம் ததாரஃ।
இத்யுக்த்வா விஷ்ணுவீர்யம் பாதாரம்பே ஷந்த ததக்ஷிணே।
ஸ்ருஷ்ட்வா தத்வக்ஷஸோரா ஸம்பூதம் ப்ராஹ ச ஜிஷ்ணு।
மயா விஷ்ராவிதா தேவா ப்ருஹஸ்பதிமுகா ரணே।
பாரா கரேணமாஸ்யம் பாபபோ க்ஷணமாத்ரதஃ।
ஸோஷிதாஸ்தாஃ ப்ராஸவே ஸ்ரியஃ கம்பமாநாஸ்ததாஃ।
கோதிஸாரோரஸ்ய தேவ வக்த்ரம் ஸுததம் ஜிஜ।
இத்யுக்த்வா வாணீம் ஸதயாரோரஸ்ய வக்ஷஸி।
யதேந மஹதா மமூர்த்நா பாநாரோரவயம் க்ஷணாத்।
ஸியா க்ருத்வா வபுஷோஜநம் தத்வக்த்ரம் ஸுதமே ஜவாத்।
ரக்தஸ்ராவோ மஹாநாஸீத் ததாநீம் தத்ர வைபவாத்।
ஜலந்தரஃ வபாதாரம் க்ஷிப்தேந பவத்தவத் ஸியா।
மமார ச பாநஸ்ய விஷ்ணும் ஸூததேஹஸம்பரஃ॥

ப்ருந்தாம் விவாஹ்ய ஸந்தோஷமவாப்ய பரமந் ததஃ।
புநஃ காலேந மஹதா தேவாந் மேரும் ஸமாச்ரிதாந்।
ஜ்ஞாத்வா கத்வாத்ர தாந் ஸர்வாந்யுத்தே ஜித்வா ஹரிம்புநஃ।
தேவதாநாம் ஸஹாயஞ்ச குர்வாணம் யுத்தமத்யகம்।
யுயோத விம்சதி ஸமாஸஹஸ்ராணிமரிந்தமஃ।

ச்ரமிணம் தம் முமோசாயம் ஸ்வகீர்த்தநாதம் பலீ।
ததோ தேவா பயத்ரஸ்தாஸ் ஸேந்த்ரா: கைலாஸமாச்ரிதா:।
கத்வா ஸ்வநகரம் தைத்யஸ் தத்ர ஸ்தித்வா சிரம் புந:।
ஸ்வஸேநாபிர் யயௌ க்ரூர: கைலாஸம் பர்வதோத்தமம்।
ப்ருந்தாயா வசநம் பத்ந்யா நிருந்தத்யா மஹாஸுர:
அகணய்யாதிஸம்ரம்பாத் யத்ர தேவா பயத்ருதா:।
ததாகமநம் ததோ தேவா ஜ்ஞாத்வாத்யந்தம் பயாந்விதா:।
ப்ரணம்ய நந்திநம் த்வா:ஸ்தம் மஹாதேவஸ்ய பாவநம்।
விவிசுர் மந்த்ரம் தேவதேவஸ்யைதே ததாஜ்ஞயா।
தத்ர த்ருஷ்ட்வா மஹாதேவம் ஸர்வஸம்ஸாரமோசகம்।
ப்ரணம்ய தண்டவத் பக்த்யா துஷ்டுவு:ஸ்துதிபிஸ்ததா।
வ்ருத்தாந்தமகிலம் ப்ரோசு: ப்ருச்சதே சங்கராயதே।
ததாதேவோ பயம் தத்வா தேவாநாம் பரமேச்வர:।
ஸ்வயம் த்விஜாக்ருதிர் பூத்வா நிர்யயௌ புரதோஸ்ய ஸ:।
தண்டகமண்டலுகரோ த்ருதச்சதரோ ருஷிர்யதா।
அநுயாதஸ்ஸுரைஸ் ஸர்வைரிந்த்ராத்யை: சந்நவேஷிபி:।
ஜலந்தரஸ்ய நிகடமாபாயம் த்விஜஸத்தம:।
த்ருஷ்ட்வா ஜலந்தரம் தேவ: கோபவாந் குத ஆகத:।
குத்ரவா கம்யதே ஸர்வம் பப்ரச்சைவம் மஹேச்வர:।
ஜலந்தராக்யோஹம் ஜித்வா தேவாந் ஸர்வாந் ரணாங்கணே।
கச்சாமி சங்கரம் ஜேதும் கைலாஸமதுநா சலம்।
இத்யுவாச தத: சம்புர் விஹஸ்யாமும் வசோப்ரவீத்।
கோவா யோத்துமலம் சம்பும் க்ஷயத் வீரம் பிநாகிநம்।
மநஸா ஸ்மர்யதே யேந யோத்தும் ஸோபி பாபவம்।
ப்ராப்நோதி நாத்ரஸந்தேஹஸ்தம் ஸம்ஜேதும் கதம் ப்ரபு:।
நிவஸாமி மஹேசஸ்ய நிகடேஹம் ஜலந்தர।
புநர்கச்ச யதாமார்க்கம் யதி ஜீவநமிச்சஸி।
ஸமாகர்ண்ய வசஸ்தஸ்ய விப்ரஸ்யாயம் ஜலந்தர:।
ந ஜாநாஸிபலம் விப்ர மதீயம் த்வம் துராஸதம்।
ப்ரதர்சயாமி தத்விப்ர க்ஷணமாத்ரேண பூஸுரா:।

இதி ஸம்ரம்பவசநம் க்ருத்வஸ்ய த்விஜஸத்தமः।
ஜலந்தரஸ்ய பாபஸ்ய விப்ரரூபோ நிசம்ய ஸः।
பலந்தத் கீத்ருசம் தைத்ய தாவகம் வீக்ஷிதும் மம।
குதூஹலமதஸ்த்வந்து சக்ரமேதத் ஸ்வமூர்த்தநி।
உத்ருத்யபாணியுக்மேந ஸமாரோபய மத்புரः।
இத்யுக்த்வா விலலேகாயம் பாதாங்குஷ்டேந தத்க்ஷிதௌ।
த்ருஷ்ட்வா தச்சக்ரமஸுரோ ப்ரூதம் ப்ராஹ சத்விஜம்।
மயா வித்ராவிதா தேவா ப்ரஹ்மவிஷ்ண்வாதயோ ரணே।
புரா கரேணசமயம் பாடபம் க்ஷணமாத்ரதः।
சோஷிதாஸ் ஸாகராஸ் ஸர்வே கிரயः கந்துகீக்ருதாः।
கோதிபாரோஸ்ய மே சக்ரமுத்தர்த்தும் ததிதம் த்விஜ।
இத்யுக்த்வோத்ருத்ய பாணிப்யாம் ஸததாரோப்ய வக்ஷஸி
யத்நேந மஹதா மூர்த்நி புநாரோபயத் க்ஷணாத்।
த்விதா க்ருத்வா பபாதைநம் தச்சக்ரம் பூதலே ஜவாத்।
ரக்தஸ்ராவோ மஹாநாஸீத் ததாநீம் தத்ரவேகவாந்।
ஜலந்தரः பபாதாசு க்ஷிதௌ பர்வதவத் த்விதா।
மம்ராச புநः சீக்ரம் விலுடந் பூதலே ஸுரः॥

"ஜலந்தராசுரன் சிலகாலஞ் சென்ற பின்னர்க் காலநேமி என்னும் அசுரன் மகளாகிய விருந்தையை விவாகஞ்செய்து மிக்க மகிழ்வினோடிருந்தான்; அங்ஙனம் நெடுங்காலஞ் சென்ற பின்னர்த் தேவர்களெல்லாம் மகாமேருவிற் பதுங்கியிருப்பதை அறிந்து ஆங்குச் சென்று அவர்களையெல்லாம் யுத்தத்திலே செயித்து, அவர்களுக்கு உதவிபுரியுமாறு வந்த விஷ்ணுவோடு இருபதினாயிரம் வருஷம் யுத்தஞ் செய்து களைப்புற்றுத் தன்னைத் துதித்த போது அவன் இவரை விட்டுவிட்டான்; பின்னர் இந்திரன்முதலிய தேவரெல்லாம் அச்சத்தினால் நடுநடுங்கிக் கைலாயகிரிக்கு ஓடினர்; அவ்வசுரன் தன் நகாஞ்சென்று ஆங்கு நெடுங்காலமிருந்து பின்னர்த் தன் மனைவிவிருந்தை தடுத்துக் கூறிய வார்த்தையை மதிக்காது தேவர்கள் பயந்து ஓடியிருக்கும் பர்வதோத்தமமாகிய கைலையங்கிரிக்கு மிக்கவேகமுற்றுத் தன் சேனைகளோடு சென்றான்; தேவர்கள் அவன் வரவை அறிந்து பயமுற்றுக் கைலைவாயிலில் நின்ற நந்திபெருமானை நமஸ்கரித்து அவர் அநுமதிபெற்றுத்

தேவாதிதேவராகிய சிவபெருமானது மகாப்பிரசித்தமாகிய திருமந்திரத்தினுள்ளே பிரவேசித்து, மகாதேவனைத் தரிசனஞ்செய்து தண்டாகாரமாய்வீழ்ந்து நமஸ்கரித்து மிகுந்த பக்தியோடு ஸ்தோத்திரஞ் செய்ய, சிவபெருமான் அவர் குறை யாதென வினவ, அவர்கள் அவற்றை விண்ணப்பஞ் செய்தார்கள்; அப்போது சிவபெருமான் அவர்களுக்கு அபயஞ் செய்து, தாம் ஓர் பிராஹ்மண வேடம்பூண்டு ஓர் முனிவர்போலத் தண்டகமண்டலங்களைக் கையிற்றாங்கி குடையொன்று பிடித்துக்கொண்டு அவ்வசுரனை நோக்கி எதிரே போனார்; அப்போது அவர் பிறர் அறியாவண்ணம் தங்கள் உருவங்களை மறைத்துக்கொண்ட தேவர்கள் தம்மைப் பின்றொடர்ந்து வரச் சலந்தராசுரனை அடைந்து, அவனை நோக்கி நீ யாவன்? எங்கிருந்து வந்தாய்? எங்கே போகின்றனை? என்று அவனைப் பலவாறு வினவுங்கால், அவ்வசுரன், தபசியே! என் பெயர் ஜலந்தரன்; நான் தேவர்களனைவரையும் யுத்தபூமியில் செயித்துவிட்டு இப்போது சிவனை வெல்லுமாறு கைலைக்குப் போகின்றேன் என, சிவபெருமான் நகைத்து அவ்வசுரனை நோக்கிக் கூறுகின்றனர்; அசுரா பிநாகவில்லைத் தரித்தவரும், அடியார்களைப் பகைக்கும் வீரர்களைத் தொலைப்பவருமாகிய அச்சிவனோடு யுத்தஞ் செய்ய எவன்றான் திறமையுடையன்! அவரோடு யுத்தஞ் செய்ய மனசினால் நினைப்பவன்றானும் ஐயமின்றி அவமானமடைவான், இங்ஙனமாயின், அப்பிரபுவை வெல்ல எவ்வாறு வல்லை; ஜலந்தரா! யான் அவர் சமீபத்திருப்பவனே; நீ இனி உயிர் பிழைக்கவேண்டுமாயின் வந்த வழியே மீண்டு விடு என, அதைக் கேட்ட ஜலந்தரன் பிராஹ்மணா! ஒருவராலும் நெருங்கவியலாத எனது வலிமையை நீ அறிந்திலை; அதனை இதோ ஓர் நொடிப்போதிற் காட்டுகின்றேன் என்று கோபங்கொண்டு கூறும் அப்பாவிச் சலந்தரனுடைய படபடத்த வார்த்தையை விப்பிரவடிவங்கொண்ட பிராஹ்மணர் கேட்டு, அசுரா! அப்பெற்றியதாகிய உன் பலத்தைப் பார்க்க எனக்குக் குதூஹலமாகின்றது; ஆகலின், இந்தச் சக்கரத்தை இரு கையாலும் தூக்கி என் முன்னிலையில் உன்றலையின்மீது வைத்துக்கொள்வாய் என்று திருவாய்மலர்ந்து, தமது காற்பெருவிரலினாற் சக்கரமொன்றைக் கீறிவிட, அசுரன் அதனைப் பார்த்து, அவ்வேதியரை நோக்கி, பிராஹ்மணா! யான் பிரமவிஷ்ணுக்கள்முதலிய தேவர்களையெல்லாம் போரிலே ஜயித்துத் துரத்திவிட்டிருக்கின்றேன்; மேலும் முன்னோர்கால் க்ஷணப்போ

திலே வடவாமுக்கினியைக் கையினால் அணைத்திருக்கின்றேன்; சமுத்திரங்களையெல்லாம் வறக்கச் செய்துள்ளேன்; மலைகளையெல்லாமெடுத்துப் பந்துபோற்கொண்டு விளையாடினேன்; இங்ஙனமெல்லாமிருப்ப, பிராஹ்மணா! இந்தச் சக்கரத்தைத் தூக்குவது எனக்கு மிக்க கஷ்டமா என்றுரைத்து அதனைக் கைகளாற்றூக்கி, நெஞ்சிற்றாங்கவைத்து, பின்னர் அதனை மிகப்பிரயாசையோடு தூக்கித் தன்றலையின்மேல் வைத்தான்; உடனே ஓர் நொடிப்போதுள் அந்தச் சக்கரம் அவனை இருதுண்டமாகப் பிளந்துவிட்டு வேகமாய்ப் பூமியில்வீழ்ந்தது; மகாவேகமாய்ப் பெரிய ஓர் இரத்த வெள்ளமுண்டாயிற்று; ஜலந்தரன் மலைபோல் இருதுண்டங்களாகப் பூமியில் வீழ்ந்து நிலத்திற் புரண்டு சடுதியில் மாண்டான்" என்று ஸ்காந்தபுராணத்திற் கூறப்பட்டது.

தரையொடுதிவிதலநலிதருதகுதிறலுறுசலதரனது
வரையனதலைவிசையொடுவருதிகிரியையரிபெறவருளின
னுரைமலிதருசுரநதிமதிபொதிசடையவனுறைபதிமிகு
திரைமலிகடன்மணலணிதருபெறுதிடர்வளர்திருமிழலையே.

—ஞா, திருவீழிமிழலை.

சமர்மிகுசலந்தரன்போர்வேண்டினானைச்
சக்கரத்தாற்பிளப்பித்தசதுரர்போலு
நமனையொருகால்குறைத்தநாதர்போலு
நாரணனையிடப்பாகத்தடைத்தார்போலுங்
குமரனையுமகனாகவுடையார்போலுங்
குளிர்வீழிமிழலையமர்குழகர்போலு
மமரர்கள்பினமுதுணநஞ்சுண்டார்போலு
மடியேனையாளுடையவடிகடாமே.

—நா, திருவீழிமிழலை.

(அஎ) சிவபெருமான் கொக்கிறகு தரித்தமை.

ப்ரஸ்ய பத்ரேண வகவ க்ஷயரோமவி லஸ:|

பகாஸுரஸ்ய ஹர்த்தாச பகபக்ஷதரோபிஸ:|

—உபதேசகாண்டம்.

"(தேவர்களெல்லாம் ஏங்கி ஓட்டமெடுக்குமாறு துரத்திய) *குரண்டாசுரனைத் தடிந்து அவனது இறகைப் பிடுங்கிச் சிவபெருமான் சிரசிலே தரித்துக்கொண்டார்."

கோக்கிறகுசென்னியுடையான்கண்டாய்
கொல்லைவிடையேறுங்கூத்தன்கண்டா
யக்கரைமேலாடலுடையான்கண்டா
யனலங்கையேந்தியவாதிகண்டா
யக்கோடரவமணிந்தான்கண்டா
யடியார்க்கட்காரமுதமானான்கண்டாய்
மற்றிருந்தகங்கைச்சடையான்கண்டாய்
மழபாடிமன்னுமணாளன்றானே.

—நா, திருமழபாடி.

(௮௮) சிவபெருமான் யானைத்தோல் போர்த்தன்மை.

புரா கஜாஸுரோ கோரஸ்தபஸ்தப்த்வாதிநிஷ்டுர:|
ப்ரீணயித்வா விதாதாரம் வரம் வவ்ரே ப்ரஜாபதே|
அவத்யத்வம் ஸுரேந்த்ராத்யை: [illegible] ஶிவம் விநா|| [கூர்மே]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

* கொக்குருக்கொண்ட அசுரன்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]

புராகஜாஸுரோ கோரஸ்தபஸ் தப்த்வா திநிஷ்டுரஃ।
ப்ரீணயித்வா விதாதாரம் வரம் வவ்ரே ப்ரஜாபதே।
அவத்யத்வம் ஸுரைரந்யைஃ க்ஷயத்வீரம் சிவம் விநா।
ஸுபாஹுரிதி ததாயும்ஷி பலம் வீர்யம் பராக்ரமம்।
ஏவமாதீநி சாந்யாநி ப்ரதத்தாநி ஸ்வயம்புவா।
ததோலப்தவரோ தைத்யோ பபாதே ஸகலம் ஜகத்।
ஜித்வா ப்ரஹ்மாதி தேவாம்ச ரணமத்யே கதாநயம்।
ஹத்வா ருஷீந் ஸுராம்சாபி ஸுபஹுரிதவேல்பதஃ।
இத்தம் ப்ரதிதிநம் தஸ்மாத் பூதயம் ஸகலம் ஜகத்।
ததஃ கதாசிதமராநாயகம்வலபேதகம்।
ஜித்வா ரணே த்ராவயித்வா கஜமப்ரமுவல்லபம்।
க்ரஹீத்வா பாணிநாவாலம் ப்ராமயித்வா ஸமந்ததஃ।
க்ஷேபயாமாஸ துஷ்டாத்மா ஸுதூரம் மூர்ச்சிதம் கஜம்।
திசாமதீசாநந்யாம்ச த்ராவயாமாஸ பீடயந்।
யக்ஷாநபி ததா ஹத்வா பூலோகநிலயாந் பராந்।
ஹந்துமத்ராவயேத் கோரஃ புநஃ காஞ்சித்ருஷீச்வராந்।
பீதாஸ்தே தாபஸாஃ காசீம்ஸமாகத்யாத்ர ஸம்பவைஃ।
ருஷிபிர்மிளிதா கத்வா மணிகர்ண்யாம் ததஃ புநஃ
ப்ரவிச்ய விச்வநாதஸ்ய பரமம் தாமசாத்புதம்।
தத்ரத்யைரபி தேவஸ்ய பரிசர்யாரதைர் ஜநைஃ।
விச்வநாதம் ப்ரணம்யைதே தஸ்துஸ்தத்ர பயாந்விதாஃ।
ததாகோமாகதஸ்தத்ர த்வரயா ஸகஜாஸுரஃ।
த்வாரி ஸ்தித்வா மஹாராவம் சகாராதிவிபீஷணம்।
தச்ச்ருத்வா தபதாம் வர்யா பீதபீதா மஹேச்வரம்।
ஸமாலிங்க்யச ஸர்வேபி முமுஹுர் கதசேதநாஃ।
தத் க்ஷணேந புநஃ பாபீ திர்த்வா த்வாரம் சிவாந்திகம்।
ஹந்துகாமஸ்ததா ஸர்வாநபதக்ஷப்ரஜாபதே।
ததஃ ஸ பகவாநீசஃ ஸர்வேஷாமார்த்திகா ஸ்வயம்।
ஆவிராசீதநேகார்க்கப்ரபமாஸ்தாய விக்ரஹம்।
தர்ஜயந்தம் மஹாராவைர் கோரமேநம் மஹேச்வரஃ।

அநேககாலமகிலை: ச்ருதா: சப்தாமஹேசிது:।
ஸதுபாபீ சிவம் ஜ்ஞாத்வா க்ஷயத் வீரமபிஸ்திரம்।
யுயுதே தம் மஹாமோஹாத் பரமேசம் கஜாஸுர:।
தாடயாமாஸ பாதேந சிரஸ்யஸ்ய துராத்மந:।
மஹாபலோ மஹாஸாரோ மஹேஷ்வஸ்ஸமஹேச்வர:।
ஸ பபாத மஹீப்ருஷ்டே தத்ர தைத்யா தமோ த்ருதம்।
ருரோத ஸ மஹாராவோ ருதிராப்லுதவிக்ரஹ:।
த்வசம் ஜக்ராஹ தேவோஸ்ய ததாநீம் நிஷ்டுராம் சிவம்।
ச்ருத்வாஸ்ய ரோதநாராவம் பயமாப சிவாப்யஹோ।
ததத்புதம் மஹேசஸ்ய விக்ரஹம் வீக்ஷிதும் ததா।
ஸர்வேஷாமபி தேவாநாம் லோசநாநி ப்ரஜாபதே।
குண்டபாவம் கதாந்யாசு ஸூர்யகோடிஸமப்ரபம்।
த்வசாவகுண்டிதே தேவே கஜஸ்யாஸ்ய துராத்மந:।
லோசநாநி ச ஸர்வேஷாம் ததா சக்யாநி வீக்ஷிதும்।
பரித்யக்தபயாஸ்ஸர்வே தத்ருசுஸ்தம் மஹேச்வரம்।
ப்ரணேமுச்ச மஹாபக்த்யா க்ருத்திவாஸஸமீச்வரம்।
தபோதநாச்ச தே ஸர்வே கதமோஹா மஹேச்வரம்।
தத்ருசு: பரமஸ்தீநி சாஸ்ய தைத்யஸ்ய கேவலம்।
ஹதோயமமரேசேந சங்கரேணார்த்திஹாரிணா।
இதி நிச்சித்ய ஸர்வே தே துஷ்டுவு: பரமேச்வரம்।
ப்ரஹ்மவிஷ்ணுமுகைஸ் ஸார்த்தம் பரித்யக்தபயாமுதா।
ஜய சம்போ மஹாதேவ ப்ரணதார்த்தி ப்ரபஞ்ஜந।
ஸமஸ்தஜகதாம் நாத ஸச்சிதாநந்தவிக்ரஹ।
கஜசர்மாம்பரம் த்வாம் யே வர்ணயந்தி புதோத்தமா:।
மாபவந்து பயந்தேஷாம் யஸ்மாத் கஸ்மாதித: பரம்।
பவந்து பூஜ்யாஸ் ஸர்வத்ர ஸர்வலோகைர் நமஸ்க்ருதா:।
ததேத்யந்தர்ஹிதோ தேவோ தத்வா வரமநுத்தமம்।
ப்ரஹ்மவிஷ்ண்வாதயஸ் துஷ்டிமவாபு: பரமாம் ததா।
கஜாஸுரம் மஹாகோரம் ஸதா தேவர்ஷிபாதகம்।
ஹத்வா ரக்ஷ ஸகலாந் த்வஞ்சாஸ்யாதிகர்க்கசாம்।
ப்ரக்யாபநாய ஸர்வேஷாம் தததௌ விச்வாதிக: சிவ:।
நச தத் தாஷண்யாஸ்ய பூஷண்யைவ கேவலம்॥

"முன்னோர்கால் மிகக்கொடியனும் துஷ்டனுமாகிய கயாசுரன் என்பான் ஒருவன் தவத்தினுற் பிரமாவை மகிழ்வித்து, சமஸ்த வீரர்களேயும் சங்கரிக்கும் சிவபெருமான் ஒருவானறி மற்றை எந்தத் தேவர்களாலும் தன்னைச் செயிக்கமாட்டா திருக்க வல்ல மிகுந்த வலிமை, ஆயுள், சௌரியம், பராக்கிரமமுதலிய மற்றைய வரங்களேயும் பிரமாவிடத்துப் பெற்ருன்; பின்னர் அங்ஙனம் வரம் பெற்ற அசுரன் பிரமவிஷ்ணுமுதலிய தேவர்களை யுத்தத்திலே செயித்தும், மற்றைத் தேவர்களேயும் அநேக முனிவர்களேயும் கர்வங்கொண்டு கொன்றும், இங்ஙனம் சமஸ்தலோகங்களேயும் வருத்தினன்; உலகம் அனைத்தையும் பிடித்து வருங்கால் ஓர்நாள் அவன் இந்திரனைப்போரிலே செயித்து, ஐராவதத்தைத் தூக்கி, அதன் வாலைப் பிடித்துக் கறகற என்று இழுத்துச் சுற்றி, அதனால் மூர்ச்சையடைந்த யானையை அக்கொடியோன் வெகு தூரத்தில் எறிந்துவிட்டான்; மேலும், மற்றத் திக்குப்பாலர்களையும் துன்புறுத்தி ஓட்டிவிட்டான்; அக்கொடியோன் யக்ஷர்களையும், பூலோகத்து வசித்த மற்றவர்களையும், மற்றைச் சில பெரியமுனிவர்களையும் கொல்லுமாறு துரத்துங்கால், அந்தத் தபசிகள் அச்சமுற்றுக் காசிக்ஷேத்திரமோடி, அங்குள்ள இருஷிகளோடு சேர்ந்து மணிகர்ணிகாகட்டமடைந்து, விசுவநாதப்பெருமானுடைய மிகு சிரேட்டமாய அற்புதத்திருக்கோவிலுள்ளே போய் அங்கு சிவகைங்கரியத்தில் முயன்ற அன்பர்களோடு அவ்விசுவநாதப்பெருமானை வழிபட்டுக்கொண்டு மிகுதியும் பயத்தினேடிருந்தார்கள்; அக்காலையில் அக்கயாசுரன் வேகமாய் வந்து திருக்கோயில் வாயிலினின்று யாரும் பயங்கரமுறுமாறு அட்டகாசஞ் செய்தான்; அது கேட்ட தபசிரேட்டர்களெல்லாம் நடுநடுங்கி விசுவநாதப்பெருமானை ஆலிங்கனஞ் செய்து அறிவிழந்து மூர்ச்சையடைந்து போயினர்; அந்த க்ஷணத்திலே அப்பாவியாகிய அசுரன் திருவாயிலைக் கடந்து அவர்களையெல்லாம் கொல்லுமாறு விசுவநாதசுவாமிக்குச் சமீபத்திலே வர, எல்லோர் பாவங்களையும் நாசமுறச் செய்யும் அவ்விசுவநாதப்பெருமான் அநேககோடி சூரியப்பிரகாசமுடைய திருமேனிகொண்டாவிர்ப்பவித்து மிகுந்த தொனியோடு அக்கொடியோனை அதட்டினர், அத்தொனியைக் கேட்டு, அப்பாவியோ, சிவபிரான் (தமது) அடியார்களுக்கு வைரிகளாய் எய்தும் வீரர்களையும் சங்காரஞ் செய்பவர் என அறிந்தானேனும் மதிமயக்

கத்திலுலே விசுவநாதப்பெருமானோடு யுத்தஞ் செய்தான்; மகா வலிமையும், மகா சாரமும், மகாவில்லுங்கொண்ட அச்சிவபிரான் அக்கொடியோனுடைய தலையின்மீது தமது பொற்றிருவடியினால் ஓர் உதை உதைத்துவிட, உடனே அவ்வசுரன் அங்கே பூமியில் வீழ்ந்து சரீரமுழுதும் இரத்தம் தாரைதாரையாய்ப் பெருகப்பெற்றவனாய் மிகுந்த தொனியெழக் கதறினான்; அவ்வேளையிலே சிவபிரான் அவனது முரட்டுத்தோலை உரித்து எடுத்துக்கொண்டனர்; அவன் கதறிய சப்தத்தைக் கேட்டு, உமையம்மையார்தாமும் அச்சமடைந்தார்; சிவபிரானுடைய கோடிசூரியப்பிரகாசம் பொருந்திய அற்புதத்திருமேனியைப் பார்க்கச் சகல தேவர்களுடைய கண்களும் மழுங்கிப்போயின; பின்னர்ச் சிவபிரான் கொடிய அசுரனுடைய தோலினாலே தம்மைப் போர்த்துக்கொண்டார்; தேவர்களெல்லோர் கண்களும் அவரைப் பார்க்கத் திறமையுடையனவாக, அவரெல்லாம் பயமிலராய் யானைத்தோல் போர்த்த சிவபிரானைத் தரிசித்து அன்பினோடு வழிபட்டார்கள்; தபசிகளும் மூர்ச்சை தெளிந்தெழுந்து சிவபிரானையும் அவ்வசுரன் என்புகளையுமே கண்டு அடியார் துக்கம் தொலைத்துச் சுகமளித்த தேவாதிதேவராலே அவ்வசுரன் கொல்லப்பட்டான் என்று நிச்சயித்துப் பயமொழிந்து பிரமவிஷ்ணுக்கண்முதலிய சமஸ்த தேவர்களோடும் சிவபிரானைத் தோத்திரஞ்செய்துஜய! விஜயீபவ! சம்போ! மகாதேவ! என்றும் வணங்கினோர் துக்கந் தொலைப்பவரே! சகல ஜனங்களுக்கும் கர்த்தரே! சச்சிதானந்தமூர்த்தியே! கயாசூரன் தோலை நீர் போர்த்துக்கொண்டமையை எந்த அறிஞர்கள் வர்ணிக்கின்றார்களோ, அவர்கள் எப்படிப்பட்டவர்களிடத்தும் பயப்படாதிருந்து எங்கும் பூசிக்கற்பாலராயும் எவராலும் வந்திக்கற்பாலராயும் இருத்தல் வேண்டும் என்று பிரார்த்திக்க, விசுவேசுரப்பெருமான் அங்ஙனமாகுக என்று வரமளித்து அந்தர்த்தானமாயினர்; பிரமவிஷ்ணு முதலாயினோர் பரமானந்தமடைந்தார்கள்; சிவபிரான் சகல தேவர்க்கும் முனிவர்க்கும் துன்புறுத்திய கொடியோனாகிய அசுரனைக்கொன்று எல்லோரையும் காப்பாற்றிய ஞாபகம் எவர்க்குமிருக்குமாறு அக்கயாசுரனுடைய முரட்டு (யானைத்) தோலைத் தரித்துக்கொண்டமை பூஷணமேயன்றித் தூஷணமன்று" என்றது சங்கரசங்கிதை.

வன்னார்மாமதிசேர்சடையாய்வரைபோலவருங்
காரூராரனையின்றோலுரித்தாய்கறைமாமிடற்றாய்
தேனார்சோலைகள்சூழ்திருவான்மியூருறையு
மானாயுன்னையல்லாலடையாதென்றனாதரவே.

—ஞா, திருவான்மியூர்

கரியுரிசெய்துமைவெருவக்கண்டார்போலுங்
கங்கையையுஞ்செஞ்சடைமேற்கரந்தார்போலு
மெரியதொருகைதரித்தவிறைவர்போலு
மேனத்தின்கூனெயிறுபூண்டார்போலும்
விரிகதிரோரிருவரைமுன்வெகுண்டார்போலும்
வியன்வீழிமிழலையமர்விமலர்போலு
மரிபிரமர்துதிசெயநின்றளித்தார்போலு
மடியேனையாளுடையவடிகடாமே.

—நா, திருவீழிமிழலை.

கொத்தார்கொன்றைமதிசூடிக்கோணாகங்கள்பூணாக
மத்தயானையுரிபோர்த்துமருப்புமாமைத்தாலியார்
பத்திசெய்துபாரிடங்கள்பாடியாடப்பலிகொள்ளும்
பித்தர்கடவூர்மயானத்துப்பெரியபெருமானடிகளே.

—சு, திருக்கடவூர்.

---

(௮௬) சிவபெருமான் அந்தகாசுரனைச் சூலத்தாற் கொன்றமை.

पुरा ह्यन्धकनामासीद्दैत्यो लोकभयङ्करः।
तपसाऽथ प्राप्य वरवीर्यपराक्रमः।
त्रिजगद्वीपकेन्द्र विजित्य सहसा ह्ययम्।
निर्जिता विबुधा ब्रह्मविष्ण्विन्द्रा रणमूर्धनि।

[illegible]

புராபூதந்தகோ நாம்நா தைத்யோ லோககண்டக:।
தபஸா மஹதா ப்ராப்த பலவீர்ய பராக்ரம:।
த்ரிஜகத் பீடிதம் தேந விஜிதாஶ்ச ஸுராயுதி।
நிர்ஜிதா விபுதா ப்ரஹ்ம விஷ்ண்வாத்யாரணமூர்த்தநி।
ஸ்திரீவேஷதாரிணஸ்தேத நதுபும்ரூபமாஸ்திதா:।

க்ருதஸ்த்ரீவேஷ பாஷாஸ்ச சேருர் தேவா திவௌகஸ:।
புருஷாகார விபுதாநஹந் காரா க்ருஹாந்தரே।
புநஸ்ச வநிதாரூபாந்ஸஹதே ஸ்ம நசாஸுர:।
தே பீட்யமாநா தைத்யேந ஸ்த்ரீவேஷா அபி ஸந்ததம்
மந்தரம் ப்ராப்ய்ஷே ஸர்வே மஹாதேவ ப்ரியம் கிரிம்।
தத்ரதேவம் நமஸ்க்ருத்ய ஹரிப்ரஹ்மாதயஸ் ஸுரா:।
ததாஜ்ஞயாபவந்தேவீ ஸகீநாம் பரிசாரகா:।
தத்ராப்யநுபதம் தேவாநந்தகோ கிரிமாஸதத்।
தம் மந்தரகதம் தேவா: ஸ்த்ரீவேஷா விஷ்ணுபூர்வகா:।
வ்யஜிஜ்ஞபந்மஹேஸாய தௌராத்ம்யஞ்சாஸ்ய க்ருத்ஸ்நஸ:।
ததோ தேவோ மஹாதேவ: கருணம்ருதவாரிதி:।
தேவாநாம் ரக்ஷணயைத்தோ பைரவேஸ மசோதயத்।
பைரவோபிதத: க்ருத்தஸ்தமந்தகமஹாஸுரம்।
ஸூலப்ரோதம் விதாயாஸு ஸிவஸந்நிதிமப்யகாத்।
ஸிவேநாலோகிதோ தைத்யஸ்ஸூலப்ரோதோபி தத்க்ஷணம்।
நிவ்ருத்தமஸ்ய ஸகலம் கர்மஜாதம் ததாஸுரம்।
லப்யமாநஸ்ஸஸூலாக்ரே தேவந் த்ஷ்டாவ ஹ்ருஷ்டதீ:।
தத் ஸ்தோத்ரமுதிதோ தேவஸ்தம் வரேண ஸமாயுஜத்।
வவ்ரே ஸோபிவரம் தைத்யோ காணபத்யமநுத்தமம்॥

"முன்னொருகால் உலகத்தண்டகனுகிய அந்தகாசூரன் என்பான் ஒருவன் இருந்தான்; இவன் தபசினாலே மிகுந்த வீரிய பலபராக்கிரமங்களையுடையவன்; மூவுலகத்தையும் பிடித்துத் தேவர்களை யுத்தத்திலே செயித்தான்; பிரமவிஷ்ணு முதலாயினோர் அவனுக்கு யுத்தத்திலே தோற்றமையால் ஆண்வேஷம் விடுத்துப் பெண் வேஷம் பூண்டு தங்கட்குரிய பாஷையிற் பேசிக்கொண்டு இக்குக்கிடோறும் திரிந்தார்கள்; ஏனெனில், ஆண்வேஷத்தோடுள்ளாரை அவ்வந்தகன் பாடி காவலில் அடைத்து வைப்பது வழக்கம்; இவர்களும் பிடிக்கப்பட்டபோது சிவபெருமானுக்குப் பிரீதியாகிய மந்தரகிரியை அடைந்து நமஸ்கரித்துப் பிரமவிஷ்ணுக்களெல்லாம் உமையம்மையாருடைய சகிகளுக்குப் பரிசாரகர்களாயுற்றார்கள்; அப்போது அந்த அந்தகன் அத்தேவர்களைத் தொடர்ந்து மந்தா

கிரியை அடைந்தான்; அவன் மந்தரகிரியை அடைந்தமையையும் அவனது துர்நடக்கை முதலியவனைத்தையும் சிவபிரானுக்கு விஞ்ஞாபித்தார்கள்; கருணையிர்தவாரிதியாகிய சிவபிரான் தேவர்களைக் காக்கமுயன்று (தம்மினின்று வேறுறாத) பைரவருக்கு ஆஞ்ஞாபித்தார்; பைரவர் (தமது கணங்களோடு போய்) கோபங்கொண்டு அந்தகாசுரனைச் சூலத்திற் குத்தி எடுத்துக்கொண்டு சிவசந்நிதிக்குக் கொணர்ந்தார்; சூலத்திலே கோக்கப்பட்டிருந்தும் மகாதேவரைத் தரிசித்தமாத்திரத்தில் அவன் கன்மத்தாலாய பாவமெல்லாம் ஒழிந்துபோக, அவரைத் தோத்திரஞ் செய்தான்; அந்தத் துதிகளாற் பிரீதிகொண்டு அவனை வரம் கேட்பாயாக என அருள, அவன் வரம் வேண்ட அவனுக்கு உத்தமமாகிய காணபத்தியத்தைக் கொடுத்தருளினர்" என்று ஸ்காந்தபுராணம் கூறுகின்றது.

அந்தகனையயிற்சூலத்தழுத்திக்கொண்டா
ரருமறையைத்தேர்க்குதிரையாக்கிக்கொண்டார்
சுந்தரனைத்துணைக்கவரிவீசக்கொண்டார்
சுடுகாடுநடமாடிடமாக்கொண்டார்
மந்தரநற்பொருசிலையாவளைத்துக்கொண்டார்
மாகாளன்வாசல்காப்பாகக்கொண்டார்
தந்திரமந்திரத்தராயருளிக்கொண்டார்
சமண்டீர்த்தென்றன்னையாட்கொண்டார்தாமே.

—நா, தனித்திருத்தாண்டகம்.

அயனையனங்கனையந்தகனைச்சந்திரனை
வயனங்கண்மாயாவடுச்செய்தான்காணேடீ
நயனங்கண்மூன்றுடையநாயகனேதண்டித்தாற்
சயமன்றோவானவர்க்குத்தாழ்குழலாய்சாழலோ.

—திருவாசகம்.

(கூ0) கஜமுகக்கடவுள் கயமுகனைக் கொன்றமை.

4470.

ததேதி கரிணீந்த்ரம் ஸ்ரீ ஹர்ஷயித்வா ஸ்வசீலதோ।
ஸ்வயம் ச்சித்வா கஜோ பூத்வா ரேமே தாம் ராமயந்முதா।
ததா கஜமுகோ தேவோ தேவேந்த்ரஸ்யாஸ்ய ஜாயத।

ருத்ர. ௨௬: ௩௬—௪௨.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

4296. ருத்ர: ௨௭. ௪௬—௪

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

ருத்ர: ௨௭: ௨௩—௨௭.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

தமேதி கரிணீரூபம் க்ராஹயித்வா ஸுரீமிமாம்।
ஸ்வயம் மதங்கஜோ பூத்வா ரேமே தாம் மாகதஸ்ததா।
ததா கஜமுகோ கோரோ தைத்யஸ்தஸ்யாமஜாயத।
சசார தப ஸாஹஸ்ரவர்ஷாந்தந்தப உத்தமம்।
ஸம்பபூவாஸ்ய தேஹோபி வஜ்ரவச்சங்கராஜ்ஞயா।
ப்ரஸந்நோஹம் ப்ரதாஸ்யாமீத்யேவமாஹ பிவோ ஸுரம்।
தச்ச்ருத்வா தேவதேவஸ்ய வசநம் ஸுரகாதகஃ।
யதிப்ரஸந்நோ பகவந் யதி தாஸ்யஸி மே வரம்।
ஹரீந்த்ரப்ரமுகா தேவாஸ்ஸமரம் ப்ராப்யமாமகம்।
பராஜிதா பவந்த்விப விஹ்மம் கோமாயுஷண்டவத்।
ததாகதாஸிதிந்த்ராத்யா தேவாஸ்தத்ர ஸமாகதாஃ।
ப்ரணம்யதண்டவத் பத்தபாணயஸ்தத்புரஸ்திதாஃ।
தாந்வீக்ஷ்ய தேவாநஸுரஃ ப்ரோவாசாயம் வசஸ்ததா।
அத்ய ப்ரப்ருதி யே தேவா யூயம் ஸர்வேப்யதந்த்ரிதாஃ।
ப்ரணம்ய த்ரிப்ரகாரம் மாம் க்ருத்வா ச கருட்டநம்।
கௌ ஶ்ரவணயோஃ க்ருத்வா வ்யத்யாஸேந புநஃ புநஃ।
நமநோந்நமநம் க்ருத்வா சாஜ்ஞயா மம கச்சத।
இத்யுக்த்வா ப்ரேஷயாமாஸ ஸுராந் கஜமுகாஸுரஃ।
ததாஜ்ஞயா ஸுராஸ்ஸர்வே ததா தம் தேவிஷேவிரே।
ஶம்போ ஸர்வஜ்ஞ விஶ்வேஶ பக்தாநாம் பயபஞ்ஜந।
ஸுராந்கஜமுகேநேதாநஸுரேண திவாநிஶம்।
பாத்யமாநாந் மஹாதேவ பரிவோத்பாத்யாத்மஜம்பரம்।
பாஹிஸர்வா மரேஶாந ஶரணாகதவத்ஸல।
இதி தஸ்ய வசஃ ஶ்ருத்வா ததேதி பரமேஶ்வரஃ।
ப்ரேஷயாமாஸ தாந்ஶம்புஃ ப்ரணதார்த்திப்ரபஞ்ஜநஃ।
ததோ தேவாஶ்ச ஸந்துஷ்டாஃ ப்ரணம்ய ஸ்வாஸ்பதம் யயுஃ॥

—ஸ்காந்தபுராணம்.

"இவ்வாறு அந்த (அசுர) ஸ்திரீயின் வசனத்தை (மாகத) முனிவர் கேட்டு, மிகுதியும் மகிழ்ச்சிகொண்டு அங்ஙனமாகுக என்று கூறி, அவளைப் பெண் யானைவடிவங்கொள்ளச் செய்து

தாமும் ஓர் யானையாகி அவளோடு சேர்ந்தபோது, அவளிடத்தில் மகாகோரனாகிய கஜாமுகாசூரன் உற்பத்தியாயினான்; இந்தக் கயமுகாசூரன் இங்ஙனம் பதினாயிரம் வருஷம் சிரேஷ்டமாகிய தவத்தைச் செய்துவருங்கால், அவ்வசுரனுடைய தவத்தைக் கண்டு இந்திரன்முதலிய தேவர்களெல்லாம் தத்தம் மனசில் மிகுந்த பயமடைந்தவர்களாய் ஓட்டம் பிடித்தார்கள்; அப்போது கருணாமூர்த்தியாகிய சிவபெருமானுடைய திருவுள்ளத்திலே தயையுண்டாகி அவரது ஆஞ்ஞையினால் அவனது தேகம் வச்சிரம் போலாயிற்று; சிவபிரான் அக்கயமுகனை நோக்கி மங்களகரம் பொருந்திய அசுரனே! உனக்கு வேண்டிய வரத்தை விரைந்துகேள், பிரசன்னராகிய யாம் உனக்கு இப்போது அருளுகின்றோம் என, அத்தேவகாதகன் தேவாதிதேவருடைய திருவார்த்தையைக் கேட்டவுடன், சுவாமீ! தேவரீர் எனக்குப் பிரசன்னராகி வரம் கொடுப்பது மெய்யேயானால் இந்திரன்முதலிய தேவரெல்லாம் என் முன்னிலையிற் சிங்கத்துக்கு எதிர்ப்பட்ட நரிக்கூட்டம் போலத் தோல்வியடைதல்வேண்டும் என்றான்; (கஜமுகாசூரன் அங்ஙனம் சிவபெருமானிடத்தில் வரம் பெற்றுக்கொண்டான்); இங்ஙனம் அரசாண்டு வருகையில் இந்திராதிதேவர்கள் வந்து தண்டம்போல விழுந்து பணிந்து அவன்முன் கைகட்டிநின்றார்கள்; அப்போது அவன் அவர்களை நோக்கிச் சொல்கின்றான்; தேவர்களே நீங்கள் எல்லோரும் இன்றுமுதற் சிறிதும் சோம்பலின்றி (அட்டாங்க பஞ்சாங்கதிரியாங்கமென்னும்) பிரகாரமாக நமஸ்காரம்பண்ணிக் கைகளால் (நெற்றியிற்) குட்டி, இரு கைகளாலும் மாறுறக் காதுகளைப் பிடித்துக்கொண்டு தோப்புக்கண்டம் போட்டு எனது ஆஞ்ஞாப்பிரகாரம் போகவேண்டும் என்றுரைத்துக் கஜமுகாசூரன் தேவர்களை அனுப்பினான்; பின் அப்படியே அவன் ஆஞ்ஞைப்படி தேவர்களெல்லாம் மிகுந்த கவலையோடு நெடுங்காலமாகச் சோம்பலின்றி அவனைச் சேவித்திருந்தார்கள்; (விஷ்ணுவானவர் கஜமுகாசூரன் சங்கதியனைத்தையும் சிவபிரானுக்கு விஞ்ஞாபனஞ்செய்து பிரார்த்திக்கின்றார்) ஓ சம்புவே! சர்வஞ்ஞரே! விசுவேசரே! அடியார் பயத்தைத் தொலைப்பவரே! மகாதேவரே! சர்வதேவேசுவரரே! சரணமடைந்தாரிடத்து அன்புடையவரே! கயமுகாசூரனால் இராப்பகலாய் வாதிக்கப்படுகின்ற தேவர்களைச் (சுவாமீ!) ஓர் சிரேட்டராகிய புதல்வரைப் பெற்று இரக்ஷித்தருளல் வேண்டும் என, அதனைக் கேட்டு அங்ஙனமே ஆருக என்று வந்

திப்போர் கவலையைத் தீர்த்தருளுஞ் சிவபிரான் அவர்களை அனுப்பினார்; பின்னர் அத்தேவர்கள் அவரை நமஸ்கரித்துக்கொண்டு மிகுமகிழ்வினோடு தங்கள் பதவிகளை அடைந்தார்கள்" என்றும்,

[illegible]

ஹகார மஜ்ஜேஷ்வம் வொரம் மெஷத்ரெஶ்ரேஷ்டம் ஸர்வாஶ்ரஹ்ஷ|
ஸர்வர்நிஷ்வண்ணேவா நித்ய வாருயகவேதஷிதஃ|
4328. ருத்ரகா. உஎ:க-கஉ
ஶண்ணாய ஹெரவஸகஸஹக்ஷாநாவிஷ்டாயக|
ஶண்ணா நாஶ்ஷ்ா ஶண்டமதிம் ஶரண்யம் ஶரண்மதாஃ|
ரக்ஷரக்ஷ ஸர்வா ஸ்நவா ஹநகவா மஜ்ஜேவாவஸ்வ|
ஷ்ராஶ்ரதநா ஶண்ணாயீஶ வாஸ்யோ நா நஹநிஶஷ|
இதி தேஷாம் வசஃ ஶ்ருத்வா தயெதக்ஷா ஶண்ணாஶ்ணீஃ|
4338. ருத்ரகா. உஅ:ரு-ள.
வேதம் மஹாஹ்ராஶம் வ்ரவ விஶ்வரூப ஜவாக|
தரேமேம் ஸுராகண்ட்ஷ மஜவகோ ஹெரவஸ்ரஃ|
ரயேராஹ்ய வெஶந வதரம்ஶவமெஹஸஹ|
4348. ருத்ரகா. உஅ:கக, கஉ
ஶண்ணாஸ்யக்ஷஸதா ஜ்ஞாகவா தஶஸவயஜயா|
நமெநாஷ ஷஜமேதவிஷமெஶ்ஷிகவா ஹெராவஶஃ|
ஸ வாரேஜஹ்யத் வெஶந ஹிகொராஸ்வஸ்ய நிஷ்ரஷ|
க்ஷணாகஸ்வாஷ ஷிஷகாம்ஸ்வாயேள ஷ்ஸாகவா தஸ்யகரம் யயெள|
உத்ஸ்ருஜ்ய தெஹஹேஸர்ஸஷாதம் ராயீராஷ்தஷ|
ஜஶ்ராஹ தெஹஹேதஷம் வெஷிகஸ்ய வெஹாஷதஷ|
4348. ருத்ரகா. உஅ:ருரு-ருள.
ஞ்ரஹ்யாவிஷ்ணாஸ்யகேஷாடகஷ்யதம் ஸ்வாஹநஷ॥
ருத்ரகா: உஅ:ருக.

அத தக்ரமஹாதேவோ விசித்ரம் வீக்ஷ்யகாநநே।
சித்ரமண்டபமாப்யாயந் தத்ரத்யம் கிரிஜாஸக:|
ரத்நஸிம்ஹாஸநாரூடோ தேவ்யாஸஹ மஹேஶ்வர:|
சித்ரபித்திஸ்திதாந்யத்ர சித்ராணி பராயமுதா।
விலோக்ய ப்ரணவஞ்சாத்ர க்ரமாத்தமவலோகயத்|
ஶம்புநா வீக்ஷ்ணாத்தஸ்மாத்ப்ரணவாத் கஜதம்பதீ।
ஸமுத்பந்நௌ ததாந்யோந்யாம் ரேமாதே தௌ முதாந்விதே|
வீக்ஷ்ய தௌ பராயா ப்ரீத்யா கௌரீசாஶ்சர்யஸம்யுதா|
பப்ரச்ச ஸா மஹாதேவம் கிமேததிதி ஶங்கரீ|
கல்யாண்ஈ தாவகீம் வித்தி க்ருபாம் லோகோபகாரிணீம்।

இத்யுக்த்வா ப்ரணயாத் தெள தாவவாலோகயதாமுபௌ।
ததா கஜமுகஸ்தத்ர ப்ராதுராஸீத்கணேஸ்வர:।
சண்டார்க்ககோடிஸங்காஸ: க்ரீடதோர்கஜயுக்மயோ:।
ஸோயம் விநாயகோ தேவம் தேவீமபிமுதாததா।
ப்ரணநாம மஹாஸத்வோ தண்டவத் ப்ரஸ்ரயாந்வித:।
தம் ஸமாலிங்க்ய சாக்ராய மூர்த்நி கௌரீமஹேஸ்வரௌ।
ஸ்வமங்கமாரோபயதாம் தெள ததா தம் கணேஸ்வரம்।
தத: ப்ராஹ வசஸ்ஸம்புர் கணேஸம் க்ருபயா ஸுதம்।
த்வாம் யே நமந்தி புருஷா மதநந்யம் மமாத்மஜம்।
தேஷாம் பவந்த்வபீஷ்டாநி ஸீக்ரம் நிர்விக்நபாவத:।
த்வம் கணாநாமஸேஷாணாம் பதிராத்யோ மதாஜ்ஞயா।
ஸ்வகார்யாதெள ஸமப்யர்ச்ய ஸ்வாபீஷ்டம் ப்ராப்நுயாஜ்ஜந:।
ஹத்வா கஜமுகம் கோரம் தைத்யஸ்ரேஷ்டம் ஸுராத்ருஹம்।
ஸுராந் விஷ்ணுமுகாந் புத்ர பாலயத்வ மதந்த்ரித:।
கணநாத மஹாஸத்வ பக்தாநாமிஷ்டதாயக।
கணாநந்த்வாகணபதிம் ஸரண்யம் ஸரணம் கதா:।
ரக்ஷரக்ஷ ஸுராந் ஸர்வாந் ஹத்வா கஜமுகாஸுரம்।
துராத்மநாகணைஸ்ஸ பாத்யமாநாநஹர்நிஸம்।
இதி தேஷாம் வசஸ்ஸ்ருத்வா தஸ்தேத்யுக்த்வா கணக்ரணீ:।
மதங்க நகராப்யாஸம் ப்ராப விக்நேஸ்வரோ ஜவாத்।
ததாகமம் ஸமாகர்ண்ய கஜவக்த்ரோ மஹாஸுர:।
ரதமாருஹ்ய வேகேந சதுரங்கபலைஸ்ஸஹ।
கணத்யக்ஷஸ்ததோ ஜ்ஞாத்வா தமஸஸ்த்ரவதந்ததா।
நுநோத தந்தமேதஸ்மிந்நக்ரே சித்வா மஹாபல:।
ஸ ஸமப்யேத்ய வேகேந பித்வோரஸ்தஸ்ய நிஷ்டுரம்।
க்ஷணாத் ஸ்வாதுதகாம்போதெள ஸ்நாத்வா தஸ்ய கரம் யயௌ।
உத்ஸ்ருஜ்ய தேஹமஸுரஸ்ததா தம் ருதிராப்லுதம்।
ஜக்ராஹ தேஹமதுலம் மூஷிகஸ்ய மஹோந்நதம்।
ஆருஹ்யாஸ்மிந் கணாத்யக்ஷா கல்பயத்தம் ஸ்வவாஹநம்॥

—தக்ஷகாண்டம்.

"பின்னர்ச் சிவபிரான் வனத்திலேயுள்ள விநோதங்களைப் பார்த்துக்கொண்டே சித்திரமண்டபத்தை அடைந்தருளினார்; பின்பு உமாதேவியாரோடுகூடச் சிவபிரான் இரத்தினசிங்காசனத்தில் வீற்றிருந்து சித்திரச்சுவர்மீதுள்ள சித்திரங்களைச் சந்தோ

ஷத்தோடு பார்க்குங்கால் அங்குள்ள ஓர் பிரணவத்தைப் பார்த்தார்; பார்த்தமாத்திரத்தில் அப்பிரணவத்தினின்றோர் ஆண்யானையும் பெண்யானையும் உண்டாகி அவ்விரண்டும் வெகுசந்தோஷத்தோடு கிரீடித்தன; அதனைக் கண்டபோது உமையம்மையார் மிகுதியும் ஆச்சரியங்கொண்டு சிவபெருமானை நோக்கி இது என்னை என்று வினவச் சிவபிரான் கல்யாணி! இது லோகோபகாரமாய் உனது கிருபை என்றே அறிதி என்று அருள, அவ்விருவரும் அவ்வியானைகளை அன்பினோடு பார்த்தார்கள்; அப்போது அவ்விரு யானைகளுஞ் சேருங்கால் ஆங்குக் கோடிசூரியப்பிரகாசமுடைய யானை முகத்தினராகிய விநாயகமூர்த்தி ஆவிர்ப்பவித்தார்; அப்போது மகாபலபராக்கிரமசாலியாய விநாயகர் உடனே ஸ்ரீபார்வதி பரமேசுவரர்களை மகாவிநயத்தோடு தண்டாகாரமாக நமஸ்கரிக்க, அவ்விருவரும் அவரை அணைத்து உச்சிமோந்து அக்கணராஜனை மடிமீதுவைத்துக்கொண்டார்கள்; பின் சிவபிரான் கிருபையோடு புத்திரராகிய கணேசரை நோக்கிக் கூறுகின்றார்; குழந்தையே! எம்மைப்பார்க்கினும் வேறில்லாத எமது புத்திரனாகிய உன்னை வழிபடும் புருஷர்க்கு யாதும் இடையூறு எய்தாது அவர்கள் வேண்டுகை விரைந்து பயன் அடையற்பாற்று; நமது ஆஞ்ஞாப்பிரகாரம் நீயே நமது கணங்களுக்கெல்லாம் முதன்மையான தலைவன்; அவரவர் முயற்சிக்கும் காரியாரம்பத்தில் உன்னை வழிபடுபவர்களாயின் காரியங்கள் முற்றப்பெறுவார்கள்; புத்திர! அசுரர்களுள்ளே சிரேஷ்டனும் தேவர்களுக்குத் தீங்குவிளைப்போனுமாகிய கொடிய கயமுகாசூரனோடு யுத்தஞ்செய்து விஷ்ணுமுதலிய தேவர்களை விரைந்து காத்தருள்வாய் என்றருளினார்; அதன்மேல் தேவர்கள் பயமிலராகிக் கூறுகின்றார்கள்: அடியார்கள் வேண்டியதை அருளும் மகவலிமைபூண்ட கணநாதா! கணங்களுக்கெல்லாம் கணபதியும் சரணமடையற்பாலருமாகிய தேவரீரைச் சரணடைந்தோம்; கணேசா! கயமுகாசூரனைச் சங்கரித்து அக்கொடியோனால் இராப்பகலாய் வாதிக்கப்படுகின்ற இந்தத் தேவர்களையெல்லாம் இரக்ஷித்தருளல்வேண்டும் இரக்ஷித்தருளல்வேண்டும் என, மகாகணபதியானவர் அவர்கள் கூறியதைக் கேட்டு அங்ஙனமாகுக என்றார்; விநாயகக்கடவுள் மகாவேகத்தோடு மதங்கநகரை அடைந்தார்; உடனே கயமுகாசூரன் அவர் வருகை அறிந்து இரதமேற்கொண்டு சதுரங்கசைன்னியத்தோடு (யுத்தகளத்துக்கு) வந்தான்; பின்னர்ப் பலமுடையராகிய கணேசர் (கயமுகாசூரன்) சத்திரங்களாற் கொல்

லப்படமாட்டான் என்று அறிந்து, தமது ஓர் கொம்பின் நுனியை முறித்து அவன்மீதெறிய அது மகாவேகத்தோடு வந்து அவனது கடினமார்பைப் பிளந்து, ஓர் நொடிப்போதுள் நன்னீர்க்கடலில் ஸ்நானஞ் செய்து, அவர் திருக்கரத்தை அடைந்தது; அவ்வசுரன் இரத்தம் தோயப்பெற்ற அத்தேகத்தை விடுத்து ஒப்பில்லாத மகா உன்னதமுற்ற மூஷிகதேகத்தை எடுத்தான்; அம்மூஷிகமானது மகாவேகத்தோடு கணேசமூர்த்தியார் அருகிற் செல்ல, அவர் அதன்மேல் ஏறி அதனைத் தமது வாகனமாகக்கொண்டார்."

கைவேழமுகத்தவனைப்படைத்தார்போலுங்
கயாசுரனையவனாற்கொல்வித்தார்போலுஞ்
செய்வேள்வித்தக்கனைமுன்சிதைத்தார்போலுந்
திசைமுகன்றன்சிரமொன்றுசிதைத்தார்போலு
மெய்வேள்விமூர்த்திதலையறுத்தார்போலும்
வியன்வீழிமிழலையிடங்கொண்டார்போலு
மைவேள்வியாறங்கமானார்போலு
மடியேனையாளுடையவடிகடாமே.

—நா, திருவீழிமிழலை.

(கக) பிரமாவின் சிரசைக் கொய்தமை.

யோ ப்ரஹ்மண꞉ பஞ்சவக்த்ரஹந்தா தஸ்மை ருத்ராய நமோஸ்து।

யோ பரஹ்மணஃ பஞ்சவக்த்ரஹந்தா தஸ்மை ருத்ராய நமோஸ்து।

"எவர் பிரமாவின் ஐந்தாம் சிரசைச் சிதைத்தாரோ, அந்தச் சிவபெருமானுக்கு நமஸ்காரம்" என்று சரபோபநிடதமும்,

4138. 3 அத்ய 1—16.

மஹத் விஷ்ணும் ப்ரஹ்மாணம் ஸ்ருஷ்ட்வா தபஸ்விநம்।
ப்ரஹ்மணோ ஹ்ருதம் ஸர்வம் ப்ரஹ்மாணம் ப்ரஹ்ம ரூபம்।
ஏகதஸ்தேஜஸா தேவம் ஸம்யக் ப்ரஹ்மணஸ்ஸ்வயம்।
ததா வ்யாஹ்ருதி தேவதேவேஸ தேவஸம் கோபவிஹ்வல꞉।
ஸுவிராஸீத்ததா ஸீர்ஷம் தேவாவஸ்யம்ஸுராஜ்ஞயா।

[illegible]

ஸமுத்தாய ததஶ்ஶீக்ரம் ப்ரஹ்மா ஜ்ஞாத்வாஸ்ய வைபவம்।
ததோ மோஹ: ப்ரணம்யைநம் துஷ்டாவ பயகம்பித:।

கதே விஷ்ணௌ ப்ரணம்யேஶம் க்ஷீராப்திம் தரஸா பயாத்
மஹாமோஹவஶாத் ப்ரஹ்மாத்வப்ரணம்ய மஹேஶ்வரம்।
ஊர்த்வவக்த்ரேண தேவேஶம் நிந்தயாமாஸ மூடதீ:।
ததா ஸஸ்மார தேவேஶோ பைரவம் கோபவிஹ்வல:।
ஆவிராஸீத்ததாஶீக்ரம் பைரவஶ்ஶங்கராஜ்ஞயா।
பஸ்மோத்தூளித ஸர்வாங்கோ புஜங்ககடிஸூத்ரவாந்।
ஶிம்ஜந்மஞ்ஜீரநிநத: கபாலாவலிபூஷித:।
பிப்ராண: பரமம் ஶூலம் பாஶம்டமருகந்ததா।
வ்ருத்த கோர ஸ்புரந்நேத்ரோ மஹாகோரகபாலவாந்।
ரக்தாபிர் ஶிக்ருதாபிஶ்ச ஜடாபிரதிபீஷண:।
அதிப்ரகாஶஸர்வாங்கோ மந்தஸ்மித மநோஹர:।
ப்ரஹ்மாண்டாந்யகிலாந்யாஶு பக்ஷிதுஞ்சபரிப்ருட:।
தாத்ருஶோயம் மஹாதேவம் ப்ரணம்ய ப்ரஶ்ரயாநத:।
கர்த்தவ்யம் கிம்மயா ஸ்வாமிந் நாஜ்ஞாபய ஜகத்ப்ரபோ।
க்ருபாம் குரு மயீஶ த்வம் கிங்கரே தவ ஶங்கர।
இத்யுக்தவந்தம் தம் வீக்ஷ்ய ப்ராஹ வாசம் மஹேஶ்வர:।
மந்மாயா மோஹிதஸ்யாஸ்ய ப்ரஹ்மணோ மத்விநிந்தகம்।
சித்வா ஶிரஸ்த்வம் தேவர்நாம் விஷ்ண்வாதிநாஞ்சகர்விணாம்।
ருஷீணாமபி ரக்தாநி பிக்ஷாவ்யாஜேந ஶீக்ரத:।
க்ருஹீத்வா புநருஜ்ஜீவ்ய ம்ருதாநப்யத பைரவ।
கத்வா ஸ்வபவநே திஷ்ட ப்ரஹ்மாண்டோர்த்வம் மதாஜ்ஞயா।
தேவதாநாம்ருஷீணாஞ்ச ரக்ஷாம் குர்வந்நதந்த்ரித:।
இதிஸம்ப்ரேஷயித்வைநமந்தர்த்திமகமச்சிவ:।
வ்ருத்தாந்தமேதத் விஜ்ஞாய விசாரேண ஸ்திதோ ஹரி:।
ததஸ்து பைரவ: கோபாத் ப்ரஹ்மண: பஞ்சமம் ஶிர:।
சிச்சேத ஸுமஹாடோப: கராக்ரேண பீஷண:।
ஸ பபாத மஹீப்ருஷ்டே ப்ரஹ்மா ரக்தஸ்ரவாப்லுத:।
மூர்சாஹச க்ஷணேநாயம் ருதிரௌகே ப்ரஜாபதி:।
ஶோஷயித்வாஸ்ய ரக்தாநி பைரவோ நிடிலேக்ஷண:।
புநருஜ்ஜீவயாமாஸ பைரவஸ்தம் க்ருபாத்ருஶா।
ஸமுத்தாய் ததஶ்ஶீக்ரம் ப்ரஹ்மா ஜ்ஞாத்வாஸ்ய வைபவம்।
ததோமோஹ: ப்ரணம்யைநந்துஷ்டாவ பயகம்பித:॥

"விஷ்ணுவானவர் சிவபிரானை நமஸ்காரம்பண்ணிவிட்டு மிகுந்த பிரீதியோடு பாற்சமுத்திரத்தை அடைந்தவுடனே, பிரமா மிகு மதிமயக்கங்கொண்டு சிவபிரானை நமஸ்காரம் பண்ணாது புத்திகெட்டுத் தமது (ஐம்முகங்களுள்) மேற்புறமுகத்தினால் சிவபிரானை இகழ்ந்தார்; அப்போது சிவபிரான் கோபாவேசங்கொண்ட பைரவரைத் தமது திருவுள்ளத்தில் நினைக்க, அவர் தம் மேனியெங்கும் விபூதி பூசி, சர்ப்பத்தை அரைஞாணாகக்கொண்டு, ஒலிக்கும் பாதச்சதங்கைகள் ஜல் ஜல் என்று சப்திக்க, மண்டையோட்டு மாலைகளைப் பூண்டு, பாமாகிய சூலம், பாசம், உடுக்கு என்பவை தரித்து வட்டமாய், பயங்கரமாய், பிரகாசிக்கும் கண்களையுடையராய், அதிகோரமாய மண்டையோட்டுக் கப்பறையைக் கையிற் பிடித்து, இரத்தநிறமாய் விகாரமாயுள்ள சடைகளையுடைமையாற் பயமுறுத்தத்தக்கவராய்த் திருமேனியெங்கும் மிகுந்தபிரகாசமுடையராய், புன்சிரிப்புடையராய், அகிலபிரமாண்டங்களையும் ஓர் நொடிக்குள்ளே கபளீகரணம் பண்ணிவிடத்தக்க திறமைகொண்டவராய், அவருக்குமுன்னே தோன்றினார்; அப்போது அப்பைரவமூர்த்தி சிவபிரானைச் சற்காரத்தோடு வழிபாடு செய்து, சுவாமீ! என்னாற் செயற்பாலதாகிய பணி யாதென்று கருணைகூர்ந்து அடியேற்கு ஆஞ்ஞைசெய்தருளல்வேண்டும் என்று விண்ணப்பஞ் செய்யச் சிவபிரான் அந்த வைரவரை நோக்கி, இங்ஙனம் கூறுவாராயினார்; பைரவ! எனது மாயையினாற் புத்திப்பிரமைகொண்டு என்னை இகழ்ந்த பிரமாவின் ஊர்த்துவசிரசைக் கண்டித்தும், மிகுந்த கர்வங்கொண்ட விஷ்ணுமுதலிய தேவர்கள் இருடிகளாயினோருடைய இரத்தங்களையெல்லாம் பிக்ஷை என்று வியாஜத்தினால் வாங்கிக்கொண்டும், அவர்கள் அதனால் இறந்துவிடினும் அவர்களை உடனே உயிர்ப்பித்துவிட்டும், நமது ஆஞ்ஞையினால் இப்பிரமாண்டத்துக்கு மேற்புறத்துள்ள உனது ஸ்தானத்துக்குப் போய் அங்கிருந்தவாறே தேவர்களையும் இருடிகளையும் ஜாக்கிரதையோடு இரக்ஷித்துக்கொண்டு இருப்பாயாக என்று அவரை அனுப்பிவிட்டு, சிவபிரான் அந்தர்த்தானமாயினார்; அப்போது இவற்றையெல்லாம் விஷ்ணு அறிந்து மிக்க மனவிசாரங்கொண்டிருந்தனர்; பின்னர் வைரவர் கோபத்தினால் மிகுந்த அட்டகாசம்பண்ணி மகாபயங்கராகி அப்பிரமாவின் ஐந்தாவது தலையைத் தமது நுனிநகத்தினாற் கிள்ளிவிட்டபோது இரத்தவெள்ளம் பெருக, அந்த இரத்தப்பிரவாகத்துள்ளே பூமி

யில் நொடிப்போதிலே வீழ்ந்து மூர்ச்சையடைந்தனர்; பின்னர் நெற்றிக்கண்ணுடைய அப்பைரவர் பிரமாவின் இரத்தத்தை வற்றச்செய்து பின்னர்த் தமது கிருபாவீக்ஷணத்தினால் அவரை உயிர்ப்பித்துவிட்டார்; பின்னர்ப் பிரமா விரைந்து மூர்ச்சைதெளிந்தெழுந்து அவர் மகிமையை அறிந்து பயத்தினால் நடுக்கமுற்று நமஸ்காரஞ் செய்தார்" என்று சங்கரசம்ஹிதையும் கூறுகின்றன.

அறங்கிளருநால்வேதமாலின்கீழிருந்தருளியமரர்வேண்ட, நிறங்கிளர்செந்தாமரையோன்சிரமைந்திலொன்றறுத்த நிமலர் கோயில், திறங்கொண்மணித்தரளங்கள்வரத்திரண்டங்கெழிற்குறவர்சிறுமிமார்கண், முறங்களினாற்கொழித்துமணிசெலவிலக்கிமுத்துலைப்பெய்முதுகுன்றமே.

—ஞா, திருமுதுகுன்றம்.

பண்டங்கறுத்ததொரார்கையுடையான்படைத்தான்றலையை
யுண்டங்கறுத்ததுமூவரோடொடைவைதானறியும்
கண்டங்கறுத்திடறுடையான்கண்டியூரிருந்த
தொண்டர்பிரானைக்கண்டூரண்டவானவர்தொழுகின்றதே.

—நா, திருக்கண்டியூர்.

சங்கரன்காண்சக்கரமாற்கருள்செய்தான்காண்
டருணேந்துசேகரன்காண்டலைவன்றான்கா
ணங்கமலத்தயன்சிரங்களைந்திலொன்றை
யறுத்தவன்காணணிபொழில்சூழையாற்றான்கா
ணெங்கள்பெருமான்காணென்னிடர்கள்போக
வருள்செய்யுமிறைவன்காணிமையோரேத்துஞ்
செங்கமலவயல்புடைசூழ்திருவாரூரிற்
றிருமூலட்டானத்தெஞ்செல்வன்றானே.

—நா, திருவாரூர்.

அருமலரோன்சிரமொன்றறுத்தீர்செறுத்தீரழற்சூலத்திலந்தகனைத்; திருமகள்கோனெடுமால்பலநாள்சிறப்பாகியபூசனைசெய்பொழுதி, லொருமலராயிரத்திற்குறைவானிறைவர்கவோர்கண்மலர்சூட்டலுமே, பொருவிறலாழிபுரிந்தளித்தீர்பொழிலார்திருப்புத்தூர்ப்புனிதனீரே.

—சு, அரிசிற்கரைப்புத்தூர்.

---

(௯௨) வைரவர் இரத்தப்பிக்ஷை யேற்றமை.

க்ஷத்வா தந்தம் வேதேஸம் தாரதஸ்ய தே விபோ।
பாந்தரா பவதா வ்யாதிஷ்டோ ஜ்ஞா நந்தீஶ்வராஜ்ஞயா।
தஸ்மாத்தம் தர்ஶநீயம் வா தீவ்ரஸ்ய யாநிதே।
கஸ்யம் தக்த்வா மஹேஶ பிக்ஷாபாத்ரம் பவத்கரே।
அனேனைவ கபாலேன ரக்தபிக்ஷாம் க்ருஹாண மே।
இத்யுக்த்வா ப்ரஹ்ம நாராயணம் பாநம் பாநார்தம் விபுஃ।
தமேதி தத்ர்ய ஸீகா யந்த்ர்ய ப்ருஷ்டேய தேஹாரவதீ தாக।
தத்ஸ்வஸஜ்ஜே ஸஶூலாக்ராணி விஷ்வக்ஸேநம் பைரவஃ க்ஷணாத்।
பாதாபஹ்ரம் காலவேகம் தயா நிர்பேதனேந ஸோ।
அந்த்யாந்த்ருதிவரா நீஜோ ஸஞ்சதஸேந நாவதீந்தவி। [ரவஃ।
ஸஞ்சேதஸேந தேகெஷ்வோ நந்தேயந்ந துரஸம் காலஸங்ஹே
ரக்தபிக்ஷா ஸ்ஸேநாயம் ஸஞ்சோகம் ஸஞ்ஜரஸ்தயா।
காந்தேந ச ஸமேதேந பதேந ஸ்வஸ்திவி।
பாதாலே நாமசோகேஷு தேவலோகே ததேவ ச।
தஸ்யஸீதாநாம் தேவாநாம் ருஷீணாம் மஹாத்மநாம்।
ஜக்ராஹ தேஷாம் ரக்தாநி கபாலேனைவ பைரவஃ।
த்ருஷ்டா நவீ தஸ்மா கார்யஞ்ஜீவஸாராஸ்ய ஶ்ரீமதா।
அபிக்யா ஸர்வதோ பிக்ஷாம் விஷ்ணோர்லோகம் ஸமாயயௌ।
தத்ர ஸஞ்சேதநாநி பாராவாரணீ தஸ்மா ஸ்ருஶ்ய।
ஶூலாக்ரே ப்ரோதமாஹாரம் விஷ்வக்ஸேந மஹாஸ்தம்।
ராத்ரியதாநி மஹாவீர விஷ்வக்ஸேந நாஸ்திவிஷ்ணுஃ।
தமேதம் பைரவஶ்ரேஷ்டம் ஸஞ்சீவ்ய ச கேஶவோஜயோஃ।

[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

க்ஷமஸ்வ மந்தும் தேவேச மஹாமூடஸ்ய மே விபோ।
புநர் மா பவது ஸ்வாமிந் மமாஜ்ஞாநம் தவாஜ்ஞயா।
ததர்த்தம் மச்சிரோமுண்டம் பர்த்ரீகுரு தயாநிதே।
கரஸ்தம் மத்கபாலந்தே பிக்ஷாபாத்ரம் பவத்வலம்।
அநேநைவ கபாலேந ரக்தபிக்ஷாம் க்ருஹாண போ।
இத்யுக்த்வா ப்ராணநாமாயம் புந: புநரமும் விதி:।
ததேதி தத்க்ருஹீத்வாயம் நிர்யயௌ மேருபர்வதாத்।
ததஸ்ஸஸர்ஜபூதாநி ஸ்வேச்சயா பைரவ: க்ஷணாத்।
ஹாலாஹலம் காலவேகம் ததாக்நிமுகஸோமகௌ।
அந்யாநதிபலாநீசோ பூதஸேநாபதீநபி।
பூதைரநேகை: சேநேசைர் யுதோயம் காலபைரவ:।
ரக்தபிக்ஷாச்சலேநாயம் பூலோகம் ஸஞ்சரந்ததா।
காநநேஷு சசர்வேஷு பர்வதேஷு மஹத்ஸ்வபி।
பாதாளே நாகலோகேச தேவலோகே ததைவச।
தத்ரஸ்திதாநாம் தேவாநாம்ருஷீணாம் கர்ஷிணாமயம்।
ஜக்ராஹ தேஷாம் ரக்தாநி கபாலேநைவ பைரவ:।
ம்ருதாநபி ததா காந்சிஜ்ஜீவயாமாஸ லீலயா।
அடித்வா ஸர்வதோபிக்ஷாம் விஷ்ணுலோகம் ஸமாயயௌ
தாஸா பூதஸைந்யாநி ஸாராவாணி ததர் ப்ருசம்।
ஆபுர்விஷ்ணோர் க்ருஹத்வாரம் விஷ்வக்ஸேந கணஸ்திதம்।
ருரோத தாநி கணபோ விஷ்வக்ஸேநோதிநிஷ்டுர:।

தமேநம் பைரவஃசீக்ரம் ஸந்தர்ப்யசகபோலயோஃ।
ப்ரோதயித்வா ஸ்வசூலாக்ரே விஷ்ணோரப்யாசமாயயௌ।
ததா ஸஸம்ப்ரமம் விஷ்ணுர் போகசாயீ மஹாபயாத்।
ஸமுத்தாய ப்ரணம்யைநம் ஸ்ரீபூமிப்யாம் ஸஹ ஸ்துவந்।
ததஃ ப்ரோவாச தம்விஷ்ணுர் பைரவம் வீக்ஷ்ய பீஷணம்।
கிமர்த்தமாகதோஸி த்வம் பக்தாநாமபயப்ரத।
த்வத்தர்சநேந தேவாஹம் க்ருதார்த்தோஸ்மி ஜகத்குரோ।
ரக்ஷமாம் கருணாமூர்த்தே பவதேகஸமாச்ரயம்।
இத்யுக்தவந்தம் தம் ப்ராஹ பைரவோ மதுசூதநம்।
காம்க்ஷித்வா தவ ரக்தாநி சிரசோஹம் ஸமாகதஃ।
பிக்ஷாவ்யாஜேந தத்தேஹி சீக்ரமேவ ஹரேதுநா।
இதிதஸ்ய வசஃ ச்ருத்வா க்ருதார்த்தோஸ்மீதி மாதவஃ।
பித்வா நகேந நிடிலம் ருதிராணி முமோச ஹ।
ஜக்ராஹ தாநி ஸர்வாணி கபாலேநைவ பைரவஃ।
மஹத்யாதாரயாப்தாநாம் நிஜஸாஹஸ்ர ஸங்க்யயா।
பபாத பச்சாந்நீரக்தோ மாதவோ மோஹவிஹ்வலஃ।
பரிபூர்ணம் ததாப்யேதத் கபாலம் நார்த்தமாத்ரதஃ।
பதிதந்து மஹாவிஷ்ணும் மஹாமோஹேந வீக்ஷ்யதம்।
ஸ்ரீபூமிதுஃகதுஃகார்த்தே தேவ்யாவப்யேத்ய சீக்ரதஃ।
ஆலம்ப்ய பாதௌ பாணிப்யாம் பைரவஸ்ய மஹாத்மநஃ।
ரக்ஷ ரக்ஷ தயாம்போதே விஷ்ணும் த்வம் பைரவேச்வர।
மங்கள்யபிக்ஷாம் பகவந்நாவயோர் தேஹி சீக்ரதஃ।
இதி துஷ்டுவதுர் தேவ்யௌ ததாத்யந்தம் மஹேச்வரம்।
ததஃ ப்ரஸந்நோ பகவாந் பைரவோ வீக்ஷ்யமாதவம்।
க்ருபயோஜ்ஜீவயாமாஸ கருணாம்ருதஸாகரஃ।
ஸமுத்திதஸ்ததோ விஷ்ணுர்லப்தஜ்ஞாநோ ஸ்தவீத் ப்ரபும்।
ஸ்துவந்தம் தம் ஸமீக்ஷ்யர்யம் க்ருபயா பைரவோ ஹரிம்।
புநஃ ஸ்வபுவநாயாயம்நிர்யயௌ காலபைரவஃ।
மஹதாவாத்ய கோஷேண கணாநாமாரவேணச।
யாந்தம் தம் பைரவம் விஷ்ணுரந்வயாத் தூரமார்க்கதஃ।

ப்ராணம்ய பைரவம் ஸ்துத்வா சூலப்ரோதம் ஸ்வகம் கணம்।
விஷ்வக்ஸேநம் மோசயித்வா ஸ்வ்வாஸம் ப்ராபமாதவ:।
பைரவோபி ஸ்வபவநம் கணை: ப்ராப மஹாரவை:॥

"தேவாதிதேவராகிய பிரபுவே! மகாமூடனாகிய என் பிழைகளை க்ஷமித்து, தேவரீர் ஆஞ்ஞையினால் எனக்கு இனி அஞ்ஞானம் உண்டாகாவண்ணம் கருணைக்கடவேல, அடியேனுடைய மூன்டத்தலையைப் பாத்திரமாகத் திருக்கரத்தின்மீதுகொண்டு அதனைப் பிக்ஷாபாத்திரமாக்கி, அதில் இரத்தப்பிக்ஷை எடுக்கவேண்டும் என்று அடிக்கடி அவரை நமஸ்கரித்தார்; பின்னர் வைரவர் அங்ஙனமாகுக என்று அதனை எடுத்துக்கொண்டு மேருகிரியை விடுத்துப் புறப்பட்டுத் தமது இச்சைப்பிரகாரம் க்ஷணப்போதினுள்ளே பூதகணங்களையும், மகாபலசாலிகளாகிய ஹாலாஹலன் காலவேகன் அக்கினிமுகன் சோமகன்முதலிய பூதசேனைத் தலைவர்களையும் சிருட்டித்துக்கொண்டு, அநேக பூதசேனைகளோடும் சேனாதிபர்களோடும் கூடி இரத்தப்பிக்ஷையை வாங்கும் வியாஜமாய்ப் பூலோகம் எங்கும் திரிந்து பெரிய ஆரண்ணியங்களினும், மலைகளினும், பாதாளத்தினும், நாகலோகத்தினும், தேவலோகத்தினும் சென்று அங்கங்கு கர்வங்கொண்ட தேவர்கள் இருஷிகளாயினோருடைய இரத்தங்களையெல்லாம் தமது தலையோட்டிலே வாங்கிக்கொண்டு, அதனால் இறந்துபோன சிற்சிலரை லீலாவிநோதத்தினாற் பிழைப்பித்துக்கொண்டு மீண்டும் பிக்ஷை வாங்கியபின்னர் வைகுண்டலோகத்துக்குப்போயினர்; அப்போது அவருடைய பூதசைன்னியங்களெல்லாம் மிக்ககோலாகலசப்தத்தோடு விஷ்வக்சேனருடைய கணங்களாற் காக்கப்படும் விஷ்ணுவின் வாசலிலே வேகமாய் வந்தவுடன், மகாகோரமுடைய கணாதிபராகிய விஷ்வக்சேனர் அவர்களைத் தாக்கினார்; உடனே பைரவமூர்த்தி அவரது கன்னங்களில் அறைந்து தூரிதமாய் அவரைத் தமது சூலநுனியிற்கோத்துக்கொண்டு விஷ்ணு இருக்குமிடம் வந்தார்; அப்போது ஆதிசேடனது உடலின்மீது சயனித்திருந்த மகாவிஷ்ணுவானவர் மிகுதியும் அச்சத்தோடு விரைந்து எழுந்து ஸ்ரீதேவி பூதேவிகளோடு, அவரை நமஸ்கரித்து ஸ்தோத்திரஞ் செய்து மகாபயங்கர வைரவரை நோக்கி ஒன்று கூறுகின்றார்; அடியார்க்கு அபயமளிக்கும் ஜகத்குருவாகிய தேவாதிதேவரே! தேவரீர் ஈண்டு யாதுகாரணம் பற்றி விஜயமாயினீர்? தேவரீரைத் தரிசித்தமையால் யான் கிரு

தார்த்தனாயினேன்; கருணாமூர்த்தியே! தேவரீரை விசேட ஆதாரமாகத் தேடிய என்னைக் காப்பாற்றுக என்று வேண்ட, அவரைக் காலபைரவர் நோக்கிக் கூறுகின்றார்; நான் பிக்ஷை வாங்கும் வியாஜத்தினால் உமது தலையிரத்தத்தை விரும்பி வந்திருக்கின்றேன்; ஆகலின் அதனைச் சீக்கிரமாகத் தந்துவிடுக என்று கூறியவார்த்தையைக் கேட்ட விஷ்ணுவும் இதனால் யான் கிருதார்த்தனாய்விட்டேன் என்று கூறித் தமது நகத்தினால் நெற்றியைப் பிளந்து இரத்தத்தைப் பெருகவிட அவ்விரத்தத்தையெல்லாம் வைரவர் கபால பாத்திரத்தில் ஏந்தினார்; இவ்வாறே அவ்விரத்தங்கள் (விஷ்ணு வருஷத்தில்) ஆயிரம் வருஷங்களாகப் பெருந்தாரையாய்ச் சொரிந்த பின்னர்; விஷ்ணு இரத்தமற்றமையால் மூர்ச்சித்துக் கீழே வீழ்ந்தார்; அங்ஙனம் வீழ்ந்தும் அக்கப்பறையிற் பாதிதானும் நிறைந்திலது, இங்ஙனம் மஹாவிஷ்ணு மிகுந்த மூர்ச்சையினாலே கீழே வீழ்ந்ததை ஸ்ரீதேவி இலக்குமிதேவி என்னும் இருவரும் கண்டு மிக்க துக்கங்கொண்டு விரைந்துவந்து மகாத்துமாவாகிய ஸ்ரீபைரவமூர்த்தியின் பாதமிரண்டையும் கைகளாற் பிடித்துக் கருணாசமுத்திரமாகிய பைரவரே, இவரை இரக்ஷித்துத் தேவரீர் எங்களுக்கு விரைந்து தாலிப்பிச்சை அருளவேண்டும் என்று அந்தப் பைரவேசுவரரைத் துதிக்கும்போது, கருணாமிர்தக்கடவுளும் பகவானுமாகிய பைரவர் பிரசன்னசித்தராகிக் கருணையினால் அவ்விஷ்ணுவை உயிர்ப்பித்தபோது விஷ்ணுமூர்த்தி அறிவுபெற்று எழுந்து அப்பிரபுவாகிய வைரவரை மிகுதியும் தோத்திரஞ் செய்தார்; பின்னர்க் காலபைரவர் அங்ஙனம் துதிசெய்த விஷ்ணுவைக் கருணையோடு திருக்கண் சாத்தி, பின்னர் மிகுந்த வாத்தியமுழக்கத்தோடும் பூதகணங்களின் ஆரவாரத்தொனியோடும் தமது உலகத்துக்குச் செல்லுங்கால் விஷ்ணுவும் வெகுதூரம் பின்றொடர்ந்து போய் நமஸ்கரித்துத் துதிசெய்து, சூலத்திற் கோக்கப்பட்டிருந்த தமது கணத்தலைவராகிய விஷ்வக்சேனரையும் மீட்டுக்கொண்டு தமது மாளிகையை அடைந்தார்; அப்போது வைரவரும் அட்டகாசஞ் செய்யும் பூதகணங்களோடு கூடித் தமது திருமாளிகை அடைந்தார்" என்பது தக்ஷகாண்டம்.

கழல்மல்குபந்தொடம்மானைமுற்றில்கற்றவர்சிற்றிடைக்கன்னிமார்கள்; பொழின்மல்குகிள்ளையைச்சொற்பயிற்றும்புகலிநிலாவியபுண்ணியனே, யெழின்மலரோன்சிரமேந்தியுண்டோரின்புறு

செல்வமிகுதென்கொல்சொல்லாய், மிழலையுள்வேதியரேத்திவாழ்த் தவிண்ணிழிகோயில்விரும்பியதே.

—ஞா, திருப்புகலியுந்திருவீழிமிழலையும்.

அன்றயன்சிரமரிந்ததிற்பலிகொண்
  டமரர்க்கருள்வெளிப்படுத்தானைத்
தன்றுணைபங்கழலிற்சிலம்பார்த்த
  சோதியைச்சுடர்போலொளியானை
மின்றயங்கியவிடைமடமங்கை
  மேவுமீசனைவாசமார்முடிமேற்
கொன்றையஞ்சடைக்குழகனையழகார்
  கோலக்காவினிற்கண்டுகொண்டேனே.

—சு, திருக்கோலக்கா.

---

(௯௫) தக்ஷயஜ்ஞ சங்காரம்.

𑌦𑍇𑌵𑌾 𑌵𑍈 𑌯𑌜𑍍𑌞𑌾𑌦𑍍𑌰𑍁𑌦𑍍𑌰𑌮𑌨𑍍𑌤𑌰𑌾𑌯𑌨𑍍 𑌸 𑌯𑌜𑍍𑌞𑌮𑌵𑌿𑌧𑍍𑌯𑌤𑍍।

தேவா வை யஜ்ஞாத்ருத்ரமந்தராயந் ஸ யஜ்ஞமவித்யத்தம்।

"தேவர்கள் உருத்திரரை யாகத்தினின்று நீக்கினார்கள்; அவர் அந்த யாகத்தைச் சங்கரித்தார்" என்றும்.

𑌪𑍂𑌷𑌾 𑌪𑍍𑌰𑌾𑌶𑍍𑌯 𑌦𑌤𑍋𑌽𑌰𑍁𑌣𑌤𑍍।

பூஷா ப்ராஶ்ய ததோ ருணத்।

"(அந்தத் தேவர்கள் அந்த அவியைப் பன்னிரு சூரியருள் ஒருவனாகிய பூஷனுக்குக் கொடுத்தார்கள்); பூஷன் சாப்பிடும் போது, அவன் பற்களை (உருத்திரர்) உடைத்தார்" என்றும் தைத்திரீய யசுர்வேதமும், தரம் 4660.

𑌯𑍋 𑌦𑌕𑍍𑌷𑌯𑌜𑍍𑌞𑍇 𑌸𑍁𑌰𑌸𑌙𑍍𑌘𑌾𑌨𑍍𑌵𑌿𑌜𑌿𑌤𑍍𑌯 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌂 𑌬𑌬𑌨𑍍-
𑌧𑍋𑌰𑌗𑌪𑌾𑌶𑍇𑌨 𑌵𑍀𑌰𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑍈 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌯 𑌨𑌮𑍋𑌽𑌸𑍍𑌤𑍁।

யோ தக்ஷயஜ்ஞே ஸுராஸங்காந் விஜித்ய விஷ்ணும் பபந்தோ ரகபாஶேந வீரஸ்தஸ்மை ருத்ராய நமோ ஸ்து।

“எந்த வீரர் தக்ஷயாகத்திலே தேவகூட்டங்களை செயித்து விஷ்ணுவை நாகபாசத்தினால் கட்டினாரோ, அந்த *உருத்திரர்க்கு நமஸ்காரம்” என்று சரபோபநிடதமும்,

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

* இதனால் உருத்திரராகிய சிவபெருமானுக்கும் தக்ஷயஞ்ஞத்தை அழித்த அவர் குமாரர் எனப்படும் வீரபத்திரர்க்கும் பேதமில்லை என்றாயிற்று.

சிச்சேத தஸ்ய மூர்த்தாநம் தக்ஷஸ்யாஸ்ய துராத்மந:|
ஆஜம் ஶிரஶ்ச தக்ஷஸ்ய கபந்தே தஸ்ய பாபிந:|
ப்ராணேந யோஜயாமாஸ ஶிவாஜ்ஞா பரிபாலக:|
ததோ தக்ஷ: ஸமுத்தாய ஸ்வாபாதிவ பயாந்வித:|
ப்ரணம்ய வீரபத்ரம் ஸ்மரந் பாபமபி ஸ்வகம்||

இதி கௌர்யா வச: ஶ்ருத்வா புநர் தக்ஷ: ப்ரஜாபதி:|
தத் பார்யா த்வஞ்ச நைவ ஸ்யாத் யாகம் த்ரஷ்டும் ஹிஹார் ஹவி|
ந ஜாமாதா தவ பதிர் ந புத்ரீ த்வஞ்ச ஸத்யத:|
தஸ்மாத் தவ பதேர் யாகே ந தாஸ்யாமி ஹவிர் வராம்|
இதி தஸ்ய வச: ஶ்ருத்வா தஸ்மை தே கௌரீ க்ருதாந்விதா|
ததா ஸர்வேபி தத்ரத்யா ப்யபுர்தேவீம் ஸமீக்ஷதே|
தண்டேந தாடயத் விஷ்ணும் ருத்ரோ மத்யே திவிர்யவாந்|
ததாநீம் கௌஸ்துபம் ரத்நம் பூமௌ ச தனுரோகதா|
பிந்நா பபாத ஸதமோ பூமிப்ருஷ்டே த்விஜோத்தமா:|
பதித்வா தரஸா விஷ்ணுர் முமோஹ கதவிக்ரம:|
விதாதாரம் ததோ மூர்த்நி முஷ்டிநா குட்டயத்விபு:|
பபாத ஸோபி மோஹேந யாவத் தூர்ணம் ப்ரஜாபதி:|
காயத்ரீமபி ஸாவித்ரீம் ப்ரஹ்மாணீமபி நிர்கதாம்|
சிஹ்நநாஸா குசா ஶ்சக்ரே தரவாளேந வீரபு:|
ததஸ்து சந்த்ரம் தாவந்தம் பாதேந தாட்ய ஸத்வவாந்|
கபோலே தாடயாமாஸ ஸூர்யஸ்யாத்புதவிக்ரம:|
பக்நா தந்தாஸ்ததா தஸ்ய நிபேது: ப்ருதிவீதலே|
பகஸ்யோத்பாடயாமாஸ லோசநே த்வே துராத்மந:|
இந்த்ரம் கோகிலரூபேண நிர்யாந்தமபி ஸோச்சிநத்|
அக்நேர் ஹஸ்தாஞ்ச ரஸநாம் ஹவிர்போக்தாகண்டயத்|
ம்ருகரூபேண தாவந்தம் யஜ்ஞம் யாகக்ருஹாந்தரே|
நிருத்ய புரதோ கத்வா சிச்சேதாஸ்த்ரேண மந்யுநா|
வீரபத்ரஸ் ஸமுத்ப்லுத்ய கட்கமாதாய வேகத:|
சிச்சேத தஸ்ய மூர்த்தாநம் தக்ஷஸ்யாஸ்ய துராத்மந:|
ஆஜம் ஶிரஶ்ச தக்ஷஸ்ய கபந்தே தஸ்ய பாபிந:|
ப்ராணேந யோஜயாமாஸ ஶிவாஜ்ஞா பரிபாலக:|
ததோ தக்ஷ: ஸமுத்தாய ஸ்வாபாதிவ பயாந்வித:|
ப்ரணம்ய வீரபத்ரந்தம் ஸ்மரந் பாபமபி ஸ்வகம்||

"(நான் உனக்கு யாது அபராதஞ் செய்தேன் சொல்க என்று உமையம்மையார் கேட்க) இவ்வசனத்தைக் கேட்டுத் தக்ஷ பிரஜாபதி அவனுடைய (சிவனுடைய) மனைவியாதலின், நீ என் யாகத்தைப் பார்த்தற்கு அருகதையுடையை அல்லை; உன் நாயகன் என் மருகனுமன்று; நீ என் புத்திரியுமன்று; உன் நாயகனுக்குச் சிரேஷ்டமாகிய அவிசைக் கொடுப்பேனல்லேன்; ஆகலின், நீ பேசாது போய்விடு என்று சொல்லிய வார்த்தையைக் கேட்டு அம்மையார் கோபங்கொண்டபோது ஆங்குள்ளாரனைவரும் தேவியாரைப்பார்த்துப் பயமடைந்தார்கள்" என்றும்;

"வீரபத்திரர் விஷ்ணுவினுடைய உரத்துமத்தியிலே தண்டத்தினாற் புடைக்க, அவர் நெஞ்சிலுள்ள கௌஸ்பரத்தினமும் பதுமமும் நூறுபிரகாரமாக உடைந்து பூமியில் வீழ்ந்தன; விஷ்ணுவும் உடனே வீழ்ந்து பலமிழந்து மூர்ச்சித்தார்; பிரமாவின் சிரசிலே வீரபத்திரர் முஷ்டியினாற் குட்டினார்; புறப்பட்டுப் போகவந்த காயத்திரி, சாவித்திரி, சரசுவதி என்போருடைய மூக்கையும் குசங்களையும் கைவாளினால் வெட்டினர்; ஓடத் தொடங்கிய சந்திரனைப் பாதத்தினாலே தேய்த்துவிட்டார்; சூரியனுடைய கபோலத்திலே அடிக்கப் பூமியிலே அவன் பற்கள் உதிர்ந்து வீழ்ந்தன; பகன் என்பானுடைய இரு நேத்திரங்களையும் பிடுங்கிவிட்டார்; குயில்வடிவங்கொண்டு பறந்த இந்திரனை வெட்டிவிட்டார்; அவிசுண்ணும் அக்கினிதேவனுடைய கையையும் நாக்கையும் கொய்துவிட்டார்; மான் உருவங்கொண்டு ஓடிய *யஞ்ஞதெய்வத்தை யாகசாலையினின்று புறத்தே போகவொட்டாது தடுத்து அஸ்திரத்தினால் (அவன் தலையை) அறுத்துவிட்டார்; துஷ்டனாகிய தக்கனுடைய தலையைத் தமது வாள்கொண்டு பாய்ந்து வெட்டிவிட்டார்; (பின்னர்ச்) சிவாஞ்ஞையினாலே வீரபத்திரர் பாவியாகிய அந்தத் தக்கனுடைய கபந்தத்திலே ஆட்டுத்தலையைப் பொருத்தி அவனை உயிர்ப்பித்துவிட்டார்; தக்கன் சொப்பனத்தினின்றெழுந்தாற்போலப் பயத்தினோடு எழுந்து நின்றான்" என்றும் ஸ்காந்தபுராணமும்,

* திருவாசகத்துத் திருவுந்தியார் கO-ம் திருப்பாட்டிற் கண்ட வியாத்திரன் யஞ்ஞதெய்வமாகிய எச்சனே.

57 பி. சௌப்திகபே, கஅ:உ

𑌤𑌾𑌵𑍈 𑌰𑍁𑌦𑍍𑌰𑌮𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑍋 𑌯𑌾𑌥𑌾𑌤𑌥𑍍𑌯𑍇𑌨 𑌦𑍇𑌵𑌤𑌾𑌃 ।
𑌨𑌾𑌕𑌲𑍍𑌪𑌯𑌨𑍍𑌤 𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌸𑍍𑌥𑌾𑌣𑍋𑌰𑍍𑌭𑌾𑌗𑌂 𑌨𑌰𑌾𑌧𑌿𑌪 ।

57 பி. சௌப்தி, கஅ:அ, கக.

𑌤𑌤𑌃 𑌕𑍍𑌰𑍁𑌦𑍍𑌧𑍋 𑌮𑌹𑌾𑌦𑍇𑌵𑌸𑍍𑌤𑌦𑍁𑌪𑌾𑌦𑌾𑌯 𑌕𑌾𑌰𑍍𑌮𑍁𑌕𑌮𑍍 ।
𑌆𑌜𑌗𑌾𑌮𑌾𑌥 𑌤𑌤𑍍𑌰𑍈𑌵 𑌯𑌤𑍍𑌰 𑌦𑍇𑌵𑌾𑌸𑍍𑌸𑌮𑍀𑌜𑌿𑌰𑍇 ।
𑌤𑍍𑌰𑍍𑌯𑌮𑍍𑌬𑌕𑌸𑍍𑌸𑌵𑌿𑌤𑍁𑌰𑍍𑌬𑌾𑌹𑍂 𑌭𑌗𑌸𑍍𑌯 𑌨𑌯𑌨𑍇 𑌤𑌥𑌾 ।
𑌪𑍂𑌷𑍍𑌣𑌶𑍍𑌚 𑌦𑌶𑌨𑌾𑌨𑍍 𑌕𑍍𑌰𑍁𑌦𑍍𑌧𑍋 𑌧𑌨𑍁𑌷𑍍𑌕𑍋𑌟𑍍𑌯𑌾 𑌵𑍍𑌯𑌶𑌾𑌤𑌯𑌤𑍍 ॥

தாவை ருத்ரமஜாநந்யோ யாதாதத்யேந தேவதா꞉।
நாகல்பயந்த தேவஸ்ய ஸ்தாணோர்பாகம் நராதிப।
தத꞉ க்ருத்தோ மஹாதேவஸ்ததுபாதாய கார்முகம்।
ஆஜகாமாத தத்ரைவ யத்ரதேவாஸ் ஸமீஜிரே।
த்ரியம்பகஸ்ஸவிதுர்பாஹூ பகஸ்ய நயநே ததா।
பூஷ்ணஶ்ச தஶநாந் க்ருத்தோ தநுஷ்கோட்யா வ்யஶாதயத்॥

"வாஸ்தவத்திலே தேவர்கள் உருத்திரரை அறியாது ஸ்தாணுவாகிய சிவபிரானுக்குரிய அவிப்பாகத்தைக் கொடுத்தாரில்லை; அதனால் *மகாதேவர் கோபங்கொண்டு வில்லை எடுத்துக்கொண்டு தேவர்கள் யாகஞ் செய்யும் இடத்துக்குப் போக, தேவர்களெல்லாம் ஓடத்தொடங்க அவர் சாவித்திரியின் புயங்களை வெட்டியும் பகன் கண்களைப் பிடுங்கியும் விட்டார்" என்று மகாபாரதமும்,

𑌪𑍂𑌷𑌾 𑌪𑍍𑌰𑌾𑌶𑍍𑌯 𑌦𑌤𑍋𑌽𑌰𑍁𑌣𑌤𑍍 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌪𑍂𑌷𑌾 𑌪𑍍𑌰
𑌪𑌿𑌷𑍍𑌟𑌭𑌾𑌗𑍋𑌽𑌦𑌨𑍍𑌤𑌕𑍋 𑌹𑌿 𑌤𑌂 𑌦𑍇𑌵𑌾 𑌅𑌬𑍍𑌰𑍁𑌵𑌨𑍍 ।
𑌦𑍇𑌵𑌾 𑌵𑍈 𑌯𑌜𑍍𑌞𑌾𑌦𑍍𑌰𑍁𑌦𑍍𑌰𑌮𑌨𑍍𑌤𑌰𑌾𑌯𑌨𑍍𑌤𑍍𑌸 𑌯𑌜𑍍𑌞𑌮𑌵𑌿𑌧𑍍𑌯𑌤𑍍 ॥

பூஷா ப்ராஶ்ய ததோருணத் தஸ்மாத் பூஷா ப்ரபி
ஷ்டபாகோந்தகோ ஹி தம் தேவா அப்ருவந் । தேவா
வை யஜ்ஞாத்ருத்ரமந்தராயந் த்ஸயஜ்ஞ மவித்யத்॥

"அவர்கள் பூஷன் உண்ணுமாறு அதனை (அவிப்பாகத்தை) கொடுத்தார்கள்; (வீரபத்திரவடிவமாய் வந்த) உருத்திரர் அவன் பற்

---

* ஈண்டு மகாதேவர் என்றது வீரபத்திரரின் மேற்று.

களை உடைத்தார்; (தக்ஷன்முதலிய) தேவர்கள் சிவபிரானை யஞ்ஞத்தினின்று விலக்க, (வீரபத்திரவடிவமுற்ற) சிவபிரான் (தக்ஷனுடைய) யஞ்ஞத்தை அழித்தார்" என்று யசுர்வேத தைத்திரீயசங்கிதையும்,

𑌤𑌦𑍍𑌭𑌗𑌾𑌯 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌤 𑌆𑌸𑍀𑌨𑌾𑌯 𑌪𑌰𑍍𑌯𑌾𑌜𑌹𑍍𑌰𑍁𑌃।
𑌤𑌦𑍍𑌭𑌗𑍋𑌽𑌵𑍀𑌕𑍍𑌷𑌾𑌞𑍍𑌚𑌕𑍍𑌰𑍇 𑌤𑌸𑍍𑌯𑌾𑌕𑍍𑌷𑌿𑌣𑍀 𑌨𑌿𑌰𑍍𑌦𑌦𑌾𑌹।

தத்பகாய தக்ஷிணதஃ ஆஸீநாய பர்யாஜஹ்ருஃ । தத்பகோவீக்ஷாஞ்சக்ரே தஸ்யாக்ஷிணீ நிர்ததாஹ।

"வலப்பக்கத்தில் இருக்கும் பகனுக்கு அதனைக் கொடுத்தார்கள்; அவன் அதனைப் பார்த்தான்; அவர் அவன் கண்களைத் தகித்தார்" என்று சதபதப்பிராஹ்மணமும் கூறுகின்றன.

ஆப்தே அகராதி, 237 பி.

𑌧𑌾𑌤𑌾 𑌮𑌿𑌤𑍍𑌰𑍋𑌽𑌰𑍍𑌯𑌮𑌾 𑌰𑍁𑌦𑍍𑌰𑍋 𑌵𑌰𑍁𑌣𑌃 𑌸𑍂𑌰𑍍𑌯 𑌏𑌵 𑌚।
𑌭𑌗𑍋 𑌵𑌿𑌵𑌸𑍍𑌵𑌾𑌨𑍍𑌪𑍂𑌷𑌾 𑌚 𑌸𑌵𑌿𑌤𑌾 𑌦𑌶𑌮𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌃।
𑌏𑌕𑌾𑌦𑌶𑌸𑍍𑌤𑌥𑌾 𑌤𑍍𑌵𑌷𑍍𑌟𑌾 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑍍𑌦𑍍𑌵𑌾𑌦𑌶 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇॥

தாதா மித்ரோர்யமா ருத்ரோ வருணஸ்ஸூர்ய ஏவச।
பகோ விவஸ்வாந் பூஷாசஸவிதா தசமஃ ஸ்ம்ருதஃ।
ஏகாதசஸ்ததாத்வஷ்டா விஷ்ணுர்த்வாதச உச்யதே॥

"தாதா, மித்திரன், அரியமா, உருத்திரன், வருணன், சூரியன், பகன், விவஸ்வான், பூஷன், சவிதா, துவஷ்டா, விஷ்ணு என்போர் பன்னிரு ஆதித்தியர்" என்று விஷ்ணுபுராணத்து இரண்டாம் அம்சத்து க௦-ம் அத்தியாயத்தினுற்பெறப்படுதலின், பகன் பூஷன் என்போரும் பன்னிரு ஆதித்தியருட்பட்டவராம் என்பது பெறப்பட்டு, பூஷன் பற்கள் தகர்க்கப்பட்டன எனவே, சூரியன் பற்கள் தகர்க்கப்பட்டன என்று பொருள்கொள்ளப்பட்டது.

மலைமகடனையிகழ்வதுசெய்தமதியறுசிறுமனவன்துயர்
தலையினொடழலுருவனகரமறமுனிவுசெய்தவனுறைபதி
கலைநிலவியபுலவர்களிடர்களைதருகொடைபயில்பவர்மிகு
சிலைமலிமதில்புடைதழுவியதிகழ்பொழில்வளர்திருமிழலையே.

—ஞா, திருவீழிமிழலை.

தக்கன்றனசிரமொன்றினையரிவித்தவன்றனக்கு
மிக்கவ்வரமருள்செய்தவெம்விண்ணோர்பெருமானார்
பக்கம்பலமயிலாடிடமேகம்முழவதிர
மிக்கம்மதுவண்டார்பொழில்வேணுபுரமதுவே.

—ஞா, வேணுபுரம்.

தக்கனதுபெருவேள்விச்சந்திரனிந்திரனெச்சனருக்கனங்கி, மிக்
கவிதாதாவினொடும்விதிவழியேதண்டித்தவிமலர்கோயில், கொக்
கினியகொழும்வருக்கைகதலிகமுகுயர்தெங்கின்குலைவகொள்சோலை
முக்கனியின்சாறொழுகிச்சேறுலராநீள்வயல்சூழ்முதுகுன்றமே.

—ஞா, திருமுதுகுன்றம்.

எச்சனிணைத்தலைகொண்டார்பகன்கண்கொண்டா
ரிரவிகளிலொருவன்பல்லிறுத்துக்கொண்டார்
மெச்சன்வியாத்திரன்றலையும்வேறாக்கொண்டார்
விறலங்கிகரங்கொண்டார்வேள்விகாத்து
வுச்சநமன்றாளறுத்தார்சந்திரனையுதைத்தா
ருணர்விலாத்தக்கன்றன்வேள்வியெல்லா
மச்சமெழவழித்துக்கொண்டருளுஞ்செய்தா
ரடியேனையாட்கொண்டவமலர்தாமே.

—நா, தனித்திருத்தாண்டகம்.

பெற்றிமையொன் றறியாத தக்கனது வேள்விப்
பெருந்தேவர் சிரந்தோள் பற்கரங்கண் பீடழியச்
செற்றமதிக் கலைசிதைய திருவிரலாற் றேய்வித்
தருள்பெருகு சிவபெருமான் சேர்தரு மூர் வினவிற்
றெற்றுகொடி முல்லையொடு மல்லிகை செண்பகமுந்
திரைபொருது வருபுனல்சேர் சரிசிலின் றெண்கரைமேற்
கற்றின நன் கரும்பின் முளை கறிகற்கக் கறவை
கமழ்கழுநீர் கவர் கழனிக் கலய நல்லூர் காணே.

—சு, திருக்கலய நல்லூர்.

அரிபிரமன் றக்கன ருக்கனுடனே
வருமதி வாலை வன்னி நல்லிந்திரன்
சிரமுக நாசி சிறந்த கைதோள் தா
னரனருளின்றி யழிந்த நல்லோரே.

குர்வந்தபோ மஹத்கோரம் லிங்கமூர்த்திம் ஸதாஶிவம்।
பக்த்யா ஸம்பூஜ்ய தேவேஶாத் ப்ராப்தவாந் வாமுத்தமம்।
ப்ரஸந்நாத் பார்வதீஶாநாத் வைஷ்ணவம் பதமுத்தமம்।
ஸர்வரக்ஷாதிகாரித்வே சாபிஷிக்தோ யதாவிதி।
ஶங்கம் சக்ரம் கதா கட்கஶார்ங்காத்யாந்யாயுதாந்யபி।
மஹாலக்ஷ்மீபதித்வஞ்ச பீதமம்பரமத்புதம்।
ரதம் பத்ரரதாதீஶம் ததௌ சர்வம் ஸதாஶிவ:।
ஜகத்ரக்ஷேதிசாஜ்ஞப்தே தேவதேவேந ஶூலிநா।
ததாதிச ததா விஷ்ணுஶ்ஶிவலோகத: ஸ்திதே।
லோகே ஸ்திதோ ரரக்ஷாஸௌ ஜகத்த்ரயமதந்த்ரித:॥

—உபதேசகாண்டம்.

“பின்னர் அப்போது அளவிடப்படாத மகிமையுடையரும், சிவபிரானுக்குப் பிரியமாகிய தொண்டு செய்பவருமாகிய விஷ்ணுவானவர் அவிமுக்தம் என்பபடும் காசிப்பதியை அடைந்து, அங்கே அநேக பதினாயிரம் வருஷமளவும் மகாகோரமாகிய தவஞ் செய்து சதாசிவலிங்கமூர்த்தியை அன்பினோடு பூசித்து, பிரத்தியக்ஷராய் எய்திய உமாசமேதராகிய சிவபெருமானிடத்திருந்து உத்தமமாகிய விஷ்ணுபதவியை அடைந்து சகல உலகங்களையும் இரக்ஷித்தற்குரிய அதிகாரத்தினிற்குமாறு முறைப்படி பட்டாபிஷேகஞ் செய்யப்பட்டார்; சங்கு *சக்கரம் கதை கத்தி சார்ங்க முதலிய ஆயுதங்கள், மகாலக்குமிக்கு நாயகராயிருக்குந்தன்மை, அற்புதமாகிய பீதாம்பரம், கருடனாகிய இரதம் என்னும் இவையனைத்தையும் சதாசிவப்பெருமான் கொடுத்தார்; பின் விஷ்ணுவே! இனி உலகத்தைக் காப்பீராக என்று தேவதேவேசராகிய சூலாயுதப்பெருமானால் ஆஞ்ஞாபிக்கப்பட்டு அக்காலமுதல் விஷ்ணுவானவர் ஸ்ரீகண்டநாயனாரது உலகத்துக்குக் கீழுள்ள உலகத்திலிருந்து திரிலோகங்களையும் சோர்வின்றிக் காத்துவருகின்றார்.”

---

* சிவபெருமான் முதற்கண்ணே கொடுத்த சக்கரமானது ததீசிமுனிவரோடு செய்த யுத்தத்தில் மழுங்கிப்போனமையால், விஷ்ணு பின்னர்ச் சிவபெருமானிடத்தினின்று சக்கரம் பெறுமாறு நாடோறும் ஆயிரம் தாமரைப் புஷ்பங்களாற் பூசித்துவந்தமையை சக—ம் இலக்க விஷயத்திற் காண்க.

வாமனரூபங்கொண்ட விஷ்ணுவின் கங்காளம் வைரவராற் பிடுங்கித் தரிக்கப்பட்டமை ௫௪-ம் இலக்கவிஷயத்திற் கூறப்பட்டிருக்கின்றது. இங்ஙனம் தண்டிக்கப்பட்டபோது,

664 ℓ.

[illegible]

[illegible]

உபேந்த்ரோபி மஹாதேவம் ஸமாராத்ய யதா புரம்।
ஶாந்தாபராதஸ் ஸம்பூஜ்ஜகாமச யதாகதம்॥

"விஷ்ணுவானவர் சிவபிரானைப் பின்னரும் பூசித்துப் பாவம் தொலையப்பெற்று, வந்தமைபோற் போய்ச் சேர்ந்தார்" என்றது ஸ்காந்தபுராணம்.

நித்தநியமத்தொழிலனாகிநெடுமோல்குறளனாகிமிகவுஞ்
சித்தமதொருக்கிவழிபாடுசெயநின்றசிவலோகனிடமாங்
கொத்தலர்மலர்ப்பொழிலினீடுகுலமஞ்ஞைநடமாடலதுகண்
டொத்தவரிவண்டுகளுலாவியிசைபாடுதவிமாணிகுழியே.

—ஞா, திருமாணிகுழி.

234 ℓ.

[illegible]

[illegible]

ஸேதுமத்யே மஹாதேவமீஶாநம் க்ருத்திவாஸஸம்।
ஸ்தாபயாமாஸ லிங்கஸ்தம் பூஜயாமாஸ ராகவ:॥

—கூர்மபுராணம்.

பூர்வ... உக:

"இராமர் சேதுமத்தியிலே இலிங்கத்திலேயுள்ள மகாதேவரும் ஈசானரும் புலித்தோலாடையினருமாயுள்ளாரை ஸ்தாபனஞ் செய்து பூசித்தார்" என்றது கூர்மபுராணம்.

தேவியைவவ்வியதென்னிலங்கைத்தசமாமுகன்
பூவியலும்முடிபொன்றுவித்தபழிபோயற
வேவியலுஞ்சிலையண்ணல்செய்தவிராமேச்சுர
மேவியசிந்தையினார்கட்மேல்வினைவீடுமே.

—ஞா, திருவிராமேச்சுரம்.

655 P. உபதே. கா: 84 — 86.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

காஞ்சீஸ்தாநமநுப்ராப்ய ப்ரஹ்மா ஸம்பூஜ்ய ஶங்கரம்।
ஶைலலிங்கேபிஷிச்யேஶம் வரம் ப்ராப ஸுதுர்லபம்।
அதிகாரஞ்ச வை ஸ்ருஷ்டேரபிஷேகபுரஸ்ஸரம்।
ஸாஸ்வதீபதித்வஞ்ச லேபே ஹம்ஸஞ்ச வாஹநம்।
சத்ரம் சந்த்ரஸமம் ஶுப்ரம் சாமர த்வயமேவச।
விஷ்ணுலோகாததோபாகே தேவர்ஷி கணபூஜிதஃ।
உவாஸ லோகம் யமயந் மஹதா வைபவேநவை।
ப்ரஹ்மலோகஸ்ஸ விக்யாதோ நாம்நா தஸ்யைவ ஸுவ்ரதாஃ।
இதி லேபே வரம் ஶம்போர் ப்ரஹ்மாலிங்கார்ச்சநாபலாத்॥

—ஸ்காந்தபுராணம்.

பிரமா காஞ்சிபுரத்துக்குப்போய் அங்கே சூலபாணியாகிய சிவபெருமானைச் சைலலிங்கத்திலே பூஜித்துக் கிடைத்தற்கரிய வரமாகிய சிருஷ்டியதிகாரத்தையும் பட்டாபிஷேகவாயிலாகப் பெற்று, சரசுவதிக்கு நாயகராயிருக்குந்தன்மை, அன்னவாகனம், சந்திரமண்டலநிகர்த்த குடை, இரு வெண்சாமரம் என்பவற்றையும் அடைந்து, விஷ்ணுலோகத்துக்குக் கீழ்ப்புறத்திலே தேவரிஷிகணங்களால் வழிபடப்பெற்றோராய் மிகுந்த வைபவத்தோடுள்ளார்; அப்பிரமா எந்த உலகத்தில் வசிக்கின்றாரோ, அது அவர் பெயரைக்கொண்டு பிரமலோகம் எனப்படுகின்றது; பிரமா சிவலிங்கத்தைப் பூசித்த வலிமையினால் சிவபெருமானிடத்தினின்று இவ்வியல்பினதாய வரத்தைப் பெற்றார்" என்றது ஸ்காந்த புராணம்.

பிரமா ஓர்கால் வைரவரால் தமது ஐந்து தலைகளுள் ஒன்றை யிழந்தபோது மற்றைத் தலைகளும் ஒழிந்துபோம் என்னும் அச்சத்தினால், சீகாழிக்குவந்து, சூரியபுஷ்கரணி தீர்த்தத்தினும் பிரமகுண்டத்தினும் ஸ்நானஞ் செய்து, பரிசாரகர்வேண்டுமென்று சூரியபுஷ்கரணியின் மண்ணை நானூறு பிண்டமாகப்பிடித்து பிரம சொரூபமாகத் தியானித்து ஸ்நானஞ் செய்ய, அந்நானூறு பிண்டமும் நானூறு பிராம்மணராக எழுந்திருந்து நமஸ்கரிக்க, இவர்களைப் பரிசாரகர்களாகக்கொண்டு சிவலிங்கார்ச்சனைசெய்து, சிவபெருமான் சாந்நித்தியராக எழுந்தருளப்பெற்றுத் தாம் செய்த அபராதத்தைப் பொறுத்தருள்க என்று பிரார்த்தித்து, அந்தச் சீகாழியானது பிரமபுரம் என்னும் தமது பெயரால் வழங்கவேண்டுமென்றும் சிவபெருமானிடத்து வரமும்பெற்றுக்கொண்டார்.

சுரருலகுநரர்கள்பயிறரணிதலமுரணழியவரணமதின்முப்
புரமெரியவிரவுவகைசரவிசைகொள்கரமுடையபரமனிடமாம்
வரமருளவரன்முறையினிரைநிறைகொள்வருசுருதிசிரவுரையினாற்
பிரமனுயரரனெழில்கோள்சரணவிணைபரவவளர்பிரமபுரமே.

—ஞா, திருப்பிரமபுரம்.

ஸ்கா: ரு௦, ௬௮. [தத்ர:

𑌐𑌰𑌾𑌵𑌤𑌾𑌖𑍍𑌯𑍋 𑌨𑌾𑌗𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑍋 𑌹𑌿𑌤𑍍𑌵𑌾 𑌮𑍂𑌰𑍍𑌚𑍍𑌛𑌾𑌂 𑌦𑍍𑌵𑌿𑌜𑍋
𑌤𑍍𑌤𑌮𑌾𑌃 𑌗𑌤𑍍𑌵𑌾 𑌶𑍍𑌵𑍇𑌤𑌵𑌨𑌾𑌭𑌿𑌖𑍍𑌯𑍇 𑌪𑍁𑌰𑍇 𑌪𑍁𑌣𑍍𑌯𑍇 𑌸𑍁𑌶𑍋𑌭𑌨𑍇।
𑌪𑍂𑌜𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌮𑌹𑌾𑌦𑍇𑌵𑌂 𑌦𑌨𑍍𑌤𑍌 𑌲𑌬𑍍𑌧𑍍𑌵𑌾 𑌮𑌨𑍋𑌹𑌰𑍌॥

ஐராவதாக்யோ நாகேந்த்ரோ ஹித்வா மூர்ச்சாம் த்விஜோத்தமா:।
கத்வா ஶ்வேதவநாபிக்யே புரே புண்யே ஸுஶோபநே।
பூஜயித்வா மஹாதேவம் தந்தௌ லப்த்வா மநோஹரௌ॥

:“(பானுகோபனைக் தாக்கிக் கொம்புகள் முறியப்பெற்று அவனால் அடியுண்ட) ஐராவதயானை மூர்ச்சை தெளிந்தெழுந்து புண்ணியமும் சோபனமுமுடைய சுவேதாரணியம் என்னும் திருவெண்காட்டுக்குப்போய்ச் சிவபெருமானைப் பூசைசெய்து மனோஹரமாகிய இரு கொம்புகளையும் பெற்றுக்கொண்டது” என்றது ஸ்காந்தபுராணம்.

சக்கரமாற்கீந்தானுஞ்சலந்தரனைப்பிளந்தானு
மக்கரைமேலசைத்தானுமடைந்தயிராவதம்பணிய
மிக்கதனுக்கருள்சுரக்கும்வெண்காடும்வினைதுரக்கு
முக்குளநன்குடையானுமுக்கணுடையிறையவனே.

—ஞா, திருவெண்காடு.

மானமாமடப்பிடிவன்கையாலலகிடக்
கானமார்கடக்கரிவழிபடுங்கானப்பே
ரூனமாமுடம்பினிலுறுபிணிகெடவெண்ணின்
ஞானமாமலர்கொடுநணுகுதனன்மையே.

—ஞா, திருக்கானப்பேர்.

கோலமாமலரொடுதூபமுஞ்சாந்தமுங்கொண்டுபோற்றி
*வாலியார்வழிபடப்பொருந்தினார் திருந்துமாங்கனிகளுந்தி
யாலுமாகாவிரிவடகரையடைகுரங்காடுதுறை
நீலமாமணிமிடற்றடிகளைநினையவல்வினைகள்வீடே.

—ஞா, திருவடகுரங்காடுதுறை.

கள்ளார்ந்தபூங்கொன்றைமதமத்தங்கதிர்மதிய
முள்ளார்ந்தசடைமுடியெம்பெருமானாருறையுமிடந்
தள்ளாயசம்பாதிசடாயென்பார் தாமிருவர்
புள்ளானார்க்கரையனிடம்புள்ளிருக்குவேளூரே.

வாசநலஞ்செய்திமையோர்நாடோறுமலர்தூவ
வீசனெம்பெருமானாரினிதாகவுறையுமிடம்
யோசனைபோய்ப்பூக்கொணர்ந்தங்கொருநாளுமொழியாமே
பூசனைசெய்தினிதிருந்தான்புள்ளிருக்குவேளூரே.

—ஞா, திருப்புள்ளிருக்குவேளூர்.

மறையினார்மல்குகாழித்தமிழ்ஞானசம்பந்தன்மன்னு
நிறையினார்†நீலநக்கனெடுமாநகரென்றுதொண்ட
ரறையுமூர்சாத்தமங்கையயவந்திமேலாய்ந்தபத்தும்
முறைமையாலேத்தவல்லாரிமையோரிலுமுந்துவரே.

—ஞா, திருச்சாத்தமங்கை.

---

* வாலி, சடாயுமுதலாயினோரும் சிவபெருமானைப் பூசித்துள்ளார்
† திருநீலநக்கநாயனார் பூசித்தமை குறிக்கப்பட்டது.

நீடுபூசனைநிரம்பியுமன்பினுனிரம்பார்
மாடுசூழ்புடைவலங்கொண்டுவணங்கிமுன்வழுத்தித்
தேடுமாமறைப்பொருளினைத்தெளிவுறநோக்கி
நாடுமஞ்செழுத்துணர்வுறவிருந்துமுன்னவின்றார்.

—பெரியபுராணம்.

அகத்தடிமைசெய்யுமந்தணன்ற
னரிசிற்புனல்கொண்டுவந்தாட்டுகின்றான்
மிகத்தளர்வெய்திக்குடத்தையுநும்முடி
மேல்விழுத்திட்டுநடுங்குதலும்
வகுத்தவனுக்குநித்தற்படியும்
வருமென்றொருகாசினைநின்றநன்றிப்
*புகழ்த்துணைகைப்புகச்செய்துகந்தீர்
பொழிலார்திருப்புத்தூர்ப்புனிதனீரே.

—சு, அரிசிற்கரைப்புத்தூர்.

நீற்றினைநிறையப்பூசிநித்தலுநியமஞ்செய்து
வாற்றுநீர்பூரித்தாட்டு†மந்தணனைக்கொல்வான்
சாற்றுநாளற்றதென்றுதருமராசற்காய்வந்த
கூற்றினைக்குமைப்பர்போலுங்குறுக்கைவீரட்டனாரே.

தழைத்ததோராத்தியின்கீழ்த்தாபரமணலாற்கூப்பி
யழைத்தங்கேயாவின்பாலைக்கறந்துகொண்டாட்டக்கண்டு
பிழைத்த‡தன்றாதைதாளைப்பெருங்கோர்மழுவால்வீசக்
குழைத்ததோரமுதமீந்தார்குறுக்கைவீரட்டனாரே.

கல்லினாலெறிந்துகஞ்சிதாமுணுஞ்¶சாக்கியனார்
நெல்லினார்சோறுணாமேநீள்விசும்பாளவைத்தார்
எல்லியாங்கெரியையேந்தியெழிறிகழ்நட்டமாடிக்
கொல்லியாம்பண்ணுகந்தார்குறுக்கைவீரட்டனாரே.

---

* புகழ்த்துணைநாயனார் பூசித்தமை சூசிக்கப்பட்டது. † மார்க்கண்டேயர் பூசித்தமை கூறப்பட்டது. ‡ சண்டேசுரநாயனார் பூசித்தமை உரைக்கப்பட்டது ¶ சாக்கியநாயனார் பூசித்தமை கூறப்பட்டது.

*காப்பதோர்வில்லுமம்புங்கையதோரிறைச்சிப்பாரந்
தோற்பெருஞ்செருப்புத்தொட்டுத்தூயவாய்க்கலசமாட்டித்
தீப்பெருங்கண்கள்செய்யகுருதிநீரொழுகத்தன்கண்
கோப்பதும்பற்றிக்கொண்டார்குறுக்கைவீரட்டனாரே.

—நா, திருக்குறுக்கைவீரட்டம்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

ஶிவஏவ பதிஸ்ஸம்பு: பஶவோ வயமேவஹி।
பூம்யாம் லிங்காநி தேவஸ்ய ஶங்கரஸ்யாஸ்மதாதிபி:
ப்ரதிஷ்டாப்யைவ விதிநா பூஜிதாநி நிரந்தரம்।
ஸவேவ போகமோக்ஷஞ்ச ப்ரததாத்யாஶ்ரிதஸ்யஹி॥

—தக்ஷகாண்டம்.

"சிவபெருமானாகிய சம்புவே பதி; (பிரமவிஷ்ணுக்களாகிய) யாமெல்லாம் பசுக்களே; அஃதன்றி, பூமியிலே சிவபெருமானுடைய லிங்கங்கள் விதிப்படி எங்களாற் பிரதிஷ்டைசெய்து பூசிக்கப்பட்டு வருதலே அதற்குச் சான்றாம்; †அவர் தம்மைச் சார்ந்தவற்குப் போகமோக்ஷத்தைக் கொடுக்கின்றார்."

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

---

*கண்ணப்பநாயனார் பூசித்தமை விளக்கப்பட்டது. †விஷ்ணு சிவபெருமானைப் பரமபதி என்றுகொண்டு பூசித்த ஸ்தலங்கள் பல சிலவுலகிலுண்மையானும், அங்ஙனம் சிவபெருமான் விஷ்ணுவைப் பூசித்த ஸ்தலம் யாண்டும் இல்லாமையானும் சிவபெருமானே பசுபதியாவர்; ஏனைத்தேவர்கள் பசுக்களாவார்.

𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌧𑌰𑌾𑌶𑍍𑌚 𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌾 𑌗𑌰𑍁𑌡𑍋𑌰𑌗𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌃 |
𑌯𑌕𑍍𑌷𑌾𑌸𑍍𑌸𑌿𑌦𑍍𑌧𑌾 𑌗𑍁𑌹𑍍𑌯𑌕𑌾𑌶𑍍𑌚 𑌤𑌥𑌾 𑌕𑌿𑌮𑍍𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌦𑌯𑌃 |
𑌕𑌿𑌨𑍍𑌨𑌰𑌾𑌶𑍍𑌚 𑌪𑌿𑌶𑌾𑌚𑌾𑌶𑍍𑌚 𑌦𑍈𑌤𑍍𑌯𑌾𑌃 𑌪𑍍𑌰𑌹𑍍𑌲𑌾𑌦𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌾𑌃 |
𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌃 𑌪𑌶𑌵𑌶𑍍𑌚𑍈𑌵 𑌪𑌕𑍍𑌷𑌿𑌣𑍋 𑌵𑍃𑌕𑍍𑌷𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌾𑌃 |
𑌸𑍍𑌥𑌾𑌵𑌰𑌾 𑌜𑌙𑍍𑌗𑌮𑌾𑌶𑍍𑌚𑌾𑌨𑍍𑌯𑍇 𑌯𑍇 𑌚𑌾𑌨𑍍𑌯𑍇 𑌜𑍀𑌵𑌜𑌨𑍍𑌤𑌵𑌃 |
𑌪𑌰𑍍𑌵𑌤𑌾𑌶𑍍𑌚 𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌾𑌶𑍍𑌚 𑌗𑌙𑍍𑌗𑌾𑌦𑍍𑌯𑌾𑌸𑍍𑌸𑌰𑌿𑌤𑌸𑍍𑌤𑌥𑌾 |
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌰𑍍𑌷𑌯𑍋 𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑌾𑌦𑍍𑌯𑌾 𑌨𑌾𑌰𑌦𑌾𑌦𑍍𑌯𑌾𑌸𑍍𑌸𑍁𑌰𑌰𑍍𑌷𑌯𑌃 |
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑍍𑌡𑌾𑌨𑌿 𑌚 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌸𑌰𑍍𑌵𑍈𑌰𑌾𑌵𑌰𑌣𑍈𑌸𑍍𑌸𑌹 |
𑌅𑌭𑍍𑌯𑌰𑍍𑌚𑍍𑌯 𑌦𑍇𑌵𑌦𑍇𑌵𑍇𑌶𑌂 𑌲𑌿𑌙𑍍𑌗𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌂 𑌸𑌨𑌾𑌤𑌨𑌮𑍍 |
𑌸𑍍𑌵𑌂 𑌸𑍍𑌵𑌂 𑌪𑌦𑌂 𑌚 𑌸𑌮𑍍𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌸𑍍𑌵𑌸𑍍𑌵𑌾𑌭𑍀𑌷𑍍𑌟𑌮𑌵𑌾𑌪𑍍𑌯 𑌚 |
𑌦𑍁𑌰𑌿𑌤𑌾𑌨𑌿 𑌚 𑌨𑌿𑌰𑍍𑌧𑍂𑌯 𑌪𑌰𑌾𑌂 𑌨𑌿𑌰𑍍𑌵𑍃𑌤𑌿𑌮𑌾𑌪𑌿𑌰𑍇 |
𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍇𑌕𑌂 𑌦𑍇𑌵𑌮𑌾𑌰𑌾𑌧𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌾𑌭𑍀𑌷𑍍𑌟𑌾 𑌮𑌯𑍇𑌰𑌿𑌤𑌾𑌃 ||

உத்தாநபாதஸம்பூதோ த்ருவோ நாம ந்ருபாத்மஜ:।
க்ரஹாஶ்ச நவஸூர்யாத்யாஸ்ஸப்தவிம்ஶதி தாரகா:।
மேஷாத்யா ராஶயோ யோகாவிஷ்கம்பாத்யாஶ்ச பூஸுரா:।
கரணாநிச ஸப்தாபி ஶகுநாதி ஸ்திராண்யபி।
வித்யாதராஶ்ச கந்தர்வா கருடோரகராக்ஷஸா:।
யக்ஷாஸ்ஸித்தா குஹ்யகாஶ்ச ததா கிம்புருஷாதய:।
கிந்நராஶ்ச பிஶாசாஶ்ச தைத்யா: ப்ரஹ்லாதபூர்வகா:।
மநுஷ்யா: பஶவஶ்சைவ பக்ஷிணோ வ்ருக்ஷபூர்வகா:।
ஸ்தாவரா ஜங்கமாஶ்சாந்யே யேசாந்யே ஜீவஜந்தவ:।
பர்வதாஶ்ச ஸமுத்ராஶ்ச கங்காத்யாஸ் ஸரிதஸ்ததா।
ப்ரஹ்மர்ஷயோ வஸிஷ்டாத்யா நாரதாத்யாஸ்ஸுரர்ஷய:।
ப்ரஹ்மாண்டாநிச ஸர்வாணி ஸர்வைராவரணைஸ்ஸஹ।
அப்யர்ச்ய தேவதேவேஶம் லிங்கமூர்த்திம் ஸநாதநம்।
ஸ்வஸ்வம் பதஞ்ச ஸம்ப்ராப்ய ஸ்வஸ்வாபீஷ்ட மவாப்யச।
துரிதாநிச நிர்த்தூய பராம் நிர்வ்ருதிமாபிரே।
ப்ரத்யேகம் தேவமாராத்ய ப்ராப்தாபீஷ்டா மயேரிதா:॥

"உத்தானபாதரின் புத்திரனாகிய துருவன் என்னும் அரச குமாரனும், சூரியன்முதலிய ஒன்பது கிரகங்களும், இருபத்தேழு நக்ஷத்திரங்களும், மேஷமுதலிய இராசிகளும், விருஷபமுதலிய யோகங்களும், சகுனமுதலிய ஏழு ஸ்திரங்களும், வித்தியாதரர்களும், கந்தருவர்களும், கருடர்களும், உரகர்களும், இராக்ஷசர்களும், யக்ஷர்களும், சித்தர்களும், குஹ்யர்களும், கிம்புருடர்களும், கின்னரர்களும், பிசாசர்களும், பிரகலாதன்முதலிய அசுரர்களும், மனிதர்களும், பசுக்களும், பறவைகளும், விருக்ஷமுதலிய ஸ்தாவரஜங்கமங்களும் மற்றைய ஜீவசெந்துக்களும் மலைகளும் கடல்களும் கங்கைமுதலிய நதிகளும், வசிஷ்டர்முதலிய பிரமவிருஷிகளும், நாரதர்முதலிய தேவரிஷிகளும், ஆவரணங்களோடு கூடிய எல்லாப் பிரமாண்டங்களும், எக்காலமும் அழிவில்லாத சிவலிங்கப்பெருமானைப் பூசித்துத் தத்தம் பதவிகளையும் தத்தமக்கு வேண்டியவற்றையும் அடைந்து சமஸ்த பாவங்களுமொழித்துப் பரமசுகத்தை அடைந்திருக்கின்றன" என்று உபதேசகாண்டம் கூறுகின்றது.

திருவிடைமருதூரிலே உமையம்மை முதலாயினோர் வழிபட்டமை பின்வரும் பட்டினத்துப்பிள்ளையார் திருவாக்கினால் தொகுத்துக் கூறப்பட்டுள்ளது.

கொண்டலினிருண்டகண்டத்தெண்டோட
செவ்வானுருவிற்பையரவார்த்த
சிறுபிறைகிடந்தநெறிதருபுன்சடை
மூவாமுதல்வமுக்கட்செல்வ
தேவதேவதிருவிடைமருத
மாசறுசிறப்பின்வானவராடும்
பூசத்தீர்த்தம்புரக்கும்பொன்னி
யயிராவணத்துறையாடுமெப்ப

கைலாயவாணகௌரிநாயக
நின்னைவணங்கிப்பொன்னடிபுகழ்ந்து
பெரும்பதம்பிழையாவரம்பலபெற்றோ
ரிமையாநெடுங்கணுமையாணங்கையு
மழைக்கட்டடத்துப்புழைக்கைப்பிள்ளையு
மமரர்த்தாங்குங்குமரவேளுஞ்
சுரிசங்கேந்தியதிருநெடுமாலும்
வான்முறைபடைத்தநான்முகத்தொருவனுந்
தாரகற்செற்றவீரக்கன்னியும்
பூவின்கிழத்தியுநாவின்மடந்தையும்
பெயர்தோற்றத்துக்கோடியுருத்திரரு
மாணுப்பெருந்திறல்வானோர்தலைவனுஞ்
செயிர்தீர்நாற்கோட்டயிராவதமும்
வாம்பரியருக்கர்தாம்பன்னிருவருஞ்
சந்திரனொருவனுஞ்செந்தீக்கடவுளு
நிருதியுஞ்சமனுஞ்சுருதிகணான்கும்
வருணனும்வாயுவுமிருநிதிக்கிழவனு
மெட்டுநாகமுமட்டவசுக்களு
மூன்றுகோடியான்றமுனிவரும்
வசிட்டனுங்கபிலனுமகத்தியன்றானுந்
தும்புருநாரதரென்றிருதிறத்தரும்
வித்தகப்பாடன்முத்திறத்தடியருந்
திருந்தியவன்பிற்பெருந்துறைப்பிள்ளையு
மத்தருசெல்வத்தவமதித்தருளிய
சித்தமார்சிவவாக்கியதேவரும்
வெள்ளைநீறுமெய்யிற்கண்டு
கள்ளன்கையிற்கட்டவிழ்ப்பித்து
மோடும்பன்னரியூளைகேட்டரனைப்
பாடினவென்றுபடாம்பலவளித்துங்

குவளைப்புனலிற்றவளையாற்ற
வீசன்றன்னையேத்தினனென்று
காசும்பொன்னுங்கலந்துதூவியும்
வழிபடுமொருவன்மஞ்சனத்தியற்றிய
செழுவிதையெள்ளைத்தின்னக்கண்டு
பிடித்தலுமவனிப்பிறப்புக்கென்ன
விடித்துக்கொண்டவனெச்சிலைநுகர்ந்து
மருதவட்டத்தொருதனிக்கிடந்த
தலையைக்கண்டுதலையுறவணங்கி
யும்மைப்போலவெம்மைத்தலையுங்
கிடக்கவேண்டுமென்றடுத்தடுத்திரந்துங்
கோயின்முற்றத்துமீமிசைக்கிடப்ப
வாய்த்ததென்றுநாய்க்கட்டமெடுத்துங்
காம்பவிழ்த்துதிர்ந்தகனியுருக்கண்டு
வேம்புகட்கெல்லாம்விதானமமைத்தும்
விரும்பினகொடுக்கைபரம்பரற்கென்று
புரிகுழற்றேவியைப்பரிவுடன்கொடுத்த
பெரியவன்பின்வருகுணதேவரு
மினையதன்மையரெண்ணிறந்தோரே
யனையவர்நிற்கயானுமொருவன்
பத்தியென்பதோர்பாடுமின்றிச்
சுத்தனாயினுந்தோன்றாக்கடையேனின்னை
யிறைஞ்சிலனாயினுமேத்திலனாயினும்
வருந்திலனாயினும்வாழ்த்திலனாயினுங்
கருதியிருப்பன்கண்டாய்பெரும
நின்னுலகனைத்துநன்மைதீமை
யானவைநின்செயலாதலி
னானேயமையுநலமில்வழிக்கே.

—பதினோராந்திருமுறை.

கிரியைப்பற்றிய திராவிடசுருதிகள்.

நறைமலிதருமளறொடுமுகைநகுமலர்புகைமிகுவளரொளி
நிறைபுனல்கொடுதனைநினைவொடுநியதமும்வழிபடுமடியவர்
குறைவிலபதமணைதரவருள்குணமுடையிறையுறைவனபதி
சிறைபுனலமர்சிவபுரமதுநினைபவர்செயமகள்தலைவரே.

—ஞா, திருச்சிவபுரம்.

தொண்டனேன்பட்டதென்னே தூயகாவிரியினன்னீர்
கொண்டிருக்கோதியாட்டிக் குங்குமக்குழம்புசாத்தி
யிண்டைகொண்டேறநோக்கி யீசனையெம்பிரானைக்
கண்டனைக்கண்டிராதே காலத்தைக்கழித்தவாறே.

—நா, தனித்திருநேரிசை.

பாவமேவுமுள்ளமோடு பத்தியின்றிநித்தலு
மேவமானசெய்துசாவ தன்முனம்பிசைந்துநீர்
தீபமாலைதூபமுஞ் செறிந்தகையராகிநந்
தேவதேவன்மன்னுமூர் திருந்துகாழிசேர்மினே.

—ஞா, திருப்பிரமபுரம்.

உருவரைநின்றநாளி லுயிர்கொள்ளுங்கூற்றநனியஞ்சுமாதலுறநீர்
மருமலர்தூவியென்று மழிபாடுசெய்ம்மினழிபாடிலாதகடவி
னருவரைசூழிலங்கையரையன்றன்வீரமழியத்தடக்கைமுடிக [வே.
டிருவிரல்வைத்துகந்தசிவன்மேயசெல்வத் திருநாரையூர்கைதொழ

—ஞா, திருநாரையூர்

பெரும்புலர்காலைமூழ்கிப் பித்தர்க்குப்பத்தராகி
யரும்பொடுமலர்கள்கொண்டாங் கார்வத்தையுள்ளேவைத்து
விரும்பிநல்விளக்குத்தூபம் விதியினாலிடவல்லார்க்குக்
கரும்பினிற்கட்டிபோல்வார் கடவூர்வீரட்டனாரே.

—நா, திருக்கடவூர்வீரட்டம்.

பிறப்போடிறப்பென்றுமில்லான்றான்காண்
பெண்ணுருவோடாணுருவுமாயினான்காண்
மறப்படுமென்சிந்தைமருணீக்கினான்காண்
வானவருமறியாதநெறிதந்தான்கா
ணறப்படுபூமலர்தூபந்தீபநல்ல
நறுஞ்சாந்தங்கொண்டேத்திநாளும்வானோர்
சிறப்போடுபூசிக்குந்திருவாரூரிற்
றிருமூலட்டானத்தெஞ்செல்வன்றானே.

—நா, திருவாரூர்.

சகமலாதடிமையில்லைத்தானலாற்றுணையுமில்லை
நகமெலாந்தேயக்கையானாண்மலர்தொழுதுதூவி
முகமெலாங்கண்ணீர்மல்கமுன்பணிந்தேத்துந்தொண்ட
ரகமலாற்கோயிலில்லையையனையாறனார்க்கே.

—நா, திருவையாறு.

சுரும்பார்விண்டமலரவைதூவித்தூங்குகண்ணீ
ரரும்பாநிற்குமனத்தடியாரோடுமன்புசெய்வன்
விரும்பேனுன்னையல்லாலொருதெய்வமென்மனத்தாற்
கரும்பாருங்கழனிக்கழிப்பாலைமேயானே.

—சு, திருக்கழிப்பாலை.

நறுமாமலர்கொய்துநீரின்மூழ்கி
நாடோறுநின்கழலேயேத்திவாழ்த்தித்
துறவாததுன்பந்துறந்தேன்றன்னைச்
சூழுலகிலூழ்வினைவந்துற்றாலென்னே
யுறவாகிவானவர்கண்முற்றும்வேண்ட
வொலிதிரைநீர்க்கடனஞ்சுண்டுய்யக்கொண்ட
வறவாவடியேனையஞ்சேலென்னா
யாவடுதண்டுறையுறையுமமரரேறே.

—நா, திருவாவடுதுறை.

முட்டாமேநாடோறுநீர்மூழ்கிப்பூப்பறித்துமூன்றுபோதுங்
கட்டார்ந்தவிண்டைகொண்டடிச்சேர்த்துமந்தணர்தங்கருப்பறியலூர்க்
கொட்டாட்டுப்பாட்டாகிநின்றானைக்குழகனைக்கொகுடிக்கோயி
லெட்டானமூர்த்தியைநினைந்தபோதவர்நமக்கினியவாறே.

—சு, திருக்கருப்பறியலூர்.

(௧௦௦) சிவலிங்கபூசை.

𑌤𑌵 𑌶𑍍𑌰𑌿𑌯𑍇 𑌮𑌰𑍁𑌤𑍋 𑌮𑌰𑍍𑌜𑌯𑌨𑍍𑌤 𑌰𑍁𑌦𑍍𑌰 𑌯𑌤𑍍𑌤𑍇 𑌜𑌨𑌿𑌮 𑌚𑌾𑌰𑍁 𑌚𑌿𑌤𑍍𑌰𑌮𑍍।

தவ ஶ்ரியே மருதோ மர்ஜயந்த ருத்ர யத்தே ஜநிம சாரு சித்ரம்।

"தேவர்கள் (பொருளும் அருளுமாம்) செல்வத்தை அடையுமாறு (சிவபெருமானுடைய) விசித்திரரூபமாகிய மகாலிங்கமூர்த்தியை அபிஷேகாதி பூசைசெய்தார்" என்று இருக்குவேதம் (ரு. ௩, ௩) கூறுகின்றது.

இதனால் யாவரும் சிவபெருமானைப் பூசித்தல்வேண்டும் என்று பெறப்படுகின்றது.

திருநாமமஞ்செழுத்துஞ்செப்பாராகிற்
றீவண்ணர்திறமொருகாற்பேசாராகி
லொருகாலுந்திருக்கோயில்சூழாராகி
லுண்பதன்முன்மலர்பறித்திட்டுண்ணாராகி
லருநோய்கள்கெடவெண்ணீறணியாராகி
லளியற்றார்பிறந்தவாறேதோவென்னிற்
பெருநோய்கண்மிகநலியப்பெயர்த்துஞ்செத்துப்
பிறப்பதற்கேதொழிலாகியிறக்கின்றாரே.

—நா, தனித்திருத்தாண்டகம்.

யாவர்க்குமாமிறைவற்கொருபச்சிலை
யாவர்க்குமாம்பசுவுக்கொருவாயுறை
யாவர்க்குமாமுண்ணும்போதொருகைப்பிடி
யாவர்க்குமாம்பிறர்க்கின்னுரைதானே.

—திருமந்திரம்.

(௧0௧) பஞ்சகவ்வியம்.

𑌕𑍍𑌷𑍀𑌰𑌾𑌭𑌿𑌷𑍇𑌕𑌮𑍀𑌶𑌸𑍍𑌯 𑌵𑌦𑌨𑍍𑌤𑌿 𑌮𑍁𑌨𑌯𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌮𑍍।
𑌅𑌲𑍍𑌪𑌾𑌦𑌲𑍍𑌪𑌤𑌰𑌂 𑌵𑌾𑌪𑌿 𑌗𑌵𑍍𑌯𑌾𑌨𑍍𑌯𑌪𑌿 𑌚 𑌪𑌞𑍍𑌚 𑌵𑌾॥

க்ஷீராபிஷேகமீஶஸ்ய வதந்தி முநய: ப்ரியம்।
அல்பாதல்பதரம் வாபி கவ்யாங்யபி ச பஞ்ச்வா॥

சிவபெருமானுக்குச் சிறிதிற் சிறிதேனும் பால் அபிஷேகஞ் செய்தல் மிகவும் பிரியமுள்ளது என்றும், அங்ஙனம் பால் தயிர் நெய் கோசலம் கோமயம் என்னும் ஐந்தின் சேர்க்கையாகிய பஞ்சகவ்வியமும் பிரியமாம் என்றும் முனிவர் கூறுகின்றனர்" என்று ஸ்காந்தபுராணம் கூறுகின்றது.

வேலைசேர்நஞ்சமிடற்றான்கண்டாய்
விண்டவர்பூங்கயிலைவெற்பன்கண்டா
யாலைசேர்வேள்வியழித்தான்கண்டா
யமரர்கடாமேத்துமண்ணல்கண்டாய்
பானெய்சேரானஞ்சுமாடிகண்டாய்
பருப்பதத்தான்கண்டாய்பாவைமேனி
மாலையோர்கூறுடையமைந்தன்கண்டாய்
மறைக்காட்டுறையுமணாளன்றானே.

—நா, திருமறைக்காடு.

(௧0௨) அஷ்டபுஷ்பம்.

𑌦𑍍𑌰𑍋𑌣𑌪𑍁𑌷𑍍𑌪𑌂 𑌤𑌥𑌾 𑌚𑍈𑌵 𑌮𑌨𑍍𑌦𑌾𑌰𑌂 𑌶𑌙𑍍𑌖𑌪𑍁𑌷𑍍𑌪𑌕𑌮𑍍।
𑌶𑍍𑌵𑍇𑌤𑌂 𑌪𑌲𑌾𑌶 𑌧𑌤𑍍𑌤𑍂𑌰𑌂 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌂 𑌵𑍍𑌯𑌾𑌘𑍍𑌰𑌪𑍁𑌷𑍍𑌪𑌕𑌮𑍍।
𑌶𑌮𑍀𑌂𑌚𑍈𑌵𑌤𑍁 𑌮𑌧𑍍𑌯𑌾𑌹𑍍𑌨𑍇𑌽𑌪𑍍𑌯𑌷𑍍𑌟𑌪𑍁𑌷𑍍𑌪𑌂 𑌸𑍁𑌯𑍋𑌜𑌯𑍇𑌤𑍍॥

த்ரோணபுஷ்பம் ததா சைவ மந்தாரம் ஶங்கபுஷ்பகம்।
ஶ்வேதம் பலாஶ தத்தூரம் வ்யாக்யாதம் வ்யாக்ரபுஷ்பகம்।
ஶமீஞ்சைவது மத்யாஹ்நேப்யஷ்டபுஷ்பம் ஸுயோஜயேத்॥

"பெரியதும்பை, மந்தாரம், சங்குபுஷ்பம், வெள்ளைப்பாதிரி, வழுதுணை, பொன்னூமத்தை, புலிநகக்கொன்றை, வன்னி என்னும் அஷ்டபுஷ்பங்கள்கொண்டு (சிவபெருமானுக்கு) மத்தியானத்திலே அர்ச்சிக்க" என்றும்,

𑌅𑌰𑍍𑌕𑌪𑍁𑌷𑍍𑌪𑌞𑍍𑌚 𑌬𑌿𑌲𑍍𑌵𑌞𑍍𑌚𑌾𑌪𑌾𑌮𑌾𑌰𑍍𑌗 𑌕𑌰𑌵𑍀𑌰𑌕𑌮𑍍 ।
𑌪𑌙𑍍𑌕𑌜𑌂 𑌨𑌾𑌗𑌨𑌨𑍍𑌦𑍀𑌚 𑌨𑌨𑍍𑌦𑍍𑌯𑌾𑌵𑌰𑍍𑌤𑌞𑍍𑌚 𑌮𑌲𑍍𑌲𑌿𑌕𑌾 ।
𑌅𑌷𑍍𑌟𑌪𑍁𑌷𑍍𑌪𑌂 𑌤𑌥𑌾 𑌵𑌤𑍍𑌸 𑌪𑍍𑌰𑌾𑌤𑌸𑍍𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌸𑍁 𑌪𑍁𑌷𑍍𑌪𑌕𑌮𑍍 ।
𑌅𑌪𑌰𑌾𑌹𑍍𑌣𑌾𑌰𑍍𑌚𑌨𑌾𑌪𑍁𑌷𑍍𑌪𑌂 𑌪𑍂𑌮𑍂𑌲𑌂 𑌚𑌮𑍍𑌪𑌕𑌂 𑌤𑌥𑌾 ।
𑌬𑌕𑍁𑌳𑌂 𑌕𑍃𑌷𑍍𑌣𑌵𑌲𑍍𑌲𑍀 𑌚 𑌮𑌲𑍍𑌲𑌿𑌕𑌾𑌤𑍍𑌵𑌯𑌮𑍇𑌵 𑌚 ।
𑌜𑌾𑌤𑍀 𑌚 𑌸𑌾𑌨𑍍𑌤𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌸𑌾𑌯𑍇 𑌚𑍈𑌵𑌾𑌰𑍍𑌧𑌯𑌾𑌮𑌕𑍇 ॥

அர்க்கபுஷ்பஞ்ச பில்வஞ்சாபாமார்க்க கரவீரகம்।
பங்கஜம் நாகநந்தீச நந்த்யாவர்த்தஞ்ச மல்லிகா।
அஷ்டபுஷ்பம் ததா வத்ஸ ப்ராதஸ் ஸந்த்யாஸு புஷ்பகம்।
அபராஹ்நார்ச்சநாபுஷ்பம் பூமூலம் சம்பகம் ததா।
பகுளம் க்ருஷ்ணவல்லீச மல்லிகாத்வயமேவச।
ஜாதீச சாந்தஸம்யுக்தம் ஸாயே சைவார்த்தயாமகே॥

"வெள்ளெருக்கு, வில்வமுதலிய எட்டும் பிராதஸ்சந்தியா காலங்களுக்குரிய புஷ்பங்கள் என்றும், (வெட்டி) வேர் சம்பக முதலிய எட்டும் சாயங்கால அர்த்தயாமங்களுக்குரிய புஷ்பங்கள்" என்றும் காரணாகமம் கூறுகின்றது.

வண்டணைகொன்றைவன்னியுமத்தமருவியகூவிளமெருக்கொடுமிக்க, கொண்டணிசடையர்விடையினர்பூதங்கொடுகொட்டிகுடமுழாக்கூடியுமுழவப், பண்டிகழ்வாகப்பாடியொர்வேதம்பயில்வர் முன்பாய்புனற்கங்கையைச்சடைமேல், வெண்பிறைசூடியுமையவளோடும்வெங்குருமேவியுள்வீற்றிருந்தாரே.

—ஞா, திருப்பிரமபுரம்.

எட்டுநாண்மலர்கொண்டவன்சேவடி
மட்டலரிடுவார்வினைமாயுமாற்
கட்டித்தேன்கலந்தன்னகெடிலவீ
ரட்டனாரடிசேருமவருக்கே.

—நா, திருவதிகைவீரட்டானம்.

கட்டறுத்துக்கடிதெழுதூதுவர்
பொட்டறாக்கிப்புறப்படாமுன்னமே
யட்டமாமலர்சூடும்வாட்போக்கியார்க்
கிட்டமாகியிணையடியேத்துமே.

—நா, திருவாட்போக்கி.

கட்டாயநின்றுநீங்கள்காலத்தைக்கழிக்கவேண்டா
வெட்டவாங்கைகள்வீசியெல்லிநின்றுடுவானை
யட்டகாமலர்கள்கொண்டேயானஞ்சுமாட்டவாடிச்
சிட்டாயருள்கள்செய்வார்திருச்சோற்றுத்துறையனாரே.

—நா, திருச்சோற்றுத்துறை.

---

(௪௦௫) உற்சவம்.

காரணாகம, ...

அத வக்ஷ்யே விஶேஷேண க்ருத்திகா தீபலக்ஷணம்।

அத வக்ஷ்யே விஶேஷேண க்ருத்திகாதீபலக்ஷணம்।

"பின்னர் விசேஷமாகக் கார்த்திகைத் தீபோற்சவலக்ஷணத்தைக் கூறுகின்றேன்" என்று தொடங்கிக் கூறி,

உத்ஸவம் காரயேத் தத்ர யதா வித்தாநுஸாரத:।

உத்ஸவம் காரயேத் தத்ர யதா வித்தாநுஸாரத:।

"பொருட்டகுதிக்கியைந்தவாறு உற்சவம் செய்க" என்று கார்த்திகை உற்சவத்தையும்,

அதாத்ஸம்ப்ரவக்ஷ்யாமி தநுர்மாஸார்ச்சநம் பரம்।

அதாத்ஸம்ப்ரவக்ஷ்யாமி தநுர்மாஸார்ச்சநம் பரம்।

"இன்பமாகிய மார்கழிமாசப்பூசையைச் சொல்கின்றேன்" என்றும,

அத:பரம் ப்ரவக்ஷ்யாமி சார்த்ராவ்ரதலக்ஷணம்।

அத:பரம் ப்ரவக்ஷ்யாமி சார்த்ராவ்ரதலக்ஷணம்।

"அதன் பின்னர்த் திருவாதிரைப் பூஜாலக்ஷணத்தைக் கூறுகின்றேன்" என்றும் தொடங்கி,

𑌹𑍋𑌮𑌾𑌨𑍍𑌤𑍇 𑌸𑍍𑌨𑌪𑌨𑌂 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌨𑍍 𑌨𑍃𑌤𑍍𑌤𑌮𑍂𑌰𑍍𑌤𑍍𑌤𑌿𑌂 𑌸𑌂𑌪𑍂𑌜𑌯𑍇𑌤𑍍।

ஹோமாந்தே ஸ்நபநம் குர்யாந் ந்ருத்தமூர்த்திம் ஸம்பூஜயேத்।

"ஓமஞ் செய்துமுடிந்தபோது ஸ்நபனஞ் செய்க, பின்னர் நிருத்தமூர்த்தியைப் பூசிக்க" என்று திருவாதிரை உற்சவபூசையையும், இவையொழிந்த ஏனைய உற்சவங்களையும் விரித்துக் கூறுகின்றது காரணாகமம்.

வளைக்கைமடநல்லார்மாமயிலைவண்மறுகிற்
றுளக்கில்கபாலீச்சரத்தான்றொல்கார்த்திகைநாட்
டளத்தேந்திளமுலையார்தையலார்கொண்டாடும்
விளக்கீடுகாணாதேபோதியோபூம்பாவாய்.

ஊர்திரைவேலையுலாவுமுயர்மயிலைக்
கூர்தருவேல்வல்லார்கொற்றங்கொள்சேரிதனிற்
கார்தருசோலைக்கபாலீச்சரமமர்ந்தா
னாதிரைநாள்காணாதேபோதியோபூம்பாவாய்.

—ஞா, திருமயிலாப்பூர்.

---

(௧௦௪) சிவபெருமான் ஞானத்தினால் ஆன்மாவில் அறியப்படுகின்றார்.

𑌤𑌿𑌲𑍇𑌷𑍁 𑌤𑍈𑌲𑌂 𑌦𑌧𑌿𑌨𑍀𑌵 𑌸𑌰𑍍𑌪𑌿𑌰𑌾𑌪𑌃 𑌸𑍍𑌰𑍋𑌤𑌃
𑌸𑍍𑌵𑌰𑌣𑍀𑌷𑍁 𑌚𑌾𑌗𑍍𑌨𑌿𑌃 । 𑌏𑌵𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 𑌗𑍃𑌹𑍍𑌯𑌤𑍇
𑌽𑌸𑍌 𑌸𑌤𑍍𑌯𑍇𑌨𑍈𑌨𑌂 𑌤𑌪𑌸𑌾 𑌯𑍋𑌽𑌨𑍁𑌪𑌶𑍍𑌯𑌤𑌿॥

திலேஷு தைலம் ததிநீவ ஸர்பிராபஸ் ஸ்ரோதஃ ஸ்வரணீஷு சாக்நி:। ஏவமாத்மாத்மநி க்ருஹ்யதேஸௌ ஸத்யேநைநம் தபஸா யோநுபச்யதி॥

‘‘எள்ளில் எண்ணெய் போன்றும், தயிரில் நெய் போன்றும், (வறந்த) நதியில் ஜலம்போன்றும், அரணியில் அக்கினிபோன்றும் (யாண்டும் வியாபித்துள்ள) இந்தப் பரமான்மா (சிவபெருமான்) ஆன்மாவில் அறியப்படுகின்றார்; சத்தியமும் தபசும் (ஞானமும்) கொண்டு இவன் அவரைக் காண்கின்றான்’’ என்று சுவேதாசுவதர (க. கரு) மும்,

𑌤𑌿𑌲𑍇𑌷𑍁 𑌵𑌾 𑌯𑌥𑌾 𑌤𑍈𑌲𑌂 𑌦𑌧𑍍𑌨𑌿 𑌵𑌾 𑌸𑌰𑍍𑌪𑌿𑌰𑌰𑍍𑌪𑌿𑌤𑌮𑍍 ।
𑌯𑌥𑌾𑌪𑌃 𑌸𑍍𑌰𑍋𑌤𑌸𑌿 𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌾 𑌯𑌥𑌾𑌰𑌣𑍍𑌯𑌾𑌂 𑌹𑍁𑌤𑌾𑌶𑌨𑌃 ।
𑌏𑌵𑌮𑍇𑌵𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌾 𑌨𑌮𑌾𑌤𑍍𑌮 𑌨𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌵𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥

திலேஷுவா யதா தைலம் தத்நிவா ஸர்ப்பிரர்ப்பிதம்।
யதாபஸ் ஸ்ரோதஸி வ்யாப்தா யதாரண்யாம் ஹுதாஶந:।
ஏவமேவமஹாத்மாநமாத்மந்யாத்மவிலக்ஷணம்॥

‘‘திலத்தில் எண்ணெய் போன்றும், தயிரில் அமைந்த நெய் போன்றும், (வறந்த) நதியில் வியாபித்த ஜலம் போன்றும், அரணியில் அக்கினிபோன்றும் (பிரபஞ்சமெங்கும் பரமான்மா வியாபித்துள்ளார்); இங்ஙனம் ஆன்மாவிலே ஆன்மாவுக்கு வேறாகிய பரமான்மாவை (ஒருவன்) சத்தியமும் ஞானமுங்கொண்டு எப்போதும் இயைந்துநின்று காண்கின்றான்’’ என்று வாயுசங்கிதையும்,

𑌪𑍁𑌷𑍍𑌪𑍇𑌷𑍁 𑌗𑌨𑍍𑌧𑌵𑌜𑍍𑌜𑍍𑌞𑍇𑌯𑌸𑍍𑌤𑌿𑌲𑍇𑌷𑍍𑌵𑌪𑌿 𑌚 𑌤𑍈𑌲𑌵𑌤𑍍 ।
𑌘𑌣𑍍𑌟𑌾𑌯𑌾𑌂 𑌧𑍍𑌵𑌨𑌿𑌵𑌤𑍍 𑌤𑍍𑌵𑌗𑍍𑌨𑍌 𑌪𑍍𑌰𑌭𑌾𑌵𑌤𑍍 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌃 ।
𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌸𑌰𑍍𑌵𑌦𑌾 𑌦𑍇𑌵𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍍𑌵𑌪𑌿 𑌚 𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 ॥

புஷ்பேஷு கந்தவஜ் ஜ்ஞேயஸ்திலேஷ்வபிச தைலவத்।
கண்டாயாம் த்வநிவத் த்வக்நௌ ப்ரபாவத் பரமேஶ்வர:।
ஸர்வத்ர ஸர்வதா தேவஸ் ஸர்வேஷ்வபிச ஸம்ஸ்தித:॥

‘‘மலரில் மணம் போன்றும், எள்ளில் எண்ணெய் போன்றும், மணியில் நாதம் போன்றும், அக்கினியிற் பிரகாசம் போன்றும் எவ்விடங்களினும் எக்காலங்களினும் எப்பொருள்களினும் வியாபித்துள்ளார் சிவபெருமான்’’ என்று தக்ஷகாண்டமும்,

𑌸𑌰𑍍𑌪𑌿𑌃 𑌕𑍍𑌷𑍀𑌰𑍇 𑌯𑌥𑌾 𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌂 𑌤𑌿𑌲𑌤𑍈𑌲𑌮𑌿𑌵 𑌸𑍍𑌥𑌿𑌤𑌃।
𑌅𑌨𑌲𑌶𑍍𑌚 𑌯𑌥𑌾 𑌕𑌾𑌷𑍍𑌠𑍇 𑌤𑌥𑌾 𑌸𑌰𑍍𑌵𑌗𑌤𑌶𑍍𑌶𑌿𑌵𑌃॥

ஸர்பி: க்ஷீரே யதா வ்யாப்தம் திலதைலமிவ ஸ்திதம்|
அநலஸ்ச யதா காஷ்டே ததாஸர்வகதஶ்ஶிவ:||

"நெய் பாலில் எங்ஙனம் வியாபித்துளதோ, அக்கினி க்ஷ்டத்தில் எங்ஙனம் வியாபித்துளதோ, அங்ஙனம் திலதைலம் போலச் சர்வவியாபகராகிய சிவபெருமான் நிலையுற்றார்" என்று சிவஞானசங்கிரகமும் கூறுகின்றன.

விறகிற்றீயினன்பாலிற்படுநெய்போன்
மறையநின்றுளன்மாமணிச்சோதியா
னுறவுகோனட்டுணர்வுகயிற்றினான்
முறுகவாங்கிக்கடையமுன்னிற்குமே.

—நா, தனித்திருக்குறுந்தொகை.

(கo௫) யோகம்.

𑌸𑌮𑍇 𑌶𑍁𑌚𑍌 𑌶𑌰𑍍𑌕𑌰𑌾𑌵𑌹𑍍𑌨𑌿𑌵𑌾𑌲𑍁𑌕𑌾𑌵𑌿𑌵
𑌰𑍍𑌜𑌿𑌤𑍇 𑌶𑌬𑍍𑌦𑌜𑌲𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌦𑌿𑌭𑌿𑌃। 𑌮𑌨𑍋𑌨𑍁𑌕𑍂𑌲𑍇
𑌨 𑌤𑍁 𑌚𑌕𑍍𑌷𑍁𑌪𑍀𑌡𑌨𑍇 𑌗𑍁𑌹𑌾𑌨𑌿𑌵𑌾𑌤𑌾𑌶𑍍𑌰𑌯𑌣𑍇
𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌯𑍇𑌤𑍍॥

ஸமே ஶுசௌ ஶர்க்கரா வஹ்நிவாலுகா விவர்ஜிதே ஶப்தஜலாஶ்ரயாதிபி: | மநோநுகூலே நது சக்ஷுபீடநே குஹாநிவாதாஶ்ரயணே ப்ரயோஜயேத்||

"சுசியாயும், பருக்கைக்கற்கள், தீ, புழுதி இல்லாததாயும், சப்தங்களினாலும் ஜலத்தினாலும் கொம்பர்களாலும் இனிமை வாய்ந்ததாயும், கண்ணுக்குத் துன்பம் விளைக்காததாயும், மனசுக்கு இனிமை பயப்பதாயுமுள்ள சமமாகிய காற்றுள்ள குகையிலே இருந்து ஒருவன் யோகாப்பியாசஞ் செய்க" என்று சுவேதாசுவதரோபநிடத (உ. கo) மும்,

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

ஸூந்யாகாரே மடே ரம்யே தேவ்தாயதநே ஸுபே।
நதீதீரே விவிக்தே வா க்ருஹே கோரவநேபிவா।
ஸ்நாத்வா ஸுசிருபஸ்ப்ருஸ்ய ப்ரணம்ய ஸிரஸா ஸிவம்।
யோகாசார்யம் நமஸ்க்ருத்ய யோகம் யுஞ்ஜீத மாநவ:॥

"ஜனமில்லா வீட்டிலாவது, இரம்மியமாகிய மடத்திலாவது, இன்பமாகிய ஆலயத்திலாவது, நதிதீரத்திலாவது; தனி இடத்திலாவது, வீட்டிலாவது, கோரமாகிய காட்டிலாவது (யோகஞ்செய்தற்கு முயன்று யோகாப்பியாசி) ஸ்நானஞ் செய்து சுசியுடையனாய் ஆசமனஞ் செய்து சிவபெருமானை வணங்கி, தனது யோகாசாரியனை நமஸ்கரித்து யோகத்திற் றலைப்படுக" என்று சர்வஞ்ஞானோத்தராகமமும் கூறுகின்றன:

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

(அதவா) பரமாத்மாநம்பரமாநந்தவிக்ரஹம்।
குருபதேஸாத் விஜ்ஞேயம் புருஷம் க்ருஷ்ணபிங்களம்।
ப்ரஹ்ம ப்ரஹ்மபுரே கார்க்கி தஹராப்ஜகமத்யமே।
அப்யர்ஸாத் ஸம்ப்ரபஸ்யந்தி ஸந்தஸ் த்வஞ்ச ததா குரு।

"குருவுபதேசம்வாயிலாகப் பரமானந்தவிக்கிரகரும், புருஷரும், கிருஷ்ணபிங்களருமாகிய பரப்பிரஹ்மசிவபிரானைத் தியானப்பியாசத்தினாலே, கார்க்கியே! பெரியோர் பிரஹ்மபுரத்துத் தகரபுண்டரீகமத்தியிலே காண்கின்றனர்; நீயும் அங்ஙனஞ் செய்" என்று (யோகயாஞ்ஞவற்கிய) ஸ்மிருதியும்;

𑌵𑌿𑌵𑌿𑌕𑍍𑌤𑌦𑍇𑌶𑍇 𑌚 𑌸𑍁𑌖𑌾𑌸𑌨𑌸𑍍𑌥𑌃 𑌶𑍁𑌚𑌿𑌃 𑌸𑌮𑌗𑍍𑌰𑍀𑌵𑌶𑌿𑌰𑌃𑌶𑌰𑍀𑌰𑌃 । 𑌅𑌤𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑌮𑌸𑍍𑌥𑌃 𑌸𑌕𑌲𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌨𑌿𑌰𑍁𑌧𑍍𑌯 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌸𑍍𑌵𑌗𑍁𑌰𑍁𑌂 𑌪𑍍𑌰𑌣𑌮𑍍𑌯 । 𑌹𑍃𑌤𑍍𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌂 𑌵𑌿𑌰𑌜𑌂 𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌂 𑌵𑌿𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌵𑌿𑌶𑌦𑌂 𑌵𑌿𑌶𑍋𑌕𑌮𑍍 । 𑌅𑌨𑌨𑍍𑌤𑌮𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌮𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌰𑍂𑌪𑌂 𑌶𑌿𑌵𑌂 𑌪𑍍𑌰𑌶𑌾𑌨𑍍𑌤𑌮𑌮𑍃𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌯𑍋𑌨𑌿𑌮𑍍 । 𑌤𑌥𑌾𑌦𑌿𑌮𑌧𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌵𑌿𑌹𑍀𑌨𑌮𑍇𑌕𑌂 𑌵𑌿𑌭𑍁𑌂 𑌚𑌿𑌦𑌾𑌨𑌨𑍍𑌦𑌮𑌰𑍂𑌪𑌮𑌦𑍍𑌭𑍁𑌤𑌮𑍍 । 𑌉𑌮𑌾𑌸𑌹𑌾𑌯𑌂 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌂 𑌪𑍍𑌰𑌭𑍁𑌂 𑌤𑍍𑌰𑌿𑌲𑍋𑌚𑌨𑌂 𑌨𑍀𑌲𑌕𑌣𑍍𑌠𑌂 𑌪𑍍𑌰𑌶𑌾𑌨𑍍𑌤𑌮𑍍 । 𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌵𑌾 𑌮𑍁𑌨𑌿𑌰𑍍𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 𑌭𑍂𑌤𑌯𑍋𑌨𑌿𑌂 𑌸𑌮𑌸𑍍𑌤𑌸𑌾𑌕𑍍𑌷𑌿𑌂 𑌤𑌮𑌸𑌃 𑌪𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑍍 ॥

விவிக்த தேசேச ஸுகாஸநஸ்தஶ்ஶுசிஸ்ஸமக்ரீவ ஶிரஶ்ஶரீர:| அத்யாஶ்ரமஸ்தஸ் ஸகலேந்த்ரியாணி நிருத்ய பக்த்யா ஸ்வகுரும் ப்ரணம்ய| ஹ்ருத்புண்டரீகம் விரஜம் விஶுத்தம் விசிந்த்ய மத்யே விஶதம் விஶோகம்| அநந்த மவ்யக்த மசிந்த்ய ரூபம் ஶிவம் ப்ரஶாந்தமம்ருதம் ப்ரஹ்மயோநிம்| ததாதி மத்யாந்த விஹீநமேகம் விபும் சிதாநந்தமரூபமத்புதம்| உமாஸஹாயம் பரமேஶ்வரம் ப்ரபும் த்ரிலோசநம் நீலகண்டம் ப்ரஶாந்தம்| த்யாத்வா முநிர் கச்சதி பூதயோநிம் ஸமஸ்தஸாக்ஷிம் தமஸ: பரஸ்தாத்||

"தனியிடத்திலே சுகாசனத்திருந்து, சுத்தனுகி நேரிய கழுத்துத் தலை சரீரமுடையனுய், (விதிப்படி விபூதிதாரணஞ் செய்தலாகிய) வைதிகபாசுபத விரதமுடையனுய், இந்திரியங்கள் அனைத்தையும் அடக்கி, அன்பினேடு தன் குருவை வணங்கி, இதய கமலத்தைத் தூசுளற்றதாய்ச் சுத்தமாகக் கருதி, அதனடுவே தெளிவுடையராய், சோகமிலராய், அனந்தராய், வெளிப்படாதவராய், நினைத்தற்கரியராய், பிரசாந்தராய், அமிர்தராய், பிரமகாரணராய், முதனடுவீறிலராய்; ஏகராய்; வியாபியாய், சிதானந்தரூபியாய், நிஷ்களராய், அற்புதராய், உமாசகாயராய், பரமேசுவரராய், பிரபுவாய், முக்கண்ணராய், நீலகண்டராய், பிரசன்னராயுள்ளாரைத் தியானித்து, முனியானவன் பூதகாரணராய், சமஸ்தசாக்ஷியாயிருப்பவரை இருளுக்குமேலே போயடைகின்றுன்" என்று கைவல்லியோபநிடதமும் உரைக்கின்றன. இதனுற் தகரபுண்டரீகத்தின்பாலதாகிய [பிரமாண்டமாகிய சரீரத்திலே உள்ள] தகராகாயத்திலே சிவோபாசனை செய்யுமாறு கூறப்பட்டது. இங்ஙனம் அவர் சரீரத்து இருதயபுண்டரீகவாகாயத்துளராயினும்,

𑌵𑍍𑌯𑍋𑌮𑌵𑌚𑍍𑌚।

வ்யோமவச்ச।

"அவர் ஆகாயமும் போல்வர்" என்று வேதாந்தசூத்திரம் (க. உ. எ) கூறிய பிரகாரம்.

𑌅𑌕𑍍𑌷𑌰𑌮𑌮𑍍𑌬𑌰𑌾𑌨𑍍𑌤𑌧𑍃𑌤𑍇𑌃।

அக்ஷரமம்பராந்தத்ருதேஃ।

"அக்ஷரமாகிய சிவபெருமான் (பிருதிவிமுதல் திருச்சிற்றம்பல) ஆகாயம் இறுதியாகிய அனைத்தையும் தாங்குதலால்" என்று வேதாந்தசூத்திரம் (க. ௩. க) கூறுதலானும், அங்ஙனம் பிருதிவி, சலில, வாயு, அந்தரிக்ஷலோக, கந்தருவலோக, ஆதித்தியலோக, சந்திரலோக, நக்ஷத்திரலோக, தேவலோக, இந்திரலோக, பிரஜாபதிலோகமாகிய லோகங்களெல்லாம் கோவைபட்டுப் (பராசத்தியாகிய) ஆகாயத்திலே நிலைக்க, ஆகாயம் அக்ஷரப்பிரஹ்மமாகிய சிவபிரானைப்பற்றி நின்றது என்று சிவார்க்கமணிதீபிகையினும், பிரகிருதிமாயை, அசுத்தமாயை, சுத்தமாயை என்பவற்றின் விகாரமாய மலினப்பிரபஞ்சம், மிசிரப்பிரபஞ்சம், சுத்தப்பிரபஞ்சம் என்னும் முத்திறப்பிரபஞ்சாதீதமாயுள்ளது (பரமாகாயபராசத்தியினின்று வேறுறாத) பரமானந்தமயமாகிய சிவபெருமானுடைய ஸ்தானம் என்று இரத்தினத்திரயபரீக்ஷையினும் காணப்படலானும், திருச்சிற்றம்பலவரது ஸ்தானம் அண்டத்தில் நிற்குமாறும் அறியப்படுகின்றது.

𑌅𑌮𑌾𑌤𑍍𑌰𑌶𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑍋𑌽𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑍍𑌯𑌃 𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑍋𑌪
𑌶𑌮𑌃 𑌶𑌿𑌵𑍋𑌽𑌦𑍍𑌵𑍈𑌤 𑌏𑌵𑌮𑍋𑌙𑍍𑌕𑌾𑌰 𑌆𑌤𑍍𑌮𑍈𑌵 𑌸𑌂𑌵𑌿
𑌶𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌯 𑌏𑌵𑌂 𑌵𑍇𑌦 𑌯 𑌏𑌵𑌂 𑌵𑍇𑌦।

அமாத்ரஶ் சதுர்த்தோவ்யவஹார்யஃ ப்ரபஞ்சோ
பஶமஶ் ஶிவோத்வைத ஏவமோங்கார ஆத்மைவஸம்வி
ஶத்யாத்மநாத்மாநம் ய ஏவம் வேத ய ஏவம் வேத।

"அளவில்லாதவராய், வியவகரித்தற்கியலாதவராய், பிரபஞ்சோபசமராய், பரமான்மாவாய் இங்ஙனம் ஓங்காரராய்த் துரிய

மூர்த்தியாயிருக்கின்ற சிவபிரான் அத்துவைதராய் (இரண்டாவ தற்றவராய்) இருக்கின்றார் என்று எவன் இங்ஙனம் அறிகின்றானோ, எவன் இங்ஙனம் அறிகின்றானோ, அவன் பரமான்மாவின் அருளினாற் பரமான்மாவை அடைகின்றான்" என்று மாண்டூக்கியோபநிடதம் கூறுகின்றது. இந்தத் துரியசிவனார்க்கு ஸ்தானம் துவாதசாந்தமாகும். அது

[illegible]
[illegible]
[illegible]

அகாரம் ப்ரஹ்மாணம் நாபௌ, உகாரம் விஷ்ணும்
ஹ்ருதயே, மகாரம் ருத்ரம் ப்ருமத்யே, ஓங்காரம்
ஸர்வேஶ்வரம் த்வாதஶாந்தே ஸம்பூஜ்ய।

"அகாரவாச்சியராகிய பிரமாவை நாபியினும், உகாரவாச்சியராகிய விஷ்ணுவை இருதயத்தினும், மகாரவாச்சியராகிய உருத்திரரைப் புருவமத்தியினும், ஓங்காரவாச்சியராகிய சர்வேசுரசிவபெருமானைத் (தலை உச்சியின்பாலதாகிய) துவாதசாந்தத்தினும் பூஜித்து" என்று உத்தரதாபினியுபநிடதம் கூறுமாற்றால் அறியப்படும். நீலகண்டசிவாசாரியரும் இந்தத் துவாதசாந்தத்திலே நிறுத்திச் சிவபாவனை கூறினாரென்பது.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

அநுத்தாவிஸர்க்காந்த ஶிவஶக்தித்வயாத்மக:।
பராமர்ஶோ நிர்க்குணத்வாதஹமித்யுச்யதே விபோ:।
ஹ்ருத்யகாரோ த்வாதஶாந்தே ஹகாரஸ்தத்திதம் விது:।
அஹமர்த்மகமத்வைதம் யத்ப்ரகாஶாத்மவிஶ்ரம:॥

"நிரதிசயமாய், முடிவிலதாய், சிவசக்தித்துவயமாய், விம்பக் மாயுள்ள பரமான்மாவானது பரிச்சேதமாக ஹேயகுணமிலதா யிருத்தல்பற்றி * அஹம் என்று கூறப்படும்; இதயத்தில் அகார மாய், துவாதசாந்தத்திலே ஹகாரமாய் இருக்கின்றது; ஆகலின், பெரியோர் பிரகாசமாகிய ஆன்மாவிலே முற்றும் அத்வைத அஹ மாக இதனைப் (பிரபஞ்சத்தை) அறிகின்றார்" என்று (ச, ச. கக—ல்) உதகரித்த ஆப்தவசனத்தினால் அறியற்பாற்று. இந்தத் துவாத சாந்தமானது பிருதிவிமுதற் சிவதத்துவம் இறுதியாகிய முப்பத் தாறையும் அடக்கிய அத்துவாவின் முடிவிலே உள்ள சிவபிரானு ருடைய ஸ்தானமாம். அது

அத்⁴வாதீதம் துரீயாக்²யம் நிர்வாணம் பரமம் பத³ம்|

அத்வாதீதம் துரீயாக்யம் நிர்வாணம் பரமம் பதம்|

"அத்துவாதீதமாய்த் துரியம் எனப் பெயர் படைத்ததாயுள் ளது முக்திக்குரிய சிவபிரானுரது ஸ்தானமாம்" என்று உபப்பிருங் கணம் கூறுமாற்றால் அறிக. அறியவே, மாண்டூக்கியோபநிடதத் திற் கூறப்பட்ட ஓங்காரராகிய சிவபிரான் துவாதசாந்தத்தினர் என்றும், முப்பத்தாறு தத்துவங்களைக் கடந்தவரென்றும், இவரே அண்டத்தில் வைத்துச் சிவோஹம்பாவனை செய்தற்குரியராய் நின்றார் என்றும் அறியப்படுகின்றது.

யஸ்து ஸர்வாணி பூ⁴தாந்யாத்மந்யேவாநுபஶ்யதி|
ஸர்வபூ⁴தேஷு சாத்மாநம் ததோ ந விஜுகு³ப்ஸதே||

யஸ்து ஸர்வாணி பூதாந்யாத்மந்யேவாநுபஸ்யதி|
ஸர்வபூதேஷு சாத்மாநம் ததோ நவிஜுகுப்ஸதே||

—ஈசாவாஸ்யோபநிடதம், கா.

"சேதனுசேதனப் பிரபஞ்சங்களும் பரமான்மாவாகிய சிவபெ ருமானிடத்திலே இருப்பதாகக் காண்கின்றானே, சமஸ்த சேதனு சேதனப் பிரபஞ்சங்களினும் அப்பரமான்மாவாகிய சிவபெருமான் உளராகக் காண்கின்றானே, அதனால் அவன் இகழ்ச்சி அடைவா னல்லன்" என்று சுருதியும்,

---

* அஹம் என்றது சத்தியோடிசைந்த சிவபிரான்மேற்று.

𑌯𑍋 𑌮𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌗𑌤𑌂 𑌪𑌶𑍍𑌯𑍇𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌞𑍍𑌚 𑌮𑌯𑌿 𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍 ।

யோமாம் ஸர்வகதம் பஶ்யேத் ஸர்வஞ்ச மயி ஸம்ஸ்திதம்।

"எவன் எங்கும் என்னை உளதாகப் பார்க்கின்றானோ, எவன் என்னிலே (சிவபிரானிலே) எல்லாம் இருக்கக் காண்கின்றானோ, அவனது ஆன்மாவிலே எஞ்ஞான்றும் உளனாயிருக்கின்றேன்" என்று சிவாகமமும் அண்டத்தில் வைத்துச் (சிவோஹம்) பாவனை செய்யுமாறு கூறுகின்றன.

𑌅𑌹𑌂 𑌮𑌨𑍁𑌰𑌭𑌵𑌂 𑌸𑍂𑌰𑍍𑌯𑌶𑍍𑌚𑌾𑌹𑌂 𑌕𑌕𑍍𑌷𑍀𑌵𑌾𑌨𑍃𑌷𑌿𑌰𑌸𑍍𑌮𑌿 𑌵𑌿𑌪𑍍𑌰𑌃 । 𑌅𑌹𑌂 𑌕𑍁𑌤𑍍𑌸𑌮𑌾𑌰𑍍𑌜𑍁𑌨𑍇𑌯𑌂 𑌨𑍍𑌯𑍃𑌞𑍍𑌜𑍇𑌽𑌹𑌂 𑌕𑌵𑌿𑌰𑍁𑌶𑌨𑌾 𑌪𑌶𑍍𑌯𑌤𑌾 𑌮𑌾 । 𑌅𑌹𑌂 𑌭𑍂𑌮𑌿𑌮𑌦𑌦𑌾𑌮𑌾𑌰𑍍𑌯𑌾𑌯𑌾𑌹𑌂 𑌵𑍃𑌷𑍍𑌟𑌿𑌂 𑌦𑌾𑌶𑍁𑌷𑍇 𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑌾𑌯 । 𑌅𑌹𑌮𑌪𑍋 𑌅𑌨𑌯𑌂 𑌵𑌾𑌵𑌶𑌾𑌨𑌾 𑌮𑌮 𑌦𑍇𑌵𑌾𑌸𑍋 𑌅𑌨𑍁 𑌕𑍇𑌤𑌮𑌾𑌯𑌨𑍍 । 𑌅𑌹𑌂 𑌪𑍁𑌰𑍋 𑌮𑌨𑍍𑌦𑌸𑌾𑌨𑍋 𑌵𑍍𑌯𑍈𑌰𑌂 𑌨𑌵 𑌸𑌾𑌕𑌂 𑌨𑌵𑌤𑍀𑌃 𑌶𑌮𑍍𑌬𑌰𑌸𑍍𑌯 । 𑌶𑌤𑌤𑌮𑌂 𑌵𑍇𑌶𑍍𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌤𑌾𑌤𑌾 𑌦𑌿𑌵𑍋𑌦𑌾𑌸𑌮𑌤𑌿𑌥𑌿𑌗𑍍𑌵𑌂 𑌯𑌦𑌾𑌵𑌮𑍍 ॥

அஹம் மநுரபவம் ஸூர்யஶ்சாஹம் கக்ஷீவாந்ருஷிரஸ்மி விப்ர:। அஹம் குத்ஸமார்ஜுநேயந்ருஞ்ஜேஹம் கவிருஶநா பஶ்யதா மா। அஹம் பூமிமததாமார்யாயாஹம் வ்ருஷ்டிம் தாஶுஷே மர்த்யாய। அஹமபோ அநயம் வாவஶாநா மம தேவாஸோ அநுகேதமாயந்। அஹம்புரோ மந்தஸாநோ வ்யைரம் நவஸாகம் நவதீஶ் ஶம்பரஸ்ய। ஶததமம் வேஶ்யம் ஸர்வதா தாதிவோ தாஸமதிதிக்வம் யதாவம்॥

"நான் மனுவாயினேன், சூரியனுமாயினேன், நான் கக்ஷீவான் என்னும் இருஷியாயினேன், விப்பிரனாகின்றேன், அர்ஜுனி குமாரனாகிய குற்சருக்கு அருள்பாலிக்கின்றேன், மேதாவியாகிய உசனராயுள்ளேன், என்னைப் பாருங்கள்; நான் ஆரியர்க்குப் பூமியைக் கொடுத்தவனாகின்றேன், நான் அவிகொடுக்கும் யஜமான் பொருட்டு மழையைப் பாலிப்பவனாகின்றேன், நான் ஒலிக்கும் ஜலத்தைச் செல்லுமாறு வழிகாட்டுபவனாகின்றேன்; அக்கினிமுதலிய தேவர்கள் என் கருத்தின் பிரகாரம் ஒழுகுபவராகின்றார்கள்; நான் சோமரசபானத்தினால் மகிழ்வுற்றுச் சம்பராசுரனுடைய

தொண்ணூற்றொன்பது புரங்களையும் ஒருங்கே அழித்தேன், மேலும், சர்வதாதா என்னும் வேள்வியிலே அதிதிக்குவர் என்னும் திவோதாசமுனிவரைக் காக்குங்கால், நூறாவது வீட்டை அழித்தேனாயினேன்" என்று இருக்குவேதத்து ச. உகூ. க, உ, ௩-ம் மந்திரங்களில் உபாசகனாகிய இந்திரனேனும், வாமதேவமுனிவரேனும், (மற்ற உபாசகர் எவரேனும்) பரப்பிரமசிவனாரோடு அபேதமுறநின்று சிவபாவனை செய்யுமாறு கூறப்படுகின்றது. இந்த இருக்குவேத மந்திரங்களை அநுசரித்து,

𑌋𑌷𑌿𑌰𑍍𑌵𑌾𑌮𑌦𑍇𑌵𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑍇𑌦𑍇𑌽𑌹𑌂 𑌮𑌨𑍁𑌰𑌭𑌵𑌂
𑌸𑍂𑌰𑍍𑌯𑌶𑍍𑌚𑍇𑌤𑌿 । 𑌯 𑌏𑌵𑌂 𑌵𑍇𑌦𑌾𑌹𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌸𑍍𑌮𑌿
𑌸 𑌇𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌭𑌵𑌤𑌿।

ருஷிர்வாமதேவஃ ப்ரதிபேதேஹம் மநுரபவம் ஸூர்யச்சேதி ।. ய. ஏவம் வேதாஹம் ப்ரஹ்மாஸ்மி ஸ இதம், ஸர்வம் பவதி।

𑌯𑍋𑌽𑌨𑍍𑌯𑌾𑌂 𑌦𑍇𑌵𑌤𑌾𑌮𑍁𑌪𑌾𑌸𑍍𑌤𑍇𑌽𑌨𑍍𑌯𑍋𑌽𑌸𑌾𑌵
𑌨𑍍𑌯𑍋𑌽𑌹𑌮𑌸𑍍𑌮𑍀𑌤𑌿 𑌨 𑌸 𑌵𑍇𑌦 𑌯𑌥𑌾 𑌪𑌶𑍁𑌰𑍇𑌵𑌂 𑌸
𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 ।

யோந்யாம் தேவதாமுபாஸ்தேந்யோ ஸாவந்யோ வந்யோஹமஸ்மீதி நஸ்வேதயதா பஶுரேவம்ஸ தேவாநாம்।

"நான் மனுவாயினேன், சூரியனுமாயினேன் என்றும், நான் பிரமமாகின்றேன் என்று எவன் அறிகின்றானோ, அவன் இவையெல்லாம் ஆகின்றான் என்றும் வாமதேவருஷி கூறினார்; இந்தத் தேவதை வேறு, நான் வேறு என்று எவன் மற்றோர் தேவதையைப் பாவனை செய்யுங்கால், அவன் அந்தத் தேவதையை அறிவானல்லன்; அதுபற்றி அவன் தேவர்களுக்குப் பசுப்போலாகின்றான்;" ஆகலின், எவன் நான் பிரஹ்மம் என்று (அபேதபாவனை) பண்ணுகின்றானோ, அவன் ஈதெல்லாம் (உலகெல்லாம்) ஆகின்

றான் என்று பிருகதாரணியோபநிடதம் கூறுமாற்றால், பிரமத்தோடு ஆன்மா அபேதபாவனை புரிதல்வேண்டும் என்றும், துவிதபாவனை கூடாதென்றும் கூறியவாறாயிற்று.

நிரஂஜநஃ பரமஂ ஸாம்யமுபைதி|

நிரம்ஜநஃ பரமம் ஸாம்யமுபைதி|

"(அபேதபாவனைப்பற்றி) மலமிலனாய் ஆன்மா பரமான்மாவோடு சிவபிரானது (குணங்களையுடையனாய்ப்) பரமசாமியத்தை அடைகின்றான்" என்று முண்டகோபநிடதமும்,

அநுக்ருதேஸ்தஸ்ய ச|

அநுக்ருதேஸ் தஸ்யச|

"அவனுக்குச் சாமியம் உண்மையானும்" என்று வேதாந்த சூத்திரமும் (கூ. ௩. உக.) கூறலானும், பிரஹ்மோச்கர்கள் பரப்பிரமசிவனோடுற்ற ஐக்கியபாவனையினால் அந்தப் பரப்பிரஹ்மசிவத்தின் சர்வஞ்ஞத்துவம், அநாதிபோதரூபத்துவம், சுவதந்திரத்துவம், சர்வசக்தித்துவம், அலுப்தசக்தித்துவம், அனந்தசக்தித்துவம் என்னும் அசாதாரண அறு குணங்களை அடைகின்றான் என்று வேதாந்தசூத்திரசைவபாஷ்ய (௩. உ. உச) த்திற் கூறப்படுகின்றது. இங்ஙனம் சிவனாரது குணங்களை அடைதலால் உபாசகன் சிவமாகின்றான்.

வானைக்கடந்தண்டத்தப்பான்மதிப்பனமந்திரிப்பா
ரூனைக்கழித்துய்யக்கொண்டருள்செய்வனவுத்தமர்க்கு
ஞானச்சுடராய்நடுவேயுதிப்பனநங்கையஞ்ச
வானையுரித்தனகாண்கவையாறனடித்தலமே.

—நா, திருவையாறு.

மலையானைமாமேருமன்னினானை
வளர்புன்சடையானைவானோர்தங்க
டலையானை*யென்றலையினுச்சியென்றுந்
தாபித்திருந்தானைத்தானேயெங்குந்
துலையாகவொருவனொப்புமில்லாதானைத்
தோன்றாதார்மதின்மூன்றுந்துவளவெய்த
சிலையானைத்தென்கூடற்றிருவாலவாய்ச்
சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே.

—நா, திருவாலவாய்.

---

* "என்றலையினுச்சியென்றுந் தாபித்திருந்தானை" என்றமையாற் பிரமரந்திரத்தினின்று மேலோங்கிய துவாதசாந்தத்திற் சிவபிரான் உளர் என்று சூசிக்கப்பட்டது.

வழித்தலைப்படுவான்முயல்கின்றேனுன்னைப்போலென்னைப் பாவிக்கமாட்டேன், சுழித்தலைப்பட்டநீர்துபோலச்சுழல்கின் றேன்சுழல்கின்றதென்னுள்ளங், கழித்தலைப்பட்டநாயதுபோல வொருவன்கோல்பற்றிக்கறகறவிழுக்கை, யொழித்துநீயருளாயின செய்யாயொற்றியூரெனுமூருறைவானே.

—சு, திருவொற்றியூர்.

செப்பார்முலைபங்கன்றென்னன்பெருந்துறையான்
றப்பாமேதாளடைந்தார்நெஞ்சுருக்குந்தன்மையினு
னப்பாண்டிநாட்டைச்சிவலோகமாக்குவித்த
வப்பார்சடையப்பனானந்தவார்கழலே
யொப்பாகவொப்புவித்தவுள்ளத்தாருள்ளிருக்கு
மப்பாலைக்கப்பாலைப்பாடுதுங்காணம்மானாய்.

—திருவாசகம்.

வரமோ யோகபர்யந்தோ தர்மஸ் ஸ்ருதி ஶிரோகத꞉।

பரமோ யோகபர்யந்தோ தர்மஸ் ஸ்ருதி ஸிரோகத꞉।

"பரதருமமனது (பரப்பிரகிருதிப்பாற்பட்ட வைதிகபாசுபத) யோகபரியந்தமே வேதசிரசிலே அமைந்தது" என்று உபப்பிருங்கணம் கூறலானும், (சிவதத்துவத்தின்பாற்பட்ட) கன்மயாக, தபயாக, செபயாகங்களின் மேற்பட்ட ஞானதியான மானது பரப்பிரகிருதிப்பாற்படத் திருச்சிற்றம்பலசதாசிவநிருத்தப்பிரஹ்மசொரூபத்தை நேரே அடைதற்கு ஏதுவாயுள்ளதென்று வேதாந்தசூத்திரசைவபாஷ்யத்து அக்கினிஹோத்திராதிகரணத்தில் நீலகண்டசிவாசாரியர் கூறியிருத்தலானும், உபாசிப்பவருக்கு எய்தும் பயன் ஜகத்வியாபாராதிகரணத்திற் கூறியவாறு மகாசிவலோகத்துச் சிவசாரூப்பியநிலையேயாம் என்றும் கடைப்பிடிக்க.

வேதம்பசுவதன்பான்மெய்யாகமநால்வ
ரோதுந்தமிழதனினுள்ளூறுநெய்—போதமிகு
நெய்யினுறுசுவையாநீள்வெண்ணெய்மெய்கண்டான்
செய்ததமிழ்நூலின்றிறம்.

என்று மேலோர் கூறியிருத்தலால், திராவிடவேதநெய்யின் சுவையாய்ப் போந்தது திராவிடசித்தாந்தசாஸ்திரப்பொருளோ என்பதை ஆராய்குதும்.

மெய்ப்பால்வெண்ணீறணிந்தமேனியானை
வெண்பளிங்கினுட்பதித்தசோதியானை
யொப்பானையொப்பிலாவொருவன்றன்னை
யுத்தமனைநித்திலத்தையுலகமெல்லாம்
வைப்பானைக்களைவானைவருவிப்பானை
வல்வினையேன்மனத்தகத்தேமன்னினானை
யப்பாலைக்கப்பாலைக்கப்பாலானை
யாரூரிற்கண்டடியேனயர்த்தவாறே.

—நா, திருத்தாண்டகம்.

அப்பாலைக்கப்பாலைக்கப்பாலானை என்றமையால் மலினப்பிரபஞ்சம், மிசிரப்பிரபஞ்சம், சுத்தப்பிரபஞ்சம் என்னும் முத்திறப் பிரபஞ்சம் பெறப்பட்டு, அவற்றில் ஆன்மதத்துவவித்தியாதத்துவ சிவதத்துவங்கள் அடங்கிநின்றவாறு அறியப்படும். பட்டே, இத்தத்வப்பிரபஞ்சமனைத்தையும் சிவபிரான் உள்ளும் புறம்பும் அணுப்புதைக்க இடமின்றி ஒழிவற நிறைந்துநின்றமையால், இஃதனைத்தையும் ஊடுருவ அறிவைச் செலுத்தி, அஃதனைத்தையும் வியாபித்த அருளே தாரகமாக (அருளே கண்ணாகச்) சிவோஹம் பாவனையினால் ஆன்மா சென்று அச்சிவத்தைத் தலைப்படும். அது பற்றி, ஆன்மாவுக்கு வியாபக அறிவு இன்றியமையாததாயிற்று. அங்ஙனஞ் சென்று சிவத்தின் மிக ஓங்கிய வியாபகத்துள் தான் என்றொருமுதல் காணப்படுமாறின்றி அடங்கி ஆன்மா வியாப்பியமாய் நிற்குங்கால், (௧௦-ஞ் சூத்திரங் கூறியவாறு மலமாயாகன்மங்கள் நீங்குதலால்) ஐம்புலன்கள் செயிக்கப்பட்டொழியும்.

முப்பதுமாறும்படிமுத்தியேணியா
யொப்பிலாவானந்தத்துள்ளொளிபுக்குச்
செப்பவரியசிவங்கண்டுதான்றெளிந்
தப்பரிசாகவமர்ந்திருந்தாரே.

—திருமந்திரம்.

நாணனுடன்புழுன்புகளிர்வரையேறத்தாமும்
பேணுதத்துவங்களென்னும்பெருகுசோபானமேறி
யாணையாஞ்சிவத்தைச்சாரவணைபவர்போலவையர்
நீணிலைமலையையேறிநேர்படச்செல்லும்போது.

—பெரியபுராணம்.

தானத்தைச்செய்துவாழ்வான்சலத்துளேயழுந்துகின்றீர்
வானத்தைவணங்கவேண்டில்வம்மின்கள்வல்லீராகின்
ஞானத்தைவிளக்கையேற்றிநாடியுள்விரவவல்லா
ரூனத்தையொழிப்பர்போலுமொற்றியூருடையகோவே.

—நா, திருவொற்றியூர்.

மெய்யுளேவிளக்கையேற்றிவேண்டளவுயரத்தூண்டி
யுய்வதோருபாயம்பற்றியுகக்கின்றேனுகவாவண்ணை
மைவரையகத்தேவைத்திரவர்களேவலியர்சாலச்
செய்வதொன்றறியமாட்டேன்றிருப்புகலூரனீரே.

—நா, திருப்புகலூர்.

அருளெங்குமானவளவையறியா
ரருளாறுகாமுதானதுந்தேரா
ரருளெங்கருமத்ததிருக்கமுன்று
ரருளெங்குங்கண்ணானதாரறிவாரே.

—திருமந்திரம்.

கருடனுருவங்கருதுமளவிற்
பருவிடந்தீர்ந்துபயங்கெமோபோற்
குருவினுருவங்குறித்தவப்போதே
திரிமலந்தீர்ந்துசிவனவனாமே.

—திருமந்திரம்.

பண்ணினிசையாகிநின்றாய்போற்றி
பாவிப்பார்பாவமறுப்பாய்போற்றி
யெண்ணுமெழுத்துஞ்சொல்லானாய்போற்றி
யென்சிந்தைநீங்காவிறைவாபோற்றி
விண்ணுநிலனுந்தீயானாய்போற்றி
மேலவர்க்குமேலாகிநின்றாய்போற்றி
கண்ணின்மணியாகிநின்றாய்போற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி.

—நா, ஸ்ரீகயிலாயம்.

வழித்தலைப்படுவான்முயல்கின்றே
னுன்னைப்போலென்னைப்பாவிக்கமாட்டேன்
சுழித்தலைப்பட்டநீரதுபோலச்
சுழல்கின்றேன்சுழல்கின்றதென்னுள்ளந்
கழித்தலைப்பட்டநாயதுபோல
வொருவன்கோல்பற்றிக்கறகறவிழுக்கை
யொழித்துநீயருளாயினசெய்யா
யொற்றியூரெனுமூருறைவானே.

—சு, திருவொற்றியூர்.

கோங்கன்னகுவிமுலையாள்கொழும்பணைத்தோட்கொடியிடையை
பாங்கென்னவைத்துகந்தான்படர்சடைமேற்பான்மதியந் [ப்
தாங்கினான்பூம்புகார்ச்சாய்க்காட்டான்றானிமற்கி
ழோங்கினாரோங்கினாரெனவுரைக்குமுலகமே.

—ஞா, திருச்சாய்க்காடு.

அடிபேரிற்பாதாளம்பேருமடிகண்
முடிபேரின்மாமுகடுபேருங்—கடக
மறிந்தாடுகைபேரில்வான்றிசைகள்பேரு
மறிந்தாடுமாற்றுதாங்கு.

தாளொன்றுற்பாதாளமூடுருவத்தண்விசும்பிற்
றொளொன்றாலண்டங்கடந்துருவித்—தோளொன்றாற்
றிக்கனைத்தும்போர்க்குந்திறற்காளிகாளத்தி
நக்கனைத்தான்கண்டநடம்.

அடியொன்றுபாதலமேழிற்றுமப்புறம்பட்டதிப்பான்
முடியொன்றிவ்வண்டங்களெல்லாங்கடந்ததுமுற்றும்வெள்ளைப்
பொடியொன்றுதோளெட்டுத்திக்கின்புறத்தனபூங்கரும்பின்
செடியொன்றுதில்லைச்சிற்றம்பலத்தான்றன்றிருநடமே.

இப்பரிசியற்றியவுடலிருந்தடலுட்
டப்புரவென்னுஞ்சுழித்தலைப்பட்டுழி
யாவாவென்றுநின்னருளினைப்பெற்றவர்
நாவாயாகியநாதநின்பாத

முந்திச்சென் றுமுறைமையின் வணங்கிச்
சிந்தைக்கூம்பினைச்செவ்வி தினிறுத்தி
யுருகியவார்வப்பாய்விரித்தார்த்துப்
பெருகியநிறையெனுங்கயிற்றிடைப்பிணித்துத்
துன்னியசுற்றத்தொடர்க்கயிறறுத்து
மன்னியவொருமைப்பொறியினை முறுக்கிக்
காமப்பாரெனுங்கடுவெளியற்ற
தூமச்சோதிச்சுடர்க்குறநிறுத்திச்
சுருங்காவுணர்ச்சித்துடுப்பினைத்துழாவி
நெருங்காவளவினீள்கரையேற்ற
வாங்கயாத்திரைபோக்குதிபோலு
மோங்குகடலுடுத்தவொற்றியூரோயே.

—பதினொராந்திருமுறை.

நிலைப்பாடேநான்கண்டதேடீகேளாய்
நெருநலைநற்பகலிங்கோரடிகள்வந்து
தலைப்பாடுங்கண்மலருங்கலக்கநோக்கிக்
கலந்துபலியிடுவேனெங்குங்காணேன்
சலப்பாடேயினியொருநாட்காண்பேனாகிற்
றன்னாகத்தென்னாகமோடுங்கும்வண்ண
முலைப்பாடேபடத்தழுவிப்போகலொட்டே
னொற்றியூருறைந்திங்கேதிரிவானையே.

—நா, திருவொற்றியூர்,

எம்பிரானென்றதேகொண்டென்னுளேபுகுந்துநின்றிங்
கெம்பிரானாட்டவாடியென்னுளேயுழிதர்வேனை
யெம்பிரானென்னைப்பின்னைத்தன்னுளேகரக்குமென்று
லெம்பிரானென்னினல்லாலென்செய்கேனேழையேனே.

—நா, தனித்திருநேரிசை.

தோண்டரஞ்சுகளிறுமடக்கிச்சுரும்பார்மல
ரிண்டைகட்டிவழிபாடுசெய்யுமிடமென்பரால்
வண்டுபாடமயிலாலமான்கன்றுதுள்ளவரிக்
கெண்டைபாயச்சுனைநீலமொட்டலருங்கேதாரமே.

—ஞா, திருக்கேதாரம்.

அஞ்சுமோன்றியாறுவீசிநீறுபூசிமேனியிற்
குஞ்சியாரவந்திசெய்யவஞ்சலென்னிமன்னுமூர்
பஞ்சியாருமெல்லடிப்பணைத்தகொங்கைநுண்ணிடை
யஞ்சொலாராங்கெடுக்குமந்தணாரூரென்பதே.

—ஞா, திருவாரூர்.

பழியுடையாக்கைதன்னிற்பாழுக்கேநீரிறைத்து
வழியிடைவாழமாட்டேன்மாயமுந்தெளியகில்லே
னழிவுடைத்தாயவாழ்க்கையைவராலலைக்கப்பட்டுக்
கழியிடைத்தோணிபோன்றேன்கடவூர்வீரட்டனீரே.

—நா, திருக்கடவூர்வீரட்டம்.

எலும்பாலணியிறையம்பலத்தோனெல்லைசெல்குறுவோர்
நலம்பாவியமுற்றுநல்கினுங்கல்வரைநாடரம்ம
சிலம்பாவடிக்கண்ணிசிற்றிடைக்கேவிலைசெப்பலொட்டார்
கலம்பாவியமுலையின்விலையென்னீகருதுவதே.

—திருக்கோவையார்.

செம்மைவெண்ணீற்றொருமையிஞரிரண்டிறப்பின்சிறப்பிஞர்
மும்மைத்தழலோம்பியநெறியார்நான்குவேதமுறைபயின்றார்
தம்மையைந்துபுலனும்பின்செல்லுந்தகையாரறுதொழிலின்
மெய்ம்மையொழுக்கமேழுலகும்போற்றுமறையோர்விளங்குவது.

பொருவருந்தவத்தான்புலிக்காலனு
மருமுனியெந்தையர்ச்சித்துமுள்ளது
பெருமைசேர்பெரும்பற்றப்புலியூரென்
றொருமையாளர்வைப்பாம்பதியோங்குமால்.

அறிவினெல்லையாயதிருத்தில்லையெல்லையமர்ந்திறைஞ்சிப்
பிறிவிலாததிருவடியைப்பெருகுமுள்ளத்தினிற்பெற்றுச்
செறியுஞானபோனகர்வந்தருளும்புகலிசென்றிறைஞ்சி
மறிசேர்காத்தார்கோயில்பலவணங்கிமகிழ்ந்துவழிக்கொள்வார்.

—பெரியபுராணம்.

மேலே கூறிய தேவாரமுதலியவற்றால், ஆன்மா அருள் எனப்படும் ஞானவிளக்குக்கொண்டு, கருடபாவனைபோலச் சிவோஹம்பாவனைவாயிலாக அறிவுவிரிந்து சிவத்தை நாடி, அச்சிவத்துள்ளே தான் என்று ஒருமுதல் காணப்படுமாறின்றிச் சிவவியாபகத்துள் அடங்கிநிற்றல் உணர்த்தப்பட்டதாம் என்க.

*நிர்க்குணனாய்நின்மலனாய்நித்தியானந்தனாய்த்
தற்பரமாய்நின்றதனிமுதல்வ—னற்புதம்போ
லானவறிவாயளவிறந்துதோன்றானே
வானேமுதல்களையின்வந்து.

கண்டதையன்றன்றெனவிட்டுக்கண்டசத்தா
யண்டனையான்மாவிலாய்ந்துணரப்—பண்டணைந்த
வூனத்தைத்தான்விடுமா றுத்தமனின்றெண்கருடத்
சானத்திற்றீர்விடம்போற்றான்.

நானவனென்றெண்ணினோர்க்குநாடுமுளமுண்டாத
லானேனவோன்றின்றியேதானதுவாய்—நானேனவோன்
றில்லென்றுதானேயெனுமவரைத்தன்னடிவைத்
தில்லென்றுதானுமிறை.

—சிவஞானபோதம்.

இன்றெனக்கருளியிருள்கடிந்துள்ளத்
தெழுகின்றஞாயிறேபோன்று
நின்றநின்றன்மைநினைப்பறநினைந்தே
னீயலாற்பிறிதுமற்றின்மை
சென்றுசென்றணுவாய்த்தேய்ந்துதேய்ந்தொன்றாந்
திருப்பெருந்துறையுறைசிவனே
யொன்றுநீயல்லையன்றியொன்றில்லை
யாருன்னையறியகிற்பாரே.

—திருவாசகம்.

திரண்டாம்பயனெனுந்திருவருடெளியிற்
சென்றுசென்றணுவாய்த்தேய்ந்துதேய்ந்தொன்று
மென்றிறையியற்கையியம்புதறகும்.

—சங்கற்பநிராகரணம்.

---

* 'நிர்க்குணனாய்' 'கண்டதை' 'நானவனென்' என்றற்றொடக்கத்த திருவெண்பாக்களின் பொருளைச் "சிவஞானபோதவசனலங்காரதீபம்" த்து ௯-ம் சூத்திரத்து ௨௭, ௬௬, 1, 6, 7, 8, 9-ம் பிரிவுகளினும், ௧0-ஞ் சூத்திரத்து ௧௬-ம் பிரிவினுங் காண்க.

பந்தமும்பிரிவுந்தெரிபொருட்பனுவற்படிவழிசென்றுசென்றேறிச், சிந்தையுந்தானுங்கலந்ததோர்கலவிதெரியினுந்தெரிவுறுவண்ண, மெந்தையுந்தாயும்யானுமென்றிங்ஙனெண்ணில்பல்லூழிகளுடனாய், வந்தணுகாதுநணுகியுள்கலந்தோன்மருவிடந்திருவிடைமருதே.

—திருவிசைப்பா.

இங்ஙனம் திராவிடசித்தாந்தசாஸ்திரப்பொருளும் திராவிட வேதப்பொருளும் ஒற்றுமையுற நிற்பதை ஓர்ந்துணர்க. ௯, ௧௦-ம் சூத்திரங்களால் துரிய அருட்சிதம்பர எல்லையே அறிவுறுத்தப் பட்டதாம் என்க. வேதமுடிவிலே கூறப்பட்ட தியானயோகமும், ஈண்டுச் சித்தாந்தத்திலே கூறிய ஞானயோகமும் அருட்சிதம்பர வெல்லையினவாய் நிற்றலால், இவ்விரு யோகப்பயனும் ஒன்றாம் என்க.

ஏனைய பதஞ்சலியோகம், ஏகான்மவாத நிர்குணசாங்கிய யோக (இராஜயோகம்) முதலியவனைத்தும் மூலப்பிரகிருதிப் புருஷ தத்துவத்தின்பாலதாய்ப் பசுநிஷ்டையாய் நிலைத்து, முப்பத்தாறு தத்துவங்களைக் கடந்த அருட்சிதம்பரவெல்லையைத் தலைப்பட்டுச் சிவத்தை அறியமாட்டாமையாலன்றோ,

எண்ணாயிரத்தாண்டுயோகமிருக்கினுங்
கண்ணாரமுதனைக்கண்டறிவாரில்லை
யுண்ணாடியுள்ளேயொளிபெறநோக்கிடிற்
கண்ணாடிபோலேகலந்திருந்தானே.

என்றார் திருமூலநாயனார்.

---

(௧௦௬) திருச்சிற்றம்பலவர் தரிசனத்தினால் நோயெல்லாம் நீங்கும்.

ஸ்ரீ-பாஷ்யம், 283P.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

𑌨𑍍𑌧𑍋 𑌭𑌵𑌤𑌿 𑌵𑌿𑌦𑍍𑌧𑌃𑌸𑌨𑍍𑌨𑌵𑌿𑌦𑍍𑌧𑍋 𑌭𑌵𑌤𑍍𑌯𑍁𑌪𑌤𑌾𑌪𑍀 𑌸𑌨𑍍𑌨𑌨𑍁𑌪𑌤𑌾𑌪𑍀 𑌭𑌵𑌤𑌿 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌵𑌾 𑌏𑌤𑌂 𑌸𑍇𑌤𑍁𑌂 𑌤𑍀𑌰𑍍𑌤𑍍𑌵𑌾𑌪𑌿 𑌨𑌕𑍍𑌤𑌮𑌹𑌰𑍇𑌵𑌾𑌭𑌿𑌨𑌿𑌷𑍍𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 𑌸𑌕𑍃𑌦𑍍𑌵𑌿𑌭𑌾𑌤𑍋 𑌹𑍍𑌯𑍇𑌵𑍈𑌷 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑌃।

நைதக்ம் ஸேதுமஹோராத்ரே தரதோ ந ஜரா ந ம்ருத்யுர்ந ஶோகோ ந ஸுக்ருதம் நதுஷ்க்ருதம் । ஸர்வே பாப்மாநோதோ நிவர்த்தந்தே பஹதபாப்மாஹ்யேஷ ப்ரஹ்மலோகஸ்தஸ்மாத்வா ஏதக்ம் ஸேதும் தீர்த்வாந்தஸ்ஸந்நநந்தோ பவதி வித்தஸ்ஸந்நவித்தோ பவத்யுபதா பீஸந்நநுபதாபீபவதி தஸ்மாத்வா ஏதக்ம் ஸேதும் தீர்த்வாபிநக்தமஹரேவாபிநிஷ்பத்யதே ஸக்ருத்விபாதோஹ்யேவைஷ ப்ரஹ்மலோகஃ।

"அந்தத் (திருச்சிற்றம்பல) சேதுவைப் பகல் இரவேனும், ஜரையேனும், மரணமேனும், சோகமேனும், நன்மையேனும், தீமையேனும் கடப்பதில்லை; பாவிகளெல்லாம் அங்கிருந்து மீண்டு விடுவர்; இந்தப் பிரமலோகம் பாவத்தினின்று நீங்கியதன்றோ; அதனாற் குருடாயுள்ளோன் இந்தச் சேதுவைக் கடந்து குருடு நீங்கப்பெறுவன்; காயமுற்றோன் காயம் நீங்கப்பெறுவன்; துன்புற்றோன் துன்பம் நீங்கப்பெறுவன்; ஆகலின், இந்தச் சேதுவைக் கடந்தபோது இராவானது பகலாகின்றது; பிரமலோகம் (யாவர்க்கும்) ஒரேமுறையிற் பிரகாசிப்பது" என்றது சாந்தோக்கியம் (அ. ௮. ௧, ௨)

கூர்வாளரக்கன்றன்வலியைக்குறைவித்துச்
சீராலேமல்குசிற்றம்பலமேய
நீரார்சடையானைநித்தலேத்துவார்
தீராநோயெல்லாந்தீர்தறிண்ணமே.

கோணாகணையானுங்குளிர்தாமரையானுங்
காணார்கழலேத்தக்கனலாயோங்கினான்
சேணார்வாழ்தில்லைச்சிற்றம்பலமேத்த
மாணாநோயெல்லாம்வாளாமாயுமே.

—ஞா, கோயில்.

(கூ௦ள) ஆன்மாவை வியாபகமாக்குதற்குச் சிவபெருமான் வசீகரிப்பவர்.

ஏகோ வஶீ।

ஏகோ வஶீ।

"(ஆன்மாவின் அறிவை அருண்ஞானத்தினால்) *வசீகரித்து (வியாபகஞ் செய்யும் ஏகர் (சிவபிரான்)" என்று கடோபநிடத (ரு. கஉ)மும்,

ஸர்வஸ்ய வஶீ।

ஸர்வஸ்ய வஶீ।

"அனைத்தையும் வசீகரிப்பவர்" என்று பிருகதாரணியோப நிடத (சு. ச. உஉ) மும் கூறுகின்றன.

பிறையார்சடையண்ணன்
மறையார்மருதரை
†நிறையானினைபவர்
குறையாரின்பமே.

—ஞா, திருவிடைமருதூர்.

†நிறைவுவேண்டுவீ
ரறவனன்னியூர்
மறையுளான்கழற்
குறவுசெய்ம்மினே.

—ஞா, திருவன்னியூர்.

(கூ௦அ) ஆன்மா முத்திதசையிலே சிவஞானாது அபகதபாப்மத்துவாதி (சர்வஞ்ஞத்துவாதி) எண்குணங்களைச் சாமியமாக (ஒப்பாக) அடைதல்.

நிரஞ்ஜநஃ பரமம் ஸாம்யமுபைதி।

நிரஞ்ஜநஃ பரமம் ஸாம்யமுபைதி।

"நிரஞ்சனனாய் ஆன்மா பரமசாமியத்தை அடைகின்றான்" என்று முண்டகோபநிடத (ரு. க. ௩) மும்,

---

* வசிப்பவரும்வியாபகத்தனமலந்தபமுத்தியடைவ—திருத்தணிகைப் புராணம். † நிறைவு—வியாபகம்.

मुक्तश्शिव समो भवेत्।

முக்தஶ்ஶிவ ஸமோபவேத்।

"முக்தன் சிவசாமியமுறுகின்றான்" என்றும்,
வாயுசம், ௪, ௧௯: ௧௨௦.

साध्यं शिवसमानता।

ஸாத்யம் ஶிவஸமாநதா।

"சாதிக்கற்பாலது சிவசாமியம்" என்றும் வாயுசங்கிதையும்,
சி—பாஷ்ய; 63 சி.

ईश्वरात्तद्गुणास्सर्वे संक्रमन्ते तदात्मनि।
पुण्यपूरुषसंपर्कात्पुण्यानीव ततोऽन्यतः।
पुण्यं संक्रमते पुंसामित्यादि वचनात्स्फुटम्।
तथा च शिववन्मुक्तास्सर्वज्ञत्वादि धार्मिकाः।
इत्येवं गुणसंक्रान्तसाम्यपक्षो निरूपितः॥

ஈஶ்வராத்தத்குணாஸ்ஸர்வே ஸம்க்ரமந்தே ததாத்மநி।
புண்யபூருஷ ஸம்பர்க்காத்புண்யாநீவ ததோந்யத:।
புண்யம் ஸம்க்ரமதே பும்ஸாமித்யாதி வசநாத்ஸ்புடம்।
ததாச ஶிவவந்முக்தாஸ் ஸர்வஜ்ஞத்வாதி தார்மிகா:।
இத்யேவம் குணஸம்க்ராந்த ஸாம்யபக்ஷோ நிரூபித:॥

"சிவபெருமானினின்று அக்குணமனைத்தும் அப்போது ஆன்மாவிற் சங்கிரமிக்கின்றன; புண்ணியபுருஷசம்பர்க்கத்தினால் புண்ணியங்கள் ஒருவனுக்கு எய்துமாறுபோல என்றற்றொடக்கத் தவற்றால் வெளிப்படை; அங்ஙனமே சிவபெருமானைப்போல முக்தராயினோரும் சர்வஞ்ஞத்துவாதி குணங்களையுடையராயினர்; இங்ஙனம் குணங்கள் ஆன்மாவிற் சங்கிரமிக்கும் என்னும் சாமிய பக்ஷம் நிரூபிக்கப்பட்டது" என்று சித்தாந்தவிவேகமும் உரைக்கின்றன.

பிரஹ்மசூத்திரசைவபாஷ்யத்து ஆவிருத்தியதிகரணத்திற் கூறியாங்கு சிவபாவனை செய்தலாற் சிவசாமியம் ஆன்மாவுக்கு எய்தும். இதனை க௦ரு—ம் இலக்க யோக விஷயத்தினுங் காண்க.

பத்திப்பேர்வித்திட்டேபரந்தவைம்புலன்கள்வாய்ப்
பாலேபோகாமேகாவாப்பகையறும்வகைநினையா
முத்திக்கேவிக்கத்தேமுடிக்குமுக்குணங்கள்வாய்
மூடாவூடாநாலந்தக்கரணமுமொருநெறியாய்ச்
சித்திக்கேவித்திட்டுத்திகழ்ந்தமெய்ப்பரம்பொருள்
*சேர்வார்தாமேதானகச்செயுமவனுறையுமிடங்
கத்திட்டோர்சட்டங்கங்கலந்திலங்குநற்பொருள்
காலேயோவாதார்மேவுங்கழுமலவளநகரே.

—ஞா, திருக்கழுமலம்.

பண்ணினிசையாகிநின்றாய்போற்றி
பாவிப்பார்பாவமறுப்பாய்போற்றி
யெண்ணுமெழுத்துஞ்சொல்லானாய்போற்றி
யென்சிந்தைநீங்காவிறைவாபோற்றி
விண்ணுநிலனுந்தீயானாய்போற்றி
மேலவர்க்குமேலாகிநின்றாய்போற்றி
கண்ணின்மணியாகிநின்றாய்போற்றி
கைலைமலையானேபோற்றிபோற்றி.

—நா, ஸ்ரீகயிலாயம்.

வழித்தலைப்படுவான்முயல்கின்றே
னுன்னைப்போலவென்னைப்பாவிக்கமாட்டேன்
சுழித்தலைப்பட்டநீரதுபோலச்
சுழல்கின்றேன்சுழல்கின்றதென்னுள்ளங்
கழித்தலைப்பட்டநாயதுபோல
வொருவன்கோல்பற்றிக்கறகறவிழுக்கை
யொழித்துநீயருளாயினசெய்யா
யொற்றியூரெனுமூருறைவானே.

—சு, திருவொற்றியூர்.

* "சேர்வார்தாமேதானகச்செயுமவன்" என்பது தம்மை இடைவிடாது தியானிப்போரை எண்குணங்களானிறைத்துத் தன்வண்ணமாகச் செய்பவர் எனப் பொருள்படும். இதனால் ஆன்மா சிவமாதல் வெளிப்படை.

பொன்வண்ணமெவ்வண்ணமவ்வண்ணமேனிபொலிந்திலங்கு
மின்வண்ணமெவ்வண்ணமவ்வண்ணம்வீழ்சடைவெள்ளிக்குன்றந்
தன்வண்ணமெவ்வண்ணமவ்வண்ணமால்விடைதன்னைக்கண்ட
வென்வண்ணமெவ்வண்ணமவ்வண்ணமாகியவீசனுக்கே.

—பதினொராந்திருமுறை.

தன்னையறிவித்துத்தான்றானுச்செய்தானைப்
பின்னைமறத்தல்பிழையலது—முன்னவனே
தானேதானுச்செய்துந்தைவமென்றுந்தைவமே
மானேதொழுகைவலி.

—சிவஞானபோதம்.

---

(௧௦௯) ஞானயோகிகள் சிவலோகஞ்செல்லும் நெறி.

𑌤𑍇 𑌯 𑌏𑌵𑌮𑍇𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑍁𑌰𑍍𑌯𑍇 𑌚𑌾𑌮𑍀 𑌅𑌰𑌣𑍍𑌯𑍇 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾𑌂 𑌸𑌤𑍍𑌯𑌮𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 𑌤𑍇𑌽𑌰𑍍𑌚𑌿𑌷𑌮𑌭𑌿𑌸𑌂𑌭𑌵𑌨𑍍𑌤𑍍𑌯𑌰𑍍𑌚𑌿𑌷𑍋𑌽𑌹𑌰𑌹𑍍𑌨 𑌆𑌪𑍂𑌰𑍍𑌯𑌮𑌾𑌣𑌪𑌕𑍍𑌷𑌮𑌾𑌪𑍂𑌰𑍍𑌯𑌮𑌾𑌣𑌪𑌕𑍍𑌷𑌾𑌦𑍍𑌯𑌾𑌨𑍍𑌷𑌣𑍍𑌮𑌾𑌸𑌾𑌨𑍍𑌦𑌙𑍍𑌙𑌾𑌦𑌿𑌤𑍍𑌯 𑌏𑌤𑌿 𑌮𑌾𑌸𑍇𑌭𑍍𑌯𑍋 𑌦𑍇𑌵𑌲𑍋𑌕𑌂 𑌦𑍇𑌵𑌲𑍋𑌕𑌾𑌦𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌮𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑍈𑌦𑍍𑌯𑍁𑌤𑌂 𑌤𑌾𑌨𑍍𑌵𑍈𑌦𑍍𑌯𑍁𑌤𑌾𑌨𑍍𑌪𑍁𑌰𑍁𑌷𑍋 𑌮𑌾𑌨𑌸 𑌏𑌤𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑌾𑌨𑍍𑌗𑌮𑌯𑌤𑌿 𑌤𑍇 𑌤𑍇𑌷𑍁 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑍇𑌷𑍁 𑌪𑌰𑌾𑌃 𑌪𑌰𑌾𑌵𑌤𑍋 𑌵𑌸𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌨 𑌪𑍁𑌨𑌰𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃।

தே ய ஏவமேதத்விதுர் யேசாமீ அரண்யே ஶ்ரத்தாம் ஸத்யமுபாஸதே தே அர்ச்சிரபிஸம்பவந்தி அர்ச்சிஷோஹாஹ்ந ஆபூர்யமாண பக்ஷமாபூர்யமாணபக்ஷாத்யாந் ஷண்மாஸாநுதங்ஙாதித்ய ஏதி மாஸேப்யோ தேவலோகம் தேவலோகாதாதித்யமாதித்யாத் வைத்யுதம் தாந்வைத்யுதாந் புருஷோ மாநஸ ஏத்ய ப்ரஹ்மலோகாந் கமயதி தேஷு ப்ரஹ்மலோகேஷு பரா: பராவதோ வஸந்தி தேஷாம் ந புநராவ்ருத்தி:।

"பஞ்சாக்கினிவித்தை அறிந்தவர்களும், வனத்திலிருந்து பக்திஞானம்வாயிலாக உபாசிப்பவர்களும், ஒளியை அடைந்து, இதிலிருந்து பகலை அடைந்து, இதிலிருந்து பூருவபக்கமடைந்து, இதிலிருந்து உத்தராயணமடைந்து, இதிலிருந்து தேவலோகத்தை அடைந்து, இதிலிருந்து ஆதித்தியலோகத்தை அடைந்து, இதிலிருந்து மின்னலை அடைய, அங்கே ஓர் அமானவன் வந்து அவர்களைப் பிரஹ்மலோகத்துக்கு (சிவலோகத்துக்கு) நடாத்தச் சென்று அங்கே போய்ப் பெரியோராய் நீடு வசிக்கின்றார்; அவர்களுக்குப் புநராவர்த்தி இல்லை" என்று பிருகதாரணியோபநிடதம் (அ.௨.கரு) கூறுகின்றது.

ஸூர்யத்வாரேண தே விரஜா: ப்ரயாந்தி।

ஸூர்ய த்வாரேண தே விரஜா: ப்ரயாந்தி।

"அவர்கள் தூகளிலராய்க் கதிரோன் வழியே செல்கின்றார்கள்" என்று முண்டக (க. உ. கக) சுருதியும்,

ஊர்த்வமேக: ஸ்திதஸ் தேஷாம் யோ பித்வா ஸூர்யமண்டலம்।
ப்ரஹ்மலோகமதிக்ரம்ய தேந யாதி பராம் கதிம்॥

ஊர்த்வமேக: ஸ்திதஸ் தேஷாம் யோ பித்வா ஸூர்யமண்டலம்।
ப்ரஹ்மலோகமதிக்ரம்ய தேந யாதி பராம் கதிம்॥

"அவைகளுள்ளே ஒன்று மேற்கொண்டு சூரியமண்டலத்தைப் பிளந்து போகின்றது; அதனால் அவன் பிரஹ்மலோகத்தை அடைந்து மேலான கதியை அடைகின்றான்" என்று யாஞ்ஞவற்கிய ஸ்மிருதியுங் கூறுகின்றன.

ஆதிக்கணன்முகத்திலொன்றுசென்று
வல்லாதசொல்லுரைக்கத்தன்கைவாளாற்
சேதித்ததிருவடியைச்செல்லநல்ல
சிவலோகநெறிவகுத்துக்காட்டுவானை
மாதிமையமாதொருகூறாயினானை
மாமலர்மேலயனொடுமாலுங்காணா
நாதியைநம்பியைநள்ளாற்றானை
நானடியேனினைக்கப்பெற்றுய்ந்தவாறே.

—நா, திருநள்ளாறு.

அங்கதிரோனவனையண்ணலாக்கருதவேண்டா
வெங்கதிரோன்வழியேபோவதற்கமைந்துகோண்மி
னங்கதிரோனவனையுடன்வைத்தவாதிமூர்த்தி
செங்கதிரோன்வணங்குந்திருச்சோற்றுத்துறையனாரே.

—நா, திருச்சோற்றுத்துறை

(௧௧௦) சிவபெருமானுக்குள்ள ஸ்திரமாகிய மூர்த்தங்கள்போல, உபாசகர் சிவலோகத்திற் கொள்ளும் உருவங்களும் கேடில்லாதன.

𑌸𑍍𑌥𑌿𑌰𑍇𑌭𑌿𑌰𑌙𑍍𑌗𑍈𑌃 𑌪𑍁𑌰𑍁𑌰𑍂𑌪 𑌉𑌗𑍍𑌰𑌃।

ஸ்திரேபிரங்கை꞉ புருரூப உக்ர꞉।

—இருக்குவேதம், ௨. ௩௩. ௯.

"உக்கிரர் (சிவபெருமான்) ஸ்திரமாகிய அங்கங்களோடு பல ரூபமுடையர்."

𑌆𑌦𑌾𑌵𑍇𑌵𑌾𑌤𑍍𑌮𑌮𑍋𑌕𑍍𑌷𑌾𑌰𑍍𑌥𑌂 𑌸𑍍𑌵𑍀𑌕𑍃𑌤𑌾 𑌵𑌿𑌭𑍁𑌨𑌾 𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌃।
𑌕𑍃𑌪𑌯𑍈𑌵 𑌮𑌹𑍇𑌶𑍇𑌨 𑌤𑌤𑍍𑌤𑌤𑍍𑌕𑌾𑌲𑍋𑌚𑌿𑌤𑌂 𑌧𑍍𑌰𑍁𑌵𑌮𑍍।
𑌸𑍍𑌥𑌿𑌰𑌾𑌶𑍍𑌚𑍈𑌤𑌾𑌃 𑌸𑍍𑌥𑌿𑌰𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌯 𑌸𑍍𑌥𑌿𑌰𑍇𑌭𑌿𑌰𑌿𑌤𑌿 𑌹𑌿 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌃।
𑌸𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌶𑌕𑍍𑌤𑌿𑌮𑌤𑍍𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌹𑍇𑌤𑍁𑌃 𑌸𑌾𑌵𑌯𑌵𑌾𑌦𑌿𑌕𑌃।
𑌨 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍍𑌯𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑌾𑌤𑍍𑌤𑌰𑍍𑌕𑌸𑍍𑌯 𑌚 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃।
𑌅𑌤𑍋𑌨𑍍𑌯𑌥𑌾𑌹𑌿 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑍈𑌰𑍍𑌵𑍀𑌰𑍍𑌯𑌾𑌣𑌾𑌂𑌚 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌃 𑌕𑌥𑌮𑍍।
𑌕𑍁𑌤𑍋𑌪𑌹𑌤𑌪𑌾𑌪𑍍𑌮𑌤𑍍𑌵𑌾𑌦𑍍𑌯𑌷𑍍𑌟𑌧𑌰𑍍𑌮𑌾 𑌅𑌨𑌾𑌕𑍃𑌤𑍇𑌃॥

ஆதாவேவாத்மமோக்ஷார்த்தம் ஸ்வீக்ருதா விபுநா த்விஜா꞉।
க்ருபயைவ மஹேஶேந தத்தத்காலோசிதம் த்ருவம்।
ஸ்திராஶ் சைதா꞉ ஸ்திரஸ்யாஸ்ய ஸ்திரேபிரிதிஹி ஶ்ருதி꞉।
ஸ்வதந்த்ரஶக்திமத்யஸ்மிந்ஹேதுஸ் ஸாவயவாதிக꞉।
ந திஷ்டத்யப்ரதிஷ்டாநாத் தர்க்கஸ்யச விஶேஷத꞉।
அதோந்யதாஹி வேதாந்தைர் வீர்யாணுஞ்ச ஸ்ம்ருதி꞉ கதம்।
குதோபஹதபாப்மத்வாத்யஷ்டதர்மா அநாக்ருதே꞉॥

—உபதேசகாண்டம்.

"ஆதியிலே ஆன்மா மோக்ஷமடையும்பொருட்டு அவ்வக் காலங்களுக்கிசைய வியாபகராகிய சிவபெருமானால் (மகேசுவர மூர்த்தங்கள்) நிச்சயமாய்க் கிருபையினோடு கொள்ளப்பட்டன;

அவர் ஸ்திரர் (நித்தியர்) ஆதலின் அவரது மூர்த்தங்களும் ஸ்திரமாயுள்ளன என்று கூறிற்றுச் சுருதி; சுவதந்திர சக்தியையுடைய இந்தச் சிவபெருமானிடத்துக் கால்வரைக்குட்பட்டவர் என்று ஊகிக்கும் தர்க்கமானது விசேஷமாய் அநுமானத்துக்கு நில்லாமை பற்றி நிலைக்கமாட்டாது; இங்ஙனமல்லாவிடின் உபநிடதங்களால் வீரியங்களுடையவர் என்றும், அபகதபாப்மத்துவாதி (சாந்தோக்கியோபநிடதம், அ. க. ரு) எண்குணங்களுடையார் என்றும் சுருதிகூறுதற்கு இடம் எங்ஙனமாம்?

கரையார்கடனாகைக்காரோணமேய
நரையார்விடையானைநவிலுஞ்சம்பந்த
னுரையார்தமிழ்மாலைபாடுமவரெல்லாங்
*கரையாவுருவாகிக்கலிவானடைவாரே.

—ஞா, திருநாகைக்காரோணம்.

---

(௧௧௧) இரு பற்றும் அற்றவர்க்குச் சிவபெருமான் அத்துவிதமாதல்.

𑌸𑍋𑌽𑌧𑍍𑌵𑌨𑌃 𑌪𑌾𑌰𑌮𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌤𑌦𑍍𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 𑌪𑌰𑌮𑌂 𑌪𑌦𑌮𑍍।

ஸோத்வநঃ பாரமாப்நோதி தத்விஷ்ணோঃ பரமம் பதம்।

''அவன் அத்துவாவின் கரையை அடைகின்றான்; அது சிவனாது (பரமாகாய) பரமபதம்'' என்று கடவல்லியுபநிடத (௫. ௯) மும்,

𑌕𑌲𑌾 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌚 𑌭𑍁𑌵𑌨𑌂 𑌵𑌰𑍍𑌣𑌂 𑌪𑌦𑌮𑌤𑌃 𑌪𑌰𑌮𑍍।

𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌶𑍍𑌚𑍇𑌤𑌿 𑌸𑌮𑌾𑌸𑍇𑌨 𑌷𑌡𑌧𑍍𑌵𑌾 𑌪𑌰𑌿𑌪𑌠𑍍𑌯𑌤𑍇॥

கலாதத்வஞ்ச புவநம் வர்ணம் பதமதঃ பரம்।

மந்த்ரஸ்சேதி ஸமாஸேந ஷடத்வா பரிபட்யதே॥

''கலை, தத்துவம், புவனம், வர்ணம், பதம், மந்திரம் என்னும் ஆறும் தொகுப்புற ஷடத்துவா எனப்படுகின்றது'' என்றும்,

---

* ஸ்திரமாகிய வடிவம்.

வாயு, ௪௬, உரு: ௬௦.

𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌧𑍍𑌵𑌾 𑌚 𑌪𑌦𑌾𑌧𑍍𑌵𑌾 𑌚 𑌵𑌰𑍍𑌣𑌾𑌧𑍍𑌵𑌾 𑌚𑍇𑌤𑌿 𑌶𑌬𑍍𑌦𑌤𑌃।
𑌭𑍁𑌵𑌨𑌾𑌧𑍍𑌵𑌾 𑌚 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌧𑍍𑌵𑌾 𑌕𑌲𑌾𑌧𑍍𑌵𑌾 𑌚𑌾𑌰𑍍𑌥𑌤𑌃 𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍।

மந்த்ராத்வாச பதாத்வாச வர்ணாத்வாசேதி ஶப்ததஃ।
புவனாத்வாச தத்வாத்வா கலாத்வா சார்த்ததஃ க்ரமாத்॥

"மந்திரம், பதம், வர்ணம் என்பன சப்தாத்துவா எனவும், புவனம், தத்துவம், கலை என்பன அர்த்தாத்துவா எனவும் படும்" என்றும் வாயுசங்கிதையும் கூறுகின்றது.

இதனால் மந்திரமுதலிய மூன்றும் ஒலி வடிவம் எனவும், புவனமுதலிய மூன்றும் பொருள் வடிவம் எனவும் ஓர்க.

இவற்றுட் புவனம் தத்துவத்தைப்பற்றி நிற்கும்; தத்துவம் கலையைப்பற்றி நிற்கும். வர்ணம் பதம் மந்திரம் என்னும் (ஒலிவடிவாகிய) மூன்று அத்துவாக்களும் (பொருள்வடிவாகிய) புவனத்திற்றோன்றிய சரீரங்களைப்பற்றி நிற்கும். இதுபற்றியே, சர்வாத்துமசம்புசிவாசாரியர்

(𑌵𑌰𑍍𑌣𑌪𑌦𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌤𑍍𑌮𑌕𑌸𑍍𑌤𑍍𑌰𑌯𑍋𑌽𑌧𑍍𑌵𑌾𑌨𑌶𑍍𑌶𑌬𑍍𑌦𑌰𑍂𑌪𑌾𑌃) 𑌏𑌤𑍇𑌷𑍁 𑌭𑍁𑌵𑌨𑌾𑌧𑍍𑌵𑌾 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌧𑍍𑌵𑌾𑌨𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯 𑌵𑌰𑍍𑌤𑌤𑍇। 𑌏𑌵𑌂 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌕𑌲𑌾𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯 𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 । 𑌵𑌰𑍍𑌣𑌪𑌦𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌤𑍍𑌰𑌯𑍋𑌽𑌧𑍍𑌵𑌾𑌨𑍋 𑌭𑍁𑌵𑌨𑌶𑌰𑍀𑌰𑌾𑌪𑍇𑌕𑍍𑌷𑌯𑌾 𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇॥

(வர்ணபத மந்த்ராத்மகஸ்த்ரயோத்வாநஶ்ஶப்தரூபா:) ஏதேஷு புவநாத்வா தத்வாத்வாநமாஶ்ரித்ய வர்த்ததே । ஏவம் தத்வம் கலாமாஶ்ரித்ய வர்த்ததே । வர்ணபதமந்த்ரத்ரயோத்வாநோ புவநஶரீராபேக்ஷயா வர்த்தந்தே॥

என்று கூறினர்.

இந்த ஆறு அத்துவாக்களும் ஆன்மாக்களுக்குப் பந்தமாயிருக்கும். இந்தப் பொருள் ஒலிவடிவினவாய அத்துவாக்கள் ஆன்மாக்களுக்குப் பந்தமானமைக்குக் காரணம் என்னை எனிற் கூறுதும்:—

ஆன்மாவைச் செம்பிற் களிம்புபோல அநாதிக்கண்ணே பற்றித்தது மூலமலமோகம். இந்த மூலமலமோகமானது பெரிய

அந்தகாரத்தையும் ஊழிகாலத்துக் கதிரொளி என்னுமாறு மிகவும் அவாவே சொரூபமாயுள்ளது. இந்த மோகமாகிய அவாவானது புகழ்ப்பற்றும் பொருட்பற்றும் என இருவகைப்படும். புகழ்ப் பற்றானது ஒலியைப்பற்றியது; பொருட்பற்றானது பொருளைப் பற்றியது. வண்ணான் ஆடையின் அழுக்கைச் சாணம் உவர்மண் முதலிய அழுக்கைக்கொண்டு நீக்குமாறு போல, சிவபெருமான் ஆன்மாவைப்பற்றிய புகழாசை பொருளாசை என இருதிறப் பட்ட மூலமலத்தை ஒலிவடிவும் பொருள்வடிவுமாகிய மாயைமல மாகிய இருபிரகாரத்ததாகிய அத்துவாவை மருந்தாகக்கொண்டு தீர்ப்பார். ஆன்மாவுக்கு இருவினையொப்பு மலபரிபாகம் என்பன சிவபுண்ணியமிகுதியினால் எய்திய காலத்து, ஞானசாரியர்வாயி லாக அத்துவசுத்தி செய்யப்பெற்று அவ்வான்மாவானது 'புகழ்ச் சியைக்கடந்தபோகமே' என்று அருளிச்செய்யப்பட்டவாறு பொ ருட்சார்பு புகழ்ச்சார்பாகி இருபற்றும் அற்றுப்போகத் தன்னி டத்துச் சிவம் இரண்டற நிற்றலாகிய அத்துவிதபரபோகம் விளை யப்பெறும். பட்டினத்தடிகள் இருவகை அத்துவாக்களின் எல் லையையும் அருட்கண்ணாற் கடந்து, அதுகாரணமாக அறிவுஞ் செயலுமிழந்து, அதனாற் றம்மை மறந்துசிவத்தை நாடி நிற்கும் அன்பருள்ளக்கண்ணுக்கு அச்சிவம் புலப்படும் என்று கொண்டே,

உரையின்வரையும்பொருளினளவு
மிருவகைப்பட்டவெல்லையுங்கடந்து
தம்மைமறந்துநின்னைநினைப்பவர்
செம்மைமனத்தினுந்தில்லைமன்றினுநட
மாடுமம்பலவாண......

—பதினொராந்திருமுறை.

என்றருளிச்செய்தார். ஈண்டு உரை என்றது சப்தாத்துவா வையும், பொருள் என்றது அர்த்தாத்துவாவையும் சுட்டியவாம் என்க.

வெற்றவேயடியாரடிமிசைவீழும்விருப்பினன்வெள்ளைநீறணியுங்
கொற்றவன்றனக்குமந்திரியாயகுலச்சிறைகுலாவிநின்றேத்து
மொற்றைவெள்விடையனும்பரார்தலைவனுலகினியற்கையையொ
*டற்றவர்க்கற்றசிவனுறைகின்றவாலவாயாவதுமிதுவே. [ழிந்திட்

—ஞா, திருவாலவாய்.

---

* புகழ்ப்பற்று பொருட்பற்று என்னும் இருவகைப்பற்றும் அற்றவரி டத்தில் இரண்டற்று அத்துவிதமாய் விளங்குபவர் சிவபெருமான்.

அப்பொற்பதிவாழ்வணிகக்குலத்தான்றதொன்மைச்
செப்பத்தகுசீர்க்குடிசெய்தவஞ்செய்யவந்தா
ரெப்பற்றினையுமறுத்தேறுகைத்தேறுவார்தாண்
மெய்ப்பற்றெனப்பற்றிவிடாதவிருப்பின்மிக்கார்.

அப்பொற்பதியினிடைவேளாண்குலத்தைவிளக்கவவதரித்தார்
செப்பற்கரியபெருஞ்சீர்த்திச்சிவனார்செய்யகழற்பற்றி
யெப்பற்றினையுமறவெறிவாரெல்லைதெரியவொண்ணாதார்
மெய்ப்பத்தர்கள்பாற்பரிவுடையாரெம்பிரானார்விறன்மிண்டர்.

—பெரியபுராணம்.

---

(௧௧௨) ஞானம்.

𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍍𑌵𑍇𑌵 𑌹𑌿 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌷𑍁 𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌵𑌸𑍍𑌤𑍁 𑌚𑌤𑍁𑌷𑍍𑌟𑌯𑌮𑍍।
𑌪𑌶𑍁𑌪𑌾𑌶𑌪𑌤𑌿𑌶𑍍𑌚𑍈𑌵 𑌶𑌿𑌵𑌶𑍍𑌚𑍇𑌤𑌿 𑌯𑌥𑌾𑌕𑍍𑌰𑌮𑌮𑍍।
𑌪𑌤𑌿𑌃 𑌸𑌦𑌾𑌶𑌿𑌵𑍋 𑌜𑍍𑌞𑍇𑌯𑍋 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌤𑍍𑌮𑌾 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌵𑌿𑌗𑍍𑌰𑌹𑌃।
𑌸𑌰𑍍𑌵𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌧𑌿𑌪𑌶𑍍𑌚𑌾𑌸𑍌 𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌸𑌂𑌹𑌾𑌰𑌕𑌾𑌰𑌕𑌃॥

ஸர்வேஷ்வேவ ஹி ஶாஸ்த்ரேஷு ஜ்ஞேயம் வஸ்து சதுஷ்டயம்।
பஶுபாஶபதிஶ்சைவ ஶிவஶ்சேதி யதாக்ரமம்।
பதிஸ் ஸதாஶிவோ ஜ்ஞேயோ மந்த்ராத்மா மந்த்ரவிக்ரஹ:।
ஸர்வமந்த்ராதிபஶ்சாஸௌ ஸ்ருஷ்டி ஸம்ஹாரகாரக:॥

"சர்வசாஸ்திரங்களினும் பசு பாசம் பதி சிவம் என்னும் நான்கு வஸ்துக்களும் கிரமமாக அறியற்பாலன; பதியாவார் சதாசிவர்; இவர் மந்திரான்மாவும், மந்திரவடிவினரும், சர்வமந்திரங்களுக்கும் அதிபரும், சிருஷ்டி (ஸ்திதி) சங்கார (திரோபவ அநுக்கிரகம்) என்னும் பஞ்சகிருத்தியங்களைச் செய்பவருமாயுள்ளார்" என்று சர்வஞ்ஞானோத்தரம் கூறுகின்றது.

[illegible]
[illegible]
[illegible] ॥

அர்வாக் தேவா அஸ்ய விஸர்ஜநேநாதா கோ வேத யத ஆபபூவ। யோஸ்யாத்யக்ஷ꞉ பரமே வ்யோமந் ஸோ அங்க வேத யதி வா ந வேத ॥

இருக்குவேதம், ௧௦, ௧௨௯. ௬, ௭.

"தேவர்கள் உலக சிருஷ்டிக்குப் பின்னர்த்தான் உளராயி னூர்கள்; அங்ஙனமாயின் அது எங்கிருந்து உளதாயிற்று என்று யார் அறிவார்" என்று வினவி, "பரமவியோம (திருச்சிற்றம்பலத்)த் தின்கண்ணே எவர் பிரபஞ்சத்துக்கு அத்தியக்ஷராய் (அதிபதி யாய்) நின்றனரோ, அவரே அதனை அறிவார்; மற்றெவரும் அறி யார்" என்று உத்தரம் இறுத்தது இருக்குவேதம். இதனால் சிருஷ்டியாதி பஞ்சகிருத்தியஞ் செய்பவர் பரமவியோமத்திலுள்ள அத்தியக்ஷர் என்று பெறப்படுகின்றது. அந்த அத்தியக்ஷர் யா ரெனின்,

ய ஏஷோऽந்தர்ஹ்ருதய ஆகாஶஸ்தஸ்மிஞ்சேதே ஸர்வஸ்ய வஶீ ஸர்வஸ்யேஶாந꞉ ஸர்வஸ்யாதிபதி꞉।

ய ஏஷோந்தர்ஹ்ருதய ஆகாஶஸ்தஸ்மிஞ்சேதே ஸர் வஸ்யவஶீ ஸர்வஸ்யேஶாநஸ் ஸர்வஸ்யாதிபதி꞉।

"எது இதயத்துள் ஆகாயமாய்த் (திருச்சிற்றம்பலமாய்) இருக்கின்றதோ, அதில் அனைத்தையும் வசீகரிப்பவரும், அனைத் துக்கும் அதிபதியும் அனைத்துக்கும் ஈசானருமாயினார் அமர் கின்றார்" என்று பிருகதாரணியம் கூறுமாற்றால், பரமவியோமத் தினர் ஈசானர் என்று பெறப்படுகின்றது. அந்த ஈசானர் யாரெ னின்,

ஈஶாநம் ந்ருத்தரூபம் து பஞ்சமந்த்ராத்மகம் பரம்।
ப்ராஹ்மரந்த்ரே ஶிவம் வித்யாந்ந்ருத்தம் விசிந்தயேத்।
த்வாதஶாந்தாத்பரே சாந்யஸ்மாத் த்ஸக்ஷ்மஸ்திதோ விது꞉।
ஆநந்தந்ருத்தகஸ் ஸாக்ஷாத் தேவதேவோ ஜகத்குரு꞉॥

ஈஶாநம் ந்ருத்தரூபந்து பஞ்சமந்த்ராத்மகம் பரம்। ப்ராஹ்மரந்த்ரே ஶிவம் வித்யாந்ந்ருத்தம் விசிந்தயேத்। த்வாதஶாந்தாத் பரே சாந்ய ஸ்மாத ஸூக்ஷ்மஸ்திதோ விது꞉। ஆநந்தந்ருத்தகஸ் ஸாக்ஷாத் தேவதேவோ ஜகத்குரு꞉॥

"பஞ்சமந்திரான்மகபராகிய ஈசானன்றித் தாண்டவேசுவரர் என்றும், பிரமரந்திரத்திலே (சாதாக்கியதத்துவச்) சிவன் உள்ராயினர் என்றும் அறிக; அவர்க்கு மேலுள்ள (சமஷ்டிரூப சதாசிவ) தாண்டவேசுவரரைத் தியானிக்க; துவாதசாந்தத்துக்கு மேலுள்ளாராதலில் அவர் அதிசூக்குமவடிவினர் என்று அறிகின்றார்கள்; அவர் நேரே தேவதேவரும், ஜகத்குருவுமாகிய ஆனந்ததாண்டவேசுரராம்" என்று காரணாகமம் கூறுகின்றது. ஆகவே, இருக்குவேதத்துக் கூறப்பட்ட பரமாகாயத்து அத்தியக்ஷர் சூக்குமவடிவினராகிய சமஷ்டிரூப மகர்சதாசிவ தாண்டவேசுரராம் என்க.

ஶிவவஸ்து பரந்தஸ்மாந்மந்த்ராதீதோ நிரஞ்ஜநஃ।
நிராமயோ நிராதாரோ வர்ணரூபவிவர்ஜிதஃ॥

ஶிவவஸ்து பரம்தஸ்மாந்மந்த்ராதீதோ நிரம்ஜநஃ।
நிராமயோ நிராதாரோ வர்ணரூபவிவர்ஜிதஃ॥

"சிவப்பொருளானது பரவடிவாகும்; ஆகலின், அவ்வஸ்து மந்திராதீதமாய், மலமிலதாய், நிராமயமாய், நிராதாரமாய், வர்ணம் வடிவம் இல்லாததாயுள்ளது. ஆகவே, மாயாவாதிகளது விமல சத்துவப்பிரதான மூலப்பிரகிருதி மாயோபாதிகனும் கற்பித ஆபாசனுமாகிய தாழ்ந்த ஈசுரசகுணவழிபாட்டினுயர்ந்து, (சர்வசாரமுதலிய ஏகான்மவாதோபநிடதப்பிரகாரம்) மூலப்பிரகிருதி கடந்துள்ள ஆன்மப்பிரமசிவம் வேறு என்றும், மூலப்பிரகிருதி கடந்து, அதற்கப்பாலுள்ள சூக்குமப்பிரகிருதி கடந்தப்பாலுள்ள பரப்பிரகிருதிப்பாலராய், நித்தியராய், சூக்குமவடிவினராயுள்ள திருச்சிற்றம்பலவிசுத்த ஸ்தானத்தில் சேர்ந்த அகண்டாகார நித்தவியாபக சச்சிதானந்தப்பிழம்பாக ஈண்டுக் கூறப்பட்ட அதிகாரவர்ச்சித சிவப்பொருள் வேறு என்றும் ஓர்க.

மைப்படிந்தக்கண்ணாளுந்தானுங்கச்சி
மயானத்தான்வார்சடையானென்னினல்லா
*னொப்புடையனல்லனொருவனல்ல
னோரூரனல்லனோருவமனில்லி
யப்படியுமந்நிறமுமவ்வண்ணமு
மவனருளேகண்ணாகக்காணினல்லா
லிப்படியனிந்நிறத்தனிவ்வண்ணத்த
னிவனிறைவனென்றெழுதிக்காட்டொணாதே.

—நா, விணவிடைத்திருத்தாண்டகம்.

*ஒப்புடையனல்லன் என்றற்றொடக்கத்தவற்றால் சிவத்தின் சொரூப நிலை உணர்த்தப்பட்டது.

இன்னவுருவின்னநிறமென்றறிவதேலரிதுநீதிபலவுந்
தன்னவுருவாமெனமிகுத்ததவனீதியொடுதானமர்விட
முன்னைவினைபோய்வகையினுன்முழுதுணர்ந்துமுயல்கின்றமுனிவர்
மன்னவிருபோதுமருவித்தொழுதுசேரும்வயல்வைகாவிலே.

—ஞா, திருவைகாவூர்.

கொள்ளுங்கில்லெனையன்பரிற்கூய்ப்பணி
கள்ளும்வண்டுமறாமலர்க்கொன்றையா
னள்ளுங்கீழுளுமேலுளும்யாவுளு
மெள்ளுமெண்ணெயும்போனின்றவெந்தையே.

—திருவாசகம்.

ஆயினும்பெரியாரவரெனபது
மேயவிவ்வியல்பேயன்றிவிண்முதற்
பாயபூதங்கள்பல்லுயிரண்டங்க
ளேயும்யாவுமிவர்வடிவென்றதாம்.

பின்புமாரறிவாரவர்பெற்றிமை
யென்பதியாருணர்வானுஞ்சென்றெட்டொணு
மன்பெருந்தன்மையாரெனவாழ்த்திறு
ரன்புசூழ்சண்பையாண்டகையாரவர்.

—பெரியபுராணம்.

𑌤𑌦𑌿𑌦𑌂 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌂 𑌰𑍂𑌪𑌂 𑌸𑍍𑌥𑍂𑌲𑌂 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌂 𑌤𑌤𑌃 𑌪𑌰𑌮𑍍।
𑌅𑌸𑍍𑌮𑌦𑌾𑌦𑍍𑌯𑌮𑌰𑍈𑌰𑍍 𑌦𑍃𑌶𑍍𑌯𑌂 𑌸𑍍𑌥𑍂𑌲𑌂 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌨𑍍𑌤𑍁 𑌯𑍋𑌗𑌿𑌭𑌿𑌃।
𑌤𑌤𑌃 𑌪𑌰𑌨𑍍𑌤𑍁 𑌯𑌨𑍍𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌾𑌨𑌨𑍍𑌦𑌮𑌵𑍍𑌯𑌯𑌮𑍍।
𑌤𑌨𑍍𑌨𑌿𑌷𑍍𑌠𑍈𑌸𑍍𑌤𑌤𑍍𑌪𑌰𑍈𑌰𑍍𑌭𑌕𑍍𑌤𑍈𑌰𑍍 𑌦𑍃𑌶𑍍𑌯𑌨𑍍 𑌤𑌦𑍍𑌰𑍂𑌪𑌮𑌾𑌸𑍍𑌤𑌿𑌕𑍈𑌃।
𑌬𑌹𑍁𑌨𑌾𑌤𑍍𑌰 𑌕𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑍇𑌨 𑌗𑍁𑌹𑍍𑌯𑌾𑌦𑍍 𑌗𑍁𑌹𑍍𑌯𑌤𑌮𑌂 𑌪𑌰𑌮𑍍।
𑌶𑌿𑌵𑍇 𑌭𑌕𑍍𑌤𑌿𑌰𑍍 𑌨𑌸𑌨𑍍𑌦𑍇𑌹𑌸𑍍𑌤𑌯𑌾 𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌵𑌿𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇॥

ததிதம் த்ரிவிதம் ரூபம் ஸ்தூலம் ஸூக்ஷ்மம் தத: பரம்|
அஸ்மதாத்யமரைர் த்ருஶ்யம் ஸ்தூலம் ஸூக்ஷ்மந்து யோகிபி:|
தத: பரந்து யந்நித்யம் ஜ்ஞாநமாநந்தமவ்யயம்|
தந்நிஷ்டை ஸ்தத்பரைர்பக்தைர் த்ருஶ்யந் தத்ரூபமாஸ்திகை:|
பஹுநாத்ர கிமுக்தேந குஹ்யாத் குஹ்யதமம் பரம்|
ஶிவே பக்திர் நஸந்தேஹஸ்தயா யுக்தோ விமுச்யதே||

"சிவபெருமானுக்கு ஸ்தூலவடிவம், சூக்குமவடிவம், பரவடிவம் என மூவடிவங்கள் உள்ளன; திருசியமாகிய ஸ்தூலவடிவம் அமரர்களாகிய எங்களாலும், சூக்குமவடிவம் (வைதிகபாசுபத)ஞானயோகிகளாலும், ஞானானந்த அவ்வியயமாகிய அந்தப் பரவடிவம் சிவநிஷ்டர்களாய், சிவபரர்களாய், சிவாஸ்திகர்களாயுள்ள பக்தர்களாலும் காணற்பாலன; ஈண்டு அதிகஞ்சொல்லி ஏன்! பரவடிவம் மறைவினும் மறைவாய் உள்ளது; எவனுக்குச் சிவனிடத்திலே அன்பு சந்தேகமின்றி உளதோ, அவன் அவ்வன்பினேனடியைந்து வீடுறுகின்றான்" என்றது சிவபுராணம். சர்வஞ்ஞானோத்தரத்திற் கூறப்பட்ட அதிகாரவர்ச்சித சிவப்பொருளின் சொரூபமே ஈண்டு பரவடிவம் எனப்பட்டது. இது கேவலாவஸ்தை சகலாவஸ்தை என்னும் இரண்டும் நீங்கியவிடத்தே எய்தற்பாலது.

நதிநே பூஜயெத்தேவம் ராத்ரெள நைவச நைவச।
ஸந்ததம் பூஜயெத்தேவம் திவாராத்ரெளச வர்ஜயெத்।

நதிநே பூஜயேத் தேவம் ராத்ரௌ நைவச நைவச।
ஸந்ததம் பூஜயேத் தேவம் திவாராத்ரௌச வர்ஜயேத்।

"பகல் எனப்படும் சகலாவஸ்தையிற் சிவனை வழிபடற்க; இரவு எனப்படும் கேவலாவஸ்தையில் அவனை வழிபடற்க; பின் கேவலசகலமொழிந்து, என்ஞான்றும் சுத்தாவஸ்தையில் அவனை வழிபடுக" என்று கூறிற்றுச் சிவாகமம்.

உறவியுமின்புறுசீருமோங்குதல்வீடெளிதாகித்
துறவியுங்கூட்டமுங்காட்டித்துன்பமுமின்பமுந்தோற்றி
*மறவியஞ்சிந்தனைமாற்றிவாழவல்லார்தமக்கென்றும்
பிறவியறுக்கும்பிரானூர்பெரும்புலியூர்பிரியாரே.

—ஞா, திருப்பெரும்புலியூர்.

மாவடுவகிரன்னகண்ணிபங்காநின்மலரடிக்கே
கூவிடுவாய்கும்பிக்கேயிடுவாய்நின்குறிப்பறியேன்
பாவிடையாடுகுழல்போற்கரந்துபரந்ததுள்ள*
மாகெடுவேனுடையாயடியேனுன்னடைக்கலமே.

—திருவாசகம்.

---

* மறவி சிந்தனை என்றமையானும், கரந்து பரந்தது என்றமையானும், இரா பகல் என்றமையானும், நினைப்பு மறப்பு என்றமையானும் கேவலசகலாவஸ்தைகள் குறிக்கப்பட்டன.

இராப்பகலற்றவிடத்தேயிருந்து
பராக்கறவானந்தத்தேறல்பருகா
இராப்பகல்ற்றவிறையடியின்பத்
திராப்பகன்மாயையிரண்டடித்தேனே.

நினைப்புமறப்புமிலாதவர்நெஞ்சம்
வினைப்பற்றறுக்கும்விமலனிருக்கும்
வினைப்பற்றறுக்கும்விமலனைத்தேடி
நினைக்கப்பெறிலவனீளியனாமே.

—திருமந்திரம்.

𑌬𑌾𑌹𑍍𑌯𑍇𑌽𑌭𑍍𑌯𑌰𑍍𑌚𑍍𑌯 𑌶𑌿𑌵𑌂 𑌪𑌶𑍍𑌚𑌾𑌦𑌨𑍍𑌤𑌰𑍍𑌯𑌾𑌗𑌰𑌤𑍋 𑌭𑌵𑍇𑌤𑍍।
𑌰𑌤𑌿𑌰𑌭𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑍇 𑌯𑌸𑍍𑌯 𑌨 𑌬𑌾𑌹𑍍𑌯𑍇 𑌪𑍁𑌣𑍍𑌯𑌗𑍌𑌰𑌵𑌾𑌤𑍍।
𑌨 𑌕𑌰𑍍𑌮𑌕𑌰𑌣𑍀𑌯𑌂 𑌹𑌿 𑌬𑌹𑌿𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌃।
𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌮𑍃𑌤𑍇𑌨 𑌤𑍃𑌪𑍍𑌤𑌸𑍍𑌯 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌚𑍈𑌵 𑌶𑌿𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑌃।
𑌨𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌨𑌚 𑌬𑌹𑌿𑌃 𑌕𑍃𑌤𑍍𑌯𑌂 𑌕𑍃𑌤𑍍𑌯𑌮𑌸𑍍𑌤𑌿 𑌕𑌦𑌾𑌚𑌨।

பாஹ்யேப்யர்ச்ய ஶிவம் பஶ்சாதந்தர்யாகரதோ பவேத்।
ரதிரப்யந்தரே யஸ்ய ந பாஹ்யே புண்யகௌரவாத்।
நகர்மகரணீயம் ஹி பஹிஸ்தஸ்ய மஹாத்மந:।
ஜ்ஞாநாம்ருதேந த்ருப்தஸ்ய பக்த்யாசைவ ஶிவாத்மந:।
நாந்தர்நச பஹி: க்ருஷ்ண க்ருத்யமஸ்தி கதாசந॥

"புறப்பூசையினாற் சிவத்தை வழிபட்டு; பின்னர் அந்தரியாகத்திலே விருப்புற்வுடையனாகின்றான்; புண்ணியமிகுதியினால் அந்தரியாகத்தினும் புறப்பூசையினும் பற்றிலனாகின்றானோ, அந்த மகாத்துமாவுக்குப் புறத்தே செயற்பாலதொன்றுமின்று; ஞானாமிர்தத்தினாலும் பக்தியினாலும் திருப்தியுடையனாகிய சீவன்முத்தனுக்கு அகத்தும் புறத்தும் ஒர்காலும் செய்யவேண்டியதொன்றுமின்றாம்" என்று சிவபுராணம் கூறுகின்றது.

உள்ளும்புறம்புநினைப்பறினின்னுள்ளே
மொள்ளாவமுதமென்றுந்தீபற
முளையாதுபந்தமென்றுந்தீபற.

—திருவுந்தியார்.

(இ-ள்) சகமார்க்கம்போலப் பரவடிவாகிய சிவப்பொருளை ஏக தேசப்படுத்தி உள்ளே தியானிப்பதும், புத்திரமார்க்கம்போல அகத்தும் புறத்தும் வழிபடுவதும், தாதமார்க்கம்போற் புறத்தே வழிப்படுவதும் ஒழித்து, சன்மார்க்கமுறையாகிய சுத்தாவஸ்தையைத் தலைப்பட்டு, அகண்டாகார நித்தவியாபகசச்சிதானந்த சொரூபநிலையை அறிந்து ஒருவர் வழிபடின், அவ்வன்பர் அறிவின்கண்ணே பருகத் தொலையாப் பரபோகம் விளையும்; அது விளையவே பாசங்கள் முளைக்கமாட்டாவாம் எ-று.

இரவுபகலில்லாவின்பவெளியூடே
விரவிவிரவிநின்றுந்திபற
விரையவிரையநின்றுந்திபற.

(இ-ள்) கேவலசகலாவஸ்தைகளிற் புசிக்கும் சிற்றின்பம் போலன்றி, "புணர்ந்தாற் புணருந்தொறும் பெரும்போகம் பின்னும் புதிதா"கலின், அந்த இன்பபூரண வெளியாகிய சிவத்துடனே புணர்ந்து விரவி ஒன்றேயாகி நிற்குமாயினும், அந்தச் சிவானுபவத்தில் விரைந்துநின்று உணர்வதொரு பொருளுண்டாகலின் அவ்விடத்து அது உண்டு இல்லை என்று பேசுதற்கில்லையாம் என்றே கொள்ளப்படும். ஆன்மா அவ்விடத்து உண்டென்னில், ஞாதிரு ஞான ஞேயம் என்னும் சங்கற்பவிகற்பங்கள் உண்டாம்; அவ்விடத்து ஆன்மா என்றொரு முதல் இல்லை என்னில், அது சற்காரியமாகிய மெய்ப்பொருள் என்பதற்கு இழுக்காகி அநித்திய பதார்த்தங்களில் ஒன்றாகும்; அதனை ஒன்று என்றும் இரண்டு என்றும் பகுத்தறியின்; அவசித்தாந்தமாகும்; ஆன்மா என்று ஒரு முதல் ஆண்டு உண்டென்பதும் இல்லையென்பதுமின்றி அந்தப் பேரானந்த சிவபோகத்தைப் பொருந்துமுறைமையை ஆராயின், அந்தச் சிவபெருமான் "ஏகமாய் உள்ளத்தின்கண்ணுளன் உள்குவாருள்கிற்றை உள்ளத்தாற் காணுமேறு வுற்று" என்றும், ஆன்மஞானத்தினிடத்து ஏகமாய் விட்டுநீங்காதவராகலான், கருதுவார் கருதிய பொருளாகிய தம்மை அவர் அறிவோடு கூடிநின்றறியார்கொல்லோ என்றும் வருமாற்றால், அவ்விடத்து ஆன்மாவைத் தாமாகும்வண்ணஞ் செய்து, அவ்வின்பத்தை உயிர் அறியும்பொருட்டு உடனாய்நின்று அறிவர் எ - று.

பொன்வாண்முன்கொண்மூவிற்புக்கொடுங்கிப்போயகலத்
தன்வாளேயெங்குமாந்தன்மைபோன்—முன்னாண்
மலத்துண்மறைந்துள்ளமற்றுலகையுண்ணு
மலத்திரித்துச்செல்லும்வரத்து.

—சிவஞானபோதம்.

இதன் பொருளைச் ''சிவஞானபோதவசனாலங்காரதீப''த்து ௧௧-ஞ் சூத்திரத்து ௯௫-ம் பிரிவிற் காண்க.

காலமுண்டாகவேகாதல்செய்துய்மின்கருதரிய
ஞாலமுண்டானொடுநான்முகன்வானவர்நண்ணரிய
வாலமுண்டானெங்கள்பாண்டிப்பிரான்றன்னடியவர்க்கு
மூலபண்டாரம்வழங்குகின்றான்வந்துமுந்துமினே.

—திருவாசகம்.

ஈண்டு மூலபண்டாரம் என்றது பேரானந்தசிவபோகத்தின் பேறு. இதனை அடையுநெறி வருமாறு.—

ஒன்றியிருந்துநினைமின்களுந்தமக்கூனமில்லைக்
கன்றியகாலனைக்காலாற்கடிந்தானடியவர்க்காய்ச்
சென்றுதொழுமின்கடில்லையுட்சிற்றம்பலத்துநட்ட
மென்றுவந்தாயென்னுமெம்பெருமான்றன்றிருக்குறிப்பே.

—நா, கோயில்.

அருநெறியமறைவல்லமுனியகன்பொய்கையலர்மேய
பெருநெறியபிரமாபுரமேவியபெம்மானிவன்றன்னை
யொருநெறியமனம்வைத்துணர்ஞானசம்பந்தனுரைசெய்த
திருநெறியதமிழ்வல்லவர்தொல்வினைதீர்தலெளிதாமே.

—ஞா, திருப்பிரமபுரம்.

எண்ணொன்றிநினைந்தவர்தம்பா
லுண்ணின்றுமகிழ்ந்தவனூராங்
கண்ணின்றெழுசோலையில்வண்டு
பண்ணின்றொலிசெய்பனையூரே.

—ஞா, திருப்பனையூர்.

ஏகமாய்நின்றேயிணையடிகளொன்றுணரப்
போகமாய்த்தான்விளைந்தபொற்பினா—னேகமா
யுள்ளத்தின்கண்ணாணுனுள்குவாருள்கிற்றை
யுள்ளத்தாற்காணுனேவுற்று.

—சிவஞானபோதம்.

பரபோகானந்தமும் ஆனந்தக்கூத்தும் ஒன்றுமென்ல்.

உணர்வுநேர்பெறவருஞ்சிவபோகத்தையொழிவின்றியுருவின்க
ணணையுமைம்பொறியளவினுமெளிவரவருளினையெனப்போற்றி
யிணையில்வண்பெருங்கருணையேயேத்திமுன்னெடுத்தசொற்பதிக
புணருமின்னிசைபாடினராடினர்பொழிந்தனர்விழிமாரி. [த்திற்

எவ்வுலகுமுய்யவெடுத்தருளியசேவடியாரைச்
செவ்வியவன்புறவணங்கிச்சிந்தைகளிவரத்திளைத்து
வவ்வியமெய்யுணர்வின்கண்வருமானந்தக்கூத்தை
யவ்வியல்பிற்கும்பிட்டங்காராமையமர்ந்திருந்தார்.

பரவுவாய்குளறிக்காதல்படிதிருப்படியைத்தாழ்ந்து
விரவுமெய்யங்கமைந்துமெட்டினும்வணங்கிவேட்கை
யுரனுறுதிருக்கூத்துள்ளமார்தரப்பெருகிநெஞ்சிற்
கரவிலாதவரைக்கண்டநிறைவுதங்கருத்திற்கொள்ள.

பண்ணார்பதிகத்திருக்கடைக்காப்புப்பரவி
யுண்ணுடுமென்புமுயிருங்கரைந்துருக்கும்
விண்ணாயகன்கூத்துவேட்டவெளியேதிளைத்துக்
கண்ணாரமுதுண்டார்காலம்பெறவழுதார்.

அண்ணலார்தமக்களித்தமெய்ஞ்ஞானமேயானவம்பலமுந்த
முண்ணிறைந்தஞானத்தெழுமானந்தவொருபெருந்தனிக்கூத்துங்
கண்ணின்முன்புறக்கண்டுகும்பிட்டெழுங்களிப்பொடுங்கீடற்காழி
புண்ணியக்கொழுந்தனையவர்போற்றுவார்புனிதராடியபொற்பு. [ப்

—பெரியபுராணம்.

புதியையாயினியையாம்பூந்தென்றல்புறங்காடு
பதியாவதிதுவென்றுபலர்பாடும்பழனத்தான்
மதியாதார்வேள்விதனைமதித்திட்டமதிகங்கை
விதியாளனென்னுயிர்மேல்விளையாடல்விடுத்தானே.

—நா, திருப்பழனம்.

மெய்யுணர்வு எனப்படும் அருளின் எல்லையாகிய துரியநிலை கடந்த பின்னர்த் துரியாதீதத்துச் சிவபோகம் எனப்படும் ஆனந்தக்கூத்து எய்துவதாமாதலின், “உணர்வுநேர்பெற வருஞ்சிவபோகத்தை” என்றும், “மெய்யுணர்வின்கண்வருமானந்தக்கூத்து” என்றும், “உரனுறுதிருக்கூத்து” என்றும், “மெய்ஞ்ஞானமேயானவம்பலமுந் தம்முண்ணிறைந்த ஞானத்தெழுமானந்தவொருபெருந்தனிக்கூத்தும்” என்றும் கூறப்பட்டதாம்.

ஆனந்தத்தை ஆன்மாவுக்கு விளைவிப்பவர் சிவபெருமான்.

𑌆𑌨𑌨𑍍𑌦𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮।

ஆநந்தோ ப்ரஹ்ம।

"ஆனந்தகுணமுடையது பிரஹ்மம்" என்றும்

𑌅𑌨𑍍𑌯𑍋𑌽𑌨𑍍𑌤𑌰 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌨𑍍𑌦𑌮𑌯𑌃।

அந்யோந்தர ஆத்மாநந்தமய꞉।

"அனைத்துக்கும் வேறாய் உள்ளே உள்ள (பரம) ஆன்மாவாகிய சிவபெருமான் ஆனந்தமிகுதியுடையர்" என்றும்,

𑌸 𑌏𑌕𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣 𑌆𑌨𑌨𑍍𑌦𑌃।

ஸ ஏகோ ப்ரஹ்மண ஆநந்த꞉।

"அது பிரஹ்மத்தின் ஒரு ஆனந்தம்" என்றும்,

𑌏𑌷 𑌹𑍍𑌯𑍇𑌵𑌾𑌨𑌨𑍍𑌦𑌯𑌾𑌤𑌿।

ஏஷஹ்யேவாநந்தயாதி।

"இவரன்றோ (ஆன்மாவுக்கு) ஆனந்தத்தை விளைவிப்பவராகின்றார்" என்றும்,

𑌰𑌸𑌂 𑌲𑌬𑍍𑌧𑍍𑌵𑌾𑌨𑌨𑍍𑌦𑍀 𑌭𑌵𑌤𑌿।

ஏஸம் லப்த்வாநந்தீ பவதி।

"பிரஹ்மானந்தத்தை ஆன்மா அடைந்து ஆனந்தமாகின்றான்" என்றும்,

𑌆𑌨𑌨𑍍𑌦𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍 𑌨 𑌬𑌿𑌭𑍇𑌤𑌿 𑌕𑍁𑌤𑌶𑍍𑌚𑌨।

ஆநந்தம் ப்ரஹ்மணோ வித்வாந் நபிபேதி குதஶ்சந।

"பிரஹ்மானந்தத்தை (அநுபூதியில்) அறிந்தவன் யாண்டும் பயப்படுவானல்லன்" என்றும் தைத்திரீயசுருதியும்,

𑌆𑌨𑌨𑍍𑌦𑌮𑌯𑍋𑌽𑌭𑍍𑌯𑌾𑌸𑌾𑌤𑍍।

ஆநந்தமயோப்யாஸாத்।

"(சிவபெருமான்) ஆனந்தமயர்; *அப்பியாசத்தினால்" என்றும்,

---

*தைத்திரீய சுருதி ஆனந்தமிகுதியுடைய பரப்பிரஹ்மசிவனாது ஆனந்தத்தை ஆராய்வதாகத் தொடங்கி, மனுஷ்யானந்தத்தை முதற்கண்ணே கூறி, அதினும் நூறுமடங்கு மனுஷ்யகந்தருவானந்தம் என்றும், அதினும் நூறு மடங்கு தேவகந்தருவானந்தம் என்றும், இங்ஙனம் இந்திரன், பிருகஸ்பதி, பிரமா என்போருடைய ஆனந்தங்களும் ஒன்றுக்கொன்று நூறுநூறுமடங்காம் என்றும் கூறி, அவற்றிற்குமேற் பிரஹ்மானந்தத்தைக் கூறினமைபற்றி "அப்பியாசம்" என்று கூறப்பட்டது.

𑌤𑌦𑍍𑌧𑍇𑌤𑍁𑌵𑍍𑌯𑌪𑌦𑍇𑌶𑌾𑌚𑍍𑌚।

தத்தேதுவ்யபதேஶாச்ச।

"அவர் (சிவபெருமான்) அதற்கு (ஆனந்தம் விளைத்தற்கு) ஏதுவாகக் கூறப்படலானும்" என்றும்,

𑌵𑌿𑌕𑌾𑌰𑌶𑌬𑍍𑌦𑌾𑌨𑍍𑌨𑍇𑌤𑌿 𑌚𑍇𑌨𑍍𑌨 𑌪𑍍𑌰𑌾𑌚𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍।

விகாரஶப்தாந்நேதிசேந்ந ப்ராசுர்யாத்।

ஆனந்தமயத்தில் விகாரம் எனப் பொருள்படுகின்ற மயம் என்னும் சப்தமுண்மையின், ஆனந்தமயம் பிரஹ்மமன்றும் என்று ஆக்ஷேபிக்கின், அது (பொருந்துவ) தன்று; அந்த மயம் என்பது மிகுதி என்னும் பொருட்டாமாகலின் என்றும் வேதாந்தசூத்திரமும்,

𑌰𑌸𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌰𑌸𑌂 𑌲𑌬𑍍𑌧𑍍𑌵𑌾𑌨𑌨𑍍𑌦𑍀 𑌭𑌵𑌤𑌿 𑌨𑌾𑌨𑍍𑌯𑌥𑌾।

ரஸோ ப்ரஹ்மரசம் லப்த்வாநந்தீ பவதி நாந்யதா।

"பிரமம் ஆனந்தகுணமுடையது; அந்தப் பிரஹ்மானந்தத்தை ஆன்மா அடைந்து ஆனந்தமாயிருக்கின்றான்; பிறிதோர் பிரகாரத்தாலன்று" என்று ஆனந்தாமிர்தமும்,

𑌯 𑌆𑌨𑌨𑍍𑌦𑌮𑌯𑍋𑌽𑌭𑍍𑌯𑌾𑌸𑌾𑌤𑌾𑌨𑌨𑍍𑌦𑌪𑍍𑌰𑌾𑌚𑍁𑌰𑍍𑌯𑍋 𑌯𑌤𑌃।
𑌆𑌨𑌨𑍍𑌦𑍍𑌯𑌾𑌤𑌾𑌨𑌨𑍍𑌦𑌵𑌿𑌨𑍍𑌨𑍈𑌵 𑌵𑌿𑌭𑍇𑌤𑍍𑌯𑌸𑍍𑌮𑌾 𑌇𑌦𑌂 𑌨𑌮𑌃॥

ய ஆநந்தமயோப்யாஸாதாநந்தப்ராசுரோயதஃ।
ஆநந்த்யாதாநந்தவிந்நைவ விபேத்யஸ்மா இதம் நமஃ॥

(தைத்திரீயசுருதியும் இதனை ஆதாரமாகக்கொண்ட வேதாந்தசூத்திரமும்) அப்பியாசத்தினால் எந்தச் சிவன் ஆனந்தமயராயுள்ளாரோ என்றும், ஆனந்தமயம் என்றதில் மயம் என்றது ஆனந்தமிகுதி எனப் பொருள்படுதலின் எவர் ஆனந்தமிகுதியுடையவரோ என்றும், ஆன்மாவுக்கு ஆனந்தத்தை விளைவிக்கின்றாரோ என்றும், (அந்தப்) பிரஹ்மானந்தத்தை அறிந்தவன் யாண்டும் பயப்படுவானல்லன் என்றும் கூறுகின்றனவோ, அவ்வியல்பினராகிய உமக்கு நமஸ்காரம்" என்று சுருதியுபப்பிருங்கணமாகிய சூம்பவகாண்டமும் கூறுகின்றன.

துன்பாயமாசார்துவசாயபோர்ஸையார்
புன்பேச்சுக்கேளாதேபுண்ணியனைநண்ணுமின்க
ணன்பாற்சிவாயவெனுநாலூர்மயானத்தே
யின்பாயிருந்தானையேத்துவார்க்கின்பமே.

—ஞா, திருநாலூர்மயானம்.

கண்ணினயலேகண்ணொன் றுடையார்கழலுன்னி
யெண்ணுந்தனையுமடியாரேத்தவருள்செய்வா
ருண்ணின்றுருகவுவகைதருவாரூர்போலும்
பண்ணின்மொழியார்பாடலோவாப்பாச்சூரே.

—ஞா, திருப்பாசூர்.

தேனுமாயமுதாகிநின்றான்றெளிசிந்தையுள்
வானுமாய்மதிசூடவல்லான்மங்கலக்குடிக்
கோனைநாடொறுமேத்திக்குணங்கொடுகூறுவா
ரூனமானவைபோயறுமுய்யும்வகையதே.

—ஞா, திருமங்கலக்குடி.

தேனிலுமினியர்பாலனநீற்றர்தீங்கரும்பனையர்தந்திருவடி தொழுவா, ரூனயந்துருகவுவகைகடருவாருச்சிமேலுறைபவரொன்றலாதாரார், வானகமிறந்துவையகம்வணங்கவயங்கொளநிற்ப தோர்வடிவினையுடையா, ரானையினுரிவைபோர்த்தவெம்மடிகளச் சிறுபாக்கமதாட்சிகொண்டாரே.

—ஞா, திருவச்சிறுபாக்கம்.

கனியினுங்கட்டிபட்டகரும்பினும்
பனிமலர்க்குழற்பாவைநல்லாரினுந்
தனிமுடிகவித்தாளுமரசினு
மினியன்றன்னடைந்தார்க்கிடைமருதனே.

—நா, திருவிடைமருதூர்.

திருகுசிந்தையைத்தீர்த்துச்செம்மைசெய்து
பருகியூறலைப்பற்றிப்பதமறிந்
துருகிநைபவர்க்கூனமொன்றின்றியே
யருகுநின்றிடுமானைக்காவண்ணலே.

—நா, திருவானைக்கா.

போறிப்புலன்களைப்போக்கறுத்துள்ளத்தை
நெறிப்படுத்துநினைந்தவர்சிந்தையு
ளறிப்புறும்மமுதாயவனேகம்பங்
குறிப்பினாற்சென்றுகூடித்தொழுதுமே.

—நா, திருக்கச்சியேகம்பம்.

அருப்புப்போன்முலையாரல்லல்வாழ்க்கைமேல்
விருப்புச்சேர்நிலைவிட்டுநல்விட்டமாய்த்
திருப்புத்தூரானைச்சிந்தைசெயச்செயக்
கருப்புச்சாற்றிலுமண்ணிக்குங்காண்மினே.

—நா, அரிசிற்கரைப்புத்தூர்.

கருகுகண்டத்தன்காய்கதிர்ச்சோதியன்
பருகுபாலமுதேயெனும்பண்பின
னருகுசென்றிலளாவடுதண்டுறை
யொருவனென்னையுடையகோவென்னுமே.

—நா, திருவாவடுதுறை.

அருமறையனையானொடுபெண்ணனைக்
கருவிடம்மிகவுண்டவெங்கண்டனைப்
புரிவெண்ணூலனைப்புள்ளிருக்குவேளூ
ருருகிநைபவருள்ளங்குளிருமே.

—நா, திருப்புள்ளிருக்குவேளூர்.

காமாத்தம்மெனுங்கார்வலைப்பட்டுநான்
போமாத்தையறியாதுபுலம்புவே
னாமாத்தூரானேயென்றழைத்தலுந்
தேமாத்தீங்கனிபோலத்தித்திக்குமே.

—நா, திருவாமாத்தூர்.

மனிதர்காளிங்கேவம்மொன்றுசொல்லுகேன்
கனிதந்தாற்கனியுண்ணவும்வல்லிரே
புனிதன்பொற்கழலீசனெனுங்கனி
யினிதுசாலவுமேசற்றவர்கட்கே.

—நா, தனித்திருக்குறுந்தொகை.

விள்ளத்தானொன்றுமாட்டேன்விருப்பெனும்வேட்கையாலே
வள்ளத்தேன்போலநுன்னைவாய்மடுத்துண்டிடாமே
யுள்ளத்தேநிற்றியேனுமுயிர்ப்புளேவருதியேனுங்
கள்ளத்தேநிற்றியம்மாவெங்ஙனங்காணுமாறே.

—நா, தனித்திருநேரிசை.

விரும்பியூறுவிடேன்மடநெஞ்சமே
கரும்பினூறல்கண்டாய்கலந்தார்க்கவ
னிரும்பினூறலறாதவோர்வெண்டலை
யெறும்பியூர்மலையானெங்களீசனே.

—நா, திருவெறும்பியூர்.

கங்கைதங்கியசடையுடைக்கரும்பே
கட்டியேபலர்க்குங்களைகண்ணே
யங்கைநெல்லியின்பழத்திடையமுதே
யத்தாவெண்ணிட்டார்க்கெடுத்துரைக்கேன்
சங்குமிப்பியுஞ்சலஞ்சலமுரல
வயிரமுத்தொடுபொன்மணிவரன்றி
யோங்குமாகடலோதம்வந்துலவு
மொற்றியூரெனுமூருறைவானே.

—சு, திருவொற்றியூர்.

பொருங்கைமதகரியுரிவைப்போர்வையானைப்
பூவணமும்வலஞ்சுழியும்பொருந்தினானைக்
கரும்புதருகட்டியையின்னமிர்தத்தைத்தேனைக்
காண்பரியசெழுஞ்சுடரைக்கனகக்குன்றை
யிருங்கனகமதிலாரூர்மூலட்டானத்
தெழுந்தருளியிருந்தானையிமையோரேத்து
மருந்தவனைவாரெறியிலப்பன்றன்னை
யடைந்தடியேனருவினைநோயறுத்தவாறே.

—நா, திருவாரூராநெறி.

மாலையெழுந்தமதியேபோற்றி
மன்னியென்சிந்தையிருந்தாய்போற்றி
மேலைவினைகளறுப்பாய்போற்றி
மேலாடுதிங்கண்முடியாய்போற்றி
யாலைக்கரும்பின்றெளிவேபோற்றி
யடியார்கட்காரமுதமானாய்போற்றி
காலைமுளைத்தகதிரேபோற்றி
கைலைமலையானேபோற்றிபோற்றி.

—நா, ஸ்ரீகைலாயம்.

அளியானையண்ணிக்குமான்பாற்றனை
வான்பயிரைய்ப்பயிரின்வாட்டந்தீர்க்குந்
துளியானையயன்மாலுந்தேடிக்காணாச்
சுடரானைத்துரிசறத்தொண்டுபட்டார்க்
கெளியானையாவர்க்குமரியான்றன்னை
யின்கரும்பின்றன்னுள்ளாலிருந்ததேறற்
றெளியானைத்திருநாகேச்சரத்துளானைச்
சேராதார்நன்னெறிக்கட்சேராதாரே.

—நா, திருநாகேச்சரம்.

கரும்பிருந்தகட்டிதனைக்கனியைத்தேனைக்
கன்றாப்பின்டுதறியைக்காறைப்பானை
யிரும்பமர்ந்தமூவிலைவேலேந்தினானை
யென்னானைத்தென்னானைக்காவான்றன்னைச்
சுரும்பமருமலர்க்கொன்றைசூடினானைத்
தூயானைத்தாயாகியுலகுக்கெல்லாந்
தரும்பொருளைத்தலையாலங்காடன்றன்னைச்
சாராதேசாலநாள்போக்கினேனே.

—நா, திருத்தலையாலங்காடு.

கூற்றநம்பிகுறுகாரெயின்மூன்றைக்குலைத்தநம்பிசிலையாவரை கையிற், பற்றுநம்பிபரமானந்தவெள்ளம்பணிக்குநம்பியெனப் பாடுவதல்லான், மற்றுநம்பியுனக்கென்செயவல்லேன்மதியிலியேன் படுவெந்துயரெல்லா, மெற்றுநம்பியென்னையாளுடைநம்பியெழு பிறப்புமெங்கண்ம்பிகண்டாயே.

—சு, திருமுதுகுன்றம்.

தந்ததுன்றன்னைக்கொண்டதென்றன்னைச்
சங்கராவார்கொலோசதுர
ரந்தமொன்றில்லாவானந்தம்பெற்றே
னியாதுநீபெற்றதொன்றென்பாற்
சிந்தையேகோயில்கொண்டவெம்பெருமான்
றிருப்பெருந்துறையுறைசிவனே
யெந்தையேயீசாவுடலிடங்கொண்டா
யானிதற்கிலனோர்கைம்மாறே.

—திருவாசகம்.

கரும்புந்தேனுங்கலந்ததோர்காயத்தி
லரும்புங்கந்தமுமாகியவானந்தம்
விரும்பியேயுள்ளம்வெளியுறக்கண்டபின்
கரும்புங்கைத்ததுதேனும்புளித்ததே.

—திருமந்திரம்.

அடிசார்ந்தவர்க்குமுடியாவின்ப
நிறையக்கொடும்பினுங்குறையாச்செல்வ.

—பதினோராந்திருமுறை.

ஆனந்தவெள்ளத்தினிடைமூழ்கியம்பலவர்
தேனுந்துமலர்ப்பாதத்தமுதுண்டுதெளிவெய்தி
யூனந்தானிலராகியுவந்திருந்தார்தம்மைக்கண்
டானந்தங்கியதிலதாமென்னவதிசயமென்றார்.

—பெரியபுராணம்.

பிறவிநோயை அறுக்கும் மருந்தாகிய சிவம் பெத்தகாலமுதல் முத்திகாலம்வரையும் ஆன்மா தன்னோடு உடனின்று அறிவித்தும் அறிந்தும் வரும் பேருபகாரத்தை மறவாது இடையீடின்றிச் சிந்திக்குங்கால், அன்பினிலேயே அதுவாய், பரமானந்தப்பெருஞ் செல்வமே சுயந்திருமேனியாயுள்ள அப்பரம்பொருள் பொறுப்பரிய பேரன்பை அருளி அதன்வழியே எங்குமிலாப் பெரும் போகத்தைப் புரியுமாறு புகுந்திடும்.

ஓயாதேயுள்குவாருள்ளிருக்குமுள்ளானைச்
சேயானைச்சேவகனைத்தென்னன்பெருந்துறையின்
மேயானைவேதியனைமாதிருக்கும்பாதியனை
நாயானநந்தம்மையாட்கொண்டநாயகனைத்
தாயானதத்துவனைத்தானேயுலகேழு
மாயானையாள்வானைப்பாடுதுங்காணம்மானாய்.

—திருவாசகம்.

உன்னுமுளதையமிலதுணர்வாயோவாது
மன்னுபவந்தீர்க்குமருந்து.

—திருவருட்பயன்.

பண்ணிற்பொலிந்தவீணையர்பதினெண்கணமுணராநஞ்
சுண்ணப்பொலிந்தமிடற்றினருள்ளமுருகிலுடனாவார்
சுண்ணப்பொடிநீறணிமார்பர் சுடர்பொற்சடைமேற்றிகழ்கின்ற
வண்ணப்பிறையோடிவாராணீர்வாய்மூரடிகள்வருவாரே.

—ஞா, திருவாய்மூர்.

உள்ளமுருகிலுடனாவரல்லது
தெள்ளவரியரென்றுந்தீபற
சிற்பரச்செல்வரென்றுந்தீபற.

—திருவுந்தியார்.

சிவபோகச்செல்வர்க்குச் சிவாமிர்தம் தித்தித்தூறல்.

மாறுகொண்டுவளைத்தெழுதூதுவர்
வேறுவேறுபடுப்பதன்முன்னமே
யாறுசெஞ்சடைவைத்தவாட்போக்கியார்க்
கூறியூறியுருகுமெனுள்ளமே.

—நா, திருவாட்போக்கி.

ஏறதேறுமிடைமருதீசனார்
கூறுவார்வினைதீர்க்குங்குழகனா
ராறுசெஞ்சடைவைத்தவழகனார்க்
கூறியூறியுருகுமெனுள்ளமே.

—நா, திருவிடைமருதூர்.

ஊனுக்குமின்பம்வேண்டியுழலாதே
வானுக்கும்வழியாவதுநின்மினோ
தானுக்குந்தன்னடியவர்நாவினிற்
றேனுக்குந்திருவெண்காடடைநெஞ்சே.

—நா, திருவெண்காடு.

தெள்ளத்தேறித்தெளிந்துதித்திப்பதோ
ருள்ளத்தேறலமுதவொளிவெளி
கள்ளத்தேன்கடியேன்கவலைக்கடல்
வெள்ளத்தேனுக்கெவ்வாறுவிளைந்ததே.

—நா, தனித்திருக்குறுந்தொகை.

அற்புதத்தெய்வமிதனின்மற்றுண்டே
யன்போடுதன்னையஞ்செழுத்தின்
சொற்பதத்துள்வைத்துள்ளமள்ளூறுந்
தொண்டருக்கெண்டிசைக்கனகம்
பற்பதக்குவையும்பைம்பொன்மாளிகையும்
பவளவாயவர்பணைமுலையுங்
கற்பகப்பொழிலுமுழுதுமாங்கவனை
கொண்டசோளேச்சரத்தானே.

—திருவிசைப்பா.

சிவபோகச்செல்வர்க்கு மயிர்ப்புளகம் ஆனந்தபாஷ்பம்
பரவசப்பட்டுவிழுதல் உளவாதல்.

புளிக்கண்டவர்க்குப்புனலூறுமாபோற்
களிக்குந்திருக்கூத்துக்கண்டவர்க்கெல்லா
மளிக்குமருட்கண்ணீர்சோர்நெஞ்சுருக்கு
மொளிக்குளானந்தத்தமுதூறுமுள்ளத்தே.

—திருமந்திரம்.

நேடிறுபோதுயிர்த்துநின்றுநின்றநெக்கெழுமயிர்க்காரேறும்
வடிவேலாம்புளகம்பொங்கமலர்க்கண்ணீரருவிபாய
வடியனேற்கிவர்தாமிங்கேயகப்பட்டார்ச்சோரென்று
படியிலாப்பரிவுதானோர்படிவமாம்பரிசுதோன்ற.
போற்றிமெய்யருட்டிறம்பெறுபரிவுடன்வணங்கி
நீற்றின்மேனியினிறமயிர்ப்புளகங்கணெருங்கக்
கூற்றடர்த்தவர்கோயிலின்புறம்போந்தருளி
யாற்றுமின்னருள்வணிகர்மேற்செலவருள்செய்வார்.
பரவிவருமானந்தநிறைந்ததுளிக்கண்பனிப்ப
விரவுமயிர்ப்புளகங்கண்மிசைவிளங்கப்புறத்தணைவுற்
றரவுநெடுந்திரைவேலையணிவான்மியூரதனுட்
சிரீப்புராத்துப்புரவலனார்சிலநாளங்கினிதமர்ந்தார்.

வீழ்ந்துபோற்றிப்பரவசமாய்விம்மியெழுந்துமெய்யன்பால்
வாழ்ந்தசிந்தையுடன்பாடிமாறுவிருப்பிற்புறம்போந்து
சூழ்ந்ததொண்டருடன்மருவுநாளிற்றொல்லைக்கச்சிநகர்த்
தாழ்ந்தசடையாராலயங்கள்பலவுஞ்சார்ந்துவணங்குவார்.
பூதமுதல்வர்புற்றிடங்கொண்டிருந்தபுனிதர்வன்றொண்டர்
காதல்புரிவேதனைக்கிரங்கிக்கருணைத்திருநோக்களித்தருளிச்
சீதமலர்க்கண்கொடுத்தருளச்செவ்வேவிழித்துமுகமலர்ந்து
பாதமலர்கண்மேற்பணிந்துவீழ்ந்தாருள்ளம்பரவசமாய்.

—பெரியபுராணம்.

திண்டாடிவீழ்கைசிவானந்தமாவது
வுண்டார்க்குணர்வுண்டாமுன்மத்தஞ்சித்திக்குங்
கொண்டாடுமன்றாட்குளிக்குந்திருக்கூத்துக்
கண்டார்வருங்குணங்கெட்டார்க்குமொக்குமே.

—திருமந்திரம்.

சிவயோகச்செல்வர்க்கு முடிவிலாவானந்த சிவமே யாண்டும் தோற்றுதல்.

𑌯𑍋 𑌵𑍈 𑌭𑍂𑌮𑌾 𑌤𑌤𑍍𑌸𑍁𑌖𑌂 𑌨𑌾𑌲𑍍𑌪𑍇 𑌸𑍁𑌖𑌮𑌸𑍍𑌤𑌿 𑌭𑍂𑌮𑍈𑌵 𑌸𑍁𑌖𑌂 𑌭𑍂𑌮𑌾 𑌤𑍍𑌵𑍇𑌵 𑌵𑌿𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌿𑌤𑌵𑍍𑌯 𑌇𑌤𑌿 𑌭𑍂𑌮𑌾𑌨𑌂 𑌭𑌗𑌵𑍋 𑌵𑌿𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸 𑌇𑌤𑌿।

யோ வை பூமா தத்ஸுகம் நால்பே ஸுகமஸ்தி பூமைவ ஸுகம் பூமா த்வேவ விஜிஜ்ஞாஸிதவ்ய இதி பூமாநம் பகவோ விஜிஜ்ஞாஸ இதி।

"எது முடிவிலா ஆனந்தமோ (பூமாவோ) அது இன்பம்; அற்பத்திலே இன்பம் இல்லை; பூமாவே இன்பம்; (முடிவிலா ஆனந்தமாகிய) பூமாவே அறியற்பாற்று; பகவானே! முடிவிலா ஆனந்தத்தை அறியவிரும்புகின்றேன்" என்றும்,

𑌯𑌤𑍍𑌰 𑌨𑌾𑌨𑍍𑌯𑌤𑍍𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌨𑌾𑌨𑍍𑌯𑌚𑍍𑌛𑍃𑌣𑍋𑌤𑌿 𑌨𑌾-
𑌨𑍍𑌯𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌨𑌾𑌤𑌿 𑌸 𑌭𑍂𑌮𑌾।

யத்ர நாந்யத்பஶ்யதி நாந்யச்ச்ருணோதி நாந்யத்விஜா நாதி ஸ பூமா।

"எங்கே மற்றொன்றும் காண்கிலனோ, மற்றொன்றும் கேட்கிலனோ, மற்றொன்றும் அறிகிலனோ, அது பூமா" என்றுஞ் சாந்தோக்கியோபநிடதமும்,

𑌹𑌾𑌰𑍍𑌦𑌾𑌯 𑌸𑌰𑍍𑌵𑌜𑌨𑍍𑌤𑍂𑌨𑌾𑌂 𑌤𑍁𑌭𑍍𑌯𑌂 𑌭𑍂𑌮𑌾𑌯 𑌤𑍇 𑌨𑌮𑌃।

ஹார்த்தாய ஸர்வஜந்தூநாம் துப்யம் பூமாய தே நம:।

"சமஸ்த செந்துக்களின் இதயத்தின்கண்ணே வசிப்பவரும், முடிவிலா இன்பமுடையருமாகிய உமக்கு நமஸ்காரம்" என்று சம்பவகாண்டமும் கூறுமாற்றால், முடிவிறந்த சிவானந்தத்துள்ளே அமிழ்ந்திய சீவன்முக்தர் மற்றோர் அற்ப இன்பத்தை விரும்பி ரூபாதிவிஷயங்களைக் கண்டு பிரவர்த்தித்துப் பிராரத்தவாதனையிற் படுவாரல்லராய், எவ்விடத்தும் சிவத்தோற்றம் ஒன்றையே காணப் பெறுவர்.

அளவிலாப்பாவகத்தாலமுக்குண்டிங்கறிவின்றி
விளைவொன்றுமறியாதேவெறுவியனாய்க்கிடப்பேனுக்
களவிலாவானந்தமளித்தென்னையாண்டானைக்
களவிலாவானவருந்தொழுந்தில்லைகண்டேனே.

—திருவாசகம்.

தொண்டர்மனம்பிரியாததிருப்படியைத்தொழுதிறைஞ்சி
மண்டுபெருங்காதலினுனேக்கிமுகமலர்ந்தெழுவா
ரண்டமெலாநிறைந்தெழுந்தவானந்தத்துள்ளலைந்து
கண்டபேரின்பத்தின்கரையில்லாநிலையணைந்தார்.

—பெரியபுராணம்.

குற்றநீகுணங்கணீகூடலாலவாயிலாய்
சுற்றநீபிரானுநீதொடர்ந்திலங்குசோதிநீ
கற்றநூற்கருத்துநீயருத்தமின்பமென்றிவை
முற்றுநீபுகழ்ந்துமுன்னுரைப்பதென்முகம்மனே.

—ஞா, திருவாலவாய்.

குருகாம்வயிரமாங்கூறுநாளாங்
கொள்ளுங்கிழமையாங்கோளேதானும்
பருகாவமுதமாம்பாலினெய்யாம்
பழத்தினிரதமாம்பாட்டிற்பண்ணு
மொருகாலுமையாளோர்பாகனுமா
முண்ணின்றநாவிற்குரையாடியாங்
கருவாயுலகுக்குமுன்னேதோன்றுங்
கண்ணாங்கருகாவூரெந்தைதானே.

—நா, திருக்கருகாவூர்.

ஊஞ்கியுயிர்கியதனுணின்ற
வுணர்வாகிப்பிறவனைத்துங்நீயாய்நின்றாய்
நானேதுமறியாமேயென்னுள்வந்து
நல்லனவுந்தீயனவுங்காட்டாநின்றாய்
தேனாருங்கொன்றையனேநின்றியூராய்
திருவானைக்காவிலுறைசிவனேஞான
மானாயுன்பொற்பாதமடையப்பெற்றா
லல்லகண்டங்கொண்டடியேனென்செய்கேனே.

—நா, திருவானைக்கா.

ஊனாயுயிரானாயுடலானாயுலகானாய்
வானாய்நிலனானாய்கடலானாய்மலையானாய்
தேனார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளானாயுனக்காளாயினியல்லேனெனலாமே.

—சு, திருவெண்ணெய்நல்லூர்.

மூலப்பிரகிருதி கடந்தவிடத்துள்ள ஆன்மப்பிரமம் மாயா வாதோபநிடதப்பிரகாரம் சிவன் எனப்படுகின்றது; இந்தச் சிவனையுற்று ஏகான்மவாதவாகோபநிடதம் "சிவனே சகலமும், சிவனைக்காட்டிலும் வேறொன்றும் இல்லை" என்று கூறுகின்றது. இங்ஙனம் பௌதிகயோகத்துக்கும் வைதிகபசுபதயோகத்துக்கும் இடைக்கண்ணே மூலப்பிரகிருதிப்பாற்பட்டுள்ள நிர்க்குண சாங்கியயோக சிவனையுற்றுக் கூறினமை பொருத்தமேயாக, மூலப்பிரகிருதி கடந்து, அதற்கு அப்பாலுள்ள சூக்குமப்பிர கிருதி கடந்து, அதற்கு அப்பாலுள்ள பரப்பிரகிருதி கடந்து, அப்பாற்பட்டுள்ள சைவசித்தாந்த சொரூபசிவத்தையுற்றுப்போந்த மேலே கூறிய "குற்றநீ குணங்கணீ" என்றற்றொடக்கத்த திருவருட்பாக்களைத் தமது கீழ்நிலைக்கண்ணதாகிய பசுப்பிரம மாகிய சிவனுக்கேற்றி ஏகான்மவாதிகள் தலைதடுமாறிநிற்கின்றார் கள். இது வயிரக்கல்லுக்கு ஏற்றப்படும் உயர்ந்த விலையை அற்ப விலையுடைய ஸ்படிகக்கற்கு ஏற்றினமை போலவும், சிரேஷ்டமா கிய குதிரைக்குக் கூறப்பட்ட உயர்ந்த விலையைக் கோவேறுவே சரிக்கு ஏற்றினமைபோலவுமன்றோ முடிகின்றது. "அரக்கர் சேனை நீறுபட்டழிய" என்ற செய்யுட்பாகத்தைக் கண்டவுடனே ஒருவர் விபூதிமான்மிய உபநிடதப்பிரமாணங்களோடு இந்தக்

கம்பராமாயணச் செய்யுளையும் திரிவுணர்ச்சிகொண்டு சேர்த்து எழுதினமைபோல், தேவார திருவாசகமுதலியவற்றிலே "ஊனுயிரானாய்" "வானாகிமண்ணாகி" என்றற்றொடக்கத்த அருட்பாக்களைக் கண்டவுடனே, தங்கள் ஏகான்மவாதத்துக்குரிய நிர்க்குணப்பிரமசிவனை உணர்த்தும் ஏகான்மவாதச்செய்யுட்களோடு அத்திருவருட்பாச்செய்யுட்களையுஞ் சேர்த்து எழுதிச் சைவசித்தாந்தத்தையும் மாயாவாதத்தையும் ஒன்றாகக் கலக்கிக் குழறுபடை செய்வதையுற்றுச் சைவநேயர்கள் விழிப்பாயிருப்பார்களாக.

ஹிம்ஸாயா தாதோ ஸிம்ஹ ஶப்தோ வஶ காந்தௌ ஶிவ: ஸ்ம்ருத:।
வர்ண வ்யத்யயத: ஸித்தௌ பஶ்யக: கஶ்யபோ யதா॥

ஹிஸிதாதோஸ் ஸிம்ஹஶப்தோ வஶகாந்தெள ஶிவ: ஸ்ம்ருத:।
வர்ணவ்யத்யயதஸ் ஸித்தெள பஶ்யக: கஶ்யபோ யதா॥

"பச்யக என்பதினால் கச்யப என்னும் பதமும், ஹிம்சித்தல் என்பொருள்படும் ஹிசி தாதுவினின்று சிம்மசப்தமும் வர்ணவியத்யயத்தினால் எய்தினாற் போல, அன்புறுதல் எனப் பொருள்படும் வச என்னும் பகுதியினின்று சிவ என்னும் சப்தமும் எய்தியது" ஆகலின்; சிவம் என்னும் மொழி அன்பு எனப் பொருள்படும்.

அபுத்திபூருவம், புத்திபூருவம், உபாயச்சரியை, உபாயக்கிரியை, உபாயயோகம், உபாயஞானம், உண்மைச்சரியை, உண்மைக்கிரியை, உண்மையோகம், உண்மைஞானம் என்னும் பதின்வகைச் சிவபுண்ணியங்களுள்ளே, ஒன்றாகிய உண்மைஞானமானது "(சிவஞானபோதவசனாலங்காரதீப"த்தின் உ, ரு, சா, எ, அ, கூ, க0, கக-ம் சூத்திரங்களின் கீழே உணர்த்தப்பட்டவாறு) தத்துவரூபமுதற் சிவபோகம் இறுதியாகப் பத்துவகைப்படும். படவே, துரியாதீதத்துச் சிவபோகம் சிவபுண்ணியமேயாம். இச்சிவபுண்ணிய சிவபோகம் சிவமாகிய அன்புநிலையேயாம். அது

இன்பி லினிதென்ற லின்றுண்டே லின்றுண்டா
மன்பு நிலையே யது.

—திருவருட்பயன்.

முன்பு ஈட்டிய தவத்தின் முதிர்ச்சியினால் ஒருவர்க்கு அன்பு என்பது இப்பொழுது உளதாயின், எல்லா இன்பங்களினும் இனிமையுடைத்தென்று சிறப்பித்துப் புகழ்ப்படும் பேரின்பசிவபோகம் இப்பொழுதே உளதாம்; அது மிகுந்த அன்பினது நிலையையே தனக்கு நிலையாகவுடையதாகலான் என்பது.

அன்புஞ் சிவமு மிரண்டென்ப ரறிவிலா
ரன்பே சிவமாவ தாரு மறிகிலா
ரன்பே சிவமாவ தாரு மறிந்தபி
னன்பே சிவமா யமர்ந்திருந் தாரே.

—திருமந்திரம்.

சிவபோகத்தை எய்துதற்கு உரிய நெறிகள் சன்மார்க்க முறை அன்புநெறி என இரண்டு உளவாம்.

உள்ளும் புறம்பு நினைப்பொழிவி லுன்னிடையே
வள்ள லெழுந்தருளு மாதினொடுந்—தெள்ளி
யறிந்தொழிவா யன்றியே யன்புடைமை யாயிற்
செறிந்தொழிவா யேதேனுஞ் செய்.

—திருக்களிற்றுப்படியார்.

பரம்பொருளை ஏகதேசப்படுத்திச் சகமார்க்கத்தினால் அகத்தே தியானிப்பதும், புத்திரமார்க்கம்போல அகத்தும் புறத்தும் தியானிப்பதும், தாதமார்க்கம்போற் புறத்தே தியானிப்பது மொழிந்து பூரணநிலையை அறிந்து வழிபடின், உன் அறிவிலே காருண்ணியத்தினோடும் சிவம் பிரகாசிக்கும்; சகமார்க்க புத்திர மார்க்க தாதமார்க்கத் தியான நினைப்பு ஒழியுமாறு, குருவருள் பெற்று மெய்யுணர்தலிற் றலைப்பட்டுச் சன்மார்க்கமுறையினொழுகுதி; அங்ஙனமின்றி அன்பு செய்ய வருமாகின் முதல்வனிடத்து அன்பு செய்து சிவத்திடைச் செறிந்து நிற்குதி; இவ்விரண்டனுள் இயன்றதொன்றைச் செய்குதி என்றது திருக்களிற்றுப் படியார் என்னும் சித்தாந்தசாஸ்திரம்.

அன்புநெறி.

அன்பேயென் னன்பேயென் றன்பா லழுதரற்றி
யன்பேயன் பாக வறிவழியு—மன்பன்றித்
தீர்த்தந்தி யானஞ் சிவார்ச்சனைகள் செய்யுமவை
சாற்றும் பழமன்றே தான்.

—திருக்களிற்றுப்படியார்.

இங்கே "அறிவழியும் அன்பு" என்றது ஞானக்கிரியைகள் இழந்தவிடத்துளதாம் அன்பின் மேலதாயிற்று. மேலும், திருக்களிற்றுப்படியாரில் "அவிழ்ந்ததுணியில்" "சுரந்ததிருமுலைக்கே" என்றற்றொடக்கத்த திருவெண்பாக்களிலே போந்த அவிழ்ந்த மனம் தாழ்ந்தமனம் என்பனவும் செயலிழந்த அன்பினை உணர்த்தியவாம்.

ஏதுக்களாலுமெடுத்தமொழியாலுமிக்குச்
சோதிக்கவேண்டாசுடர்விட்டுளனெங்கள்சோதி
மாதுக்கநீங்கலுறுவீர்மனம்பற்றிவாழ்மின்
சாதுக்கண்மிக்கீரிறையேவந்துசார்மின்களே.

—ஞா. திருப்பாசுரம்.

மாதுக்கநீங்கலுறுவீர்மனம்பற்றுமென்ப
தாதிச்சுடர்ச்சோதியையன்பினகத்துள்ளாக்கிப்
போதித்தநோக்குற்றொழியாமற்பொருந்திவாழ்ந்து
பேதுக்கபந்தப்பிறப்பின்னெறிபேர்மினென்றும்.

—பெரியபுராணம்.

ஆர்வல்லார்காணவரனவனையன்பென்னும்
போர்வையதனாலேபோர்த்தமைத்துச்—சீர்வல்ல
தாயத்தானாமுந்தனிநெஞ்சினுள்ளடைத்து
மாயத்தால்வைத்தோமறைத்து.

—காரைக்காலம்மையார் அற்புதத்திருவந்தாதி.

பத்திவலையிற்படுவோன்காண்க.

—திருவாசகம்.

முன்படைத் தின்பம் படைத்த முதலிடை
யன்படைத் தெம்பெருமானை யறிகிலார்
வன்படைத் திந்த வகலிட வாழ்வினி
லன்படைத் தான்ற னகலிடந் தானே.

அன்பினுள் ளான்புறத் தானுட லாயுளான்
முன்பினுள் ளான்முனி வர்க்கும் பிரானவ
னன்பினுள் ளாகி யமரு மரும்பொரு
ளன்பினுள் ளார்க்கே யணைதுணை யாமே.

செயலற் றிருக்கச் சிவானந்த மாகுஞ்
செயலற் றிருப்பார் சிவயோகந் தேடார்
செயலற் றிருப்பார் செகத்தோடுங் கூடார்
செயலற் றிருப்பார்க்கே செய்தியுண் டாமே.

ஒத்தல் கேழு மறியா வொருவனென்
றத்த னிருந்திட மாரறி வார்சொல்லப்
பத்தர்தம் பத்தியிற் பாற்படி னல்லது
முத்தினை யார்சொல்ல முந்துகின் றாரே.

கண்டறி வாரில்லை காயத்தி னந்தியை
யெண்டிசை யோரு மிறைவனென் றேத்துவ
ரண்டங் கடந்த வளவிலா வானந்தத்
தொண்டர் முகந்த துறையறி யோமே.

—திருமந்திரம்.

பொருப்பினில் வந்தவன்செய்யும் பூசனைக்கு முன்பென்மே
லருப்புறுமென் மலர்முன்னை யவைநீக்கு மாதரவால்
விருப்புறுமன் பெனும்வெள்ளக் கால்பெருகிற் றெனவீழ்ந்த
செருப்படியவ் விளம்பருவச் சேயடியிற் சிறப்புடைத்தால்.

உருகியவன் பொழிவின்றி நிறைந்தவவ னுருவென்னும்
பெருகியகோள் கலமுகத்திற் பிறங்கியினி தொழுகுதலா
லொருமுனிவன் செவியுமிழு முயர்கங்கை முதற்றீர்த்தப்
பொருபுனலி னெனக்கவன்றன் வாயுமிழும் புனல்புனிதம்.

நண்ணிமா மறைக்குலங்க ளொடவென்று நீடுமத்
தண்ணிலா வரும்புகொன்றை தங்குவேணி யார்தமைக்
கண்ணினீடு பார்வையோன்று கோண்டுகோணு மன்பர்முன்
னெண்ணில்பார்வை கொண்டுவேட ரெம்மருங்கு மேகினார்.

உள்ளத்திற் றெளிகின்ற வன்பின் மெய்ம்மை யுருவினையு மவ்வன்பி னுள்ளே மன்னும், வெள்ளச்சேஞ் சடைக்கற்றை நெற்றிச் செங்கண் விமலரையு முடன்கண்ட விருப்பும் பொங்கிப், பள்ளத்தி விழிபுனல்போற் பரந்து செல்லப் பைம்பொன்மலை வல்லிபரிந் தளித்த செம்பொன் வள்ளத்தில் ஞானவா ரமுது முண்டார் மகிழ்ந்தெழுந்து பன்முறையும் வணங்கு கின்றார்.

—பெரியபுராணம்.

"முன்பு செய்தவத்தினீட்ட முடிவிலாவின்பமான வன்பினை யெடுத்துக்காட்ட" என்று கூறப்பட்டலான், முன்னர் ஈட்டிய பெருந் தவமே முடிவிலா இன்ப அன்புக்குக் காரணமாகின்றது. அறிவு செயல் இழந்த விடத்துளதாம் அன்புப்பேர்வைகொண்டே னும், அன்புவலைகொண்டேனும், அன்புநாழிகொண்டேனும், சிவானந்த மகோததியிலே படிந்து, பேர்த்து, முகந்து நீடித்து நிற்றற்கு நீடித்த அன்பு வேண்டும். சிவபுண்ணியமுதிர்ச்சியின் றேல், அன்பினகத்துட்கொண்டு சிவத்தை நீடித்துப் பார்த்தல் கூடாதாகி முடிந்துவிடும். சிவதீக்ஷையின்றி அறுபத்துமூன்று நாயன்மார் அன்பினாற் சிவத்தை அகத்துள் அடக்கினின்றார்களே, நாமும் அங்ஙனம் தீக்ஷையின்றிச் சிவத்தை அடைந்துவிடலாமே எனின், கூறுதும்: கண்ணப்பநாயனார் காளத்தியப்பரை ஆறு நாளும் இடையே வற்றி ஆற்றுப்போகாத நெடுகிய அன்பினால் நீண்டபார்வைகொண்டு பார்த்து முத்தியடைந்தாரன்றோ, அங்ங னம் மற்றைய அடியார்களும் சாயாத அன்பினாற் சிவத்தை உணர் ந்திருந்தார்கள். சிவபுண்ணியமிலாமையால் நீடித்துச் சிவத்தை நோக்கவியலாத நாம் அறுபத்துமூன்றுநாயனார்போலப் பத்தியை அநுசரித்துச் சிவதீக்ஷையின்றி வாழ்வேம் எனல் நாடகமாத்தி ரையேயாம். இடையீடின்றி முறுகி ஓங்கிய அன்புக் குருமணிக ளாகிய அறுபத்துமும்மை நாயன்மார்களுள்ளே, திருஞானசம்பந்த மூர்த்திநாயனாரை ஞானப்பால்கொண்டும், திருநாவுக்கரசுநாயனா ரைச் சூலைநோய்கொண்டும், சுந்தரமூர்த்திநாயனாரை அடிமையோ லைகொண்டும், கண்ணப்பநாயனாரைச் சாட்சுஷிதீக்ஷைகொண்டும், அமர்நீதிநாயனாரைக் கௌபீனங்கொண்டும், திருநீலகண்டநாய னாரை ஓடுகொண்டும், காரைக்காலம்மையாரை மாம்பழங்கொண் டும் "ஆட்பாலவர்க்கருளும் வண்ணமுமாதிமாண்பும் கேட்பான் புகிலளவில்லை" என்னும் திருப்பாசுரப்பிரகாரம், சிவபெருமான் வேதாகமங்களின் விதிகடந்து தீக்ஷைசெய்து அடிமைகொண்டார். அவற்றையெல்லாம் சிற்றறிவினேமாகிய யாமா அளவிட்டு இன்னா ருக்கு இன்ன தீக்ஷை செய்யப்பட்டது என்று குறிப்பிட்டுச் சொல்லவல்லேம். ஆகலின், தீக்ஷையின்றியமையாததேயாம்.

இறைகளோடிசைந்தவின்பமின்பத்தோடிசைந்தவாழ்வு
பறைகிழித்தனையபோர்வைபற்றியானோக்கினேற்குத்
திறைகொணர்ந்தீண்டித்தேவர்செம்பொனுமணியுந்தூவி
யறைகழலிறைஞ்சுமாரூரப்பனையஞ்சினேனே.

—சு, திருவாரூர்.

வேதாகம இதிகாசபுராணப்பொருள்களை அடக்கிய திராவிட வேதமாகிய தேவாரமுதலிய பன்னிரு திருமுறைகளிலே புகழப் பட்ட சிவபெருமானது பெருமையைச் சிந்தித்து உணர்ந்து, சிவத் தோடு ஆன்மாவானது அத்துவிதமாய் இசைந்த இன்பமே **இன் பத்தோடிசைந்த வாழ்வாகும்** என்றுண்மை கடைப்பிடித்து உய் தல் சிவநேசச் செல்வர் யாவர்க்கும் கடமையாம்.

தேவாரம் வேதசாரம்

முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.